# சமூகவியல்

மேல் நிலை

முதலாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

# சமூகவியல்

(சமூகவியலின் அடிப்படைக் கூறுகள்)

மேல் நிலை—முதலாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதல் பதிப்பு—1980

பதிப்பாசிரியர் குழுத் தலைவர் :

டாக்டர் டி. சுந்தரம்,
பேராசிரியர் & துறைத் தலைவர்—சமூகவியல்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

நூலாசிரியர்கள் :

டாக்டர் சி. என். நடராசன்,
சமூகவியல் பேராசிரியர்,
மதுரைக் கல்லூரி, மதுரை.

திரு. மு. இராமநாதன்,
விரிவுரையாளர்—சமூகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

மேலாய்வாளர்கள் :

டாக்டர் வி. கோமதிநாயகம்,
சமூகவியல் துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

டாக்டர் டி. பழனி,
ரீடர்—சமூகவியல் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

திரு. ப. கலியபெருமாள்,
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்—சமூகவியல்,
அரசு மேல் நிலைப் பள்ளி,
விக்கிரவாண்டி.

விலை: ரூ. 10-00

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந் நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
பகத் பிரிண்டர்ஸ், சென்னை-600 016

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அறிமுகம் | ... | 1 |
| 2. | சமூகவியல் சிந்தனையாளர்கள் | ... | 21 |
| 3. | மனிதனும் சமூகமும் | ... | 54 |
| 4. | சமூகவியல் அடிப்படைக் கருத்துகள் | ... | 74 |
| 5. | முக்கியச் சமூக நிறுவனங்கள் | ... | 107 |
| 6. | சமூகமயமாகுதல் | ... | 136 |
| 7. | சமூக ஊடாட்டச் செயற்பாங்குகள் | ... | 144 |
| 8. | சமூக மாற்றம் | ... | 152 |
| 9. | சமூகக் கட்டுப்பாடு | ... | 158 |
| 10. | சமூக ஒழுங்கு குலைதல் | ... | 167 |
| | கலைச்சொற்கள் | ... | 174 |
| | மேற்கோள் நூற்பட்டியல் | ... | 183 |

# 1. அறிமுகம்

சமூகவியல் — விளக்கம்

சமூகவியல் என்ற சொல்லே அது எதைப்பற்றி ஆராய்கிறது என்று காட்டுகிறது. "சமூகத்தை ஆராய்கிற இயல்" என்ற பொருளை இச்சொல் தருகிறது.

மாரிஸ் கின்ஸ்பெர்க் (Morris Ginsberg) என்ற அறிஞர் "சமூகத்தை ஆராய்கிற இயலே சமூகவியல்" என்று சமூகவியலுக்கு விளக்கம் தருகிறார். 'சமூகம்' என்பதற்கு அவர் தருகிற விளக்கம்: 'மனித உறவுகள் பின்னிப் பிணைந்துள்ள இழைமம் (Tissue)'. இந்த வகையில் பார்க்கும்போது சமூகவியல் என்பது சமூக உறவுகளின் தொகுப்பை ஆராய்கிற இயல் என்று புலப்படும்.

மனிதன் கூடி வாழும் இயல்பு உடையவன். அதனால்தான் அரிஸ்டாட்டில் (Aristotle) மனிதனை "ஒரு சமூகப்பிராணி" என்றார். மனிதன் தன்னுடைய தேவைகளுக்காக, பாதுகாப்புக்காக, சுகத்துக்காக, நலத்திற்காக, வாழ்க்கை வாய்ப்புக்காக, வசதிக்காக, பிற சேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு கூடி வாழ்கிறான். இப்படி மற்றவர்களோடு கூடி வாழும்போது பலவகையான உறவுகள் பல நிலைகளில், பல அளவுகளில் ஏற்படுகின்றன. இந்த உறவுகளை — பிறரோடு பழகும்பொழுது, கூடி வாழும்பொழுது ஏற்படும் உறவுகளைச் "சமூக உறவுகள்" என்கிறோம்.

இந்தச் சமூக உறவுகள் நிலைநிறுத்தப்பட்டு, முறைப்படுத்தப் பட்டு, அவற்றின் விளைவாக மனிதர்களிடையே ஒரு நிலையான அமைப்பு — எல்லோரும் கூடி வாழ்கிற அமைப்பு ஏற்படுகிறது. இந்த நிலையான அமைப்பையே (Organization) 'சமூகம்' என்கிறோம்.

இவ்வாறு சமூகவியல் மனிதனின் சமூக உறவுகளைப் படிப்பதின் வாயிலாக சமூக உறவுகளில் முகிழ்க்கும் சமூகத்தை ஆராய்கிறது. சமூக உறவுகளிலேயே தோன்றி அவற்றிலிருந்து முகிழ்ப்

பதனால்தான் சமூகம் 'சமூக உறவுகளின் இழைமம்' என்று அழைக்கப்படுகிறது.

சமூகவியலின் ஆய்வுப் பரப்பு எல்லை

சமூகவியல் மனித உறவுகளை, அவ்வுறவுகளில் முகிழ்க்கும் சமூகத்தை ஆராய்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள் கிறார்கள். ஆயினும், இவற்றைச் சமூகவியல் எந்த அளவுக்கு ஆய்வு செய்யவேண்டும். ஆய்வதில் எந்த எல்லையோடு நிறுத்திக் கொள்ளவேண்டும் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்தக் கருத்து வேறுபாடுகள் இரு வேறு கருத்தினங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. ஒன்று தனித்துறைக் கருத்தினம் (Specialist school), மற்றொன்று பல்பொருளாக்கக் கருத்தினம் (Synthetic school).

இவ்விரு கருத்தினங்களும் எப்படிச் சமூகவியலின் ஆய்வுப் பரப்பு எல்லையைத் தீர்மானிக்கின்றன என்பதை ஆராய்வோம்.

1. தனித்துறைக் கருத்தினம்

இந்தக் கருத்தினம் சமூகவியலின் ஆய்வுப் பரப்பு ஒரு வரையறைக்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்று கூறுகிறது. அது விரிந்திருக்கக்கூடாது என்றும் கூறுகிறது.

இக்கருத்தினம் சமூகவியல் சமூக உறவுகளின் எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்யத் தேவையில்லை; அவற்றின் குறிப்பிட்ட, முக்கியமான அம்சங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் சிறப்பாகப் ஆராயவேண்டும் என்று கூறுகிறது.

இக்கருத்தினத்தைச் சேர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜார்ஜ் சிம்மல் (Georg Simmel) என்ற ஜெர்மானிய அறிஞர். இவர் வடிவம் சார்முறை (Formal method) என்ற முறையைத் தோற்றுவித்திருக்கிறார். சமூகவியல் சமூக உறவுகளை ஆய்கிற இயல் என்ற போதிலும், அது சமூக உறவுகளின் எல்லாப் பரிமாணங்களையும், அம்சங்களையும் ஆய்வு செய்ய வேண்டிய தில்லை; சமூக உறவுகளின் வடிவங்களைப் (Forms) படித்தால் போதும் என்கிறார். வடிவங்களைப் ஆராய்ந்தாலே, சமூக உறவுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும் என்கிறார்.

சமூக வாழ்க்கையில் பல துறைகளிலும் சமூக உறவுகள் நிலவுகின்றன. எண்ணற்ற அளவில் நிலவுகின்றன. ஆயினும்

அவை எல்லாம் நிர்ணயம் செய்த மாதிரி குறிப்பிட்ட சில வடிவங்களையே கொண்டிருக்கும். அவை போட்டி, மேம்பட்ட நிலை (Super ordination), கீழ்நிலை, வேலைப் பங்கீடு (Division of Labour) என்ற குறிப்பிட்ட வடிவங்களையே கொண்டிருக்கும். சமூக உறவுகளைக் கூர்ந்து கவனித்து அவை எந்தெந்த நிலைகளில் என்னென்ன வடிவங்களை அடைகின்றன என்று இனங் கண்டு விடலாம். அந்த வடிவங்களை இனங்கண்டு, அவற்றைப் பிரித்து அலசி ஆராய்ந்து, விவரித்துக் கூறுவதையே சமூகவியல் தன்னுடைய நோக்கமாகக் கொள்ளவேண்டும் என்று சிம்மல் கூறுகிறார்.

மாக்ஸ் வேபர் (Max Weber) என்ற அறிஞரும் இக்கருத்தை ஆதரிக்கிறார். மனிதத் தொடர்புகள் என்பவை எல்லாமே சமூக உறவுகள் ஆவதில்லை என்கிறார் மாக்ஸ் வேபர். இரண்டு மனிதர்கள் தொடர்பு கொள்ளும்போது அவர்களிடையே ஓர் ஒழுகலாறு (Behaviour)— சமூக எதிர்பார்ப்புகளை யொட்டிய ஒழுகலாறு ஏற்பட்டால்தான் அத்தொடர்பு சமூக உறவாக ஆகும் என்கிறார். மிதிவண்டிகளில் இருவர் செல்லும்போது எதிரெதிரே மோதிக்கொண்டால் அது வெறும் தொடர்பேயின்றி, சமூக உறவு ஆகாது. அத்தகைய தொடர்பின்போது அவர்கள் ஏதாவதொரு சமூக ஒழுகலாற்றைக் கடைபிடித்தால் அத் தொடர்பு சமூக உறவு என்ற தன்மையைப் பெறும். மிதிவண்டி களில் செல்லுகிறவர்கள் மோதும் நிலையில் மோதுவதைத் தவிர்க்க விலகிச் செல்ல முயற்சித்தாலோ அல்லது மோதிய பட்சத்தில் நயமாக, பண்புடன் நடந்து கொண்டாலோ, அப்பொழுதுதான் அங்கே அந்தத் தொடர்பு சமூக உறவாக மலரும். இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் மனிதர்கள் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது சமூக எதிர்பார்ப்பு; இச்சமூக எதிர்பார்ப்பை ஒட்டி நடந்து கொள்ளுவதுதான் சமூக ஒழுகலாறு. சமூக ஒழுகலாறு தோன்றும் பட்சத்தில் மனிதத் தொடர்பு சமூக உறவாகிறது. எனவே சமூக உறவுகளுக்குச் சமூக ஒழுகலாறுகள் மிகவும் அவசியமாகின்றன.

பல்வேறு சந்தர்ப்பங்களில் சமூக உறவுகளின்போது மனிதர்கள் சமூக எதிர்பார்ப்புகளை ஒட்டி, சமூக நெறிகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளுகிறார்கள். அவர்களுடைய சமூக ஒழுகலாறுகளைக் குறிப்பிட்ட சில வடிவங்களில் அடக்கிவிடலாம். அந்த வடிவங்களை மட்டுமே சமூகவியல் ஆய்வுசெய்தால் போதுமானது என்று மாக்ஸ் வேபர் கருதுகிறார்.

தனித்துறைக் கருத்தினத்தைச் சேர்ந்த அறிஞர்கள் சமூக உறவுகளின் ஒருசில குறிப்பிட்ட அம்சங்களை, அதுவும் சமூக உறவுகளின் வடிவங்களை ஆய்ந்தாலே போதுமானது என்று கருதுகிறார்கள். சமூக உறவுகளின் அனைத்து அம்சங்களையும் ஆய்வது என்று எல்லாவற்றையுமே சமூகவியல் அலசி ஆராய வேண்டும் என்பதில்லை. சமூகவியல் தன்னுடைய ஆய்வுப் பரப்பின் எல்லையை சமூக உறவுகளின் வடிவங்களோடு மட்டும் நிறுத்திக்கொள்ளலாம் என்பது அவர்கள் கருத்து.

இக்கருத்தினத்தின் அணுகுமுறையில் ஒரு குறை உண்டு. சமூக உறவுகளின் குறிப்பிட்ட அம்சத்தை, அதாவது அவற்றின் வடிவங்களை மட்டுமே ஆராய்வதனால் சமூக உறவுகளைப்பற்றிய முழுமையான அறிவு நமக்குக் கிட்டாமல் போகும். எந்தச் சமூக உறவுக்கும் வடிவத்தோடு உட்பொருளும் (Content) உண்டு. இவ்வுட்பொருளை விட்டுவிட்டு வடிவத்தை மட்டுமே படிப்பதால் சமூக உறவுகளை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாமற் போகும். சிம்மல் எந்தச் சமூக உறவுமே உட்பொருள், வடிவம் என்ற இரு பகுதிகளைக் கொண்டிருக்கும் என்கிறார். வடிவம் என்ற ஒரு பகுதியை ஆய்ந்துவிட்டு, உட்பொருள் என்ற பகுதியை ஆய்வுசெய்யாமல் விட்டுவிட்டால் எப்படிச் சமூக உறவுகளை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்?

மேலும் சமூக உறவுகளின் வடிவங்களை வெறுமனே தனியாக ஆய்வு செய்துப் புரிந்துகொள்ள முடியாது. கண்கூடாக வாழ்க்கையில் அவை எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று அந்தப் பின்னணியில் ஆய்வுசெய்துப் பார்த்தால்தான் அவற்றைப் புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக, போட்டி என்று வெறுமனே தனித்து ஆய்ந்தால் அதைப் புரிந்துகொள்ள இயலாது. பொருளாதாரத் துறையில் அல்லது கலைத் துறையில் எப்படிப் போட்டி நடைபெறுகிறது என்று நேரடியாக ஆய்வு செய்தால் தான் அதைப் புரிந்துகொள்ள முடியும்.

2. பல்பொருளாக்கக் கருத்தினம்

தனித்துறைக் கருத்தினம் சமூகவியலின் ஆய்வுப் பரப்பு ஒரு வரையறைக்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்கிறபோது பல் பொருளாக்கக் கருத்தினம் அந்த எல்லை விரிவாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. பல்பொருளாக்கக் கருத்தினம் சமூக உறவுகளின் எல்லா அம்சங்களையும் ஆய்வுசெய்து சமூகவியல் ஒரு பொதுச் சமூக அறிவியலாக, சமூக உறவுகளை—சமூகத்தைப்பற்றிய ஒரு கலைக் களஞ்சியமாக இருக்கவேண்டும் என்று கூறுகிறது.

சமூக உறவுகளின் எல்லா அம்சங்களையும், சமூக உறவுகளில் முகிழ்த்திடும் சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் விரிவாக, விளக்கமாக ஆய்வு செய்தால்தான், சமூக உறவுகளை — சமூகத்தைப் பற்றிய முழுமையான பொது அறிவு கிடைக்கும். சமூகவியலும் ஒரு முறையான பொதுச் சமூக அறிவியலாக ஆக முடியும். இதற்காகச் சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவும் ஏதாவதோர் அம்சத்தை, கூற்றை எடுத்துக்கொண்டு அதைச் சிறப்பாக, விரிவாக, விளக்கமாக ஆராயலாம். இப்படிப் பல பிரிவுகளும் தங்கள், தங்கள் துறையில் சேர்க்கிற அனைத்து உண்மைகளையும் சேர்த்து இணைத்துச் சமூகவியல் சமூக உறவுகளை — சமூகத்தைப் பற்றிப் பொதுப்படையான அறிவியல் உண்மைகளைத் தரலாம்.

இந்த எண்ணத்தின் அடிப்படையில் சமூகவியல் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து சமூக உறவுகளைப்பற்றி ஆராயலாம்.

(1) சமூக வடிவமைப்பியல் (Social Morphology): மக்கள் வாழ்க்கையில் புவியியல் கூறு எவ்வாறு ஆதாரமாய் அமைந்திருக்கிறது என்பதையும் சமூக நிலையமைப்பின் பல வகைகளோடு அக்கூறு எவ்வாறு உறவு கொண்டுள்ளது என்பதையும் ஆராயும்.

(2) சமூக உடலியல் (Social Physology): சமூகக் கூறுகள் அனைத்தையும் ஆராயும். இதற்காக, இப்பிரிவு பல பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஒரு சமூகக் கூற்றை எடுத்துக்கொண்டு அதனை விரிவாகத், தெளிவாக ஆராயும்; சமயம், ஒழுக்க நெறிகள், சட்டம், பொருளாதார வாழ்க்கை, மொழி என்ற பல்வேறு சமூகக் கூறுகளையும் தனித்தனியானப் பிரிவுகள் விரிவாக ஆராய்ந்து ஒவ்வொரு கூற்றைப் பற்றியும் விதிகளை வகுத்துக்கொடுக்கும்.

(3) பொதுச் சமூகவியல் (General Sociology): சமூக உடலியலின் பிரிவுகள் சமூகக் கூறுகளைப்பற்றித் தனித்தனியாக ஆராய்ந்து வகுத்திட்ட விதிகளை எல்லாம் தொகுத்து, அவற்றிலிருந்து பொதுப்படையான விதிகளை வகுக்கும். இப்பொதுப்படையான விதிகள் சமூகக் கூறுகளின் பொதுவான தன்மையை விளக்கிக் கூறும்.

சமூகவியல் இவ்வாறு பல பிரிவுகளாகப் பிரிந்து சமூகக் கூறுகளைத் தனித்தனியாக, விரிவாக, தெளிவாக ஆராய வேண்டும். அவ்வாராய்ச்சியில் கிடைத்திடும் உண்மைகளைத் தொகுத்து அவற்றைப் பொதுப்படையான அறிவியல் உண்மைகளாக வடித்துத் தரவேண்டும் என்பது டர்க்ஹீமின் கருத்து.

இவ்வாறே மாரிஸ் கின்ஸ்பெர்கும் கருதுகிறார். சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிந்து சமூகக் கூறுகளைத் தனித்தனியாகச் சிறப்பாக ஆராய்ந்து, பிறகு அந்த ஆராய்ச்சி உண்மைகளை யெல்லாம் திரட்டித் தொகுத்துத் தருவதே அதன் நோக்கமாக இருக்கவேண்டும் என்கிறார். இந்த நோக்கத்தை அடைய சமூக வியல் கீழ்க்கண்ட பணிகளை ஆற்றவேண்டும் என்கிறார்.

1. முதலில், சமூகவியல் சமூகக் கூறு ஒவ்வொன்றையும் விரிவாக ஆராயவேண்டும். அதனுடைய வடிவங்கள், வகை பாடுகள், தன்மைகள், அடிப்படைகள் முதலியவற்றை ஆராய வேண்டும். ஒரு சமூகக் கூற்றை எடுத்துக்கொள்ளும்போது, அதை முழுமையாக எல்லாக் கோணங்களிலும் ஆராயவேண்டும். உதாரணமாக ஆண் - பெண் உறவில் முகிழ்ந்திடும் குடும்பத்தை ஆராய எடுத்துக்கொள்ளும்போது அதனுடைய பல்வேறு வகை களையும், அது எந்த அடிப்படையில் அமைகிறது என்பதையும், குடும்பத்தினுடைய தலைமை — நிர்வாகம் யார் கையில், எந்த அளவில் இருக்கிறது என்பதையும், இன்ன பிறவற்றையும் ஆராய வேண்டும்.

2. இரண்டாவதாக, சமூகக் கூறுகளுக்கிடையே நிலவும் உறவை ஆராயவேண்டும். எந்த ஒரு சமூகக் கூறும் தனித்து இருக்காது; தனித்தும் இயங்காது. பிற சமூகக் கூறுகளைச் சார்ந்து உறவு கொண்டிருக்கும். இதனால்தான் சமூகம் என்றால் என்ன என்று தெளிவுபடுத்தும்போது, ஆகஸ்ட் கோம்ட் (Auguste Comte) என்ற அறிஞர் ''சமூகம் என்பது ஒன்றுக்கொன்று உறவுடைய பகுதிகள் சேர்ந்து இருக்கும் ஓர் அமைப்பு முறை'' என்கிறார்.

ஒவ்வொரு சமூகக் கூறும் பிற சமூகக் கூறுகளுடன் உறவு கொண்டிருக்கும். பொருளாதார வாழ்க்கைக்கும் அரசியல் வாழ்க் கைக்கும் உறவு இருக்கும். குடும்பத்திற்கும் அரசாங்கத்துக்கும் உறவு இருக்கும். சமயத்திற்கும் ஒழுக்க நெறிகளுக்கும் உறவு இருக்கும். ஒழுக்க நெறிகளுக்கும் சட்டத்திற்கும் உறவு இருக்கும். இப்படி ஒவ்வொரு சமூகக்கூறும் இன்னொரு சமூகக் கூறுடன் உறவு கொண்டிருக்கும்.

சமூகக் கூறுகள் ஒன்றுடன் ஒன்று எப்படி உறவு கொண்டிருக் கின்றன. அத்தகைய உறவினால் என்ன விளைவுகள் ஏற்படு கின்றன என்பதைச் சமூகவியல் ஆராய வேண்டும்.

3. பிறகு, சமூகக் கூறுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஆராயவேண்டும். எந்தச் சக்திகள் எந்தச் சந்தர்ப்பங்களில் சமூகக் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை

ஆராயவேண்டும். இதேபோன்ற கருத்தை ஹாப்ஹௌஸ் (Hobhouse) என்ற அறிஞரும் கொண்டிருக்கிறார். முதலில் சமூக வியல் சமூக வாழ்க்கையில் ஒவ்வோர் அம்சத்தையும் சிறப்பாக, விரிவாக ஆராயவேண்டும். சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஓர் அம்சத்தை எடுத்துக்கொண்டு சிறப்பாக ஆய்வு செய்யவேண்டும். இரண்டாவதாக, சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பற்றிச் சமூகவியலின் பல்வேறு பிரிவுகள் அளித்திடும் உண்மைகளைத் தொகுத்து, இவ் அம்சங்களுக் கிடையே நிலவும் இயல்பான இணைப்புகளை ஆராயவேண்டும். பிறகு இவ்வித இயல்பான இணைப்புகளால் எவ்வாறு சமூக வாழ்க்கை இயங்குகிறது என்பதை விளக்கிக் கூறவேண்டும்.

இவ்வறிஞர்கள் பயன்படுத்துகிற சொல்லாட்சிகள் வேறு பட்டிருந்தாலும், அவர்களுடைய கருத்துகள் ஒரே பொருளையே மையமாகச் சுற்றி நிற்கின்றன. சமூகவியல் சமூக உறவின் அல்லது சமூக உறவுகள் உண்டாக்கும் சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் தனித்தனியாகச் சிறப்பாக ஆராய்ந்து, பிறகு கிடைத்திடும் உண்மைகளை ஒருங்கு திரட்டி, பொதுப்படையான உண்மைகளை உருவாக்கவேண்டும். இக்கருத்தே பல்பொரு ளாக்கக் கருத்தினத்தின் கருத்தாகப் பரிமளிக்கிறது.

பல்பொருளாக்கக் கருத்தினத்தின் கருத்தே இன்று எல்லோ ராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சமூகவியல் சமூகத்தின் பல் வேறு அம்சங்களையும், கூறுகளையும், விரிவாக, விளக்கமாக ஆராயவேண்டும். சமூகவியல் 'சமூக அறிவியல்களிலேயே மிகச் சிறந்த அறிவியல்' என்ற பெருமை உடையதால், அது சமூகத்தின் எல்லா அம்சங்களையும், கூறுகளையும் விரிவாக ஆராய்ந்து சமூகத்தைப் பற்றிய முழுமையான அறிவை வழங்க வேண்டும் என்று சமூகவியல் அறிஞர்கள் இன்று கூறுகிறார்கள். குறிப்பிட்ட எல்லை ஏதும் வகுத்துக்கொள்ளாமல், விரிந்த பரவலான ஆய்வுப் பரப்பை அமைத்துக்கொண்டு சமூகவியல் இயங்கவேண்டும்; சமூகத்தை முழுமையாக ஆராயவேண்டும் என்பது இன்றைய சமூகவியல் அறிஞர்களின் கருத்து.

இக்கருத்தின் அடிப்படையில் இன்று சமூகவியலாளர்கள் சமூகத்தின் பல்வேறு அம்சங்களையும் கூறுகளையும் விரிவாக விளக்கமாக ஆராய்கிறார்கள். சமூகத்தை ஒட்டு மொத்தமாக ஆராய்கிற இயலைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் சமூகவிய லாளர்கள் சமூகத்தின் இயற்கைத்தன்மை, தோற்றம், அமைப்பு, இயங்கும்முறை, மாற்றம், பிரச்சினைகள் என்ற பல அளவுகளில்

சமூகத்தை ஆராய்கிறார்கள். சமூகத்தைப் பல வழிகளிலும், பல முனைகளிலும் நின்று ஆராய வேண்டும் என்று தங்களுக்குள் ஒரு வேலைப் பங்கீட்டை ஏற்பாடு செய்துகொண்டு சமூக வியலாளர்கள் சமூகத்தின் பல்வேறு கூறுகளையும் பகுதிகளையும் ஆராய்கிறார்கள்.

இந்த வகையில் சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படு கிறது. சமூகவியல் கருத்தாய்வுத் தொகுதி (Theory) சமூகத்தின் இயற்கைத் தன்மை, தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, கூறுகள், செயற்பாடு, மாற்றம் முதலியவற்றைப் பற்றிய தத்துவார்த்தக் கோட்பாடுகள், கருத்துகள், பொது விதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கிறது. இன்றைய நிலையில் எந்த ஓர் அறிவி யலும் தத்துவார்த்தக் கோட்பாடுகள் இல்லாமல் நிலைக்கவோ, வளர்ச்சியடையவோ முடியாது. ஆகவே சமூகவியல் சமூகத்தைப் பற்றிய தத்துவார்த்தக் கோட்பாடுகளை — சிந்தனைகளைக் கொண்டிருக்கிறது.

வரலாற்றுச் சமூகவியல் மிகத் தொன்மையான சமூகங் களையும், அண்மைப் பண்டைக் காலத்தே இருந்த சமூகங்களையும் ஆய்வு செய்கிறது. இன்றைய வாழ்க்கை முறைகளின் தோற்றத்தை அறியவும், அவற்றைப் பற்றிய தெளிவும் பெற வரலாற்றுச் சமூகவியல் பண்டைய, தொன்மையான சமூகங்களை ஆய்வு செய்கிறது.

'குடும்பம்' என்ற பிரிவு சமூகத்தின் முக்கியமான கூறான குடும்பத்தின் தோற்றம், பரிணாம வளர்ச்சிப் பணிகள் முதலிய வற்றையும், பல்வேறு காலங்களில் பல்வேறு சமூகங்களில் இருந்த — இருக்கிற பலவகையான குடும்ப அமைப்புகளையும் தற்காலத்தில் குடும்பம் சந்திக்கிற பல்வேறு பிரச்சினைகளையும் ஆராய்கிறது.

மனிதச் சூழ்நிலையியல் மற்றும் மக்கள்தொகையியல், (Human Ecology and Demography) என்ற பிரிவு ஒரு சமூக நிலையமைப்பில் மக்கள் எப்படி அண்டையங்கள் (Neighbour-hoods), சமுதாயங்கள் என்று குழுத் தொகுதிகள் அமைத்துக் கொண்டு, அவற்றுக்குள் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள், உறவுகளை வளர்த்துக்கொள்ளுகிறார்கள் என்பதையும் அத் தகைய குழுத் தொகுதிகள் எப்படி எப்படி இட ரீதியாகப் பரவி அமைகின்றன என்பதையும், அவை எப்படி தங்களுக்கிடையே ஒன்றுடன் ஒன்று பிணைப்பு வைத்துக்கொள்ளுகின்றன என்பதை யும் ஆராய்கிறது. மேலும் ஒரு குழுத் தொகுதியாக மக்கள்

ஓரிடத்தில் குவிந்து ஒரு தொகையாக வாழ்கிறபோது அம்மக்களின் எண்ணிக்கை அளவு, அந்த எண்ணிக்கை அமைந்திருக்கிற விதம், அது பகிர்ந்து இருக்கிற முறை ஆகியவற்றையும், இந்த மூன்று அம்சங்களிலும் ஏற்படுகிற மாற்றங்களையும், அம்மாற்றங் களினால் ஏற்படும் விளைவுகளையும் ஆராய்கிறது.

'சமுதாயம்' என்ற பிரிவு சிறப்பாக சமுதாயங்களை ஆராய் கிறது. சமுதாயங்கள் கிராமச் சமுதாயங்கள், நகரச் சமுதாயங்கள் என இருவகைப்படும். 'சமுதாயம்' கிராம, நகரச் சமுதாயங் களை — அவற்றின் தன்மைகளை, அமைப்புகளை, பிரச்சினை களை — ஆராய்கிறது. கிராமச் சமுதாயமும், நகரச் சமுதாயமும் பல வழிகளிலும் வேறுபாடு உடையதால் 'சமுதாயம்' கிராமச் சமூகவியல், நகரச் சமூகவியல் என்ற இரு பிரிவுகளாகப் பிரிந்து, முதல் பிரிவு கிராமச் சமுதாயத்தின் தன்மைகளையும், அமைப் பையும், பிரச்சினைகளையும் ஆராய்கிறது. இரண்டாவது பிரிவு நகரச் சமுதாயத்தின் தன்மைகளையும், அமைப்பையும், பிரச்சினைகளையும் ஆராய்கிறது.

சமயச் சமூகவியல் சமயத்தை ஆராய்கிறது. சமயத்தின் தோற்றம், வளர்ச்சி, வடிவங்கள் ஆகியவற்றையும், சமயத்தின் அமைப்பிலும், பணியிலும் ஏற்படும் மாற்றங்களையும் விரிவாக ஆராய்கிறது.

கல்விச் சமூகவியல் கல்வியின் குறிக்கோள், கல்வி நிலையங் களின் நடவடிக்கைகள், கல்வி நிலையங்களுக்கும் சமுதாயத் திற்கும் உள்ள உறவு, கல்விக்கும், பிற நிலையங்களுக்கும் உள்ள பிணைப்பு முதலியவற்றை ஆராய்கிறது.

அரசியல் சமூகவியல் அரசாங்கம், அரசு இவற்றின் தோற்றம், வளர்ச்சி, பணிகள் முதலியவற்றை ஆராய்கிறது. பல்வேறு அரசியல் இயக்கங்களினாலும், சித்தாந்தங்களினாலும் சமூகத்தில் ஏற்படும் விளைவுகளையும் அரசியல் சமூகவியல் ஆராய்கிறது.

பொருளாதாரச் சமூகவியல் பொருளாதார நடவடிக்கை களையும், அவற்றில் நிலவும் நெறிகளையும், உறவுகளையும், தொழிற்பகுப்பு, சிறப்புத் தேர்ச்சி, தொழில்நுட்பம் முதலிய வற்றையும், அவற்றால் ஏற்படும் விளைவுகளையும், சொத்து முதலிய நிறுவனங்களையும் ஆராய்கிறது.

சட்டச் சமூகவியல் சட்டத்தைக் கருப்பொருளாகக் கொண்டு தற்காலத்தில் சமூகத்தின் சட்டம் எவ்வளவு தூரம் இன்றியமை

யாததாக இருக்கிறது, மக்களை அது எவ்வளவு கட்டுப்படுத்துகிறது, சமூகத்தின் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும், ஒற்றுமையையும் அது எப்படி நிறைவேற்றுகிறது என்பதை ஆய்கிறது. சட்டமும், சட்டத்தை அமுல்படுத்துகிற செயல்களும் (Agencies) எவ்வாறு தோன்றுகின்றன, எப்படி செயல்படுகின்றன என்பதையும் விரிவாக ஆராய்கிறது.

சமூக உளவியல் சமூக விழுமியங்களும் (Social values), நெறிகளும் எப்படி மனிதனுடைய செயல் நோக்கத்தையும், ஒழுகலாற்றையும் நிர்ணயிக்கின்றன என்பதை ஆராய்கிறது. மனிதனுடைய ஆளுமையை, ஒழுகலாற்றை நிர்ணயிப்பதில் சமூகக் கூறுகள், சமூக நிகழ்வுகள் (Social Phenomena) எந்த அளவுக்குப் பங்கேற்கின்றன என்பதை ஆராய்கிறது. மனிதன் எப்படிச் சமூகத்தின் உறுப்பினனாக ஆகிறான் என்பதையும், சமூகத்தின் பல வகையான குழுத்தொகுதிகளில் அவன் பங்கேற்கிறபோது அவனுடைய நடத்தை எப்படி அமைகிறது என்பதையும் ஆராய்கிறது.

சமூக உளமருத்துவவியல் (Social Psychiatry) சமூகச் சீர்குலைவுக்கும், தனிமனிதனின் ஆளுமைச் சீர்குலைவுக்கும் உள்ள உறவை ஆராய்கிறது. சமூகத்தில் ஏற்படுகிற தலைகீழ் மாற்றங்கள், சீர்கேடுகள் முதலியன எந்த அளவுக்கு மனிதனின் மனநிலையைப் பாதித்து, மனக்கோளாறுகளை உண்டாக்கி, அவனுடைய ஆளுமையைச் சீர்குலைக்கின்றன என்பதை ஆய்கிறது.

'சமூக நிலையமைப்புச் சிதைவு,' (Social Disorganisation) என்ற பிரிவு சமூகச் சீர்குலைவை ஆராய்கிறது. சமூக ஒழுங்கு கெட்டு, சமூகம் சீராக இயங்க முடியாத பட்சத்தில் ஏற்படும் பிரச்சினைகளை இப்பிரிவு ஆராய்கிறது. குற்றம், இளஞ்சிறார் குற்றம், வறுமை, மக்கள்தொகைப் பெருக்கம், பரத்தைமை, சூதாட்டம், குடி, பிச்சை எடுத்தல் போன்ற சமூக பிரச்சினைகளையும் அவற்றால் உண்டாகும் சீர்கேடுகளையும் இப்பிரிவு ஆராய்கிறது. குற்றமும், இளஞ்சிறார் குற்றமும் பெரும் சமூகப் பிரச்சினைகளாக விளங்குவதால் இவற்றை மட்டும் சிறப்பாக ஆராய இந்தப் பிரிவில் 'குற்றவியல்' என்ற ஓர் உட்பிரிவு தோன்றியுள்ளது.

'குழு உறவுகள்' என்ற பிரிவு சமுதாயத்தில் பல்வேறு இனங்கள், பண்பாட்டுக் குழுக்கள், தேசிய இனங்கள் சேர்ந்திருக்கும் நிலையில் எழுகிற பிரச்சினைகளை ஆராய்கிறது.

சமூகவியலின் பிரிவுகள் இவற்றோடு மட்டும் முடிவதில்லை. இன்னும் பல பிரிவுகளும் இருக்கின்றன. மக்களின் உறவுகளை, வாழ்வுப்போக்கை நெறிப்படுத்தும் பண்பாட்டை ஆராய ஒரு பிரிவு (பண்பாட்டுச் சமூகவியல்), கலைகளை ஆராய ஒரு பிரிவு (கலைச் சமூகவியல்), வேளாண்மையை ஆராய ஒரு பிரிவு (வேளாண்மைச் சமூகவியல்), தொழிலை ஆராய ஒரு பிரிவு (தொழிற் சமூகவியல்), மருத்துவத்துறையை ஆராய ஒரு பிரிவு (மருத்துவச் சமூகவியல்), இராணுவத்தை ஆராய ஒரு பிரிவு (இராணுவச் சமூகவியல்), அவ்வப்பொழுது தோன்றுகிற சிறு சிறு குழுக்களை ஆராய ஒரு பிரிவு (சிறு குழுக்கள் பற்றிய சமூக வியல்), தொடர்ச்சியாக நிலைத்து நின்று வரும் நாட்டு மரபுகள், நம்பிக்கைகள், நாட்டுப் பாடல்கள், கதைகள், புராணக் கதைகள், விளையாட்டுகள் முதலியவற்றை ஆராய ஒரு பிரிவு (மக்கள் மரபுச் சமூகவியல்) என்று பலவிதமான பிரிவுகள் இருக்கின்றன.

சமூகவியலாளர்கள் தமக்குள் ஒரு வேலைப் பங்கீட்டை ஏற்படுத்திக்கொண்டு ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பிரிவில் ஈடுபட்டு அப்பிரிவு சம்பந்தப்பட்ட துறையில் சிறப்புத் தேர்ச்சி அடைகிறார்கள். அத்துறை சம்பந்தப்பட்ட கருப்பொருளை அல்லது கருப்பொருள்களை விரிவாக, விளக்கமாக, சிறப்பாக ஆராய்கிறார்கள். இவ்விதம், சமூகவியலாளர்கள் சமூகத்தில் பல்வேறு கூறுகளையும், பகுதிகளையும் தனித்தனிப் பிரிவுகளின் மூலம் சிறப்பாக, விளக்கமாக ஆராய்ந்து அறிவியல் உண்மைகளை வடித்துத் தருகிறார்கள்.

இந்த உண்மைகள் எல்லாம் ஒருங்கு திரண்டு ஒரு பொது இயலை— பொதுச் சமூகவியலை (General Sociology) உண்டாக்கு கின்றன.

### பிற சமூக அறிவியல்களுடன் சமூகவியலுக்குள்ள தொடர்பு

சமூகவியல் மட்டுமே சமூகத்தை அறிகின்ற இயல் என்று கொள்ளுவதற்கில்லை. பொருளாதாரம், அரசியல், வரலாறு, உளவியல், மானிடவியல், சட்டவியல் முதலிய பிற இயல்களும் சமூகத்தை ஆராய்கின்றன. இவை தத்தமக்கென்று ஒரு கண்ணோட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அந்தக் கண்ணோட் டத்திலேயே சமூகத்தை ஆராய்கின்றன.

சமூகத்தைப் பொதுப்படையாக ஆராய்கிற இயல் என்ற முறையில் சமூகவியல் இச்சமூக அறிவியல்களுடன் உறவு வைத்துக் கொள்ளுகிறது. சமூகத்தின் பல பகுதிகளையும் துறைகளையும்

பற்றி இச்சமூக அறிவியல்கள் விளக்கமான சிறப்பான அறிவியல் உண்மைகளை வடித்துத் தருகின்றன. சமூகத்தைப் பற்றிய முழுமையான அறிவைச் சமூகவியல் நல்க வேண்டியிருப்பதால் அது அச்சமூக அறிவியல்களைச் சார்ந்து அவை தரும் அறிவியல் உண்மைகளைப் பயன்படுத்திக்கொள்ளுகிறது.

ஆயினும் இச்சார்பு ஒருவழிப்போக்கானது அன்று. பிற சமூக அறிவியல்களும் சமூகவியலைச் சார்ந்து இயங்குகின்றன. சமூகவியல் சமூகத்தைப் பற்றிய முழுமையான அறிவை, பொதுப் படையான உண்மைகளை வழங்குகிற பொதுச் சமூக அறிவியல் என்பதால் பிற சமூக அறிவியல்கள், சமூகவியலைச் சார்ந்து சமூகவியலின் அணுகுமுறையையும் ஆய்வு உத்திகளையும் சமூகவியல் வழங்கும் அறிவியல் உண்மைகளையும் பயன்படுத்தித் தங்களுடைய ஆய்வுகளைச் செப்பனிட்டுக்கொள்ளுகின்றன. தாங்கள் கண்டுபிடிக்கும் உண்மைகளையும் சீர்செய்து கொள்ளுகின்றன.

சமூகவியல் எவ்வாறு பிற சமூக அறிவியல்களுக்கு, குறிப்பாக பொருளாதாரம், அரசியல், வரலாறு முதலிய இயல்களுக்கு ஆக்க உதவி செய்கிறது, பயன் தருகிறது என்பதை இங்கு ஆராய்வோம்.

### பொருளாதாரவியல்

பொருளாதாரவியல் மனிதனுடைய பொருளாதார உறவுகளை ஆராய்கிறது. தன்னுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய பொருள் சார் வழிவகைகளைத் தேடும் நடவடிக்கைகளில் மனிதன் ஈடுபடும்பொழுது பிறருடன் உறவுகள் கொள்ளுகிறான். பொருளாதாரவியல் அந்தப் பொருளாதார உறவுகளை ஆராய்கிறது.

ஆனால் பொருளாதார உறவுகள் தனித்தவை அல்ல. சமூக உறவுகளின் பகுதியே அவை. சமூக உறவுகளை ஏற்படுத்துகிற, ஈர்க்கிற, பாதிக்கிற, சக்திகளே பொருளாதார உறவுகளையும் ஏற்படுத்துகின்றன, ஈர்க்கின்றன, பாதிக்கின்றன. சமூகவியல் எந்தெந்தச் சக்திகள், காரணிகள் சமூக உறவுகளை ஏற்படுத்துகின்றன, ஈர்க்கின்றன, பாதிக்கின்றன என்று ஆராய்ந்து கூறுகிறது. பொருளாதாரவியல் சமூகவியலைச் சார்ந்து சமூகவியல் மூலம் பொருளாதார உறவுகளை ஏற்படுத்துகிற, ஈர்க்கிற, பாதிக்கிற சக்திகளையும் காரணிகளையும் அறிந்து கொள்ளுகின்றது.

பொருளாதார அமைப்பே சமூகத்தின் ஓர் அங்கம்தான். ஆகவே எந்தப் பொருளாதாரக் கூறும், நிகழ்வும் (Phenomenon) சமூகச் சக்திகளோ காரணிகளோ இல்லாமல் ஏற்பட முடியாது. (எ.கா.) பொருளாதாரப் பிரச்சினைகள், எந்தப் பொருளாதாரப் பிரச்சினையிலும் ஒருசில சமூகக் காரணிகள் வேர்களாக இருப் பதைக் காணலாம். உதாரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பொருளாதாரப் பிரச்சினையே. ஆயினும் அதை உண்டாக் கும் காரணிகள் பட்டியலில் சமூகவியல் காரணிகளும் இடம் பெறுகின்றன. படித்த இளைஞர்களிடையே உடலுழைப்பு கௌரவக் குறைவானது என்ற மனோபாவம் இருக்கிறது. ஆதலால் அவர்கள் உடலுழைப்பு இல்லாத வேலைகளையே நாடுகிறார்கள். ஆனால் அத்தகைய வேலைகளோ மிகக் குறைவு. அவற்றுக்கோ கடுமையான போட்டி. இதன் பிரதிபலிப்பு வேலை யில்லாத் திண்டாட்டம். மேலும், கல்வி இருந்தபோதிலும் சுயமாகத் தொழில் தொடங்குவதற்கான மனவலிமையோ, உறுதியோ, அவர்களுக்குக் கிடையாது. இதன் காரணமாக அவர்கள் வேலையின்றி இருக்க வேலையில்லாத் திண்டாட்டத்தின் கடுமை அதிகமாகக் கூடுகிறது. இவ்வாறே பொருளாதாரப் பிரச்சினைகளான வறுமை, பிச்சை, மக்கள்தொகைப் பெருக்கம் முதலியன சமூகக் காரணிகளைக் கொண்டிருக்கின்றன. சமூகக் காரணிகள் பிற காரணிகளுடன் சேர்ந்துகொண்டு இப்பிரச் னைகளை உண்டாக்குகின்றன.

பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராயும் பொருளாதார வியல் அறிஞர்கள் சமூகவியலின் உதவி மூலம் அப்பிரச் சினைகளை உண்டாக்கும் சமூகக் காரணிகளைப் பற்றிய விளக்கமும், தெளிவும் பெறுகிறார்கள். அப்பிரச்சினைகளைப் பற்றிய விளக்கமான அறிவும் பெறுகிறார்கள்.

இவ்வாறு, பொருளாதாரக் கூறுகளில் சமூகக் கூறுகளும் அம்சங்களும் கலந்திருப்பதால், தூய கலப்பற்ற பொருளாதாரக் கூறுகளைக் காணமுடியாது. எந்த ஒரு பொருளாதாரக் கூறிலும், அம்சத்திலும், செயலிலும், நிகழ்விலும், சமூகக் கூறுகள், அம்சங்கள் கலந்திருக்கும். பொருளாதாரக் கூறுகளை, அம்சங் களை, செயல்களை, நிகழ்வுகளை ஆராய்கிற பொருளாதாரவியல் இவற்றில் உள்ள சமூகக் கூறுகளையும், அம்சங்களையும் சேர்த்தே ஆய்வு செய்யவேண்டும்; ஆய்வு செய்கிறது. இப்படிச் சமூகவியல் படிப்பையும் சேர்த்துக்கொண்டு பொருளாதாரக் கூறுகளை, அம்சங்களை, செயல்களை, நிகழ்வுகளைப் பொருளாதாரவியல் ஆராய்வதால், மெஸ்னர் (Messner) என்பவர் 'பொருளாதாரம்

என்று தனித்துக் கூறுவதைக் காட்டிலும் சமூகப் பொருளாதாரம் என்று பொருளாதாரத்துடன், சமூகத்தை இணைத்துக் கூறுவதே சாலச் சிறந்தது' என்கிறார்.

இன்றைய பொருளாதாரவியல் அறிஞர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பொருளாதார வியல் பொருளாதார வளர்ச்சியைச் சிறப்பாக ஆராயவேண்டும் என்று கருதுகிறார்கள். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நவீன தொழில்நுட்பம் மிகவும் இன்றியமையாதது. ஒரு பொருளாதார அமைப்பு வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் சரி அல்லது தொழிலை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் சரி, நவீன தொழில்நுட்பம் இல்லாமல் அவ்வமைப்பு வளர்ச்சி பெற முடியாது. ஆனால், டாக்டர் பாலகிருஷ்ணா என்ற இந்தியப் பொருளாதாரவியல் அறிஞர் கூறுவதைப்போல், மரபு தொட்டு வரும் பழைமையான பண்பாடுகள் நிலவும் சமூகங்களில் நவீன தொழில்நுட்பம் காலூன்ற இயலாது. அத்தகைய சமூகத்தில் நவீன தொழில் நுட்பத்திற்கு ஆதரவு இருக்காது. இந்தியாவில் இதைக் கண் கூடாகக் காணலாம். எந்திர உழவு முறைக்கும், கூட்டுறவுப் பண்ணை முறைக்கும் இந்தியாவில் போதுமான சமூக ஆதரவு இல்லை. இத்தகைய நவீன தொழில்நுட்ப முறைகளுக்குப் போதுமான சமூக ஆதரவு இல்லாததால் இந்தியாவில் அதிகப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட முடியாமல் போகிறது.

இத்தகைய நிலையை எப்படிச் சரிசெய்வது என்பதற்கு டாக்டர் பாலகிருஷ்ணா ஒரு வழி கூறுகிறார். 'இந்தியச் சமூகத்தின் அமைப்புக்கும் இயல்புக்கும் ஏற்ற முறையில் தொழில்நுட்ப முறை வகுக்கப்படவேண்டும்' என்கிறார். இத்தகைய பணிக்குச் செயலாக்க அறிவு தேவைப்படும். இந்தியச் சமூகத்தின் அமைப்பை யும் இயல்பையும் ஆராய்ந்தாலே அத்தகைய செயலாக்க அறிவு கிடைக்கும். அத்தகைய அறிவைக் கொண்டுதான் இந்திய நாட்டுக்கு ஏற்ற தொழில்நுட்ப முறையைக் கொண்டுவர முடியும்; பொருளாதார வளர்ச்சிக்கு வழி காண இயலும்.

எனவே பொருளாதாரத் திட்டமிடுதலுக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு வழி காண்பதற்குச் சமூக அமைப்பையும் பற்றிய அறிவு அவசியமாகிறது. இந்த அறிவு கலக்காத எந்தப் பொருளா தாரத் திட்டமும் யோசனையும் செயலாக்கம் பெறுவதில்லை.

அரசியல்

அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் அமைப்புகளையும் பணிகளையும் ஆராய்வது அரசியல் அரசும் அரசாங்கமும் சமூகத்தின் பகுதிகளே. சமூக ஒழுங்கை ஏற்படுத்தி நிலை நாட்டுவதற்கென்று அமைக்கப்பட்ட அமைப்புகள் இவை. சமூகத்தின் அங்கங்களான இவற்றைச் சிறப்பாக, விளக்கமாக அரசியல் ஆராய்கிறது. இவற்றை ஆராயும்போது அரசியலுக்கு சமூகவியல் அறிவு தேவைப்படுகிறது. சமூகவியல் அறிவுப் பின்னணி இருந்தாலொழிய சமூகத்தின் அங்கங்களான இவ் வமைப்புகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலாது. கிட்டிங்ஸ் (Giddings) என்பவர் கூறுவதைப்போல, எப்படி நியூட்டனுடைய இயக்க விதிகளைக் கற்காமல் வானவியலையோ வெப்ப விசையியலையோ புரிந்துகொள்ள முடியாதோ, அப்படியே சமூகவியலின் தத்துவங்களைக் கற்காமல் அரசு பற்றிய கோட்பாட்டைப் புரிந்துகொள்ள முடியாது.

அரசும் அரசாங்கமும் தம்முடைய உறுப்புகள் மூலம் சமூகக் கட்டுப் பாட்டை நிறுவி, சமூக ஒழுங்கை நிலைநாட்டுகின்றன. இவ்வுறுப்புகளின் செயற்பாடுகள், அவை மேற்கொள்ளுகிற நடவடிக்கைகள் முதலியன சமூகத்தில் எழும் போக்குகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இன்றைக்கு அரசியல் சமூகவியலின் மூலம் அந்தப் போக்குகளை அறிந்துகொண்டு, அவை எப்படி அரசையும், அரசாங்கத்தையும், அவற்றின் உறுப்புகளையும் நிர்ணயம் செய்கின்றன, பாதிக்கின்றன என்று கண்டுபிடித்து அதற்கேற்பத் தன்னுடைய கோட்பாடுகளை உருவாக்குகிறது. அதாவது அரசு, அரசாங்கம் இவற்றைப்பற்றிய கொள்கை விதிகளைச் சமூகவியல் காட்டும் வழியில் அரசியல் வகுக்கிறது. பார்னஸ் (Barnes) என்பவர் ‘கடந்த முப்பது ஆண்டுகளில் அரசியல் கோட்பாட்டில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களில் பெரும் பாலானவை சமூகவியல் அறிவுறுத்துகிற, காட்டுகிற வழியில்தான் ஏற்பட்டிருக்கிறது’ என்கிறார்.

இவ்வாறு அரசு, அரசாங்கம் இவற்றை முழுமையாக, தெளி வாகப் புரிந்துகொள்ளவும், கொள்கை விதிகளை வகுக்கவும் அரசியல் சமூகவியலின் உதவியைப் பெறுகிறது.

வரலாறு

வரலாறு கடந்த காலத்தைப்பற்றிப் படிக்கிற இயல் கடந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களை அது ஆய்வு செய்கிறது.

இந்த வகையில் வரலாறு சமூகவியலுடன் வேறுபட்டுத் திகழ்கிறது. வரலாறு கடந்தகாலச் சம்பவங்களை ஆய்வு செய்கிறது. கடந்தகாலச் சம்பவங்கள் என்பதற்காக அது எல்லாச் சம்பவங்களையும் ஒன்றுவிடாமல் ஆராய்வதில்லை. குறிப்பிட்ட, சிறப்பான, முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களையே அது ஆய்வு செய்கிறது. அந்தச் சம்பவங்களை ஓர் ஒழுங்கு முறையோடு, கால வரிசைப்படி அடுக்கிவைத்துப் படிக்கிறது. எடுத்துக்கொண்ட ஒவ்வொரு சம்பவத்தின் அனைத்து விவரங்களையும் சேகரித்து அதை விரிவாக ஆய்வு செய்கிறது. குறிப்பிட்ட, சிறப்பான கடந்த காலச் சம்பவங்களை நன்றாக ஆராய்ந்து அவற்றைப்பற்றித் தனித்தனியாக விவரித்துக் கூறுவதே வரலாற்றின் அலுவல்.

ஆனால் சமூகவியல் கடந்தகாலச் சம்பவங்களை ஆராய்வதில்லை. கடந்த காலம் என்றில்லை, நிகழ்காலமானாலும் சரி, தனிச் சம்பவங்களை அது ஆய்வு செய்வதில்லை. தனிச் சம்பவங்களின் விவரங்களில் அது ஆர்வம் காட்டுவதில்லை. பல்வேறு கால கட்டங்களில் ஏற்பட்ட பல சம்பவங்கள் சில பொது அம்சங்களைக்கொண்டு ஒரு பொதுவான கோலத்தை (pattern) தாங்கியிருக்கும். அந்தக் கோலத்தில்தான் சமூகவியல் ஆர்வம் காட்டுகிறது; நாட்டம் செலுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, வரலாறு பல்வேறு நாடுகளில் பல்வேறு கால கட்டங்களில் ஏற்பட்ட பல சம்பவங்களான பெலோபொனேஷியன் போர், நார்மன் போர், நூற்றாண்டுப் போர், முப்பதாண்டுப் போர், நெப்போலியன் போர்கள், பிளாசி போர், வியட்நாம் சண்டை முதலியவற்றைப்பற்றித் தனித் தனியாக விரிவாக ஆய்வு செய்கிறது. ஆனால், சமூகவியல் இச்சம்பவங்களின் விவரங்களில் கவனம் செலுத்துவதில்லை. இச்சம்பவங்கள் அனைத்தும் வெளிப்படுத்தும் ஒரு கோலத்தில் அது கவனம் செலுத்துகிறது. இத்தகைய சம்பவங்கள் எல்லாம் சில பொதுவான அம்சங்களைக்கொண்டு ஒரு குறிப்பிட்ட கோலத்தைக் கொண்டிருக்கின்றன. அதாவது, ‘போர்’ என்ற கோலம். இந்தக் கோலத்தில்தான் சமூகவியல் கவனம் செலுத்துகிறது. அவ்வாறே வரலாறு அமெரிக்கப் புரட்சி, ஃபிரெஞ்சுப் புரட்சி, சோவியத் யூனியனில் நிகழ்ந்த பொதுவுடைமைப் புரட்சி முதலிய சம்பவங்களைப்பற்றி விரிவாக ஆய்வு செய்கிறது. ஆனால், சமூகவியல் இச்சம்பவங்கள் அனைத்தும் கொண்டிருக்கிற ஒரு பொதுக் கோலத்தில் — ‘புரட்சி’ என்ற கோலத்தில் நாட்டம் செலுத்துகிறது. சமூகவியல் புலனீடான கருத்துக்களில் நாட்டம்

செலுத்துவதில்லை. புலனாகாத, நுட்பமான விஷயங்களில்தான் நாட்டம் செலுத்தும். புலனீடான மேற்கூறிய சம்பவங்களி லிருந்து 'போர்', 'புரட்சி' என்ற புலனாகாத, நுட்பமான விஷயங்கள் வெளிப்படுகின்றன. முன்னவற்றில் வரலாறு நாட்டம் செலுத்த, பின்னவற்றில் சமூகவியல் நாட்டம் செலுத்துகிறது.

ஆனால் இன்றைக்கு வரலாறு தனிப்பட்ட சம்பவங்களை மட்டும் படிப்பதோடு நின்றுவிடாமல் பண்டைய காலத்தில் நிலவிய சமூக நிறுவனங்களையும் படிக்கத் தொடங்கியிருக்கிறது. வரலாற்று அறிஞர்கள் வரலாறு வெறும் தனிச் சம்பவங்களை ஆய்வு செய்துகொண்டிருந்தால் அது அறிவியல் என்ற நிலைக்கு உயரமுடியாது. சமூகவியல் கண்ணோட்டத்தில், சமூகவியல் ஆய்வு முறையைக்கொண்டு பண்டைய சமூக நிலையமைப்புக் களை சமூக வாழ்க்கையை, சமூக நிறுவனங்களை ஆராய வேண்டும். அப்பொழுதுதான் அது அறிவியலாகத் திகழ முடியும் என்று கருதுகிறார்கள். இக்கருத்தின்படி வரலாறு 'சமூக வரலாறு' என்ற நிலையில் நின்று, அறிவியல் முறையில் பண்டைய சமூக நிலையமைப்புகளை, சமூக வாழ்க்கையை, சமூக நிறுவனங்களைப் ஆய்கிறது. சுருக்கமாகக் கூறுவோமெனில், சமூகத்தைக் கடந்த காலப் பின்னணியில் ஆராய்கிறது. ஜி. ஈ. ஹோவார்ட் (G. E. Howard) என்பவர் கூறுவதைப்போல வரலாறு இன்று கடந்த காலச் சமூகவியலாக'த் (past sociology) திகழ்கிறது. வரலாற்றின் இந்தப் பணியில் சமூகவியல் தனது ஆய்வு முறையையும், உண்மைகளையும் கொடுத்து உதவுகிறது.

ஆர்னால்ட் டாயின்பீ (Arnold Toynbee) என்ற அறிஞருடைய 'வரலாற்றைப் பற்றிய ஓர் ஆய்வு' (A Study of History) என்ற நூல் இப்படித்தான் சமூகவியல் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

## சமூகவியலின் முக்கியத்துவம்

சமூகவியலின் முக்கியத்துவத்தைப் பிற சமூக அறிவியல் களுக்கு அது அளித்திடும் ஆக்க உதவியின்மூலம் மட்டுமல்லாமல், வேறு பல வழிகளிலும் நாம் உணரலாம். சமூகவியலைக் கற்பதால் பல பயன்கள் ஏற்படுகின்றன. அந்தப் பயன்களை அறிந்துகொண்டாலே சமூகவியலின் முக்கியத்துவத்தையும் — மதிப்பையும் நாம் உணரலாம். அத்தகைய பயன்களை இங்கு பார்ப்போம்.

சமூகம் என்பது ஓர் இயற்கை நிகழ்வு என்பதைச் சமூக வியல் கற்றுத்தருகிறது. ஓர் இயற்கை நிகழ்வைப் பொறுத்த

வரையில் அதைப்பற்றிய பிரமையையோ அல்லது தாழ்வான எண்ணத்தையோ வளர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அந்தவகையில் ஒருவன் தன்னுடைய சமூகத்தைப் பற்றிய உயர்வான எண்ணத்தை ஏற்படுத்திக்கொண்டு பிற சமூகங்களைத் தாழ்வாக நினைப்பதோ அல்லது தன்னுடைய சமூகத்தை மட்டரகமாகக் கருதி அதை வெறுப்பதோ அவசியம் இல்லை. இந்த உணர்வைச் சமூகவியல் நமக்குக் கற்றுத் தருகிறது. சமூகம் ஒரு சாதாரணமான இயற்கை நிகழ்வுதான் என்பதைப் புரிந்துகொண்டால் சமூகத்தைப்பற்றி எவ்விதமான உணர்ச்சிப் பிடிப்போ வெறுப்போ ஏற்படாது.

சமூகவியல் நம்முடைய அறிவைத் தெளிவோடு வைத்துக் கொள்ள உதவுகிறது. நம்முடைய சிந்தனையைப் பல தவறான தகவல்களும், மூட நம்பிக்கைகளும் கவ்விக்கொண்டு அதைச் சிறை செய்துவிடுகின்றன. சமூகவியல் தவறான தகவல் களையும், மூட நம்பிக்கைகளையும் உடைத்தெறிந்து, நம்முடைய சிந்தனையை விடுவித்து அதற்குத் தெளிவு உண்டாக்குகிறது. பாரம்பரியம், இனம், சாதி, பாலின வேறுபாடுகள், மனித ஒழுகலாறு ஆகியவைபற்றி நிலவும் தவறான தகவல்களையும், மூட நம்பிக்கைகளையும் சமூகவியல் தகர்த்தெறிந்து அறிவியல் உண்மைகளின்மூலம் அறிவுத் தெளிவை வழங்குகிறது. இன முறைப்படி அறிவுத் திறம் அமைவதில்லை என்றும், ஆண்களை விடப் பெண்கள் எந்தவகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்றும், மனித ஒழுகலாறு சமூகச் சூழ்நிலையால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் இப்படிப் பல்வேறு அறிவியல் உண்மைகளை வழங்கி அறிவுத் தெளிவைச் சமூகவியல் ஏற்படுத்துகின்றது.

ஜோசஃப் ஃபிச்டர் (Joseph Fichter) என்பவர் சிறந்த சமூகத்தை ஏற்படுத்தச் சமூகவியல் உதவுகிறது என்கிறார். சமூகவியல், பல்வேறு சமூகக் கேடுகளை ஆராய்கிறது. அவற்றின் பரிமாணங்களையும், அம்சங்களையும், காரணி களையும், விளைவுகளையும் ஆராய்ந்து அவற்றைப்பற்றிய முழுமையான, விளக்கமான அறிவை வழங்குகிறது. இந்த அறிவைக்கொண்டு சமூகக் கேடுகளைத் தவிர்க்க அரசினரும், மற்றவர்களும் வழிவகை காணலாம்; திட்டம் தீட்டலாம். அவற்றைக் களைந்து ஒரு சிறந்த சமூகத்தைச் சமைக்கலாம்.

சமூக வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் பல கொள் கைத் திட்டங்களை அரசினர் வகுக்கின்றனர். இந்தப் பணியில் சமூகவியல் அவர்களுக்குப் பெரிதும் துணை செய்கிறது. சமூக

வியலாளர்கள் சமூகத்தில் ஏற்படக்கூடிய பல நிகழ்ச்சிகளை முன்னறிந்து சொல்லுகிறார்கள். எடுத்துக்காட்டாக நெடுஞ் சாலைகள் அருகே நகரங்கள் தோன்ற, வளர வாய்ப்புகள் இருக் கின்றன என்றும், இளம் வயதிலேயே திருமணம் செய்துகொள்ளும் போக்கு நீடிக்கும் என்றும், மகளிர் வேலைக்குப் போவது அதிகரித்துக்கொண்டே போகும் என்றும் தெரிவிக்கிறார்கள். அவர்களுடைய முன்னறிவுக் கூற்றுகளின் அடிப்படையில் அரசினர் பல கொள்கைத் திட்டங்களை மேற்கொள்ளுகிறார்கள். நெடுஞ் சாலைகள் அருகே நகரங்கள் திட்டமிட்ட முறையில் அமைய ஏற்பாடு செய்கிறார்கள். திருமண வயதை உயர்த்த வேண்டிய தில்லை, அப்படி உயர்த்த வேண்டி இருந்தாலும் அதை வற்புறுத்த வேண்டியதில்லை என்று முடிவுகட்டுகிறார்கள். மகளிர்க்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தத் திட்டமிடுகிறார்கள். இப்படி, சமூகவியலாளர்கள் வருவது உரைக்க அவர்களுடைய கூற்றுகளின் அடிப்படையில் அரசினர் கொள்கைத் திட்டங்களையும் முடிவு களையும் மேற்கொள்ளுகிறார்கள்.

மேலும், அரசினர் கொள்கைத் திட்டங்கள் வகுக்கும்போது அந்தத் திட்டங்களினால் என்ன பயன்கள் ஏற்படக்கூடும், உரிய பயன்கள் கிடைக்குமா என்று சமூகவியலாளர்கள் முன்னறிந்து சொல்லுகிறார்கள். அரசினர் அவர்களுடைய கூற்றுகளுக்கேற்பத் தங்கள் கொள்கைத் திட்டங்களை— யோசனைகளை மறுபரி சீலனை செய்கிறார்கள். அல்லது அவற்றைச் செயல்படுத்த உறுதியோடு முனைகிறார்கள். எடுத்துக்காட்டாக மரண தண்டனையை ஒழித்து விடுவதால் குற்றங்களின் எண்ணிக்கை குறையப் போவதில்லை என்று சமூகவியலாளர்கள் கூறும்போது அரசினர் மரண தண்டனை பற்றி ஒரு குறிப்பிட்ட முடிவுக்கு வருகின்றனர். மரண தண்டனையை நீடிக்க முடிவு கட்டு கின்றனர். அவ்வாறே ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி, நிதி உதவிகள் கொடுப்பதால், அவர்களில் எவ்வளவு பேர் எத்துணைப் பயன் பெறுவர், அந்தப் பயன்கள் எவ்வெவ்வாறு பிரதிபலிக்கும் என்றெல்லாம் சமூகவியலாளர்கள் எடுத்துக் கூறும்பொழுது, அரசினர் முன்னிலும் உறுதியாக, தீவிரமாக ஒடுக்கப்பட்ட வர்களின் நல வாழ்விற்கு, மேம்பாட்டிற்கு விரிவான அளவில் திட்டம் தீட்டுகின்றனர்.

இவ்வாறு சமூகவியல் அதைக் கற்பவர்களுக்கும், அரசுக்கும், சமூகத்திற்கும், நேரிடையாகவும் மறைமுகமாகவும் பயன் படுகிறது. அதனுடைய பயன்பாடுகள் அதனுடைய முக்கியத் துவத்தை உணர்த்துகின்றன.

## வினாக்கள்

1. சமூகவியல் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்துக.
2. சமூகவியலில் உள்ள இரு கருத்தினங்கள் யாவை? அவை சமூகவியலின் ஆய்வுப் பரப்பை எவ்வாறு அணுகுகின்றன?
3. சமூகவியலின் முக்கியமான பிரிவுகளைக் குறிப்பிடுக.
4. சமூகவியல் ஏன் பிற சமூக அறிவியல்களைச் சார்ந்து நிற்கிறது?
5. சமூகவியல் பொருளாதாரவியலுக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்குக.
6. சமூகவியலுடன் அரசியலுக்குள்ள உறவை ஆராய்க.
7. சமூகவியலுக்கும் வரலாற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துக.
8. சமூகவியல் வரலாற்றுக்கு எவ்விதம் பயன்படுகிறது என்பதைக் குறிப்பிடுக.
9. சமூகவியலின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துக.

# 2. சமூகவியல் சிந்தனையாளர்கள்

சமூகவியல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்தது. ஆயினும் சமூகத்தைப்பற்றிய சிந்தனைகள் நீண்ட காலத்திற்கு முன்பே உருவாகியிருந்தன. கௌதம புத்தர், கன்ஃப்யூசியஸ் முதலிய பெரியோர்கள் சமூக உறவுகள், வாழ்க்கை வழி முதலியன பற்றிப் பல கருத்துகளை வடித்துத் தந்தார்கள். மோஸஸ், அமோஸ் முதலிய ஹீப்ரு அறிஞர்கள் சமூகநீதி, சமூகப் பொறுப்புகள் ஆகியவற்றைப்பற்றி போதித்தார்கள். பிளாட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய கிரேக்க அறிஞர்கள் ஓர் இலட்சிய சமூகம் எப்படி இருக்கவேண்டும், அது என்னென்ன கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும், என்னென்ன அம்சங்களைக் கொண் டிருக்கக் கூடாது என்று இலக்கணம் வகுத்துத் தந்தார்கள். ரோம் நாட்டு ஸ்டாய்க் தத்துவஞானிகள், கிறிஸ்தவ ஞானிகள், உடோப்பியன் சிந்தனையாளர்கள் முதலியோரும், மாக்கியவல்லி, ஹாப்ஸ், லாக், ரூஸோ, ஆடம்ஸ்மித், காண்ட் முதலிய சிந்தனையாளர்களும் சமூகத்தை, சமூகத்தின் உறுப்புகளைப் பற்றிய சிந்தனைகளை வடித்துத் தந்தார்கள். இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பே சமூகச் சிந்தனை மலர்கள் அறிவுலகில் பூத்திருந்தன.

ஆனால் அச்சமூகச் சிந்தனைகள் எல்லாம் வெறும் உதிரிகளாக இருந்தனவே தவிர, அறிவியல் நெறியில் முறையாகச் செப்பமுற அமையவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து தான் கோவையான சமூகச் சிந்தனை உரு மலர்ந்து வளர்ந்தது. அறிவுலகம் சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, செயற்பாடு, மாற்றம் முதலியன பற்றித் தெளிவாக, முறையாகச் சிந்தனை செய்து தத்துவங்களை வடித்துத் தந்தது. அறிவியல் நெறியில் சமூகத்தை முறையாக ஆராயும் போக்கு வளரத் தொடங்கியது. சுருக்கமாகச் சொன்னால், பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் சமூகவியல் பிறந்து வளரத் தொடங்கியது.

எண்ணற்ற சிந்தனையாளர்கள் சமூகத்தைப்பற்றிய சிந்தனைகளை வடித்துக் கொடுத்துச் சமூகவியலுக்கு உரமூட்டியிருக்

கிறார்கள். அவர்களில் முக்கியமான நான்கு அறிஞர்களைப் பற்றியும், அவர்களுடைய சமூகச் சிந்தனைகளைப் பற்றியும் இங்கு படிப்போம்.

## ஆகஸ்ட் கோம்ட்
## (Auguste Comte 1798–1857)

'சமூகவியலின் தந்தை' என்ற பெருமை உடையவர் இவர். அவருடைய காலத்தில் வேதியியலிலும், இயற்கையியலிலும், ஏற்பட்டிருந்த வியக்கத்தக்க முன்னேற்றம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. இரசாயன, பௌதிகப் பொருள்களும் நிகழ்வுகளும் குறிப்பிட்ட மாறாத இயற்கை விதிகளின்படி இயங்குவதை அவ்வியல்கள் எடுத்துக் காட்டி விதிகளை வகுத்திருந்தன. ஆகஸ்ட் கோம்ட் சமூக நிகழ்வுகளும் இரசாயன, பௌதிகப் பொருள்களை, நிகழ்வுகளைப் போல மாறாத இயற்கை விதிகளின்படி ஓர்சீராக இயங்குவதாகக் கருதினார். ஆகவே இரசாயன, பௌதிகப் பொருள்களை, நிகழ்வுகளைப்போல, சமூக நிகழ்வுகளையும் முறையாக ஆய்வுசெய்து அவற்றைப்பற்றிய விதிகளை வகுக்கலாம் என்று கருதினார்.

அப்படி, சமூக நிகழ்வுகளைப் பற்றிப் படிக்கிற இயலுக்கு ''சமூக பௌதிகம்'' (Social physics) என்று பெயர் சூட்டலாம் என்று தெரிவித்தார். பௌதிகப் பொருள்களையும், நிகழ்வு களையும் போலவே சமூக நிகழ்வுகளும் மாறாத இயற்கை விதி களின்படி இயங்குவதாலும், பௌதிகப் பொருள்களையும், நிகழ்வு களையும் பற்றிய இயற்கையியல் விதிகளைப் போல சமூக நிகழ்வு களைப் பற்றியும் விதிகள் வகுக்க முடியும் என்பதாலும் சமூக நிகழ்வுகளை ஆய்வு செய்கின்ற இயலுக்கு 'சமூக பௌதிகம்' என்ற பெயரைச் சூட்டலாம் எனக் கருதினார். ஆனால் இடையில் ஒரு பெல்ஜிய அறிஞர் 'சோஷியல் ஃபிஸிக்ஸ்' என்ற சொல்லைப் புள்ளியியல் துறையில் தாம் எழுதிய ஒரு நூலுக்குத் தலைப்பாகப் பயன்படுத்தவே 'சோஷியல் ஃபிஸிக்ஸு'க்குப் பதிலாக 'சோஷி யாலஜி' (Sociology) என்ற சொல்லை உருவாக்கினார் (1838). 'சோஷியஸ்' (Socius) என்ற இலத்தீன் சொல்லையும், 'லோகாஸ்' (Logos) என்ற கிரேக்கச் சொல்லையும் சேர்த்து இச்சொல்லை உருவாக்கினார். இச்சொல்லாக்கமே அவருக்குச் 'சமூகவியலின் தந்தை' என்ற பெயரை ஈட்டித் தந்தது.

ஆகஸ்ட் கோம்ட் ஃபிரான்ஸில் மான்ட்பெலியர் என்ற இடத்தில் 1798-ல் பிறந்தார். தம்முடைய பதினாறாவது வயதில் ஃப்ரான்ஸில் இருந்த புகழ் பெற்ற பாலிடெக்னிக்கில்

அவர் சேர்ந்தார். அங்கிருந்த பேராசிரியர்களுக்கு கணிதம், இயற்பியல் ஆகியவற்றில் ஈடுபாடு இருந்ததே தவிர, மனிதர் களின் நலன்களில், சமூகப் பிரச்சினைகளில் ஈடுபாடு இல்லை. அச்சமயம் புரட்சியினால், ஃப்ரெஞ்சு சமூகம் சீர்குலைந்து கிடந்தது. சீர்குலைந்த ஃப்ரெஞ்சு சமூகத்தை மீண்டும் செப்ப னிட்டு உருவாக்க ஆகஸ்ட் கோம்டின் மனம் விழைந்தது. இந்த நிலையில் அவருக்கு கோம்ட் ஹென்றி டி செயின்ட் சைமன் (Comte Henri de Saint-Simon) என்ற ஒரு சமதர்மச் சிந்தனை யாளருடன் தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தொடர்பு ஆகஸ்ட் கோம்ட்டுக்குச் சமூகத்தைப் பற்றிய சிந்தனைகளை உருவாக்கப் பெரிதும் உதவியது. 'புறமெய்ம்மைத் தத்துவம்' (Positive philosophy) 'புறமெய்ம்மை சார் அரசியலின் அமைப்பு முறை' (System of Positive Politics) முதலிய நூல்களை இயற்றி அவற்றின் மூலம் தம்முடைய சிந்தனைகளை வெளிப்படுத்தினார். அவருடைய சிந்தனைகள் அவருடைய வாழ்நாளில் கவனிப் பாரற்றுக் கிடந்தன. அவருடைய மறைவுக்குப் பிறகே அவை பிறருடைய கவனத்தைக் கவர்ந்து பிரபலமடைந்தன. சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் சமூகவியல் துறையில் அவருடைய சிந்தனைகள் செல்வாக்குப் பெற்றன.

அவருடைய சமூகவியல் சிந்தனைகள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

### மனித மனத்தின் பரிணாம வளர்ச்சி

மனித மனம் மூன்று நிலைகளைக் கடந்து வளர்ச்சி பெற்றுள் ளதாக ஆகஸ்ட் கோம்ட் கருதுகிறார். அந்த மூன்று நிலைகள்: (1) இறைமையியல் நிலை (Theological stage); (2) நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை (Metaphysical stage); (3) புற மெய்ம்மை நிலை (Positive stage).

முதல் நிலையான இறைமையியல் நிலையில் மனித மனம் உலகில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் இயற்கைக்கு அப்பாற் பட்ட இறைச் சக்திகள்தாம் காரணம் என்று நம்புகிறது. இறைச் சக்திகள்தாம் உலகிலுள்ள உயிர்களை இயக்குகின்றன; செயல் களைத் தீர்மானிக்கின்றன. எல்லாவற்றுக்கும் அவையே மூல காரணம் என்று நம்புகிறது.

இரண்டாவது நிலைக்கு, அதாவது நுண்பொருள் கோட்பாட் டியல் நிலைக்கு மனித மனம் வரும்பொழுது அதனுடைய செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது. கண்ணுக்குப் புலப்

படாத நுணுக்கமான சக்திகள் உலகில் நிகழும் நிகழ்ச்சிகளை உண்டாக்குகின்றன என்று நம்புகிறது.

மூன்றாவது நிலையான புற மெய்மை நிலைக்கு மனித மனம் வரும்போதுதான் அது தெளிவான உண்மைகளை — புற மெய்ம்மைகளைக் காணுகிறது. எல்லா நிகழ்வுகளும் ஒரு சில இயற்கை விதிகளின்படி ஏற்படுவதை, இயங்குவதை மனித மனம் இந்த மூன்றாவது நிலையில்தான் தெளிவாகக் கண்டறிந்து மெய் விளக்கம் அடைகிறது. வெறும் அனுமானங்களையும் ஊகங்களையும் வைத்துக்கொண்டு நிகழ்ச்சிகளுக்குக் காரண – காரிய உறவு கற்பிப்பதை விட்டு விட்டு, அந்த நிகழ்ச்சிகளை நன்கு ஆராய்ந்து, புலப்படும் புற மெய்ம்மைகளைத் திரட்டி அவற்றின் அடிப்படையில் காரண – காரிய உறவுகளைக் கண்டு பிடிக்கிறது.

இப்படி மனித மனத்தின் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படும் பொழுதுதான் அறிவு உச்ச வளர்ச்சி நிலையை எட்டிப் பிடிக்கிறது. மெய்யான அறிவியலும் தோன்றுகிறது.

அறிவியல் எல்லா நிகழ்வுகளையும் முறையாக ஆராய்ந்து அவற்றைப் பற்றிய உண்மைகளைத் திரட்டி மெய் விளக்கம் தருகிறது. குறிப்பாக இரசாயன, பௌதிக நிகழ்வுகளை அறிவியல் செம்மையாக ஆராய்ந்து அவற்றைப்பற்றிய உண்மை களைத் திரட்டித் தருகிறது. இரசாயன, பௌதிக நிகழ்வுகளைப் போலச் சமூக நிகழ்வுகளையும் அறிவியல் முறையாக ஆராய்ந்து, அவற்றைப் பற்றிய உண்மைகளைத் திரட்ட முடியும் என்று ஆகஸ்ட் கோம்ட் நம்புகிறார்.

## புறமெய்ம்மை முறை (Positive method)

சமூக நிகழ்வுகளைப் புறமெய்ம்மை முறைப்படி ஆராய்ந்து அவற்றைப்பற்றிய உண்மைகளைத் திரட்ட முடியும். புறமெய்மை முறையில் நான்கு செயற்படுமுறைகள் உண்டு. அவை உற்று நோக்குதல், சோதனை முறை, ஒப்பிடுதல், வரலாற்று முறை ஆகியன. சமூக நிகழ்வுகளை இந்நான்கு செயற்படு முறைகளாலும் ஆராய்ந்து அவற்றைப்பற்றிய உண்மைகளைத் திரட்டலாம்.

ஒரு நிகழ்வைக் கூர்ந்து கவனித்து அதில் புலப்படுகிற உண்மை களைத் திரட்டுவதே உற்று நோக்குதலாகும். ஆனால் கண் ணுக்குத் தட்டுப்படுகிற உண்மைகளை எல்லாம் திரட்டுவது பயனற்ற வேலை. தட்டுப்படுகிற உண்மைகளிடையே ஏதாவது

உறவு இருக்கிறதா என்று பார்த்து அப்படி ஒன்றுக்கொன்று உறவுடைய உண்மைகளைத்தான் திரட்ட வேண்டும். அப்பொழுதுதான் அந்த நிகழ்வைப் பற்றிய கோவையான மெய் விளக்கம் கிடைக்கும்.

உற்று நோக்குபவர் ஒரு தத்துவக்கோட்பாட்டை எடுத்துக் கொண்டு அந்த அடிப்படையில் ஒரு நிகழ்வை உற்றுநோக்கி ஆராய்தல் நலம் என்கிறார் ஆகஸ்ட் கோம்ட். அப்பொழுதுதான் அந்தக் கோட்பாட்டின் எல்லைக்குள் வரக்கூடிய உண்மைகளை மட்டும் திரட்டலாம். அந்த உண்மைகளும் அந்தக் கோட்பாட்டை ஒட்டி ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கும். இல்லாவிடில் உற்று நோக்குதலுக்கு ஓர் இலக்கு இல்லாமல் போய் உற்று நோக்குபவர் தாறுமாறாகக் கண்ட கண்ட உண்மைகளை யெல்லாம் திரட்டிவிடுவார். இதனால் கால விரயம், சக்தி விரயம் ஏற்பட்டு உற்று நோக்குதல் முறை கெட்டுவிடும்.

சோதனை முறை ஒரு கடினமான முறை. சமூக நிகழ்வு களைப் பொறுத்தவரையில் இம்முறையைக் கையாள இயலாது. அவற்றைச் சோதனைக்கு உட்படுத்தி ஆராய இயலாது. ஆயினும் இம்முறையை வேறுவகையில் ஓரளவு பயன்படுத்திச் சமூக நிகழ் வுகளை ஆராயலாம். சமூக நிகழ்வுகளின் செயல்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டு அவை சீர்கேடு அடையும்பொழுது சோதனை முறையைக் கையாள வாய்ப்புண்டு என்கிறார் ஆகஸ்ட் கோம்ட். ஒரு நிகழ்வில் பாதிப்பு ஏற்பட்டு சீர்கேடு உண்டாகும்பொழுது, அந்தப் பாதிப்புக்கு முன் ஏதாவது நிகழ்ச்சிகள் ஏற்பட்டு இருந்தனவா என்று ஆராயலாம். அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னால்தான் பாதிப்பு ஏற்பட்டது என்று தெரிந்தால் அவை தாம் பாதிப்புக்குக் காரணம் என்று உணரலாம். மேலும் இது தொடர்பாக ஒரு தீர்மானத்திற்கு வர, அந்த நிகழ்ச்சிகள் ஏற்படாத நிலையில் பாதிப்பு ஏற்படாமல் இருக்கிறதா என்று பார்க்கலாம். அப்படிப் பாதிப்பு ஏற்படாமல் இருந்தால், அந்த நிகழ்ச்சிகளே பாதிப்புக்குக் காரணம் என்று தீர்மானம் செய்ய லாம், ஆக, அந்த நிகழ்ச்சிகளின் இருப்பை அல்லது இல்லாமையை ஒட்டிச் சமூக நிகழ்வின் பாதிப்பு ஏற்படுவதையோ ஏற்படாத தையோ கவனித்து அவற்றுக்கிடையே உள்ள காரண - காரிய உறவை ஆராயலாம். இப்படி ஆராய்வது ஒரு சோதனைதான்.

ஒப்பிடுதல் ஒரு முக்கியமான முறை. எவற்றையும் ஒப்பிட்டு ஆராயலாம். ஆயினும் விலங்குகள் சமூகத்தையும், மனித சமூகத்தையும் அல்லது இரு வேறு சமூகங்களை அல்லது ஒரு

சமூகத்தில் நிலவும் இரு வேறு சமூக வர்க்கங்களை ஒப்பிட்டு ஆராய்வதுதான் பயனுள்ள, தேவையான செயல் என்பது ஆகஸ்ட் கோம்டின் கருத்து.

வரலாற்று முறை என்பது ஒரு வகையான ஒப்பீட்டு முறை தான். இம்முறையில், மனித குல வளர்ச்சியில் தொடர்ச்சியாக வந்த நிலைகள் ஒப்பிடப்பட்டு ஆராயப்படும்.

சமூகவியல்

புறமெய்ம்மை முறையில் சமூக நிகழ்வுகளை அறிவியலின் ஓர் அங்கமான சமூகவியல் ஆராய முடியும் என்கிறார் ஆகஸ்ட் கோம்ட். சமூக நிகழ்வுகள் என்றில்லை; அந்த நிகழ்வுகளை உள்ளடக்கிய சமூகத்தை இவ்வியல்தான் செம்மையாக ஆராய முடியும் என்கிறார்.

ஆகஸ்ட் கோம்ட் சமூகவியலைச் சமூக நிலையமைப்பு (Social Statics); சமூக இயக்கம் (Social Dynamics) என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறார்.

சமூக நிலையமைப்பில் சமூகம் நிலைத்து அமைந்திருக்கும் நிலைமைகளை ஆராய்கிறது. சமூக இயக்கவியல் சமூகம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் செயற்பாங்கை ஆராய் கிறது. வேறு வகையில் கூறுவதாயின், சமூக நிலையமைப்பியல் சமூகம் நிலைத்து நிற்கும் ஒழுங்கை ஆராய்கிறது. சமூக இயக்க வியல் சமூகம் வளர்ச்சியடைந்து வருவதை—முன்னேற்றமடைந்து வருவதை ஆராய்கிறது. இந்த இரண்டு நிலைகளும்— ஒழுங்கும் வளர்ச்சியும் — வெவ்வேறானவை அல்ல. இரண்டுமே ஒன்றுக் கொன்று நெருக்கமான உறவுடையவை. வளர்ச்சி— முன்னேற்றம் இல்லாமல் சமூகத்தில் உண்மையான ஒழுங்கு ஏற்பட வாய்ப்பில்லை. அவ்வாறே சமூகத்தில் ஒழுங்கு இல்லாத நிலையில் வளர்ச்சி— முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. இப்படி ஒன்று இல்லாமல் மற்றொன்று இருக்காது என்ற அளவில் இரண்டு நிலை களும் நெருக்கமான உறவு கொண்டிருக்கின்றன.

சமூக ஒழுங்குக்குச் சமூக இசைவு (Social Consensus) மிகவும் இன்றியமையாதது. அதாவது சமூகத்தின் பல்வேறு அங்கங் களிடையே—கூறுகளிடையே நெருக்கமான ஒட்டுறவு இருக்க வேண்டும். அப்போழுதுதான் சமூகத்தில் ஒழுங்கு நிலவ முடியும் என்கிறார் ஆகஸ்ட் கோம்ட். ஆகஸ்ட் கோம்ட் சமூகத்தை ஓர் உயிரினத்துக்கு (Organism) ஒப்பாகக் கருதுகிறார். ஓர் உயிரினம்

ஒழுங்குற அமைந்து செயல்பட எவ்வாறு அதன் உறுப்புகளிடையே ஓர் இசைவு — ஒருமைப்பாடு இருக்க வேண்டுமோ, அவ்வாறே ஒரு சமூகமும் ஒழுங்குற அமைய அதன் அங்கங்களிடையே— கூறு களிடையே ஓர் இசைவு — ஒருமைப்பாடு இருக்கவேண்டும் என்கிறார்.

சமூகத்தின் அங்கங்களிடையே ஓர் ஒருமைப்பாடு ஏற்பட மொழி, சமயம், வேலைப் பங்கீடு ஆகியவை உதவக்கூடும் என்கிறார் ஆகஸ்ட் கோம்ட்.

மொழி எல்லோரையும் பிணைத்துக் கட்டுகிற ஒரு நீண்ட சங்கிலி. கருத்துப் பரிமாற்றத்திற்கும் தொடர்புக்கும் அது கருவி யாகப் பயன்பட்டு எல்லோரையும் ஒருங்கிணைக்கிறது.

சமயமும் மனிதர்களைப் பிணைத்து ஒருமைப்படுத்தும் சக்தியாக விளங்குகிறது. தனிமனிதர்கள் தங்களுடைய நலன்களை மட்டும் மையமாக வைத்துக்கொண்டு தனித்து வேறு பட்டு நின்றால் சமூகம் பிய்ந்து போய்விடும். சமயம் இந்த நிலை மையைத் தவிர்க்கிறது. மனிதர்களின் 'தான்' என்ற அகந்தையை அழித்து, சுயநல எண்ணத்தைப் போக்கி, மற்றவர்கள்மீது அன்பு செலுத்தி அவர்களுடன் சேர்ந்து வாழப் பயிற்றுவிக்கிறது. இதன் காரணமாகச் சமூகத்தில் ஒருமைப்பாடு ஏற்பட்டு ஒழுங்கு அமைகிறது.

தொழிற்பகுப்பும் மனிதர்களைப் பிணைத்து ஒருமைப் பாட்டை உண்டாக்குகிறது. தொழிற்பகுப்பு முறையின் காரணமாக ஒருவன் தன் தேவைகளுக்காகப் பிறரைச் சார்ந்து வாழ வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை எல்லோரிடையேயும் ஒருமைப்பாட்டை உண்டாக்குகிறது.

சமூக வளர்ச்சி, அதாவது சமூக முன்னேற்றம் சமூகத்தின் பல துறைகளிலும் ஏற்படும். அது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தோடு முடிவதில்லை. ஓர் இயக்கமாக எல்லாக் காலங் களிலும் தொடர்ந்து நீடித்து வரும்.

சமூக வளர்ச்சிக்கு—முன்னேற்றத்திற்கு அடிப்படையானது அறிவு வளர்ச்சியே. அறிவு வளர்ச்சியைச் சார்ந்தே சமூக வளர்ச்சி ஏற்படும். சமூகத்தின் பல துறைகளிலும் ஏற்படும் வளர்ச்சி அறிவு வளர்ச்சியைச் சார்ந்தே ஏற்படும்.

அறிவு வளர்ச்சி என்பது (மேற்கண்ட) மனித மனத்தின் பரிணாம வளர்ச்சியே. இறையியல் நிலை, நுண்பொருள்

கோட்பாட்டியல் நிலை, புறமெய்ம்மை நிலை என்று அறிவு ஒவ்வொரு நிலையாகக் கடந்து வளர்ச்சி அடைகிறது. அறிவின் வளர்ச்சி நிலைகளுக்கேற்பச், சமூகத்தின் வளர்ச்சி நிலைகளும் அமைகின்றன. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் சமூகத்தின் நிலையமைப்பு ஒருவிதமாக அமைகிறது.

அறிவு இறையியல் நிலையில் இருக்கும்பொழுது, அதாவது உலகில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் இயற்கைக்கு அப்பாற் பட்ட இறைச்சக்திகளே காரணம் என்று மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் நிலையில், சமூக நிலையமைப்பு இராணுவ முறை யில் அமைந்திருக்கும். கடவுளே மன்னர் மன்னனாக—ஆளும் அரசனுக்கு மேற்பட்ட அரசனாக இருப்பார். மக்கள் தங்களை அவருடைய போர் வீரர்களாகக் கருதி நடப்பார்கள். சமய நெறி களை தெய்விகக் கட்டளைகளாக—கடவுளின் வார்த்தைகளாகக் கருதி, இராணுவக் கட்டளைகளை மதிப்பதுபோல் மதிப்பார்கள். கடவுளுடைய வார்த்தைகளை, அதாவது சமயநெறிகளைத் திறனாய்வு செய்வதோ, குறை கூறுவதோ, மீறி நடப்பதோ பெருங்குற்றமாகும் என்றும், அதற்குத் கடவுள் தண்டனை கிடைக்கும் என்றும் அஞ்சி நடப்பார்கள்.

சமூகம் இத்தகையதொரு நிலையில் இருக்கும்பொழுது, குடும்பம் சமூக நிலையமைப்பில் முதன்மையான உறுப்பாக இருக்கும். மக்களைக் கட்டுப்படுத்துவதும், நெறிப்படுத்துவதும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதும் ஆக எல்லாச் செயல்களையும் குடும்பமே செய்யும்.

அறிவு இரண்டாவது நிலையான நுண்பொருள் கோட் பாட்டியல் நிலைக்கு வரும்பொழுது, அதாவது கண்ணுக்கு புலப் படாத நுணுக்கமான சக்திகளே உலகில் நிகழும் நிகழ்ச்சிகளை உண்டாக்குகின்றன என்று மக்கள் நம்பத் தொடங்கும்பொழுது சமூக நிலையமைப்பில் மாற்றம் ஏற்படும். இராணுவ நிலை யமைப்பு நீங்கி, சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு உருவாகும். முறைப்படி இயற்றப்பட்ட சட்டங்கள் ஏற்பட்டு, அவை மக்களைக் கட்டுப்படுத்தும்.

இத்தகைய நிலையமைப்பில் அரசுதான் தலையாய உறுப்பாக இருக்கும். மக்களைக் கட்டுப்படுத்துவது, அவர்களுடைய தேவை களைப் பூர்த்தி செய்வது முதலிய எல்லாவற்றையும் அரசே பார்த்துக் கொள்ளும்.

அறிவு மூன்றாவது நிலையான புறமெய்ம்மை நிலைக்குவரும் பொழுது, அதாவது மனித மனம் உலகில் நிகழும் நிகழ்ச்சிகளுக்

கிடையேயுள்ள காரண — காரிய உறவுகளைப் தெளிவாக ஆராய்ந்து புறமெய்ம்மைகளைத் திரட்டும் நிலையில், சமூக நிலையமைப்பு தொழில்மயமானதாக அமையும். தொழில் மக்களுடைய சமூக — பொருளாதார வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைந்து நிற்கும். இத்தகைய நிலையமைப்பில் மக்களே முதன்மையான நிலையில் இருப்பார்கள். தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக்கொண்டு ஓர் ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வார்கள்.

இப்படி அறிவு ஒவ்வொரு நிலையாக மாறி வளர்ச்சி பெறும் பொழுது, சமூக நிலையமைப்பும் மாற்றமடைந்து வளர்ச்சி எய்தும். அறிவு வளர்ச்சி ஓர் இயக்கமாக இயங்கிக் கொண்டிருக்கும்.

ஆனால், சமூகத்தில் ஒழுங்கு நிலவினாலொழிய, சமூக வளர்ச்சி இயங்க முடியாது. சமூகத்தில் ஒழுங்கு நிலவாத நிலையில் அறிவு வளர்ச்சி ஏற்பட்டாலும், சமூக வளர்ச்சி ஏற்படாது. அத்தகைய நிலையில் சமூக நிலையமைப்பில் ஏற்படும் மாற்றம் வளர்ச்சியாக மாறாமல் சமூகச் சீர்குலைவாக உருவாகிவிடும். சமூகத்தில் ஒழுங்கு நிலவும் சமயத்தில் சமூக நிலையமைப்பில் ஏற்படும் மாற்றம் வளர்ச்சியாக உருவெடுக்கும்.

முடிவுரை

'ஆகஸ்ட் கோம்ட் சுயமாக, தனித்தன்மையுடைய சமூகச் சிந்தனைகளை உருவாக்கவில்லை. அவருடைய காலத்திற்கு முன்பேயும், அவருடைய காலத்திலும் நிலவிய பல கருத்துகளையே அவர் தொகுத்துத் தந்தார்' என்று சிலர் கூறுவதுண்டு. இக்கூற்றில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும், சமூகத்தை, மனித உறவுகளைப் பற்றிய விளக்கமான ஆய்விற்கு வழி வகுக்கும் வகையில் அவர் அக்கருத்துகளை முறையாக—சீராகத் தொகுத்துத் தந்தார் என்பதை யாரும் மறுக்க இயலாது. மேலும் அவர் தம்முடைய தனித்தன்மையுடைய சிந்தனைகளையும் அவற்றோடு விரவி விட்டிருந்தார் என்பதையும் யாராலும் மறுக்கமுடியாது.

## ஹெர்பர்ட் ஸ்பென்சர்
### (Herbert Spencer, 1820—1903)

இங்கிலாந்தில் டெர்பி என்ற இடத்தில் பிறந்தவர். கல்வி நிலையங்களுக்குப் போய் முறையான கல்வியை இவர் பெறவில்லை. ஆயினும் வியக்கத் தக்க வகையில் கணிதம்,

உயிரியல், உளவியல், ஒழுக்கவியல், சமூகவியல் ஆகிய பல துறைகளிலும் இவர் சிறந்து விளங்கினார். இத் துறையில் பல நூல்களையும் இயற்றினார்.

சார்லஸ் டார்வினுடைய 'உயிர்களின் தோற்றம்' (The Origin of Species) என்ற நூல் வெளியான பிறகு (1859) டார்வினின் உயிரியல் தத்துவங்கள் ஸ்பென்சரைக் கவர்ந்தன. டார்வினின் தத்துவங்களைத் தழுவி ஸ்பென்சர் சமூகத்தைப் பற்றிச் சில கோட்பாடுகளை உருவாக்கினார்.

ஸ்பென்சருடைய கோட்பாடுகள் பல அறிஞர்களைக் கவர்ந்தன. 1865-லிருந்து 1895 வரை அவருடைய கோட்பாடுகள் செல்வாக்கு பெற்று மிளிர்ந்தன. ஆனால் 1895-க்குப் பிறகு அறிவுலகில் தோன்றிய புதிய சிந்தனைகள் அவருடைய கோட்பாடுகளின் அடிப்படைகளைத் தகர்த்தன. இதனால் அவருடைய கோட்பாடுகளின் செல்வாக்கு சரிந்தது. சாகும் போது தம்முடைய கோட்பாடுகளுக்கு நேரிட்ட அவல நிலையைக் கண்டு மனம் வெதும்பி இறந்தார்.

ஸ்பென்சருடைய சமூகவியல் சிந்தனைகள் சிலவற்றை இங்குப் பார்ப்போம்:

### உயிரினம் சார்ந்த ஒப்புமை (Organic analogy)

ஸ்பென்சருடைய கருத்தாய்வுத் தொகுதியில் முதன்மையாக நிற்பது அவருடைய உயிரினம் சார்ந்த ஒப்புமைதான். தம்முடைய 'சமூகவியல் கோட்பாடுகள்' (Principles of Sociology) என்ற நூலில் இந்த ஒப்புமைக் கோட்பாட்டை விவரித்துக் கூறியிருக்கிறார்.

"சமூகம் ஓர் உயிரினத்தை ஒத்தது" என்பது ஸ்பென்சருடைய கருத்து. சமூகம் எவ்வாறு உயிரினத்தை ஒத்திருக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட வழிகளில் ஸ்பென்சர் விளக்குகிறார்.

(1) சமூகம், உயிரினம் இரண்டுமே வளர்ச்சி உடையவை. பொருண்மை (Mass) விரிந்து வளர்ச்சி அடைபவை. ஒரு குழந்தை மனிதனாக வளர்கிறது. இவ்வாறே ஒரு சிறிய சமுதாயம் மிகப் பெரும் நகரமாக வளர்கிறது. ஒரு சிறிய அரசு ஒரு பெரும் பேரரசாக மாறுகிறது.

(2) சமூகமும், உயிரினமும் வளர வளர அவற்றின் அமைப்புகள் சிக்கலடைகின்றன. வளர்ச்சிக் கட்டத்தில்

அவற்றின் உறுப்புகள் வேறு வேறாக மாறுகின்றன. ஆரம்பத்தில் ஒன்றையொன்று ஒத்திருந்த உறுப்புகள் வளர்ச்சிக் கட்டத்தில் வெவ்வேறாக மாறுகின்றன. வெவ்வேறாக மாறும் உறுப்புகள் ஒவ்வொன்றும் தனித்தனியான செயற்பாட்டை மேற்கொள்ளுகின்றன. இதன் காரணமாக இவற்றை உள்ளடக்கிய அமைப்புகள் சிக்கலடைகின்றன.

(3) சமூகத்திலும் உயிரினத்திலும் அவற்றின் உறுப்புகள் வேறுபட்டு அமைந்திருந்தாலும், வெவ்வேறு செயல்களைப் புரிந்தாலும், அவற்றிடையே ஒரு பரஸ்பரச் சார்பு உண்டு. ஓர் உறுப்பு பிற உறுப்புகளைச் சார்ந்து நிற்கும்; இயங்கும்.

(4) ஓர் உயிரினம் தன்னுடைய உறுப்புகளைவிட நீண்ட நாள் நிலைத்து வாழக்கூடியது. அவ்வாறே சமூகமும் தன்னுடைய உறுப்புகளை—பகுதிகளைவிட நீண்டநாள் நிலைத்து வாழக் கூடியது.

இவ்வாறு சமூகத்திற்கும் ஓர் உயிரினத்திற்கும் ஒற்றுமை இருப்பதாக ஸ்பென்சர் கூறுகிறார். இந்த ஒப்புமையை மேலும் விவரிக்கிறார்: ஓர் உயிரினத்தின் அமைப்பு முறையைப் போலவே சமூகத்தின் அமைப்பு முறையும் அமைந்திருக்கிறது. உயிரினத்தில் காணப்படுகிற உள்ளமைப்பு முறைகளை ஒத்த உள்ளமைப்பு முறைகள் சமூகத்திலும் காணப்படுகின்றன. உறுப்புகளுக்கு உணவூட்டம் வழங்கி அவற்றை வாழ வைப்பதற்கு உயிரினத்தில் உணவு மண்டலம் இருப்பதைப் போல,;சமூகத்தில் மக்களுடைய உணவுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு உற்பத்தித் தொழில்கள் அமைந்திருக்கின்றன. உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் இரத்தத்தை எடுத்துச் சென்று அவற்றை இணைத்திட உயிரினத்தில் இரத்த ஓட்ட மண்டலம் இருப்பதைப் போல, சமூகத்தில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களை இணைத்திடப் போக்குவரத்து, செய்தித் தொடர்பு சாதனங்கள் அமைந்திருக்கின்றன. உடலைக் கட்டுப்படுத்தி ஆட்சி செய்வதற்கு உயிரினத்தில் நரம்பு மண்டலம் இருப்பதைப் போல, சமூகத்தில் மக்களைக் கட்டுப்படுத்தி ஆள அரசு இருக்கிறது.

இத்தகைய ஓர் ஒப்புமை உயிரினத்திற்கும் சமூகத்துக்கும் இடையே இருக்கிறபோதிலும் இவ்விரண்டுக்கும் இடையே சில வேறுபாடுகளும் இருக்கின்றன என்பதை ஸ்பென்சரே குறிப்பிடுகிறார்.

(1) ஓர் உயிரினத்துக்கு புலனாகக்கூடிய ஒரு குறிப்பிட்ட புற வடிவம் உண்டு. கை, கால், முகம் என்று உறுப்புகள் அமைந்து ஒரு புறவடிவம் அமைந்திருக்கும். ஆனால் இத்தகைய தொரு புலனாகக்கூடிய குறிப்பிட்ட புற வடிவம் சமூகத்திற்குக் கிடையாது.

(2) ஓர் உயிரினத்தின் உறுப்புகள் எல்லாமே ஓர் உடம்போடு இணைந்து இருக்கும். அவை தனித்தனியே பிரிந்து இருப்பது கிடையாது. ஆனால் சமூகத்தில் அதன் உறுப்புகள்—பகுதிகள் ஒட்டிக் கொண்டு இருப்பது கிடையாது. அவை சுதந்தரமாகத் தனித்துக் சிதறிக் கிடக்கும்.

(3) உயிரினத்தின் உறுப்புகள் உடம்பில் குறிப்பிட்ட இடங்களில் நிர்ணயம் செய்த மாதிரி நிலையாக இருக்கும். அவை இடம்விட்டு இடம் மாறக்கூடிய நிலையில் இருப்பதில்லை. ஆனால் சமூகத்தில் உறுப்புகள் இங்குதான் இருக்க வேண்டும் என்ற நிர்ணயம் கிடையாது.

(4) உயிரினத்தில் உணர்வு—பிரக்ஞை ஒரு குறிப்பிட்ட சிறிய பகுதியில்தான், அதாவது மூளையில்தான் ஒருமுகமாகச் செறிந்து இருக்கும். ஆனால் சமூகத்தில் அது எங்கணும் பரவிக் கிடக்கும்—சமூகத்தை உருவாக்குகிற தனிமனிதர்கள் ஒவ்வொருவரிடத்திலும் உணர்வு பிரக்ஞை நிறைந்திருக்கும்.

(5) உயிரினத்தில் உறுப்புகள் உயிரினத்தின் நலனுக்காக இயங்கும். ஆனால் இதற்கு மாறாக சமூகம் தன்னுடைய உறுப்புகளின் நலனுக்காக இயங்கும்.

இவ்வாறு உயிரினத்திற்கும் சமூகத்துக்கும் வேறுபாடுகள் உள்ளன என்பதை ஸ்பென்சர் ஏற்றுக்கொண்டாலும், சமூகம் ஓர் உயிரினத்துக்கு ஒப்பானது என்ற கருத்தை அவர் விட்டு விடவில்லை. சொல்லப்போனால் ஒரு படி மேலே போய் 'சமூகமே ஓர் உயிரினம்தான்' என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார். தம்முடைய 'சமூகவியல் கோட்பாடுகள்' நூலில் இவ்வொப்புமை விளக்கப்படும் அத்தியாயத்துக்கு 'சமூகம் ஓர் உயிரினம்' என்றே தலைப்பு தந்திருக்கிறார்.

### சமூகப் பரிணாமம் (Social evolution)

சமூகம் ஓர் உயிரினத்தை ஒத்திருப்பதால் உயிரினத்தைப் போலவே அதுவும் பரிணாம வளர்ச்சி பெறுகிறது என்று

ஸ்பென்சர் கருதுகிறார். உயிரினம் தொடக்கத்தில் ஒரு நுண்மமாக (Germ) இருந்து, பிறகுதான் மெல்ல மெல்லப் பரிணமித்து வளர்கிறது. சமூகமும் இவ்வாறே ஆரம்பத்தில் ஒரு நுண்ம நிலையிலிருந்து, அதாவது மிகச் சிறிய குழுவாக இருந்து, பிறகு மெல்லப் மெல்லப் பரிணமித்து வளர்கிறது.

சமூகப் பரிணாமச் செயற்பாங்கில், சமூகம் எளிய நிலையிலிருந்து பல்வேறு கூட்டிணைப்பு (Compound) நிலைகளை அடைகிறது. ஆரம்பத்தில் சமூகம் எளிய நிலையில் இருக்கிறது. பிறகு அது ஒரு கூட்டிணைப்பு சமூகமாகப் பரிணமிக்கிறது. பிறகு அந்த நிலையிலிருந்து இரு மடங்குக் கூட்டிணைப்பு சமூகமாக மாறுகிறது. பிறகு மேலும் பரிணமித்து மும்மடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக மாறுகிறது. வெறும் குடும்பங்களை மட்டும் கொண்டிருக்கும் நிலையில் சமூகம் எளிய சமூகமாக இருக்கிறது. பிறகு குடும்பங்கள் ஒன்றிணைந்து குலங்கள் (Clans) உருவாகும்பொழுது, சமூகம் கூட்டிணைப்புச் சமூகமாக ஆகிறது. குலங்கள் மரபு இனக் குழுக்களாக (Tribes) ஒன்று கூடும்பொழுது, கூட்டிணைப்பு சமூகம் இரு மடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக மாறுகிறது. மரபு இனக்குழுக்கள் இணைந்து ஒரு தேசிய இனமாக அல்லது தனியரசு நாடாக அமையும்பொழுது இரு மடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக இருக்கும் சமூகம் மும்மடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக மலர்கிறது.

இவ்வாறு சமூகத்தில் அலகுகள் (Units) பெருகப் பெருக சமூகத்தின் அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது. சமூகம் சிக்கல் அடைகிறது. இதுவே பரிணாம வளர்ச்சி. மக்களுடைய எண்ணிக்கை பெருகப் பெருக, சமூக அலகுகளும் பெருகுகின்றன. இதன் காரணமாகச் சமூகத்தின் அளவு விரிவடைகிறது; அமைப்பு சிக்கலடைகிறது; சமூகப் பரிணாமம் ஏற்படுகிறது.

## சமூகங்களின் வகைபாடு

ஸ்பென்சர் சமூகங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார். ஒன்று பொருகிற சமூகம் (Militant society); மற்றொன்று தொழில் சமூகம் (Industrial Society). ஒரு சமூகத்திற்குப் பிற சமூகங்களுடன் எத்தகைய உறவுகள் அமைந்திருக்கின்றன என்ற அடிப்படையில் ஸ்பென்சர் சமூகங்களை இவ்வாறு பிரிக்கின்றார்.

பொருகிற சமூகம் பிற சமூகங்களுடன் விரோத பாவமான உறவுகள்—பூசல்கள் வைத்திருக்கும். ஆனால் தொழிற் சமூகம் பிற சமூகங்களுடன் சமாதானமாகச் சேர்ந்து வாழும்

அவற்றுடன் சுமுகமான உறவுகள் வைத்திருக்கும். இத்தகைய வேறுபட்ட உறவுகள் இரண்டு சமூகங்களிலும் வேறுபட்ட நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றன.

பொருகிற சமூகத்தில் அதிகாரம் ஒரு மையத்தில் ஒருமுகமாகக் குவிக்கப்பட்டிருக்கும். ஆனால் தொழில் சமூகத்தில் அதிகாரம் எங்கணும் பரவிக் கிடக்கும்.

பொருகிற சமூகத்தில் கட்டுப்பாடு அதிகமாக, கடினமாக இருக்கும். மக்களுடைய எல்லாச் செயல்களின்மீதும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கும். அக்கட்டுப்பாடு மையத்திலிருந்து புறப்பட்டு வரும். ஆனால் தொழில் சமூகத்தில் கட்டுப்பாடு அதிகமாக இராது. மக்கள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடு விதித்துக் கொண்டு ஒழுகுவர்.

பொருகிற சமூகத்தில் ஒவ்வொன்றுக்கும் ஒரு கட்டளை மையத்திலிருந்து வரும். அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்யக் கூடாது, இதைச் செய்யக் கூடாது என்று எதற்கெடுத்தாலும் கட்டளைகள் வந்துகொண்டிருக்கும். ஆனால் தொழில் சமூகத்தில் கட்டளைகள் அவ்வளவாகப் பிறப்பது கிடையாது. பிறக்கிற கட்டளைகளும் இன்னின்ன காரியங்களைச் செய்யக் கூடாது என்கிற மாதிரியில் தான் அமைந்திருக்கும்.

பொருகிற சமூகத்தில் எல்லாமே வலுக்கட்டாயத்தின் பேரில் தான் நடக்கும். மக்கள் பிறருடன் ஒத்து வாழ்வது, செயலாற்றுவது, ஒத்துழைப்பது எல்லாம் தன்னிச்சையாக நடக்காது. மையத்திலிருந்து வரும் வலுக்கட்டாயத்தின் பேரில்தான் நடக்கும். ஆனால் தொழில் சமூகத்தில் வலுக்கட்டாயம் ஏற்படுவதில்லை. மக்கள் தாங்களாக தன்னிச்சையாக பிறருடன் ஒத்துழைத்துக் கூடி வாழ்வார்கள்.

பொருகிற சமூகத்தில் தனிமனிதர்கள் அரசுக்காகவே இயங்க வேண்டும் என்ற நிலைமை உண்டு. இதன் காரணமாக அவர்களுடைய தனியுரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். திருப்பம் போல அவர்கள் எந்த உரிமையையும் அநுபவிக்க முடியாது. ஆனால் தொழில் சமூகத்தில் அரசுதான் தனி மனிதர்களுக்காக, அவர்களின் நலன்களுக்காக இயங்கும். தனி மனிதர்கள் சுதந்திரத்தோடு தனியுரிமைகளையும் அநுபவித்து வாழ்வார்கள்.

பொருகிற சமூகத்தில் ஒருவருடைய செய்தொழில், வசிக்கும் இடம், படிநிலை (Rank) முதலிய எல்லாமே நிர்ணயம் செய்யப் பட்டிருக்கும். ஆனால் தொழில் சமூகத்தில் இவை எல்லாம் நிர்ணயம் செய்யப்படுவதில்லை. விருப்பம் போல மக்கள் இவற்றை மாற்றி அமைத்துக்கொள்ள முடியும்.

இப்படிப்பட்ட வேறுபட்ட சமூகங்கள் வெவ்வேறனா பரிணாம நிலைகளில் நிலவக்கூடும் என்று ஸ்பென்சர் கருதுகிறார். பரிணாம வளர்ச்சியின் தொடக்க நிலையில் சமூகம் பொருகிற சமூகமாகவும், பரிணாம வளர்ச்சியின் கடைசி நிலையில் அது தொழிற் சமூகமாகவும் அமையும் என்று அவர் கருதுகிறார்.

முடிவுரை : ஸ்பென்சருடைய சமூகச் சிந்தனைகள் சமூகவியல் ரீதியில் அமையவில்லை. வெறும் தத்துவார்த்தமாகவே அமைந் திருக்கின்றன என்று விமர்சிக்கப்படுகிறது. ஸ்பென்சர் அறிவியல் அடிப்படையில் புறமெய்ம்மைகளைத் திரட்டி அவற்றைக் கொண்டு தம்முடைய சிந்தனைகளை உருவாக்கியிருந்தாரானால், அவை சமூகவியல் சிந்தனைகளாக ஆகியிருக்கும். ஆனால் புறமெய்ம்மைகளைத் தேடாமல் அவருடைய சிந்தையில் ஊறிய கருத்துகளை, அவை பிரத்தியட்சமாக நிலவுகின்றனவா என்று ஆராய்ந்தறியாமல் அவற்றைத் தந்ததால் அவை வெறும் தத்துவார்த்தமாகவே அமைந்து விட்டன என்று அவரை விமரிசிப்போர் கூறுகிறார்கள்.

## ஏமீல் டர்க்ஹீம்
### (Emile Durkheim, 1858–1917)

ஏமீல் டர்க்ஹீம் ஃபிரான்சில் எபினால் என்ற இடத்தில் 1858-ல் பிறந்தார். பாரிசில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு ஜெர்மனி போனார். அங்கு பொருளாதாரம், மக்கள் மரபு இயல் (Folklore), பண்பாட்டு மானிடவியல் முதலிய இயல்களைக் கற்றார். பிறகு 1887-ல் பார்டோ (Bordeaux) பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகச் சேர்ந்தார். 1902-ல் அப் பல்கலைக் கழகத்திலிருந்து விலகிப் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கடைசி வரை அங்கேயே பணியாற்றினார்.

1896-ல் அவர் 'Annie sociologique' என்ற இதழை நிறுவி அதன் மூலம் தம்முடைய சமூகவியல் சிந்தனைகளையும், ஆராய்ச்சி உண்மைகளையும் வெளியிட்டு வந்தார். அவருடைய சிந்தனைகளும் ஆராய்ச்சிகளும் குறிப்பாக சமூகக் கட்டொருமைப் பாட்டைப் (Social solidarity) பற்றியே அமைந்திருந்தன. அவருடைய பெற்றோர்கள் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள்.

ஃபிரான்சில் யூத இனம் சிறுபான்மை இனமாக இருந்தது. சிறு பான்மை இனம் என்பதால் யூதர்கள் மிகவும் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்தார்கள். 'இந்தக் கட்டொருமைப்பாடு டர்க்ஹீமைக் கவர்ந்து சமூகக் கட்டொருமைப்பாட்டைப்பற்றிப் பொதுவாக சிந்திக்கவும், ஆராயவும் தூண்டியது. டர்க்ஹீம் பல சமூகவியல் சிந்தனைகளை வடித்துத் தந்தார். ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். ஆனால் சமூகவியலில் அவர் விளக்கமான நூல் ஏதும் படைக்கவில்லை. ஆயினும் வடித்துத் தந்த சிந்தனைகள் முறையாக, கோவையாக, செப்பமாக அமைந்திருந்தன. ஃபிரான்சிலும் அமெரிக்காவிலும் அவருடைய சிந்தனைகளின் அடிப்படையில் பல ஆய்வுகள் நடைபெற்றன, கோட்பாடுகள் எழுந்தன. அவருடைய சமூகவியல் சிந்தனைகள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

### சமூக மெய்ம்மைகள் (Social facts)

சமூக வாழ்வில் பல நிகழ்வுகள் நிகழ்கின்றன. அந்த நிகழ்வுகளைத் தனி மனிதர்களே கையாளுகிறார்கள். ஆயினும் அவற்றை உயிரியல் ரீதியிலோ, உளவியல் ரீதியிலோ விளக்க முடியாது. அதாவது தனிமனிதர்களுடைய உயிரியல் பண்புகளை வைத்தோ அல்லது அவர்களுடைய உளவியல் தன்மைகளை வைத்தோ அவற்றுக்கு விளக்கம் காணமுடியாது.

உதாரணமாக ஆடை அணிவது, மணமுடிப்பது, கற்பது முதலிய எவ்வளவோ நிகழ்வுகள் சமூகத்தில் நிகழ்கின்றன. இவற்றையெல்லாம் தனி மனிதர்களே கையாளுகிறார்கள். தனி மனிதர்களுடைய உயிரியல் பண்புகளும், உளவியல் தன்மைகளும் வேறுபட்டிருக்கும். ஆனால் அவர்கள் கையாளும் இந்த நிகழ்வு களெல்லாம்—செயல்களெல்லாம் முரண்பட்டோ, வேறு வேறாகவோ கந்தறுகோலமாகவோ இருப்பதில்லை. ஓர் ஒழுங்கு முறையோடு, ஒரு குறிப்பிட்ட கோலத்தோடு அமைந் திருக்கும். தனி மனிதர்களுடைய உயிரியல் பண்புகளாலோ, உளவியல் தன்மைகளாலோ, இச்செயல்கள் எல்லாம் நிர்ணயிக் கப்பட்டிருந்தால் இவை எல்லாம் ஒரு கோலத்தோடு விளங்க இயலாது. எனவே தனி மனிதர்கள் சம்பந்தப்படாத, அவர்களுக்கு அப்பாற்பட்ட சக்திகளால், காரணிகளால் அவை நிர்ணயிக்கப் பட்டிருந்தால்தான் அவை ஒரு கோலத்தைப் பெற்றிருக்க முடியும். சமூகச் சக்திகளும் நிலைமைகளும் இச்செயல்களை நிர்ணயித்து ஒரு கோலத்தைத் தருகின்றன.

ஆகவே சமூக நிகழ்வுகள், அதாவது சமூகத்தில் நிகழும் செயல்கள் தனிமனிதர்களால் கையாளப்பட்டாலும் அவர்களுக்கு

அப்பாற்பட்டவையாக அவை இருக்கின்றன. சமூகச் சக்திகளும், நிலைமைகளும் அவற்றை நிர்ணயிக்கின்றன. தனிமனிதர்கள் செயல்படும் முறைகள் மட்டுமல்ல, அவர்களுடைய சிந்தனை முறைகள், உணர்வு முறைகள் முதலியனகூடச் சமூகச் சக்திகளாலும், நிலைமைகளாலுமே நிர்ணயிக்கப்படுகின்றன. வெவ்வேறு உயிரியல் பண்புகளையும், உளவியல் தன்மைகளையும் கொண்ட தனிமனிதர்களால் அவை கையாளப்பட்டாலும், ஓர் ஒழுங்குமுறையோடு, ஒரு கோலத்தோடு இருப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் அவை தனி மனிதர்களுக்குப் புறம்பான சக்திகளால், காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதுதான்.

தனிமனிதர்கள் மறைந்த பின்னரும்கூட, அவை கையாளப் படாமலிருந்தாலும், அவை சமூகத்தில் நிலைத்து நிற்பதை, காலங்காலமாக நீடிப்பதைக் காணலாம். எனவே அவை தனி மனிதர்களுக்குப் புறம்பானவை என்பது கண்கூடு.

இப்படிச் சமூகத்தால் நிர்ணயிக்கப்படுகிற செயலாறுகள், சிந்தனை முறைகள், உணர்வு முறைகள் இவற்றை டர்க்ஹீம் 'சமூக மெய்ம்மைகள்' என்கிறார். தனி மனிதர்களுக்குப் புறம் பாக நின்று அவை சமூகத்தில் நிலைத்து நிற்கின்றன. அவை சமூக மெய்ம்மைகள் என்று கருதுவதற்கு இரண்டு சோதனைகள் உண்டு என்கிறார் டர்க்ஹீம். ஒன்று அவை தனிமனிதர்களைக் கட்டாயப் படுத்தி இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும், செயல்பட வேண்டும் என்று தீர்மானிக்கின்றனவா என்று பார்க்கலாம். மற்றொன்று, அவை தனிமனிதர்கள் வாழும் குழு முழுதும் பொது மையாகப் பரவிக் காணப்படுகின்றனவா என்று பார்க்கலாம். இந்த இரண்டு நிலைமைகளும் இருந்தால் அவற்றைச் சமூக மெய்ம்மைகள் என்று கொள்ளலாம் என்று டர்க்ஹீம் தெரி விக்கிறார்.

சமூகவியல் இத்தகைய சமூக மெய்ம்மைகளையே— சமூகத் தால் நிர்ணயிக்கப்பட்டு நிகழ்கிற நிகழ்வுகளையே படிக்கவேண்டும் என்கிறார் டர்க்ஹீம். சமூக மெய்ம்மைகள் புலனீடானவை. ஆகவே செய்முறை சார்ந்த அறிவியலான (Empirical science) சமூகவியல் அவற்றைக் கூர்ந்து நோக்கி ஆராய முடியும் என்கிறார் டர்க்ஹீம்.

### சமூகக் கட்டொருமைப்பாடு

ஒரு சமூகத்துக்கு மிக முக்கியமாக வேண்டியது ஒருமைப்பாடு. சமூகத்தை உருவாக்கிடும் தனிமனிதர்களின் பண்புகளோ

உளவியல் கூறுகளோ முக்கியமானவை அல்ல. அவை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் கட்டொருமைப்பாடு தான் முக்கியம்.

ஒரு சமூகத்தின் கட்டொருமைப்பாட்டைப் பொறுத்தே அச் சமூகத்தில் நிகழும் நிகழ்வுகள் அமைய முடியும். மதப் பிணைப்பு, திருமண நிலை, தற்கொலை விகிதம், பொருளாதாரச் செய் தொழில் முதலியன எல்லாம் சமூகத்தின் கட்டொருமைப் பாட்டைப் பிரதிபலித்தே அமையும். எடுத்துக்காட்டாக, சமூகத்தின் கட்டொருமைப்பாட்டு அளவுக்கேற்பவே அச் சமூகத்தில் நிகழும் தற்கொலை விகிதம் அமையும்.

குறிப்பாக சமூகத்தின் கட்டொருமைப்பாடு அளவுக்கும், தற்கொலை விகிதத்துக்கும் உள்ள உறவை டர்க்ஹீம் சிறப்பாக விளக்குகிறார். எல்லாச் சமூகங்களிலும் தற்கொலைகள் நிகழ் கின்றன. ஆனால் சமூகங்களுக்கிடையே தற்கொலை விகிதத்தில் வேறுபாடுகள் இருக்கின்றன. இந்தத் தற்கொலை விகித வேறு பாடுகளுக்கு சமூகங்களுடைய கட்டொருமைப்பாட்டு அளவில் நிலவும் வேறுபாடுகளே காரணம் என்கிறார் டர்க்ஹீம். தற்கொலை விகிதம் கட்டொருமைப்பாடு அதிகமாக, வலுவாக இருக்கிற சமூகத்தில் குறைவாகவும், கட்டொருமைப்பாடு குறைவாக பலவீனமாக இருக்கிற சமூகங்களில் அதிகமாகவும் இருக்கும் என்று கூறுகிறார். கத்தோலிக்கர்களிடையே தற்கொலை விகிதம் குறைவாகவும், பிராட்டஸ்டன்டுகளிடையே தற்கொலை விகிதம் அதிகமாகவும் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இதற்குக் காரணம் கத்தோலிக்கர்களிடையே கட்டொருமைப்பாடு அதிகமாகவும் வலுவாகவும் இருக்கிறது. பிராட்டஸ்டன்டுகளிடையே கட்டொருமைப்பாடு குறைவாகவும் பலவீனமாகவும் இருக்கிறது என்கிறார் டர்க்ஹீம்.

சமூகத்தில் கட்டொருமைப்பாடு அதிகமாகவும் வலுவாகவும் இருக்கிறபட்சத்தில் சமூக உறுப்பினர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு கிடைக்கிறது. தமக்கு உதவி செய்ய, பாதுகாப்பு நல்கப் பிறர் இருக்கிறார்கள் என்ற மனத் திருப்தி இருக்கிறது. இதனால் அவர்களுக்குக் கவலை பீடிக்கவோ, மனமுறிவு ஏற்படவோ, அதன் காரணமாகத் தற்கொலை செய்து கொள்ளவோ வழியில்லை. ஆனால் கட்டொருமைப்பாடு குறை வாக, பலவீனமாக இருக்கிற சமூகங்களில் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு உணர்வு இருப்பதில்லை. இதனாலேயே அவர்கள் கவலையாலும் பீதியாலும் பீடிக்கப்பட்டுத் தங்களை மாய்த்துக் கொள்ளுகிறார்கள்.

ஒரு சமூகத்தின் கட்டொருமைப்பாடு அச்சமூக உறுப்பினர்கள், எந்த அளவுக்கு நெருக்கமான உறவு கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது. சில பொதுவான நடவடிக்கைகள், சடங்குகள் அமைந்து அவற்றில் எல்லோரும் பங்கேற்றுக் கலந்துகொண்டால் எல்லோரிடையேயும் நெருக்கமான உறவு ஏற்படும். அல்லது அச்சமூகத்தில் இருக்கிற செய்தொழில்கள் தனித்து இயங்காத வண்ணம் அமைந்து பிற செய்தொழில்களுடன் சேர்ந்து அமைந்தால்தான் அவற்றை ஆற்ற முடியும் என்ற நிலைமை இருந்தால் எல்லோரும் நெருக்கமான உறவு வைத்துக்கொள்ள வழி ஏற்படும்.

ஒரு சமூகம் பொதுவான நம்பிக்கைகளையும், விழுமியங்களையும் கொண்டிருந்தால் அது கட்டொருமைப்பாட்டை ஏற்படுத்த உதவும். மேலும் கூட்டுப் பிரதிநிதித்துவச் சின்னங்கள் (Collective representations) கொண்டிருந்தால், அதுவும் கட்டொருமைப்பாட்டை ஏற்படுத்த உதவும். அதாவது ஒரு சமூகம் தன்னை அடையாளங் காட்டக்கூடிய சின்னங்களை (அதாவது ஒரு நாட்டிற்குத் தேசியக்கொடி இருப்பதுபோல; ஓர் அரசியல் கட்சிக்கு ஒரு கொடி அல்லது தேர்தல் சின்னம் இருப்பது போல; கிறிஸ்தவர்களுக்குச் சிலுவை இருப்பதுபோல) கொண்டிருந்தால், சமூக உறுப்பினர்கள் அச்சின்னங்களுக்கு மரியாதை காட்டி விசுவாசம் வைக்கும்போது அவர்களிடையே கட்டொருமைப்பாடு ஏற்படும்.

டர்க்ஹீம் சமூகக் கட்டொருமைப்பாடு இரண்டு வகையில் அமையும் என்கிறார். ஒன்று இயந்திரக் கட்டொருமைப்பாடு (Mechanical Solidarity), மற்றொன்று உயிரினக் கட்டொருமைப்பாடு (Organic Solidarity).

ஒரு சமூகத்தில் உறுப்பினர்களிடையே ஒத்த தன்மையிருந்து அதாவது பொதுவான கருத்துகள், நம்பிக்கைகள், போக்குகள் இருந்து, அதனால் ஒருமைப்பாடு விளையுமானால் அது இயந்திரக் கட்டொருமைப்பாடாக இருக்கும். தொன்மையான சமூகங்களில் இத்தகைய ஒருமைப்பாடே இருந்தது.

ஒரு சமூகத்தில் உறுப்பினர்களிடையே ஒத்த தன்மைகள் இல்லாமல் வேறுபாடுகள் மிஞ்சியிருந்து, அவ்வேறுபாடுகளுக்கிடையேயும் கட்டொருமைப்பாடு ஏற்பட்டால் அது உயிரினக் கட்டொருமைப்பாடாக இருக்கும். எடுத்துக்காட்டாக, உறுப்பினர்கள் பல்வேறு பொருளாதாரச் செய்தொழில்களைப் புரியும்போது

அவர்கள் வேறுபட்டு நிற்கிறார்கள். ஆயினும் தேவையின் காரணமாக ஒரு குறிப்பிட்ட செய்தொழிலைப் புரிவோர், பிற தொழில்களைச் செய்வோரைச் சார்ந்து வாழ வேண்டியிருக்கிறது. இந்தச் சார்பு காரணமாக அவர்களிடையே ஒற்றுமை—ஒருமைப்பாடு ஏற்படுகிறது. நவீன சமூகங்களில் இத்தகைய ஒருமைப்பாடே நிலவுகிறது.

### மதத்தின் தோற்றம்

டர்க்ஹீம் மதத்தைப் பற்றியும் சிந்தித்து அது எவ்வாறு தோன்றியது என்று விளக்குகிறார். மதத்தினுடைய தோற்றத்திற்கு சடங்குகளும் (Rites), சடங்கு வினைமுறைகளுமே (Ceremonies) காரணம் என்று டர்க்ஹீம் கருதுகிறார். இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆஸ்திரேலியாவில் வாழும் அருண்டா பழங்குடியைத் தம்முடைய ஆராய்ச்சிக்குக் காரணமாக எடுத்துக் கொண்டார். அருண்டா மக்கள் மிக மிகத் தொன்மையான நிலையில் வசிப்பதால், அவர்களை ஆராய்ந்தார். மதம் பற்றிய தோற்றத்திற்கு அவர்களுடைய வாழ்க்கை குறிப்புகள் தரக்கூடும் என்று கருதியே அவர் அருண்டா மக்களைத் தம்முடைய ஆராய்ச்சிக் களமாக எடுத்துக்கொண்டார். அவர்களைப்பற்றிய குறிப்புகளை, விவரங்களைத் திரட்டித் தம்முடைய ஆராய்ச்சிக்கும் பயன்படுத்தினார்.

டர்க்ஹிம் மதத்தின் தோற்றம் பற்றி ஆராய்ச்சி செய்த முடிவு இதுதான்: மக்கள் ஒரே மாதிரியாகப் போய்க் கொண்டிருக்கும் அன்றாட மாமூலான வாழ்க்கையில் சலிப்பு அடைகிறார்கள். அந்த சலிப்பிலிருந்து நிவாரணம் பெற எல்லோரும் ஒன்றுகூடிக் கொண்டாட்டங்கள் நிகழ்த்துகிறார்கள். குதூகலமான அந்தக் கொண்டாட்டங்களில் அவர்கள் ஆடிப் பாடிக் களிக்கிறார்கள். இந்த ஆட்டபாட்டங்கள் ஒரே கூச்சலோடு ஆர்ப்பாட்டமாக வெற்றியோடு நடைபெறுகின்றன. இந்த ஆர்ப்பாட்டங்கள் வெறித்தனமாக, ஆரவாரத்தோடு அமைவதால் இவற்றில் கலந்துகொள்ளுகிறவர்களுக்கு ஆவேசம் வந்து உணர்ச்சிப் பிழம்பாக மாறிவிடுகிறார்கள். அத்தகைய சூழ்நிலையில் அந்த ஆட்டபாட்டங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறவர்களுக்கும் ஆவேசம் வந்துவிடுகிறது. கொஞ்ச நேரத்தில் அந்த ஆவேசம் அடங்க, ஆட்டபாட்டங்கள் முடிவுக்கு வருகின்றன.

எப்படி இந்த ஆவேசம் ஏற்படுகிறது, அது எப்படி பிறகு போய்விடுகிறது என்பது மக்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

இந்த ஆவேசத்துக்கு ஏதோ ஒரு நுட்பமான, அருவமான மறை வடக்கமான சக்திதான் (அருண்டா மக்கள் இச்சக்தியை 'மானா' என்று அழைக்கிறார்கள்) காரணமாக இருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள். அது புறத்தே இருந்து வந்து மக்கள் உடலில் குடிபுகும்பொழுது அவர்களுக்கு ஆவேசம் வருகிறது. விலகிப் போகும்பொழுது ஆவேசம் போய்விடுகிறது. ஆகவே இந்த ஆவேச இயக்கத்துக்கு அந்த சக்திதான் காரணமாய் இருக்க வேண்டும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

இப்படிப்பட்ட சக்தியைப் பூசித்து மரியாதை செய்வது அவசியம் என்று மக்கள் கருதுகிறார்கள். அதற்கு எப்படி வணக்கம் செலுத்துவது என்று சிந்திக்கும்பொழுது, அதற்கு ஒரு புற உருவம் சமைத்துக்கொடுத்தால் வணங்குவது எளிது என்று மக்கள் தீர்மானிக்கிறார்கள். பிறகு அதற்கேற்ப ஓர் உருவம் சமைத்து சக்தியின் சின்னமாக அதைக் கருதுகிறார்கள். அவ்வுருவம் சக்தியின் இருப்பிடம் என்பதால் அதை ஒரு புனிதப் (Sacred) பொருளாகக் கருதி வணங்குகிறார்கள். மெல்ல மெல்ல அந்த வணக்க வழிபாட்டில் பூசனைகள், சடங்குகள், வினைமுறைகள், படையல்கள் என்று பலவிதமான அம்சங்கள் இடம் பெறுகின்றன. புனிதப் பொருள் சம்பந்தப்பட்டதால் இவை யாவும் புனித மானவையே என்று மக்கள் நம்புகின்றார்கள். இப்படி சக்திக்குச் சின்னமாக எழுகிற உருவத்திற்கு ''டோட்டம்'' (Totem) என்று பெயர். டோட்டத்தை வழிபடுகிற முறைக்கு ''டோட்டமிஸம்'' (Totemism) என்று பெயர். நாளடைவில் ''டோட்டங்கள்'' சக்தியின் சின்னங்கள் பெறுகின்றன. உருவங்கள் மட்டுமல்லாமல் விலங்குகள், தாவரங்கள், இயற்கைப் பொருள்கள் முதலியனவும் சக்தியின் இருப்பிடங்களாகக் கருதப்பட்டு அவையும் ''டோட்டங் களாக'' புனிதப்பொருள்களாகின்றன.

இந்த 'டோட்டமிசத்திலிருந்துதான் மதம் முளைத்தது' என்று டர்க்ஹீம் கூறுகிறார். மதத்திற்கு அவர் கொடுக்கிற விளக்கம் இதுதான் : ''மதம் என்பது புனிதப் பொருள்கள் சம்பந்தப்பட்ட நம்பிக்கைகளும், செயலாறுகளும் ஒருங்கே அமைந்த அமைப்பு முறை.'' டர்க்ஹீம் 'கடவுள்' என்ற சொல்லையோ 'தெய்வம்' என்ற சொல்லையோ பயன்படுத்தவில்லை. எங்கே மக்கள் ஏதாவதொரு பொருளைப் புனிதமானதாகக் கருதி வழிபட்டுப் பூசனைகள் செய்கிறார்களோ, அங்கே மதம் நிலவுகிறது என்கிறார்.

ஆக, மதம் பிறப்பதற்குத் தேவையான நிலை என்ன வென்றால் மக்கள் பொருள்களைப் புனிதப் பொருள்கள், புனிதம்

சாராத (Profane) பொருள்கள் என்று வேறுபடுத்திப் பிரித்துப் பார்க்க வேண்டும். சில பொருள்கள் புனிதமானவை என்று பிரித்து வைக்கப்படும் பொழுதுதான் மதம் பிறப்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. அப்புனிதப் பொருள்கள் வழி பாட்டுக்கும் பூசனைகளுக்கும் உரியனவாகின்றபொழுது மதம் பிறக்கிறது.

முடிவுரை: டர்க்ஹீம் சமூக நிகழ்வுகளுக்கு முழுக்க முழுக்கச் சமூகவியல் கண்ணோட்டத்திலேயே விளக்கங்கள் தருகிறார். இவை ஒருதலைப்பட்சமானவை என்று விமர்சிக்கப்படுவதுண்டு. ஆயினும் அவருடைய விளக்கங்கள் சமூகவியலில் நிலவும் பல தத்துவப் பிரச்சினைகளுக்கு விடைகளாக அமைந்திருக்கின்றன என்று பலர் கூறுகிறார்கள்.

## கார்ல் மார்க்ஸ்
## (Karl Marx, 1818–1883)

பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் தந்தையான கார்ல் மார்க்ஸ் மேற்கு ஜெர்மனியில் ட்ரீர் (Trier) என்ற நகரத்தில் 1818ஆம் ஆண்டில் பிறந்தார். பான் (Bonn) பல்கலைக் கழகத்திலும் பெர்லின் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்து வரலாறு, தத்துவம் ஆகிய இயல்களைக் கற்றார். படிக்கும்போது ஹேகலின் (Hegel) தத்துவங்கள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. 1843-ல் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. ஜெர்மனியில் அவருக்கு ஏற்ற வேலை ஏதும் கிடைக்காததால் அவர் தம் துணைவியாருடன் பாரிஸ் நகருக்கு சென்று குடியேறினார். பாரிசில் அவருக்கு சமதர்ம எழுத்தாளர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அதற்கும் மேலாக ஃப்ரீட்ரிக் எங்கல் (Friedrich Engels) என்ற சமதர்மச் சிந்தனையாளருடைய நட்பு கிடைத்தது. இந்தத் தொடர்பும் நட்பும் மார்க்ஸின் சமதர்மச் சிந்தனைகள் கூர்மையடையப் பெரிதும் உதவின.

1847-ல் பி. ஜே. பிரௌதான் என்பவர் எழுதிய 'அவலத்தின் தத்துவம்' (Philosophy of Misery) என்ற நூலை விமர்சித்து 'தத்துவத்தின் அவலம்' (The Misery of Philosophy) என்ற நூலை எழுதினார். அந்த நூலில்தான் அவர் வரலாற்றைப் பொரு ளாதார ரீதியில் வியாக்கியானம் செய்து எழுதினார். 1884-ல் எங்கல்சுடன் கூட்டாகச் சேர்ந்து 'பொதுவுடைமை அறிக்கை' (The Communist Manifesto) என்ற அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் வர்க்கப் போராட்டத்தைப்பற்றி விவரித்து எழுதினார்.

*1849-ல் அவருடைய எழுத்து வன்மையையும், கூர்மை யையும் கண்டு அஞ்சிய ஃபிரெஞ்சு அரசாங்கம் அவரை நாட்டை விட்டு வெளியேற ஆணையிட்டது. தம் குடும்பத்தினருடன் அவர் பாரிசிலிருந்து வெளியேறி இலண்டன் போய்க் குடியேறினார். இலண்டனில் தாங்கமுடியாத அளவுக்கு அவரை வறுமை வாட்டி யது. அவர் மனம் தளராமல் பிரிட்டிஷ் மியூசியத்துக்குப் போய் எண்ணற்ற நூல்களைப் படித்து 'மூலதனம்' (*Das Kapital*) என்ற நூலை எழுதினார். 1867-ல் அதனுடைய முதல் பாகம் வெளி வந்தது. 1883-ல் அவர் காலமானார். அவருடைய மறைவுக்குப் பிறகு அவருடைய ஆருயிர்த் தோழர் எங்கல்ஸ் 1885-லும் 1894-லும் 'மூலதன'த்தின் இரண்டாம், மூன்றாம் பாகங்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இந்த நூலில்தான் கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவமுறைபற்றிய தனது கோட்பாட்டை விவரித்துக் கூறியிருக்கிறார்.*

*அவருடைய சமூகவியல் சிந்தனைகள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.*

பொருளாதார நிர்ணயக் கோட்பாடு (Theory of Economic Determinism)

*பொருளாதார உற்பத்தி முறைதான் சமூகத்துக்கு அடிப் படையாக அமைந்திருக்கிறது என்கிறார் கார்ல் மார்க்ஸ். பொருளாதார உற்பத்திமுறை எவ்வாறு அமைந்திருக்கிறதோ அதை ஒப்ப, சமூகமும் அமைந்திருக்கும் என்கிறார்.*

*வெறும் பொருளாதார உற்பத்தி முறை சமூகத்துக்கு அடிப் படையாக அமைவதில்லை. பொருளாதார உற்பத்தி முறையில் எழுகிற உறவுகள்தான் சமூக அமைப்பை நிர்ணயிக்கின்றன. மூலப் பொருள்களைக் கையாண்டும், தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் பொருள் உற்பத்தி நடைபெறும்போது, உற்பத்தியில் சம்பந்தப்பட்டவர்களிடையே எழுகின்ற உறவுகளே சமூக அமைப்பை நிர்ணயிக்கின்றன. அவர்களிடையே உறவுகள் எவ்வாறு அமைகின்றன என்பதைப் பொறுத்துச் சமூகம் அமைகிறது.*

*உற்பத்தியில் எழுகிற சமூக உறவுகள் மொத்தமாகச் சேர்ந்து பொருளாதார அமைப்பை உருவாக்குகின்றன. பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டுதான் அதன்மீது சமூக அமைப்பு எழுகிறது என்கிறார் கார்ல் மார்க்ஸ். பொருளாதார அமைப்பு மாறும்போது சமூக அமைப்பின் தன்மை மாறும்.*

சமூகத்தில் இருக்கிற அரசாங்கம், மதம், குடும்பம் முதலிய நிறுவனங்களும், சட்டம், தத்துவம், இலக்கியம், கலை முதலிய துறைகளும் பொருளாதார அமைப்பைச் சார்ந்தே அமைகின்றன. அதாவது, உற்பத்தியில் எத்தகைய சமூக உறவுகள் அமைகின்றன என்பதைப் பொறுத்து, சமூக நிறுவனங்களும் கூறுகளும் அமைகின்றன. அந்த உறவுகளில் மாற்றம் ஏற்படும்போது, பொருளாதார அமைப்பு மாறுகிறது. பொருளாதார அமைப்பு மாறும்போது சமூகமும் சேர்ந்து மாறுகிறது. அதனுடைய நிறுவனங்களும் கூறுகளும் பொருளாதார அமைப்பின் மாற்றத்திற்கேற்ப மாறுகின்றன.

பொருளாதார அமைப்பை உருவாக்குகிற உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகள் யாருடைய உடைமையில் இருக்கின்றன என்பதைப் பொறுத்து அமைகின்றன. உடைமை முறையில் மாற்றம் ஏற்படும்பொழுது உற்பத்தி உறவுகளும் மாற்றமடைகின்றன. பொருளாதார அமைப்பு மாறுகிறது. அதன் விளைவாக பொருளாதார அமைப்பின்மீது அமைந்திருக்கிற சமூகமும் மாறுகிறது.

மனிதகுல வரலாற்றில் பொருளாதார அமைப்பு இதுவரை நான்கு நிலைகளைத் தாண்டி மாறி வந்துள்ளது என்கிறார் மார்க்ஸ். அந்த நிலைகள் ஆசிய நிலை (Asiatic Phase), தொன்மையான நிலை (Ancient phase), நிலமானிய நிலை (Feudal phase), முதலாளித்துவ நிலை (Capitalistic phase) ஆகியன. ஒவ்வொரு நிலையும் முந்திய நிலையுடன் முரண்பட்டு, அதன் விளைவாக எழுந்தது என்கிறார் மார்க்ஸ். இன்றைக்குப் பொருளாதார அமைப்பு ஐந்தாவது நிலை ஒன்றைக் கடக்க இருக்கிறது. அந்த நிலையே அதன் மாற்றத்தில் கடைசி நிலை. அந்த நிலை பொதுவுடைமை நிலை (Communistic phase). பொதுவுடைமை நிலை ஓர் இலட்சிய நிலை. அது இப்பொழுது மெல்ல மெல்ல எழுந்து வருகிறது. அந்த நிலையின் தோற்றத்தை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்கிறார் மார்க்ஸ்.

பொருளாதார அமைப்பு முதலில் ஆசிய நிலையில் இருந்தது. அது ஒரு பண்டைய, பின் தங்கிய நிலை. அந்த நிலையில் பொருளாதார உற்பத்தி நுகர்வுக்காக மட்டுமே அமைந்திருந்தது. நுகர்வுத் தேவைகளை மட்டுமே நிறைவேற்றிக் கொள்ள உற்பத்தி நடைபெற்றது. நிலங்கள் தனியுடைமைகளாக உரிமைப்படுத்திக் கொள்ளப்படாமல் சமூகத்துக்கே பொதுவாக இருந்தன.

ஆசிய நிலைக்குப் பிறகு தொன்மையான நிலை எழுந்தது. பொருள்கள் நுகர்வுக்காக மட்டுமல்லாமல் பரிவர்த்தனைக்காகவும் உற்பத்தி செய்யப்பட்டன. இலாப நோக்கோடு, பரிவர்த்தனைக்காக — வாணிகத்திற்காக உற்பத்தி அமைந்தது. இதுவரை சமூகத்துக்குப் பொதுவாய் அமைந்திருந்த நிலங்கள் தனியார் உடைமைகளாக அமைந்தன. வசதி படைத்த பிரபுக்கள் நிலங்களைத் தங்கள் உடைமைகளாகச் சுவாதீனப்படுத்திக் கொண்டனர்.

நிலங்கள் பெரும் பண்ணைகளாக மாற்றப்பட்டபோது, பண்ணைகளைப் பேண, வேளாண்மை செய்யப் பண்ணையடிமைகள் அமர்த்தப்பட்டனர். இந்த நிலையில்தான் நிலமானிய நிலை தோன்றியது. நிலமானிய நிலையில் நிலங்கள் எல்லாம் பிரபுக்களுக்குச் சொந்தமாக இருந்தபோதிலும், உழவுக்கருவிகள் உழுவோருக்கே சொந்தமாக இருந்தன. இவ்வாறே கைவினைத் தொழில் கருவிகளும் கைவினைத் தொழிலாளருக்கே சொந்தமாக இருந்தன.

பணப் பொருளாதாரம் ஏற்பட்ட பிறகு, உழைப்பாளிகள் தங்கள் உழைப்புக்கு ஊதியம் கேட்கத் தொடங்கினர். அவர்களிடையே ஏற்பட்ட எழுச்சியினாலும் பிற காரணங்களாலும் நிலமானிய அமைப்பு முறை சிதைந்தது. நிலமானிய அமைப்பு முறை சிதைவுறத் தொடங்கிய காலத்தில் புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் ஏற்பட்டன. அவற்றைத் தொடர்ந்து முதலாளித்துவ அமைப்பு முறை எழுந்தது. புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைக் கொண்டு பணபலம் மிக்கவர்கள் முதலீடு போட்டு புதிய உற்பத்தித் தொழில்களைத் தொடங்கினர். உற்பத்தித் தொழில்களின் சக்திகள்,கருவிகள், ஆலைகள் எல்லாம் அவர்களுக்கே உடைமைகளாய் இருந்தன. முதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளிகளின் உழைப்பைச் சுரண்டி உற்பத்தித் தொழில்களைத் தங்கள் நலன்களுக்கே சாதகமாய் நடத்திவந்தனர். தொழிலாளர்களுக்குரிய ஊதியத்தைத் தராமல் அவர்களை வஞ்சித்துத் தங்களுடைய வாழ்வை மேம்படுத்திக்கொண்டனர். இந்த நிலை இன்றைக்கும் நீடிக்கிறது. இதனால் சுரண்டப்பட்ட தொழிலாளர்கள் ஒரு வர்க்கமாயும், அவர்களைச் சுரண்டி தங்கள் வாழ்வை மேம்படுத்திக்கொண்ட முதலாளிகள் இன்னொரு வர்க்கமாயும் அமைந்தனர்.

தாங்கள் சுரண்டப்படுவதை, வஞ்சிக்கப்படுவதை உணர்ந்து கொண்ட தொழிலாளர்கள் அந்தச் சுரண்டலை முறியடிக்கத்

தங்களுடைய பகைவர்க்கத்துடன் — முதலாளித்துவ வர்க்கத்துடன் இன்று போராட்டம் தொடுத்திருக்கிறார்கள். இந்த வர்க்கப் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தினர் தோற்கிற நிலையில் இருக்கிறார்கள். முதலாளித்துவத்தின் அடிப்படை ஆட்டங்கண்டு அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்கிறார் மார்க்ஸ். அதனுடைய அழிவிற்குப் பிறகு, முதலில் தொழிலாளர்களுடைய ஆதிக்கம் — சர்வாதிகார ஆட்சி ஏற்படும் என்கிறார் மார்க்ஸ். தங்களுடைய ஆட்சியை நிலைநாட்டிய பிறகு தொழிலாளர்கள் தனியுடைமையை ஒழித்துக் கட்டுவார்கள். முதலாளித்துவ அமைப்பு முறையின் சாயல்கள் எங்கிருந்தாலும் அவற்றை அறவே துடைத்தெறிந்துவிடுவார்கள். முதலாளித்துவமுறை முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்ட பிறகு, உண்மையான பொதுவுடைமை நிலை தோன்றும். அந்த நிலையில் வர்க்கங்கள் இருக்காது; அரசாங்கம் என்ற அமைப்பு இருக்காது. அரசாங்கம் என்ற அமைப்பே இல்லாமல், மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு வருவர். ஒவ்வொருவரும் தம்முடைய சக்திக்கேற்ப உழைப்பர். தம்முடைய தேவைக்கேற்பப் பொருள் பெறுவர். சமூகம் முழுமையான ஒழுங்கு பெற்றுத் திகழும் என்கிறார் மார்க்ஸ்.

வர்க்கக் கோட்பாடு (Class Theory)

உற்பத்திச் சக்திகள் தனியார் உடைமைகளாக இருக்கக்கூடிய சமூகத்தில் —முதலாளித்துவ சமூகத்தில் முக்கியமாக இரண்டு வர்க்கங்கள் அமையும். ஒன்று பூர்ஷுவா வர்க்கம் (Bourgeois Class); இன்னொன்று தொழிலாளர் வர்க்கம் (Proletarian Class) உற்பத்திச் சக்திகளைத் தம்முடைய உடைமைக்குள், கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்கள் பூர்ஷுவா வர்க்கத்தினர். தங்கள் உழைப்பைக் கொண்டு உற்பத்தியைச் செய்கிறவர்கள் தொழிலாள வர்க்கத்தினர்.

பூர்ஷுவாக்கள் உற்பத்திச் சக்திகளைத் தங்கள் உடைமைக்குள் வைத்துக்கொண்டு சமூகத்தின் பல துறைகளிலும் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுகிறார்கள். பொருளாதாரத் துறையில் மட்டுமல்லாமல் ஆட்சித் துறையிலும் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்துகிறார்கள். தங்களுடைய பலத்தையும், ஆதிக்கத்தையும் கொண்டு மத, தத்துவ, ஒழுக்கவியல், இலக்கியம், சட்டம் முதலிய துறைகளில் தங்களுடைய ஆதிக்கத்துக்கு ஆதரவான கருத்துகளை உருவாக்குகிறார்கள். அந்தத் துறைகளைத் தங்களுக்கு ஆதரவாக இருக்கும்படி அமைத்துக்கொள்ளுகிறார்கள். சிந்தனைகள் ஏற்படக்கூடிய

மார்க்கங்களைத் தங்களுடைய ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்து, மக்களுடைய சிந்தனைகளையும் தம்முடைய ஆதிக்கத்துக்கு ஆதரவாக அமைத்துக்கொள்ளுகிறார்கள்.

தங்களுடைய ஆதிக்கத்தைக் கொண்டு தொழிலாளர்களை அவர்கள் சுரண்டி வாழ்கிறார்கள். தொழிலாளர்களுடைய உழைப்பின்மீது தங்களுடைய வாழ்வுக் கோட்டையை அமைத்துக் கொள்ளுகிறார்கள். ஆதிக்க பலத்தைக் கொண்டு அவர்கள் தம்முள் ஒரு வர்க்கமாய் அமையும்போது அவர்களுடைய ஆதிக்கத்தில் சுரண்டப்படுகிற தொழிலாளர்கள் இன்னொரு வர்க்கமாய் அமைகிறார்கள்.

முதலாளித்துவ அமைப்பு முறை இருந்தாலே தொழிலாளர் வர்க்கம் ஏற்பட்டே தீரும் என்கிறார் மார்க்ஸ். தொழிற்சாலை தான் முதலாளித்துவ அமைப்பு முறையில் மையமாக இருக்கிறது. தொழிலாளர்கள் அங்குதான் பொருளாதார உற்பத்திக் தொழிலில் ஈடுபடுகிறார்கள். பொதுவான ஒரு தொழிலில் — உற்பத்தியில் ஈடுபடுவதனாலேயே, தொழிலாளர்கள் ஒரு வர்க்கமாய் அமைந்துவிடுவதில்லை. ஆரம்பத்தில் வேலைக்கு வரும்பொழுது தனித்தனியாகத்தான் வருகிறார்கள். தங்களுடைய சொந்த நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு உழைக்க வருகிறார்கள். தொழிற்சாலையில் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு உழைக்கிறார்கள். இப்படி ஆரம்பத்தில் அவர்கள் ஒரு வர்க்கமாய் அமைவதில்லை.

முதலாளித்துவ அமைப்பில் உற்பத்திச் சக்திகளைத் தங்களுடைய உடைமையாக வைத்திருக்கிற முதலாளிகள் தங்களுடைய வாழ்வை, நலன்களை மேம்படுத்துவதிலேயே குறியாக இருப்பார்கள். இதனால் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு உரிய ஊதியத்தைத் தராமல் அவர்களைச் சுரண்டி, வஞ்சித்து வாழ்வார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஊதிய விஷயம் தொழிலாளர்களுக்கு ஒரு பொது மேடையாய் அமைந்து அவர்களை ஒருங்கிணைக்கிறது. முதலாளிகளின் சுரண்டலைக் கண்டு தொழிலாளர்கள் கிளர்ச்சியுறுகிறார்கள். தங்களுடைய உழைப்புக்குரிய ஊதியத்தைக் கோரி முதலாளிகளை எதிர்த்து ஒன்று திரள்கிறார்கள். இப்படி ஒரு பொதுவான பற்றை (ஊதியத்தை) முன்வைத்து ஒரு வர்க்கத்திற்கு—சுரண்டும் பூர்ஷுவா வர்க்கத்திற்கு எதிராக அவர்கள் ஓரணியாகத் திரளும்போது அவர்கள் ஒரு வர்க்கமாக அமைகிறார்கள். அவர்களிடையே கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்படுகின்றன. ''நாமெல்லோரும் தொழிலாள வர்க்கத்தினர்'' என்ற வர்க்க உணர்வு

பீறிட்டெழுகிறது. இந்த உணர்வின் அடிப்படையில் பூர்ஷுவாக்களை ஒரு பொது எதிரியாக நிறுத்தி அவர்களை எதிர்த்து, அவர்களுடைய ஆதிக்கத்தை முறியடிக்கப் போர்க்கோலம் பூணுகிறார்கள்.

பூர்ஷுவாக்களும் தொழிலாளர்களும் பகை வர்க்கங்களாய் மாறி, அவர்களிடையே வர்க்கப் போராட்டம் நிகழ்கிறது. பூர்ஷுவாக்கள் தங்களுடைய ஆதிக்கத்தையும் பலத்தையும் கொண்டு தொழிலாளர்களை வீழ்த்த முனைகிறார்கள். இந்த வர்க்கப் போராட்டம் இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் தொழிலாளர்களின் சக்தியே மேலோங்கி நிற்கும். தொழிலாளர்களே வெற்றி பெறுவர். முதலாளித்துவச் சக்தியை முறியடித்துத் தொழிலாளர் அரசை ஏற்படுத்துவர். முதலாளித்துவ அமைப்பு முறையை அடியோடு ஒழித்துக்கட்டுவர். அதனுடைய சாயல்கள், செல்வாக்கு எந்தத் துறையிலும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளுவர். பிறகு உண்மையான பொதுவுடைமை மலரும். அந்த நிலையில் வர்க்கம் என்று எதுவும் இருக்காது. எல்லோரும் ஒரே நிறையாக இருப்பர்.

முடிவுரை: கார்ல் மார்க்ஸ் பொருளாதாரச் சக்திக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார். மற்றச் சக்திகளை அவர் ஏறெடுத்துப் பார்க்கவில்லை என்று விமர்சனம் செய்யப் படுவதுண்டு.

## மாக்ஸ் வேபர்
### (Max Weber, 1864–1920)

மாக்ஸ் வேபர் ஜெர்மனியில் எர்ஃப்ரூட் என்னுமிடத்தில் பிறந்தார். வசதியான குடும்பத்தில் பிறந்ததால் அவர் சட்டத்திலும் பொருளாதாரத்திலும், சிறந்த கல்வியும் பயிற்சியும் பெற்றார். 1893-ல் ஃப்ரைபுர்க் (Freiburg) பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகச் சேர்ந்தார். சிறிது காலத்தில் அங்கிருந்து விலகி, ஹைடல்பர்க் (Heidelberg) பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். 1900-ல் உடல் நலக் குறைவு காரணமாக அவர் ஆசிரியத் தொழிலை விட்டு விலகினார். 1918-ல் மறுபடியும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். அவருக்குப் புகழ் ஏறிக்கொண்டு போகும் தருணத்தில் 1920-ல் காலமானர்.

ஆசிரியத் தொழிலை விட்டிருந்த 1900—1918 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அவர் வாளா இருக்கவில்லை. பல ஆராய்சிகளை மேற்கொண்டு புதிய, புதிய உண்மைகளை

வெளிக் கொணர்ந்தார். பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிக் குவித்தார். அவர் காலமான பிறகு அவருடைய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல்கள் வடிவில் வெளிவந்தன.

அவருடைய சமூகவியல் சிந்தனைகள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

### மதத்திற்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள உறவு

மார்க்ஸ் வேபருக்கு முன் வாழ்ந்த அறிஞர் கார்ல் மார்க்ஸ் மதம் முதலிய சமூக-பண்பாட்டு நிகழ்வுகள் எல்லாம் பொருளாதாரச் சக்திகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. கிறிஸ்தவ மதத்தில் ஏற்பட்ட பிராட்டஸ்டன்ட் மறுமலர்ச்சியே முதலாளித்துவ முறையின் காரணமாக ஏற்பட்டது என்று கூறியிருந்தார். இக்கருத்து மாக்ஸ் வேபருக்கு ஒப்பவில்லை. முதலாளித்துவ முறையினால் பிராட்டஸ்டன்ட் மறுமலர்ச்சி ஏற்பட்டதா அல்லது பிராட்டஸ்டன்ட் மறுமலர்ச்சியினால் முதலாளித்துவ முறை ஏற்பட்டதா என்பதை ஆராயத் தொடங்கினார். கடைசியில், பிராட்டஸ்டன்ட் மறுமலர்ச்சினால்தான் முதலாளித்துவ முறை ஏற்பட்டது என்ற முடிவுக்கு வந்தார்.

பிராட்டஸ்டன்ட் நாடுகளில்தான் முதலில் முதலாளித்துவ முறை தோன்றியிருக்கிறது என்பதை அவர் கண்டார். எப்படி இது ஏற்பட்டது என்பதை அவர் பின்வருமாறு கூறுகிறார்:

பிராட்டஸ்டன்ட் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில் கால்வின் (Calvin) என்ற மத அறிஞருடைய கருத்துகள் பிராட்டஸ்டன்ட் மக்களிடையே செல்வாக்கு பெற்று விளங்கின. அவர் வகுத்துத் தந்த அறநெறிகள் முதலாளித்துவ முறை ஏற்படுவதற்கு ஆதரவாக இருந்தன. கால்வின் சொன்னார், "மக்கள் கடுமையாக உழைக்க வேண்டும். பிறகு அந்த உழைப்பில் கிடைக்கிற வருவாயைத் தற்காலிகச் சுகங்களுக்குப் பயன்படுத்தாமல் மீண்டும் மீண்டும் இலாபம் கிடைக்கிற வண்ணம் மறுபடியும் உற்பத்தித் தொழில்களில் முதலீடு செய்து தொழில் நிறுவனங்களை நிறுவ வேண்டும். அப்படிச் செய்தால்தான் கர்த்தருடைய அன்பை அவர்கள் பெறமுடியும்'' என்று.

கால்வினுடைய இந்த அறநெறிகள் பிராட்டஸ்டன்ட் மக்களைக் கவர்ந்து அவர்கள் கடுமையாக உழைக்கவும், உழைப்பில் கிடைத்த வருவாயைக் கொண்டு தொழில் நிறுவனங்களை நிறுவவும் தூண்டின, இதனால் முதலாளித்துவ முறை ஏற்படத் தொடங்கியது.

இவ்வாறு, முதலாளித்துவமுறையில் மக்களுக்கு ஊக்கம் ஏற்பட மதக் கருத்துகளே நெறிகளே காரணமாக அமைகின்றன என்று மாக்ஸ் வேபர் முடிவு கட்டுகிறார். மதக் கருத்துகள், நெறிகள் ஆதரவாக இல்லாத பட்சத்தில் முதலாளித்துவ முறை எழ வாய்ப்பில்லை என்பதை அவர் சீனாவையும் இந்தியா வையும் உதாரணம் காட்டி விளக்குகிறார். சீனாவில் சமூக-பொருளாதார நிலைமைகள் முதலாளித்துவ முறை எழச் சாதக மாகவே இருந்தன. ஆயினும் சீனாவில் மேலோங்கியிருந்த கன்ஃபியூஸியனிசத்தின் கருத்துகளும் நெறிகளும் முதலாளித்துவ முறைக்குச் சாதகமாக ஊக்கமளிப்பதாக அமையவில்லை. அதன் காரணமாகவே முதலாளித்துவ முறை அங்கே வேரூன்ற முடிய வில்லை. இந்தியாவில் சமூக-பொருளாதார நிலைமைகள் பொதுவாக முதலாளித்துவமுறை எழச் சாதகமாக இல்லா விட்டாலும், போதுமானவையாக இருக்கின்றன. ஆயினும் எல்லாம் தலை விதிப்படியே அமைகின்றன என்ற 'கர்மா' மதக் கோட்பாட்டில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின் காரணமாக மக்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதில்லை. இதன் காரணமாக முதலாளித்துவ முறை இந்தியாவில் வளர முடியாமல் போய் விட்டது என்று மாக்ஸ் வேபர் குறிப்பிடுகிறார்.

### அதிகார வகைகள் (Types of Authority)

தலைவர்கள் என்று அமைபவர்கள் மக்கள் மீது அதிகாரம் செலுத்துவார்கள். இந்த அதிகாரத்தைப் பல வகைகளாய் பிரிப்பதுண்டு. பொதுவாக, பலரும் அதைச் (அதிகாரத்தை) செலுத்துகிற தலைவர்களின் சிறப்பியல்புகளை அடிப்படையாகக் கொண்டு அதைப் பல வகைகளாகப் பிரிப்பதுண்டு. ஆனால் மாக்ஸ் வேபர் அப்படிச் செய்யாமல், தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் இடையேயுள்ள உறவின் தன்மையை அடிப் படையாக வைத்து அதிகாரத்தை வகைபாடு செய்கிறார்.

அவர் அதிகாரத்தை மூன்று வகைகளாகப் பிரிக்கிறார்; முதல் வகை பகுத்தறிவுக் கொத்த சட்டம் சார்ந்த அதிகாரம் (Rational-legal authority). இந்த வகையான அதிகாரம் பகுத் தறிவுக்கேற்ற முறையிலும், சட்டப்படி இயற்றப்பட்ட விதிகளின் அடிப்படையிலும் அமையப் பெற்றிருக்கும். தற்காலத்திய மேலை நாட்டுச் சமூகங்களில் இத்தகைய அதிகாரமே பயன் படுத்தப்படுகிறது.

மற்றொரு வகை மரபு சார்ந்த அதிகாரம் (Traditional authority). மரபுகளைப் புனிதமாக மதிக்கும் சமூகங்களில் இவ்

வகையான அதிகாரமே செலுத்தப்படும். பழங்குடி மக்கள் வாழும் சமூகங்கள் இப்படிப்பட்டவை. அவற்றில் மரபுகள் புனிதமாகப் போற்றப்படும். எனவே அங்குள்ள தலைவர்கள் மரபுகளைப் பயன்படுத்தி மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துவர். மரபுகளுக்கு மரியாதை காட்ட வேண்டும் என்ற மனோபாவம் அவர்களுக்கு இருப்பதால் அந்த அதிகாரத்துக்கு மக்கள் முழுதும் கட்டுப்பட்டு வணக்கமாக நடப்பர்.

மூன்றாவது வகை காந்த சக்தி சார்ந்த அதிகாரம் (Charismatic authority). சில தலைவர்களுக்குத் தங்களுடைய சிறப்பான ஆற்றலாலும், நற்குணங்களாலும், வீரப் பண்புகளாலும் மக்களைக் கவர்ந்து இழுக்கக்கூடிய ஒரு வகையான காந்த சக்தி உண்டு. அவர்கள் செலுத்தும் அதிகாரமே காந்த சக்தி சார்ந்த அதிகாரமாகும். காந்திஜி, ஹிட்லர் முதலிய தலைவர்கள் இத்தகைய காந்த சக்தி சார்ந்த அதிகாரத்தைத்தான் செலுத்தி னார்கள்.

மேலும், இம்மூன்று வகையான அதிகாரங்களும் தனித் தனியே பிரிந்து நிற்பவை அல்ல. சில சமயங்களில் அவை ஒன்றோடொன்று இணைந்தும் காணப்படும். உதாரணமாக, ஜெர்மன் மக்கள் மீது ஹிட்லர் செலுத்திய அதிகாரம் காந்த சக்தி சார்ந்த அதிகாரமாக இருந்த போதிலும், அவ்வதிகாரத்தில் பகுத்தறிவுக்கொத்த — சட்டம் சார்ந்த அதிகாரத்தின் அம்சங்களும் கலந்தே காணப்பட்டன.

அதிகார வர்க்க ஆட்சி (Bureaucracy)

மாக்ஸ் வேபர் தற்காலத்தில் சமூகத்தின் போக்கையும் ஆராய்கிறார். தற்காலத்தில் சமூகத்தில் அரசியல் துறையில், நிர்வாகத் துறையில், வாணிகத் துறையில் அதிகார வர்க்க ஆட்சி ஏற்பட்டு வருகிறது. இத்துறைகளில் பெரிய பெரிய நவீன நிறுவனங்கள் (Enterprises) தோன்றுகின்றன. இந்நிறுவனங்களில் அதிகார வர்க்க ஆட்சி மேலோங்கியிருக்கிறது. இந்நிறுவனங்களில் அலுவல்கள் எல்லாம் படிநிலை வாரியாகப் பிரிக்கப்பட்டு ஒரு வரிசைக்கிரமமான நிலையில் (Hierarchy) அடுக்கப்படுகின்றன. ஒவ்வோர் அலுவலுக்கும் அதனுடைய அதிகார எல்லை நிர்ண யிக்கப்படுகிறது. ஒவ்வோர் அலுவலுக்கும் அதற்குரிய சிறப்புத் தகுதிகள் யாவை என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. நியமனங்கள் அந்தச் சிறப்புத் தகுதிகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

நவீன நிறுவனங்கள் எல்லாம் இத்தகைய அம்சத்தை அதிகார வர்க்க ஆட்சியைத்தான் கொண்டிருக்கின்றன. இந்த அம்சத்தின் காரணமாக அலுவல்கள் எல்லாம் பங்கீடு செய்யப்பட்டுக் காரியங்கள் முறையோடு நடக்கின்றன.

ஆயினும் இத்தகைய அதிகார வர்க்க ஆட்சியில் எதிர்பாராத விளைவு ஒன்று ஏற்படுவதை மாக்ஸ் வேபர் குறிப்பிடுகிறார். அதிகார வர்க்க ஆட்சி அமைந்த நிறுவனங்கள் எல்லாம் இயந்திர கதியிலேயே இயங்குகின்றன. விதிகளின்படியே அவை செயலாற்று கின்றன. பணியாற்றுவோர் மனிதாபிமான ரீதியில் நடத்தப் படுவதில்லை. விதிகள் என்ன சொல்கின்றன என்ற அடிப் படையிலேயே அவர்கள் விஷயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. “விதிகளுக்காகவே மனிதர்கள்” என்ற ரீதியிலே விதிகள் அமுல் படுத்தப்பட்டு காரியங்கள் நடக்கின்றன.

இவ்வாறு சமூகத்தின் பல துறைகளிலும் வளர்ந்து வருகிற அதிகார வர்க்க ஆட்சிப் போக்கை மாக்ஸ் வேபர் அலசுகிறார். அதிகார வர்க்க ஆட்சியைப்பற்றிய அவருடைய குறிப்புகள் பின்னால் பல ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டியாய் அமைந்தன.

முடிவுரை: மாக்ஸ் வேபர் பல சமூகப் போக்குகளைப் பற்றியும், நிலைமைகளைப்பற்றியும் ஆராய்ந்து பல உண்மைகளை வெளிக் கொணர்ந்தபோதிலும், சமூகவியலில் நிலவும் பல தத்துவப் பிரச்சினைகளுக்கு அவை விடைகள் தரவில்லை என்று விமர்சனம் செய்யப்படுவதுண்டு. ஆயினும் அவருடைய ஆராய்ச்சி உண்மைகள் பின்னால் பல ஆராய்ச்சிகளுக்கு அடிகோலிட, சமூகவியல் வளரப் பெரிதும் உதவின என்பதை யாரும் மறுக்க இயலாது.

## வினாக்கள்

1. ஆகஸ்ட் கோம்ட் சமூகவியலின் தந்தை என்று அழைக்கப்படுவதற்குக் காரணம் யாது?
2. ஆகஸ்ட் கோம்ட் மனித மனத்தின் பரிணாம வளர்ச்சியை எவ்வாறு விளக்குகிறார்.
3. புறமெய்ம்மை முறை என்றால் என்ன? அதனுடைய செயற்படு முறைகள் என்னென்ன?

4. ஆகஸ்ட் கோம்ட் சமூகவியலை எவ்விதம் பிரிக்கிறார்? அப்பிரிவுகள் எவற்றைப்பற்றிப் படிக்கின்றன?

5. ஆகஸ்ட் கோம்டின் கருத்துப்படி எந்தெந்தக் காரணிகள் சமூக ஒருமைப்பாட்டுக்கு உதவுகின்றன?

6. சமூக வளர்ச்சி எப்படி ஏற்படும் என்று ஆகஸ்ட் கோம்ட் விவரிக்கிறார்?

7. ஹெர்பர்ட் ஸ்பென்சரின் உயிரினம் சார்ந்த ஒப்புமைக் கருத்தை ஆராய்க.

8. ஹெர்பர்ட் ஸ்பென்சர் சமூகப் பரிணாமம் எப்படி ஏற்படுகிறது என்று கூறுகிறார்?

9. ஹெர்பர்ட் ஸ்பென்சர் சமூகங்களை எவ்விதம் வகைபாடு செய்கிறார்?

10. 'சமூக மெய்ம்மைகள்' என்றால் என்ன என்பதை விளக்குக.

11. சமூகக் கட்டொருமைப்பாடுபற்றி ஏமீல் டர்க்ஹீம் கொண்டிருக்கும் கருத்துகளைக் கூறுக.

12. ஏமீல் டர்க்ஹீம் மதத்தின் தோற்றத்தை எப்படி விளக்குகிறார்?

13. கார்ல் மார்க்ஸின் பொருளாதார நிர்ணயக் கோட்பாட்டை விளக்குக.

14. கார்ல் மார்க்ஸின் வர்க்கக் கோட்பாட்டை விளக்குக.

15. மாக்ஸ் வேபர் மதத்திற்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள உறவை எப்படி விவரிக்கிறார்?

16. மாக்ஸ் வேபர் அதிகாரத்தை எவ்விதம் வகைபடுத்துகிறார்?

17. அதிகார வர்க்க ஆட்சிபற்றி விளக்குக.

# 3. மனிதனும் சமூகமும்

## சமூகமும் மனிதனும்

சமூகம் அமைவதற்குச் சமூக உறவுகள் அடிப்படையாக இருக்கவேண்டும் என்று முன்பு பார்த்தோம். மனிதர்கள் இருந் தாலொழிய சமூக உறவுகள் ஏற்படாது. மனிதர்கள் என்று, எங்கு சமூக உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு கூடி வாழ்கிறார் களோ அன்றுதான், அங்குதான் சமூகம் ஏற்பட முடியும். ஆக, சமூகம் மனிதர்கள் இல்லாமல் ஏற்பட வழியில்லை என்பது தெளிவு.

சமூகத்தை ஓர் உயிரினத்துக்கு ஒப்பாகக் கருதும் ஹெர்பர்ட், ஸ்பென்சர் போன்றவர்கள் ஓர் உயிரினத்துக்கு எப்படி உயிர் மங்கள் (Cells) தேவையோ, அதாவது ஓர் உயிரினம் அமைய எப்படி உயிர்மங்கள் தேவையோ. அவ்வாறே சமூகம் அமைந்திட மனிதர்கள் அவசியம் என்று கூறுகிறார்கள். (ஆயினும் இத்தகைய ஒப்புமை செய்கிறவர்கள் எப்படி உயிர்மங்கள் உயிரினத்துக் காகவே அமைகின்றனவோ, அப்படியே சமூகத்துக்காகவே மனிதர்கள் அமைகிறார்கள் என்ற கருத்தை வெளியிடுவதால் இவ்வொப்புமையைப் பலரும் ஏற்றுக்கொள்வதில்லை.)

## மனிதனும் சமூகமும்

சமூகம் மனிதர்களைச் சார்ந்து இருப்பதுபோலவே மனிதனும் சமூகத்தைச் சார்ந்து இருக்கிறான். மனிதன் எவ்வாறு, எதற் காகச் சமூகத்தைச் சார்ந்து இருக்கிறான் என்பதை இங்கு ஆராய்வோம்.

மனிதன் இயற்கையிலேயே பிறரோடு கூடி வாழும் இயல் புடையவன். அதனால்தான் மனிதனை 'ஒரு சமூகப் பிராணி' என்றழைத்தார் அரிஸ்டாட்டில். எல்லாக் காலத்திலும் மனிதன் பிறரோடு சேர்ந்தே வாழுகிறான். ஆதிகாலத்தில் அவன் காட்டு மிராண்டியாக வாழ்ந்த நிலையிலும் பிறரோடு கூடியே வாழ்ந் திருக்கிறான். ஆதிகாலத்து மனிதர்கள் வாழ்ந்த குகைகளில்

காணப்படுகின்ற தடயங்களும், சுவரோவியங்களும், பிறவும் மனிதன் ஆதிகாலத்தில் பிறரோடு கூடியே வாழ்ந்திருக்கிறான் என்பதை மெய்ப்பிக்கின்றன. சி.இ.எம்.ஜோட் என்ற அரசிய லறிஞர் 'நியண்டர்தால் மனிதன் (Neanderthal Man) என்று அழைக்கப்படுகிற ஆதிகாலத்து மனிதன் ஆதிகாலத்திலேயே மனிதன் பிறரோடு கூடி வாழும் இயல்பைக் கொண்டிருந்தான் என்பதைப் புலப்படுத்துகிறான்' என்று கூறுகிறார்.

பிறரோடு கூடி வாழும் இயல்பு (Sociality) மனிதனுக்குள் அடங்கியிருக்கிறது. மற்றவர்களோடு அவன் தொடர்பு கொள்ளும் பொழுது அது வெளிப்படுகிறது. சொல்லப்போனால் அந்த இயல்பு இருப்பதானாலேயே அவன் பிறரோடு உறவுகொண்டு ஒரு சமூகமாகக் கூடி வாழ்கிறான். உலக வாழ்வைத் துறந்து கானகம் போகிற துறவிகள்கூடத் தனித்து இருப்பதில்லை. பிற துறவிகளுடன் கூடி வாழ்கிறார்கள் அல்லது சீடர்களை ஏற்படுத் திக்கொண்டு அவர்களுடன் சேர்ந்து வாழ்கிறார்கள்.

ஆக, இதிலிருந்து புலப்படும் உண்மை என்னவென்றால் மனிதன் தனித்து வாழ்கிறவன் அல்ல. தனிமையை நாடிப் போகிறேன் என்று அவன் சொல்லிக்கொண்டு புறப்பட்டாலும் அவன் தன்னுடைய இயல்பை — பிறரோடு கூடி வாழும் இயல்பை விட்டுவிட முடியாதவனாகிறான். இதன் காரணமாகவே அவன் எப்பொழுதும் என்றும் ஏதாவதொரு குழுவில் சேர்ந்து வாழ்கிறான்.

தன்னுள் இருக்கும் இயல்பு — சமூகவியல்பு காரணமாக மட்டுமின்றி, தேவையின் காரணமாகவும் மனிதன் சமூகத்தில் சேர்ந்து வாழ்கிறான். சமூகத்தில் இருந்து வாழவேண்டிய தேவை — பிறருடன் சமூக உறவுகள் வைத்துக்கொண்டு வாழ வேண்டிய தேவை மனிதனுக்கு இருக்கிறது. அந்தத் தேவை என்ன என்பதை இங்கு ஆராய்வோம்.

மனிதனுடைய சொந்தத் தேவைகள் ஏராளமானவை. பல தரப்பட்டவை. அவற்றை நிறைவேற்ற வேண்டுமானால் மனிதன் சமூகத்தில் வாழ்ந்தாக வேண்டும். சமூகமே அவனுடைய பல தரப்பட்ட, எண்ணற்ற தேவைகளை நிறைவேற்றித்தர இயலும். தான் ஒன்றியாக இருந்து அவனால் அவற்றை நிறைவேற்ற முடியாது. பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணை யில்லாமல் அவனால் சுயமாகத் தன்னுடைய தேவைகளை நிறை வேற்றிக்கொள்ள இயலாது. இத்தகைய ஒரு நிர்ப்பந்தத்தின் காரணமாகவே மனிதன் சமூகத்தில் வாழ நேரிடுகிறது.

மெக்ஈவர் (MacIver) என்ற அறிஞர் குறிப்பிடுவதைப்போல மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம் தேவைப்படுகிறது. பாதுகாப்பு தேவைப்படுகிறது. சுகம் தேவைப்படுகிறது, வாழ்க்கை வாய்ப்புகள், வசதிகள் தேவைப்படுகின்றன. இப்படி எல்லையில்லாத தேவைகள் அவனுக்கு அமைந்திருக்கின்றன. சமூகத்தை சார்ந்து அதனுடைய உதவியினால், சேவையினால் மனிதன் இத்தேவைகளைப் பெறுகிறான். குறிப்பாகத் தன்னால் இயலாத நிலையில் இருக்கும்போது மனிதனுக்குச் சமூகத்தின் துணையும் சேவையும் தேவைப்படுகின்றன.

உதாரணமாக ஒரு குழந்தைக்குப் பெற்றோருடைய கவனிப்பு— பேணுதல் தேவைப்படுகிறது. பெற்றோருடைய ஆதரவு இல்லாவிட்டாலும் யாராவது அதைக் காப்பாற்ற, பேண வேண்டியிருக்கிறது. அதற்குரிய உணவுத் தேவையைக் கவனிக்க, உடல் நலனைப் பேண, மற்றைய வசதிகளைச் செய்து தர அதற்குப் பெற்றோருடைய அல்லது மற்றவர்களுடைய உதவியும் சேவையும் தேவைப்படுகின்றன. தனித்து அக்குழந்தையால் தன்னைக் கவனித்துக்கொள்ள இயலாது. ஏனெனில் அது உயிரியல் முறையில் முடியாத காரியம். அவ்வாறே வயதான நிலையில் நடமாட முடியாமலிருக்கும் மனிதனுக்குப் பிறருடைய சேவை, கவனிப்பு, பணிவிடைகள் தேவைப்படுகின்றன. பார்க்கப்போனால் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதனுக்குப் பிறருடைய துணையும், உதவியும் சேவையும் தேவைப்படுகின்றன. அது இல்லாமல் அவனால் உயிர் வாழவோ, வளரவோ, வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவோ இயலாது.

மனிதனுடைய தேவைகள் மனிதனால் தனித்து நின்று நிறைவேற்றப்பட முடியாதவாறு அமைந்திருப்பதாலேயே, அவன் பிறரைச் சார்ந்து அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டியவனாக இருக்கிறான்.

ஆக தேவைகள் நிறைவேற வேண்டிய தேவையின் காரணமாக மனிதன் ஒரு சமூகப் பிராணியாக, அதாவது சமூகத்தில் வாழ்கிற ஜீவனாக இருக்கிறான். இத்தகைய தேவை அவனுக்கு எல்லாப் பருவங்களிலும் அமைகிறது. வெவ்வேறு பருவங்களில் அந்தத் தேவை அளவில் வேறுபடக்கூடும். ஆயினும் எந்தப் பருவத்திலும் அந்தத் தேவை இல்லாமல் போவதில்லை.

உடல் சார்ந்த தேவைகளுக்காக மட்டுமன்றி, அவனுடைய ஆளுமை வளர்ச்சிக்காகவும் சமூகத்தில் சேர்ந்து வாழ வேண்டிய அவசியம் மனிதனுக்கு அமைகிறது. மனிதனுக்கு உயிரியல் அளவில்

சில பண்புகளும் ஆற்றல்களும் அமைகின்றன. இத்தகைய உயிரியல் அம்சங்கள் வெளிப்பட்டால்தான் மனிதன் மனிதனாக அமைய முடியும். இந்த அம்சங்கள் வெளிப்படவும், அதனால் மனிதன் மனிதனாக நடைமுறையில் அமையவும் சமூகத்தில் சேர்ந்து வாழும் நிலைமை மனிதனுக்கு ஏற்படவேண்டும். சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டால், அதாவது சமூகத்தில் வாழும் வாய்ப்பு ஒரு மனிதனுக்கு அ மை ய ா ம ல் போனால் அவனை மனிதனாகக் காட்டக்கூடிய பண்புகளும் ஆற்றல்களும் வெளிப்படா. அதனால் அவன் மனிதனாக அமைய இயலாது. இந்த உண்மையைக் காட்டு நிலையில் இருந்தோர் (Ferals), ஓநாய்க் குழந்தைகள், தனிமர்கள் (Isolates) ஆகியோருடைய வரலாறுகள் உறுதிப்படுத்துகின்றன. அவர்களில் சிலருடைய வாழ்க்கையை இங்கு பார்ப்போம்.

காஸ்பர் ஹாசர் (Casper Hauser) என்பவன் காட்டு நிலையில் வாழ்ந்த ஒரு மனிதன். சிறு வயதிலிருந்து அவன் ஜெர்மனியில் நியூரம்பர்க் நகருக்கருகே இருந்த காட்டில் மனித வாடையே இல்லாமல் அலைந்து திரிந்து வாழ்ந்து கொண்டிருந்தான். 1828-ல் நியூரம்பர்க் காட்டிற்குப் போயிருந்த சிலர் அவனைக் கண்டு பிடித்தார்கள். அவனுக்கு அப்பொழுது வயது 17 நடந்து கொண்டிருந்தது. ஆயினும் அன்றைய நிலையில் அவன் மூன்று வயதுக் குழந்தையைப் போல நடந்து கொண்டான். அவன் நடக்க மாட்டாமல் இருந்தான். தத்துப்பித்தென்று மழலை மொழியில் பேசினான். அவனுடைய மன வளர்ச்சி மூன்று வயதுக் குழந்தையை ஒத்திருந்தது. இத்தகைய நிலைமைக்குக் காரணம் அவனுக்குச் சமூகத்தில் வாழும் வாய்ப்பு, சமூகத் தொடர்பு அற்றுப் போனதே என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவனை நகருக்கு அழைத்து வந்து மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சை அளித்தார்கள். ஆயினும் சமூகத் தொடர்பு அற்றுப் போனதால் ஏற்பட்ட பாதிப்பு முற்றிலும் மறையாமல் அவனால் இயல்பான மனித நிலைக்கு வரமுடியாமல் போய்விட்டது.

ஓநாய்க் குழந்தைகளின் விஷயமும் இப்படியே. 1920ஆம் ஆண்டில் உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஒரு கிறித்தவ சமயப் போதகர் (ஜே.ஏ.எல். சிங்) காட்டில் ஓநாய்கள் வசிக்கும் ஒரு குகையில் இரண்டு சிறுமிகளைப் பார்த்தார். அச்சிறுமிகள் மனிதப் பிறவிகள் என்ற போதிலும் அவர்களிடத்தில் எந்தவிதமான மனித நடத்தையோ செயலோ காணப்படவில்லை. அவர்கள் அப்படியே ஓநாய்களைப்போல நடந்துகொண்டார்கள். கால்களையும் கைகளையும் நிலத்தில் ஊன்றி ஓநாய்களைப்போல

விறுவிறுவென்று ஓடி அலைந்தார்கள். ஓநாய்களைப் போல ஊளையிட்டனர். பச்சை மாமிசத்தை அப்படியே அள்ளிப் போட்டுக்கொண்டு ரசித்துச் சாப்பிட்டார்கள். மனிதர்களைக் கண்ட மாத்திரத்தில் ஒதுங்கி மறைந்துகொள்ள எத்தனித்தார்கள். அவர்கள் ஓநாய்களால் சின்ன வயதில் தூக்கிக்கொண்டு போகப் பட்டு வளர்க்கப்பட்டதால் அவர்களுக்கு ஓநாய்களுக்குரிய நடத்தையும் செயலும் அமைந்திருந்தன. சமூகத் தொடர்பு அற்றுப்போன காரணத்தால் அவர்கள் மனிதப் பண்புகளோ நடத்தையோ இல்லாமல் போய்விட்டார்கள். சமய போதகர் அவர்களுக்குக் கமலா, அமலா எனப் பெயர் சூட்டி நகருக்கு அழைத்து வந்து மருத்துவச் சிகிச்சை அளித்தார். ஆயினும் சமூகத் தொடர்பு அற்றுப்போனதால் ஏற்பட்ட பாதிப்பு அவர் களிடம் முற்றிலும் நீங்காமல் இருந்து அதன் காரணமாக அவர் களால் பழைய பூர்வீக மனித நிலைக்கு, இயல்புக்கு முற்றிலும் வர இயலாமற் போய்விட்டது.

[ஓநாய்க் குழந்தைகள் என்றில்லை. மற்ற வகையான விலங்குகளால் தூக்கியெடுத்துச் செல்லப்பட்டு வளர்க்கப்பட்ட அல்லது அவற்றின் மத்தியில் சமூகத் தொடர்பே இல்லாமல் வாழ்ந்து வந்த குழந்தைகளும் சமூகத் தொடர்பு அற்றுப் போனதன் காரணமாகப் பாதிக்கப்பட்டு இயல்பான மனித நிலையை இழந்து இருந்தன. உதாரணம்: லிதுவேனியாவில் கரடிக் கூட்டத்தில் வாழ்ந்திருந்த ஒரு பையன் (1661), அயர்லாந்தில் செம்மறியாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த ஒரு குழந்தை (1671), ஃப்ரான்சில் மனிதக் குரங்குகள் கூட்டத்தில் வளர்ந்து வந்திருந்த ஒரு பையன் (1797), ஹாலந்தில் காட்டுப் பன்றிக் கூட்டத்தில் வாழ்ந்திருந்த ஒரு பையன் (1815), இலங்கையில் காட்டெருமை மத்தியில் வளர்ந்து வந்திருந்த ஒரு சிறுமி (1966).]

சமூகத் தொடர்பு அற்றுப் போனால் எத்தகைய பாதிப்பு ஏற்படும் என்பதைத் தனிமர்களும் உணர்த்துகிறார்கள். அமெரிக்காவில் அன்னா என்றொரு குழந்தை இருந்தது. அது ஒரு முறைகேடாகப் பிறந்த குழந்தை. அதனுடைய முறை கேடான பிறப்பு மற்றவர்களுக்குத் தெரிந்துவிட்டால் தனக்கு அவமானம் ஏற்படும் என்று அவள் தாய் கருதினாள். ஆகவே அந்தத் தாய் அன்னாவை அவள் ஆறு மாதக் குழந்தையாய் இருக்கும்போழுது ஒரு சிறிய அறையில் வைத்துப் பூட்டிவிட்டு மற்றவர்களின் பார்வையிலிருந்து அவளை மறைத்துவிட்டாள். ஒரு சிறிய துளையின் வழியாக அன்னாவுக்கு உணவு கொடுக்கப்

பட்டது. அவளுக்கு ஐந்தாறு வயது நடந்து கொண்டிருக்கும் பொழுது 1938-ல் அவள் கண்டுபிடிக்கப்பட்டாள். அந்த நிலையில் அவளுக்கு நடக்கவோ பேசவோ முடியவில்லை. உடையணியத் தெரியவில்லை. சுற்றிலும் இருந்த மனிதர்களைப் பார்க்கக் கூச்சப்பட்டாள். அவளுக்குச் சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்து அவளை இயல்பான மனித நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்தார்கள். அதில் ஓரளவுதான் வெற்றி கிடைத்தது. அவள் தனது பத்தாவது வயதில் காலமானாள். அதுவரை அவளுக்குப் பேச்சு சரியாக வரவில்லை. சமூகத் தொடர்பு அற்றுப்போனதன் பாதிப்பு முற்றிலும் நீங்காமல் இருந்தது.

ஆக, ஒருவன் மனிதனாக விளங்கவேண்டுமானால், மனித குணங்களும் இயல்புகளும் அவனிடம் ஏற்படவேண்டுமானால் அவன் சமூகத்தில்—சமூக உறவுகள் நிலவும் ஏதாவதொரு குழுவில் வாழ்ந்தாக வேண்டும். அந்த வாய்ப்பு ஏற்படாமல் போனால், நீக்கப்பட்டால் அவன் மனிதனாக விளங்க முடியாது. மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் இந்த உண்மையைத்தான் புலப்படுத்துகின்றன.

மேலும் ஒருவன் தான் யார் என்பதை உணரவும் சமூகத் தொடர்பு அவசியம் தேவைப்படுகிறது. தான் யார், எந்தப் பாலினத்தைச் (Sex) சேர்ந்தவன் என்ற தன்னுணர்வு பெறவும் சமூகத் தொடர்பு தேவைப்படுகிறது. சமூகத்தில் வாழும் பொழுதுதான் ஒருவன் ஆண்—பெண் பாலின வேற்றுமையை உணரவும் தன்னுடைய பாலினத்தை உணரவும் முடியும். அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் 1949-ல் தனிமனாக இருந்த ஒரு பதின்மூன்று வயதுப் பையன் கண்டுபிடிக்கப்பட்டான். அவன் ஒரு முறைகேடாகப் பிறந்த குழந்தை. அவமானத்துக்கு அஞ்சிய அவனுடைய தாய் அவன் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோது அவனை ஓர் அறையில் பூட்டிப் பிறர் பார்வையில் இருந்து மறைத்துவிட்டாள். பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு அவன் கண்டுபிடிக்கப்பட்டபொழுது அவனால் தான் யார், எந்தப் பாலினத்தைச் சேர்ந்தவன் என்பதையோ, ஆண்—பெண் பாலின வேற்றுமையையோ புரிந்துகொள்ளாதவனாக—புரிந்து கொள்ள முடியாதவனாக இருந்தான். சமூகத் தொடர்பு அற்றுப்பொனதே இதற்குக் காரணமாக இருந்தது.

மன வளர்ச்சி பெறவும் சமூகத் தொடர்பு மிக அவசியம். காட்டுநிலையில் இருந்தோர், ஓநாய்க் குழந்தைகள், தனிமர்கள் ஆகியோருடைய வரலாறுகள் இக்கருத்தை உறுதிப்படுத்து

கின்றன. சமூகத் தொடர்பு அற்றுப்போய் வாழ்ந்த நிலையில் அவர்களுக்கு உரிய வயது வந்தபோதிலும், சரியான மன வளர்ச்சி ஏற்படாமல் சிறு பிள்ளைகளாகவே விளங்கினார்கள்.

நடுவில் சமூகத் தொடர்பு துண்டிக்கப்பட்டாலும் பாதகம் ஏற்படும். மனநிலையும் பாதிக்கப்படும். 1842-ல் இங்கிலாந்தில் பெண்டன்வில் சிறையில் பல கைதிகளைத் தனித்தனி அறைகளில் தனிமையில் அடைத்து வைத்தனர். அடுத்த எட்டு ஆண்டுகளில் அவர்களுடைய மனநிலை பாதிக்கப்பட்டுப் பைத்தியம் பிடித்தது. மற்றவர்களுடன் பழகக்கூடிய வாய்ப்பு தடுத்து நிறுத்தப் பட்டதால்தான் அக் கைதிகளுக்கு இந்த நிலை ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

அறிவு வளர்ச்சி ஏற்படவும் சமூகத் தொடர்பு மிக அவசியமாகிறது. மற்றவர்களோடு கலந்து பழகிக் கற்கும் மாணவர்களுக்குத் தனியாக இருந்து கற்கும் மாணவர்களைக் காட்டிலும் சிந்திக்கும் ஆற்றலும் அறிவுத் திறமையும் அதிகம் என்று பல ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. மற்றவர்களோடு கூடிக் கலந்து கற்கும்போழுது மூளை மிக விரைவாக எதையும் புரிந்துகொள்ளுகிறது. இதனால் காலவிரயம் ஏற்படுவதில்லை. பிறருடன் நடத்தும் விவாதத்தின், கலந்துரையாடலின் காரணமாக அறிவுத்திறன் வளர்ச்சி பெறுகிறது. இந்த உண்மைகளைப் பல ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

உணர்ச்சிப் பக்குவம் பெறவும், சமூகத் தொடர்பு உதவுகிறது. பிறருடன் கூடி வாழ்வதால் உணர்ச்சிகளை அடக்கிப் பிறரோடு ஒத்துப்போகும் குணம், சகிப்புத்தன்மை, பொறுப்புணர்ச்சி ஆகிய தன்மைகள் ஏற்பட்டு உணர்ச்சிகள் பக்குவமாகின்றன.

இவ்விதமாக, மனிதனுக்குச் சமூகம் அவசியமாகிறது. அவனுடைய உடல், உளம்சார்ந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், இயல்பான மனித நிலை, மன வளர்ச்சி அறிவு வளர்ச்சி, உணர்ச்சிப் பக்குவம் முதலியன பெற்று ஆளுமையை வளர்த்துக்கொள்ளவும் சமூகம் அவசியமாகிறது.

### மனிதனும் பண்பாடும்

மனிதனுக்குச் சமூகத்தின் உதவியும், துணையும், சேவையும் எவ்வளவு முக்கியம் என்று பார்த்தோம். அவை கிடைப்பதற்கு மனிதன் ஒன்று செய்யவேண்டும். தான் வாழும் சமூகத்தின் உறுப்பினனாக அவன் நடந்துகொள்ளவேண்டும். தன்னுடைய

சமூகத்தோடு இயைந்து ஒட்டி ஒழுகவேண்டும். அப்படி இல்லாத நிலையில் சமூகத்தின் உதவியும், துணையும், சேவையும் அவனுக்குக் கிடைக்காது.

சமூகத்தின் உறுப்பினனாக அமைய, சமூகத்தோடு இயைந்து ஒட்டி ஒழுக அவனுக்குச் சமூகத்தின் பண்பாடு* உதவுகிறது. பண்பாடு மனிதனை சமூகத்தோடு இணைத்து அதனோடு இயைந்து ஒட்டி ஒழுகவைக்கிறது. அதனால்தான் ஜான் எல். கில்லன்; ஜான் பி. கில்லன் (John L. Gillin and John P. Gillin) என்ற அறிஞர்கள் பண்பாட்டை 'மனிதர்களைச் சமூகத்துடன் இணைத்து ஒட்டவைக்கிற சிமெண்ட்' என்று வர்ணித்தார்கள்.

மனிதனுக்கு இயற்கையிலேயே சில உந்துவிசைகள் (Drives) அமைந்திருக்கின்றன. பசி, தாகம், உடலிலுள்ள கழிவுப் பொருள்களை (சிறுநீர், மலம் முதலியன) நீக்குதல், உடலின் தட்ப வெப்ப நிலையைப் பேணுதல் ஆகிய உந்து விசைகள் அவனுடைய உயிரியல் அமைப்பில் அமைந்திருக்கின்றன. இந்த உந்து விசைகளின் காரணமாக அவனுக்கு உணவு தேவைப்படுகிறது. குடிக்கும் தண்ணீர் தேவைப்படுகிறது. உடலில் தேங்கும் கழிவுப் பொருள்களை நீக்க வேண்டியிருக்கிறது. உடலின் தட்ப வெப்ப நிலையைச் சீராக வைத்துக்கொள்ள ஆடை, உறைவிடம், வசதிகள் முதலியவை தேவைப்படுகின்றன. அவன் உயிர் வாழ, நீடித்திருக்க இந்தத் தேவைகளை அவன் நிறைவேற்றியாக வேண்டும். இல்லாவிடில் அவனுடைய உயிர் நிலைத்து நிற்காது.

இந்தத் தேவைகளை அவன் எப்படியும் நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால் அவன் வாழும் சமூகம் குறிப்பிட்ட வழிகளில் சென்றுதான், குறிப்பிட்ட முறைகளைக் கடைபிடித்துத்தான் அவன் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. பண்பாடு அத்தகைய எதிர்பார்ப்புகள் என்னென்ன என்பதையும், எந்தெந்த வழிகளில், எந்தெந்த முறைகளைக் கடைபிடித்து உயிரியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று நெறிகளை வகுத்துத் தந்து அவனுடைய நடத்தை ஓர் ஒழுங்கான முறையில் அமைய வழி காட்டுகிறது. பண்பாட்டின் வழிகாட்டுதலுக்கேற்ப மனிதன் நடந்துகொண்டு சமூக எதிர்பார்ப்புக்கேற்பத் தன்னுடைய உயிரியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்கிறான். இந்த வகையில் பண்பாட்டின் வழிகாட்டுதலால் அவன் சமூகத்தோடு

---

* பண்பாட்டைப்பற்றி அத்தியாயம் 4-ல் விளக்கமாக அறியலாம்.

இயைந்து ஒட்டி ஒழுக முடிகிறது; சமூகத்தின் உறுப்பினன் என்பதை எடுத்துக்காட்டி அதனுடைய ஏற்புடைமையைப் பெறமுடிகிறது.

தன்னுடைய உறுப்பினர்கள் பல்வேறு சமயங்களில் எவ்வெவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதைச் சமூகம் எதிர்பார்க்கிறது. பண்பாடு ஒரு மனிதன் ஒவ்வொரு சமயத்திலும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்குச் சில வழிமுறைகளையும் நெறிகளையும் வகுத்துத் தந்து அவற்றிற்கேற்ப நடக்கவைக்கிறது. இதனால் சமூக ஒழுங்கு நிலைநிற்கமுடிகிறது. தனி மனிதர்கள் பல்வேறு சமயங்களில் அந்தந்தச் சமயத்திற்கேற்ற நெறிகளைக் கடைபிடித்து ஒழுகும்போது, ஓர் ஒழுங்குமுறை பிறக்கிறது. எடுத்துக்காட்டாக, விருந்தினர்களை வரவேற்க நேரிடும்போது, பெரியவர்களுடன் பேச நேரிடும்போது, பெண்களுடன் தொடர்புகொள்ளும்போது, முன்பின் தெரியாதவர்களைச் சந்திக்கும்போது, உணவு உண்ணும்போது, தண்ணீர் குடிக்கும்போது, காலைக் கடன்கள் கழிக்கும்போது, படிக்கும்போது, இப்படிப் பல்வேறு சந்தர்ப்பங்களைச் சந்திக்க நேரிடும்போது தனி மனிதர்கள் பண்பாட்டின் வழிகாட்டுதலுடன் நெறிமுறையோடு நடந்து சமூகத்துக்குத் தாங்கள் இயைந்திருக்கும் பாங்கை வெளிப்படுத்துகிறார்கள். சமூக ஒழுங்கு நிலைபெற உதவுகிறார்கள்.

சமூகம் தன்னுடைய உறுப்பினர்கள் எத்தகைய மனப்பான்மைகளை (Attitudes) விழுமியங்களை, குறிக்கோள்களைக் (Goal) கொண்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கிறது. பண்பாடு எந்தெந்த மனப்பான்மைகளை, விழுமியங்களை குறிக்கோள்களைத் தனி மனிதர்கள் கொண்டிருக்கலாம் என்று வரையறுத்துக் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, நமது இந்தியச் சமூகத்தில் நமது பண்பாடு தனி மனிதர்கள் மனித உயிருக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. அதன் காரணமாக நரபலியை, மனித இறைச்சியை உண்பதை நாம் மிகத் தீவிரமாக வெறுக்கிறோம்; எதிர்க்கிறோம். அவ்வாறே கற்பையும் மிகவும் போற்றுகிறோம். ஏனெனில் கற்பு நமது பண்பாட்டில் உயர்ந்த விழுமியமாகக் கருதப்படுகிறது. நம்மில் எல்லோரும் படித்து, நல்ல வேலையில் அமர்ந்து வாழ்வில் முன்னேறவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டிருக்கிறோம். இதற்குக் காரணம் நமது பண்பாடு கல்வி பெறுவதையும், நல்ல வேலையில் சேர்வதையும் சிறந்த குறிக்கோள்கள் என்று கருதுகிறது. யாரும் சூதாட்டக் கிடங்கு நடத்துவதையோ, துறவியாகப் போவதையோ வாழ்க்

கையின் குறிக்கோளாகக் கொள்ளுவதில்லை. காரணம் நமது பண்பாடு இவற்றை ஏற்கத் தகாத குறிக்கோள்கள் என்று விலக்கி வைத்திருக்கிறது.

ஒவ்வொரு சமூகமும் ஒரு பொதுவான அடிப்படையான ஆளுமை வகையைக் (Basic personality type) கொண்டிருக்கிறது. அதாவது சமூகத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் சில பொதுவான சிறப்பியல்புகளைக் கொண்டிருப்பார்கள். இந்த வகையில் ஒரு தனி மனிதன் சமூகத்தில் பொதுவாக அமைந்திருக்கும் சிறப்பியல்புகளைக்கொண்டு சமூகத்தின் அடிப்படையான ஆளுமை வகையைப் பிரதிபலிக்கிறான். பண்பாடு அந்தச் சிறப்பியல்புகளை நிர்ணயிக்கிறது. குறிப்பிட்ட சிறப்பியல்புகளைப் பண்பாடு நிர்ணயிக்கும்பொழுது, சமூகத்தின் உறுப்பினர்கள் அவற்றைப் பெற்றுச் சமூகத்தின் அடிப்படையான ஆளுமை வகை இன்னதென்று எடுத்துக்காட்டுகிறார்கள்.

ரூத் பெனடிக்ட் (Ruth Benedict) என்ற அறிஞர் பண்பாடு எப்படி அடிப்படையான ஆளுமை வகையை உருவாக்குகிறது என்பதை இரண்டு சமூகங்களை எடுத்துக்காட்டுகளாகக் காட்டி விளக்குகிறார். அமெரிக்காவில் தென்மேற்குப் பகுதியில் வாழும் ஸூனி இந்தியர்கள் (Zuni Indians) அமைதியான, சுமுகமான, சாந்தமான இயல்பைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடையே போட்டியோ பூசலோ ஏற்படுவதே இல்லை. அவர்களுடைய பண்பாடு போட்டிபோடுதலைத் தவிர்க்கிறது. போட்டியும் பூசலும் கூடாது என்று வற்புறுத்துகிறது. இதன் காரணமாக அவர்கள் தம்முள் போட்டியிடுவதோ பூசலிடுவதோ கிடையாது. எதையும் சாதாரணமாக எடுத்துக்கொண்டு சாந்தமாய் அமைதியாய்ப் போய்விடுகிறார்கள். ஆனால் இதற்கு நேர்மாறாக நியூகினியாவுக்கு அருகே வாழும் தொபு (Dobu) என்ற பழங்குடியினர் மிகவும் வன்முறையாளராக, போர்க்குணம் மிக்கவராகக் காணப்படுகின்றனர். அவர்களுடைய பண்பாடு வாழ்க்கையில் போட்டி அவசியம் என்று வற்புறுத்துகிறது. ஒருவனுடைய திறமை, நிலை உயர அவன் பிறருடன் போட்டியிடவேண்டும் என்று வற்புறுத்துகிறது. அதன் பலனாக அவர்களிடையே எங்கும் எதிலும் போட்டி மலிந்து காணப்படுகிறது. போட்டி மனப்பான்மை காரணமாகப் பூசல்களும், சண்டை சச்சரவுகளும், வன்முறைகளும் அவர்களிடையே மிகச் சாதாரணமாக நிகழ்கின்றன.

இவ்வாறே, அமெரிக்காவில் வாழும் ஹோபி இந்தியர்களிடையேயும் (Hopi Indians) க்வாகியூட்டில் இந்தியர்களிடை

யேயும் (Kwakiutl Indians) அடிப்படை ஆளுமை வகையில் வேறுபாடுகள் இருக்கின்றன. ஹோபீ இந்தியர்கள் பிறரை வெல்ல வேண்டும், பிறரைவிடச் சிறந்து விளங்கவேண்டும், எதிலும் வெற்றி பெறவேண்டும் என்ற முனைப்பு — தீவிரம் இல்லாதவர்கள். எதிலும் பிடிப்பு வைத்துக்கொள்ள மாட்டார்கள். எந்தக் காரியத்திலும் விட்டேற்றியாக நடந்துகொள்ளுவார்கள். எடுத்த காரியத்தை நிறைவேற்றியே தீருவது என்று விடாப்பிடியாக, முனைப்புடன் நடந்துகொள்ள மாட்டார்கள். போட்டி வந்தால் விலகிவிடுவார்கள். ஆகவே போட்டி என்று எதுவும் அவர்களிடையே நிகழ்வதில்லை.

ஆனால் இதற்கு நேர்மாறாக க்வாகீயூட்டில் இந்தியர்கள் பிறரை வெல்லவேண்டும். பிறரைக் காட்டிலும் சிறந்து விளங்க வேண்டும். எடுத்த காரியத்தில் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற முனைப்பு — ஆவேசம் கொண்டிருக்கிறார்கள். எந்தக் காரியத்தையும் விடாபிடியாக கடைசிவரை செய்து வெற்றிகாண முனைகிறார்கள். போட்டி என்று வரும்போது மிகத் தீவிரமாக அதில் ஈடுபடுகிறார்கள். போட்டியில் மற்றவர்களை எப்படியும் மிஞ்சுவது என்பதே அவர்களுடைய இலட்சியமாய் அமைந்து ஒருவித வெறியோடு அவர்கள் அதில் ஈடுபடுகிறார்கள். அவர்களிடையே 'பாட்லட்ச்' (Potlatch) என்ற வழக்கம் உண்டு. இவ்வழக்கத்தில் ஒருவன் மற்றவர்களை அழைத்து, விருந்து கொடுத்து, தன்னிடமுள்ள விலையுயர்ந்த, மதிப்பு மிக்க பொருள்களைப் பரிசாக அளித்துத் தன்னுடைய பெருமையை நிலைநாட்டிக்கொள்ள முயல்கிறான். மற்றவர்களும் அவனை மிஞ்சுகிற வண்ணம் ஒரு விருந்து நடத்தி, மதிப்பு மிக்க பொருள்களைப் பரிசாக அளிக்கின்றனர். இப்படி விருந்து நடத்திப் பரிசுகள் கொடுத்து மதிப்பை உயர்த்திக் காட்டுவதில் அவர்களிடையே போட்டி நடைபெறுகிறது. அந்தப் போட்டியினால் ஏற்படும் இழப்புகளைப்பற்றி, சொத்து அழிவதைப்பற்றி அவர்கள் கவலைப் படுவதே இல்லை. அவர்களுடைய ஒரே குறிக்கோள்; மற்றவர்களை மிஞ்சவேண்டும் என்பது.

இந்த அடிப்படை ஆளுமை வகை வேறுபாடுகளுக்குக் காரணம் அவர்களுடைய பண்பாடுகள்தாம். ஹோபீ இந்தியர்களுடைய பண்பாடு தன்முனைப்பைத் தடைசெய்கிறது. பிறருடன் சுமூகமாக வாழ வற்புறுத்துகிறது. ஆனால் இதற்கு நேர்மாறாக க்வாகீயூட்டில் இந்தியர்களுடைய பண்பாடு தன் முனைப்பை வற்புறுத்துகிறது. போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கிறது. வெற்றியே வாழ்க்கையின் இலட்சியமாக இருக்கவேண்டும் என்று தூண்டுகிறது.

நமது இந்தியச் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அடிப்படையான ஆளுமை வகையில் வேறுபாடு இருப்பதை நாம் காணுகிறோம். ஆண்கள் ஆணவமும் ஆதிக்க மனோபாவமும் உடையவராய் இருக்கிறார்கள். பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற குணங்களைக் கொண்டு பணிவாய், அடக்கமாய் இருக்கிறார்கள். இந்தக் குண வேறுபாடுகள் உயிரியல் முறையில் அமைந்தவை அல்ல. இயற்கையில் ஆண்கள் ஆணவமும் ஆதிக்கமும் உடையவர்கள் அல்ல. அவ்வாறே இயற்கையில் பெண்கள் பணிவும் அடக்கமும் உடையவர்கள் அல்ல. நமது இந்தியச் சமூகம் ஆண்களுக்கு ஆணவமும் ஆதிக்கமும், பெண்களுக்குப் பணிவும் அடக்கமும் அமைய வேண்டும் என்று வற்புறுத்துகிறது. பண்பாட்டின் இந்த வற்புறுத்தலால், நமது சமூகத்தில் ஆண்கள் ஓர் அடிப்படையான ஆளுமை வகையையும் பெண்கள் மற்றொரு வேறுபட்ட அடிப்படையான ஆளுமை வகையையும் பெற்றிருக்கிறார்கள்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே அவர்களுடைய குணங்களில் காணப்படும் வேறுபாடுகளுக்கு உயிரியல் காரணி காரணமல்ல, பண்பாட்டுக் காரணியே காரணம் என்பதை மார்கரெட் மீட் (Margaret Mead) என்ற மானிடவியல் அறிஞரின் ஆராய்ச்சிகள் உறுதிசெய்கின்றன. அந்த அம்மையார் ஆரபெஷ் (Arapesh), முண்டுகுமார் (Mundugumor), சாம்புலி (Tchambuli) என்ற மூன்று மெலனேசியச் சமூகங்களை ஆராய்ந்தார். ஆரபெஷ் சமூகத்தில் ஆண், பெண் இருவருமே அமைதியான, சாந்தமான, பிறருடன் ஒத்துழைக்கிற, அனுசரித்துப் போகிற தன்மையைக் கொண்டிருந்ததைக் கண்டார். முண்டுகுமார் சமூகத்தில் ஆண், பெண் இருவருமே முரட்டுத்தன்மையும், வலிய சண்டைக்குப் போகிற குணமும் உடையவர்களாக இருந்ததைப் பார்த்தார். சாம்புலி சமூகத்தில் பெண்கள் ஆணவமும் ஆதிக்க மனோ பாவமும், ஆண்கள் பணிவும் அடக்கமும் கொண்டிருந்ததைப் பார்த்தார். இப்படி ஆண்—பெண் இரு பாலாரிடையேயும் சமூகத்துக்கு சமூகம் குணங்களில் வேறுபாடுகள் இருப்பதைக் கண்டு, அவர்களிடையே உள்ள குண வேறுபாடுகள் உயிரியல் முறையில் அமையவில்லை. பண்பாட்டின் காரணமாகத்தான் அமைகின்றன என்று முடிவு கட்டினார்.

இவ்வாறு பண்பாடு தனி மனிதர்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தி, அவர்களுக்கு வழிகாட்டிச் சமூக எதிர்ப்புகளுக்கேற்ப ஒழுகச் செய்கிறது; சமூகத்தோடு இயைந்து இணைந்து வாழச் செய்கிறது. சமூகத்தின் அடிப்படையான ஆளுமை

வகையைப் பெற்ற சமூகத்தின் உறுப்பினர்கள் என்று அவர்கள் காட்டிக்கொள்ள, ஆளுமை வகைக்கு உரிய குணங்களை நிர்ண யித்து அவற்றை அவர்களுக்கு வழங்குகிறது.

சமூகத்தின் தோற்றம்

சமூகம் மனிதனின் சமூக உறவுகளில் முகிழ்கிறது என தொடக்கத்தில் நாம் பார்த்தோம். உறவுகள் ஏற்படுத்திக் கொள்ளும் மனிதர்கள் அவ்வுறவுகளை நிலைப்படுத்தி, முறைப் படுத்தித் தங்களுக்குள் ஓர் அமைப்பை — எல்லோரும் கூடி வாழக்கூடிய நிலையினை — ஏற்படுத்திக்கொள்ளும்போழுது சமூகம் பிறக்கிறது என்று நாம் பார்த்தோம்.

மனிதர்கள் ஏன் பிறரோடு கூடிப் பழகிச் சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அந்த நிலையில் ஏன் தங்களுக்குள் சமூகம் என்ற ஓர் அமைப்பை அமைத்துக்கொள்ளு கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் தேவைதான். தேவையின் காரணமாகத்தான் மனிதர்கள் தங்களுக்குள் சமூகம் என்ற அமைப்பை அமைத்துக்கொண்டு கூடி வாழ்கிறார்கள்.

அந்தத் தேவை என்ன என்பதுபற்றிப் பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. அக்கருத்துகளில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

மேலே குறிப்பிட்டவாறு, தேவைகளே (Needs) சமூகம் ஏற்படக் காரணம் என்று பிளாட்டோ (Plato) கூறுகிறார். மனிதனுடைய தேவைகள் அதிகமானவை. அவற்றை அவனால் மட்டும் நிறைவேற்ற இயலாது. பிறருடைய கூட்டுறவைக் கொண்டுதான் மனிதன் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இந்தக் கூட்டுறவைப் பெற மனிதன் பிறரோடு கூடிச் சமூகத்தை அமைத்துக்கொள்ளுகிறான் என்று பிளாட்டோ கூறுகிறார்.

செயின்ட் தாமஸ் அக்வினாஸ் (Saint Thomas Aguinas) என்ற அறிஞர் மனிதன் தன்னுடைய பற்றுகளைத் (Interests) தனித்திருந்து சுயமாக அடையமுடியாது. பிறருடைய துணை, ஒத்துழைப்பு இருந்தால்தான் அடையமுடியும். இவற்றைப் பெற மனிதன் பிறரோடு சேர்ந்து சமூகத்தை அமைத்துக்கொள்ளு கிறான் என்கிறார். இவருடைய கருத்தைத் தழுவி ஆல்பியன் ஸ்மால் (Albion Small) என்ற அறிஞர் 'மனிதனுக்கு முக்கியமாக ஆறு பற்றுகள் உண்டு. அவை ஆரோக்கியம், செல்வம்,

பிறருடன் சேர்ந்து வாழுதல், அறிவு, அழகு, நன்னடத்தை முதலியன. இப்பற்றுகளை அடையப் பிறருடைய துணை, கூட்டுறவு அவசியம். இவற்றை அடையச் சமூகம் தேவை. ஆகவே மனிதன் சமூகத்தை அமைத்துக்கொள்ளுகிறான்' என்று கூறுகிறார்.

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை (Social Contract Theory) உருவாக்கிய தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes), ஜான் லாக் (John Locke), ரூசோ (Rousseau) ஆகிய மூன்று அறிஞர்களும் வேறு விதமான விளக்கம் தருகிறார்கள். இயற்கை நிலையில் (State of Nature) மனிதர்கள் வாழ்ந்தபொழுது அவர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களைப் போக்கத் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு சமூகத்தை நிறுவினார்கள் என்று இவ்வறிஞர்கள் கூறுகிறார்கள்.

இம்மூவரும் ஒரு காலத்தில் மனிதன் இயற்கை நிலை என்ற ஒரு நிலையில் வாழ்ந்து வந்தான் என்கிறார்கள். ஆனால் அவன் அந்த நிலையில் எப்படி இருந்தான், சமூகம் எப்படித் தோன்றியது என்பதில் கருத்து வேறுபடுகிறார்கள்.

தாமஸ் ஹாபீஸ் மனிதன் இயற்கை நிலையில் சுயநலத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்தான். தன்னுடைய நலத்திலேயே குறியாக இருந்தான். அதை அடைவதில் பிறரோடு, அவன் சண்டையிட நேரிட்டது. ஆகவே எப்பொழுதும் சண்டைகள் நடந்துகொண்டேயிருந்தன. இதனால் அமைதி குலைந்து, பாதுகாப்பான வாழ்வு அமையாமல் எல்லாருமே துன்பப்பட்டார்கள். இதற்கு ஒரு முடிவெடுக்கத் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு சமூகத்தை நிறுவினார்கள். அதற்குக் கட்டுப்பட்டு நடக்கத் தொடங்கினார்கள் என்கிறார்.

ஜான் லாக் தொடக்கத்தில் இயற்கை நிலையில் மனிதன் மற்றவர்களுடன் சுமுகமாகவே பழகி வந்தான். ஆனால் காலப் போக்கில் சுயநலத்திற்கு அடிமையாகித் தானே வாழவேண்டும், எல்லாவற்றையும் அனுபவிக்கவேண்டும் என்று முற்பட்டான். இதன் விளைவாகச் சண்டைகள் ஏற்பட்டன. அதனால் வாழ்க்கை பொதுவாகப் பாதிக்கப்பட்டதால் எல்லோரும் ஒரு பொது ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, சமூகத்தை அமைத்து, அமைதியான வாழ்வு வாழத் தொடங்கினார்கள் என்று கூறுகிறார்.

ரூஸோ, தொடக்கத்தில் மனிதன் இயற்கை நிலையில் கண்ணியமான காட்டுமிராண்டியாய் இருந்தான். அமைதியாகவும்

ஆரவாரமின்றியும் மற்றவர்களோடு சமுகமாகப் பழகினான். ஆனால் நாளடைவில் மக்கள்தொகை எண்ணிக்கை பெருகிய தினால் பிரச்சினைகளும், அவற்றை ஒட்டிச் சண்டைகளும் ஏற்பட்டு வாழ்வு நிலைகுலைந்தது. இதைப்போக்க மற்றவர்களுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு சமூகத்தை நிறுவினான் என்று கூறுகிறார்.

இக்கோட்பாடு பலரால் நிராகரிக்கப்படுகிறது. சமூகம் இல்லாத நிலையொன்று இருந்ததாக இக்கோட்பாடு கூறுவதைப் பலரும் மறுக்கிறார்கள். மனிதன் பிறருடன் சேரத் தொடங்கிய போதே சமூகம் உருவாகிவிட்டது என்று கூறுகிறார்கள்.

அரிஸ்டாட்டில் சொல்வதைப்போல மனிதனுக்குச் சமூக இயல்பு இயற்கையிலேயே இருக்கிறது. இந்தச் சமூக இயல்பின் காரணமாக, அவன் பிறரோடு கூடிப் பழகுகிறான். அப்படிப் பழக முற்படும்பொழுது சமூகம் தோன்றிவிடுகிறது.

அந்தச் சமூக இயல்பைத் தூண்டிவிடுகிறது தேவை. மனிதன் பிறக்கும்பொழுதே அவனுக்குப் பிறருடைய கூட்டுறவு, துணை தேவைப்படுகிறது. அந்தத் தேவையும், சமூக இயல்பும் இணையும் பொழுது சமூகம் தோன்றிவிடுகிறது.

### சமூகத்தின் பரிணாமம்

சமூகவியல்பு, தேவை ஆகியவற்றின் சங்கமத்தில் தோன்றிய சமூகம் பிறகு மெல்ல மெல்லப் பரிணமித்து வளரத் தொடங்கியது. சமூகம் எப்படிப் பரிணமித்து வளர்ந்தது, எந்தெந்த நிலைகளைத் தாண்டிப் பரிணமித்தது என்பதுபற்றிச் சமூகவியல் அறிஞர்கள் பலவாறு கருத்துக் கூறுகிறார்கள்.

ஆகஸ்ட் கோம்ட், சமூகம் பரிணாமம் அறிவு வளர்ச்சியைச் சார்ந்து அமைந்தது என்கிறார். அறிவு இறையியல் நிலை, நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை, புறமெய்ம்மை நிலை ஆகிய மூன்று நிலைகளைக் கடந்து வளர்ச்சி அடைந்தது. இந்த நிலைகளுக்கேற்பச் சமூகத்தின் பரிணாம வளர்ச்சி நிலைகளும் அமைந்தன என்கிறார். முதல் நிலையில் சமூக நிலையமைப்பு இராணுவ முறையில் அமைந்திருந்தது. இரண்டாவது நிலையில் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாக மாறியது. மூன்றாவது நிலையில் தொழிலை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாக உருவெடுத்தது என்கிறார்.

ஹெர்பர்ட் ஸ்பென்சர், சமூகம் ஓர் உயிரினத்தைப்போல முதலில் எளிய நிலையில் இருந்து பின்னர் படிப்படியாகப் பல நிலைகளைக் கடந்து சிக்கலான சமூகமாகப் ப ரி ண மி த் த து என்கிறார். தொடக்கத்தில் சமூகம் எளிய நிலையில் இருந்தது. பிறகு அது ஒரு கூட்டிணைப்புச் சமூகமாகப் பரிணமித்தது. பிறகு அந்த நிலையிலிருந்து இருமடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக மாறியது. பிறகு மேலும் பரிணமித்து மும்மடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக மாறியது என்கிறார்.

கார்ல் மார்க்ஸ் சமூகம் பொருளாதார அமைப்பின் அடிப் படையில் அமைந்திருக்கிறது என்கிறார். பொருளாதார அமைப்பு மாற மாற சமூகமும் மாற்றமடைந்து பரிணமித்து வந்திருக்கிறது என்கிறார். பொருளாதார அமைப்பு முதலில் ஆசிய நிலையில் இருந்தது. பிறகு தொன்மையான நிலை, நிலமானிய நிலை ஆகிய நிலைகளைத் தாண்டி, முதலாளித்துவ நிலைக்கு வந்தது. இப்பொழுது வர்க்கப் போராட்டத்தின் விளைவாக முதலாளித் துவம் வீழ்ச்சியுற்று, பொதுவுடைமை நிலை தோன்ற இருக்கிறது என்கிறார் மார்க்ஸ். சமூகமும் இதே நிலைகளைக் கடந்து இன்றைக்குப் பொதுவுடைமையை நோக்கிச் சென்றுகொண்டிருக் கிறது என்கிறார் மார்க்ஸ்.

மாக்ஸிம் கோவலெவ்ஸ்கி (Maksim Kovalevsky) என்ற சமூக வியல் அறிஞரும் சமூகம் பல நிலைகளைக் கடந்து பரிணமித்து வந்திருக்கிறது என்கிறார். தொடக்கத்தில் மக்கள் நாடோடிக் கும்பல்களாக (Hordes) அலைந்து திரிந்து வாழ்ந்துகொண்டிருந் தார்கள். அந்த நிலையில் சமூகத்தில் எந்தவிதமான ஒழுங்குக் கட்டுப்பாடும் இல்லாமலிருந்தது. திருமணம், குடும்ப முறை என்று எந்த அமைப்பு முறையும் இல்லை. இதன் காரணமாக ஆணும் பெண்ணும் வெறும் பாலினத் தொடர்புகளையே வைத்திருந்தனர். பாலினத் தொடர்பு முடிந்ததும் அவர் களுடைய உறவு நீங்கிப் போனது. பாலினத் தொடர்பால் பிறந்த குழந்தைகள் பெற்ற தாயிடமே இருந்தனர். தங்கள் தந்தை யார் என்று தெரியாத முறையில், தந்தை என்று ஒருவரை உரிமை கொண்டாட முடியாத நிலையில் குழந்தைகள் தாயிடமே அண்டி நெருங்கி வாழ்ந்தனர். அந்த நிலையில் ஒரு பெண், அவளது குழந்தைகள் என்று இரண்டு பேர்களை மட்டுமே கொண்ட தாய்வழிக் குடும்பங்கள் (Matrilineal families) அமைந்தன. பரஸ்பர உறவுடைய தாய்த் தாயக் குடும்பங்கள் ஒன்றிணைந்து ஒரே குலமாக — தாய்த் தாயக் குலமாக அமைந்தன. காலப் போக்கில் திருமணம், குடும்ப முறை என்ற

நிறுவனங்கள் ஏற்பட்டு ஓர் ஒழுங்குமுறை உருவானபோது குடும்பங்கள் கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற உறுப்பினர் களைக் கொண்ட குழுக்களாக மாறின. குடும்பங்களில் கணவ னுடைய ஆட்சி அமைந்தது. மனைவியும் பிள்ளைகளும் அவனுடைய ஆளுகையின்கீழ் வந்தார்கள். குடும்பங்கள் தாய்த் தாயக் குடும்பங்கள் என்ற நிலையிலிருந்து தந்தைத் தாயக் குடும்பங்கள் என்ற நிலையை எய்தின. நாளடைவில் தனி யுடைமை முறை வளர்ச்சி பெற்றதனால் நிலமானிய முறை என்ற ஓர் அமைப்பு முறை உருவானது. இந்த அமைப்பு முறையில் நிலங்கள் பண்ணைகளாக மாற்றப்பட்டு ஒரு சில குடும்பங்களின் உடைமைகளாக மாறின. பண்ணைகளைச் சாகுபடி செய்யப் பண்ணை அடிமைகள் அமர்த்தப்பட்டார்கள். இதன் காரண மாகச் சமூகம் நிலக்கிழார்கள் — நிலமற்ற பண்ணை அடிமைகள் என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்து அமைந்தது. பிறகு நிலமானிய முறை ஒழிந்ததும், இன்றைய ஜனநாயக அமைப்பு முறை ஏற்பட்டது. பேதங்கள் மறைந்து மக்கள் எல்லோரும் சமம் என்ற நிலை உருவானது. எல்லோருக்கும் சுதந்திரம் அமைந்தது.

ஈ.பி. டைலர் என்ற சமூக மானிடவியல் அறிஞர் சமூகம் காட்டுமிராண்டித்தனமான (Savage) நிலை, நாகரிகம் முதிரா (Barbaric) நிலை, நாகரிக (Civilized) நிலை ஆகிய மூன்று நிலை களைக் கடந்து வளர்ந்துவந்துள்ளது என்கிறார். தொடக்கத்தில் சமூகம் காட்டுமிராண்டித்தனமான நிலையில் இருந்தது. அந்த நிலையில் மக்கள் தங்கள் உணவுத் தேவைக்காகக் காய் கனிகள் திரட்டுவதையும் வேட்டையாடுவதையும் தங்கள் செய்தொழி லாகக் கொண்டிருந்தனர். காய் கனிகளும், விலங்குகளும் இருந்த இடங்களுக்கு அருகிலேயே அவர்கள் சிறுசிறு கூட்டமாக வசித்து வந்தனர். உணவுப் பொருள்கள் (காய்—கனிகள், விலங் குகள்) இருப்பு தீர்ந்ததும், அந்த இடத்தை விட்டு அவை கிடைக்கக்கூடிய மற்றோர் இடத்துக்குக் குடியேறினர். இப்படி அவர்கள் ஒரு நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். பெரும் பாலும் கல்லைப் பயன்படுத்தியே தங்களுக்கு வேண்டிய கருவிகள், பாண்டங்கள் முதலியவற்றைச் செய்துகொண்டனர்.

பிறகு சமூகம் மெல்ல நாகரிகம் முதிரா நிலைக்கு வந்தது. அந்த நிலையில் மக்கள் காய்—கனிகளைத் திரட்டுவதையும், விலங்குகளை வேட்டையாடுவதையும் விடுத்து, வேளாண்மையை மேற்கொண்டனர். தங்களுக்கென்று ஒரு தலைமையை அமைத்துக் கொண்டு அதனுடைய அதிகாரத்துக்கு கட்டுபட்டு வாழ்ந்தனர்.

தங்களுக்கு வேண்டிய கருவிகள், பாண்டங்கள் முதலியவற்றை உலோகத்தினால் செய்துகொண்டனர்.

பிறகு, கடைசியாக சமூகம் நாகரிக (Civilized) நிலையை அடைந்தது. நாகரிக நிலையில்தான் எழுத்து முறை (Writing system) உருவானது. இதன் பலனாக வாணிகம், கணிதம் முதலிய துறைகள் எழுந்தன. சமயம், தத்துவம் முதலிய துறைகள் வளர்ந்தோங்கின. சட்டங்கள் பிறந்தன. சமூகம் முன்னேற்றமடைந்தது.

பண்பாட்டு மானிடவியலாளர்கள் பண்பாட்டு வளர்ச்சியின் அடிப்படையில் சமூகப் பரிணாமத்தை நோக்குகிறார்கள். பண்பாடு தன்னுடைய வளர்ச்சியில் பல நிலைகளைக் கடந்து வந்துள்ளது. கருவிகள் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருள்களுக்கேற்ப பண்பாட்டின் வளர்ச்சி நிலைகள் அமைந்தன. பண்பாட்டின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும், சமூக நிலையமைப்பில் மாற்றம் ஏற்பட்டுப் பரிணாமம் நிகழ்ந்தது.

பண்பாட்டு வளர்ச்சி இரு பெரும் நிலைகளில் அமைந்தது. ஒன்று கற்காலம் (Stone age). இன்னொன்று உலோகக் காலம் (Metal age). கல்லை மூலப் பொருளாகப் பயன்படுத்திக் கருவிகள், ஆயுதங்கள், பாண்டங்கள் முதலியன செய்தபோது கற்காலமும், கல்லுக்குப் பதிலாக உலோகத்தைப் பயன்படுத்திக் கருவிகள், ஆயுதங்கள், பாண்டங்கள் முதலியன செய்தபோது உலோகக் காலமும் ஏற்பட்டன. இந்த இரண்டு நிலைகளும் தங்களுக்குள் பல உட்பிரிவுகளைக் கொண்டிருந்தன.

கற்காலத்தில் மக்கள் மணற் சத்து அடங்கிய கடினமான கற்களைக் கொண்டு கருவிகள் தயாரித்தனர். வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு உத்திகளைக் கடைபிடித்துக் கருவிகள் தயாரித்தனர். உத்திகளின் வேறுபாட்டு அடிப்படையில் கற்காலம் பழைய கற்காலம் (Palaeolithic age), புதிய கற்காலம் (Neolithic age) என்று இரண்டு நிலைகளாகப் பிரித்து அமைந்தது.

பழைய கற்காலம் பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு துவங்கியது. அக்காலத்தில் மக்கள் கற்களைப் பக்கவாட்டிலும், முனையிலும் பெருங் கற்களால் தட்டித் தட்டிச் சில்லுகளை உடைத்துக் கூர்மையாக்கிக் கருவிகள் படைத்தனர். அரிவாள், கோடாலி, நீண்ட கத்தி முதலிய பெரிய கருவிகளை மட்டு மல்லாமல், ஊசி, குண்டுசி போன்ற சிறிய கருவிகளையும் கூடக் கல்லில் படைத்தனர். அந்தக் கருவிகள் செதுக்கப்பட்டு, சீவப்

பட்டுத் தயாரிக்கப்பட்டதனால் கரடுமுரடாக இருந்தன. ஒழுங்கற்ற உருவமைப்பைக் கொண்டிருந்தன.

மக்கள் காய்கனிகளைத் திரட்டியும், விலங்குகளை வேட்டையாடியும் வாழ்ந்து வந்தனர். வேட்டையாடப்பட்ட விலங்குகளின் தோல்களை உரித்து அவற்றை ஆடையாகப் பயன்படுத்தினர். காய்கனிகளும் விலங்குகளும் கிடைத்த இடங்களுக்கு அருகிலேயே அவர்கள் சிறு சிறு கூட்டங்களாக வசித்து வந்தனர். அவர்கள் திறந்த வெளிகளிலும் குகைகளிலும் வசித்து வந்தனர். உணவுப் பொருள்கள் இருப்பு தீர்ந்ததும் வேறு இடங்களுக்குக் கூட்டம் கூட்டமாகக் குடியேறினர். இவ்விதம் ஒரு நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

புதிய கற்காலம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. அக்காலத்தில் மக்கள் கற்களை மணற்பாறைகளின் மீது உராய்ந்து, தேய்த்து அவற்றைக் கூர்மையாக்கினர். தேய்ப்பின் காரணமாகக் கற்கருவிகள் மிகக் கூர்மையாகவும், அமைப்பில் வழவழப்பாகவும், பிடிப்பதற்கு மிருதுவாகவும், வசதியாகவும் அமைந்தன.

புதிய கற்காலத்தில் மக்கள் காய்கனிகளைத் திரட்டுவதையும், விலங்குகளை வேட்டையாடுவதையும் விடுத்து, வேளாண்மையை மேற்கொண்டனர். களைக்கொத்து, அரிவாள் முதலிய கருவிகளைக் கற்களைத் தேய்த்துத் தயாரித்தனர். அவற்றைக்கொண்டு நிலத்தைக் கீறி, விதை போட்டு வேளாண்மை செய்தனர். விளைச்சலில் கிடைத்த தானியங்களை மாவாக அரைத்து அதை உணவுப் பொருளாகப் பயன்படுத்தினர். தானியங்களைப் பொடி செய்யவும், மாவு அரைக்கவும் திருகை இயந்திரம், உரல், உலக்கை, அம்மி, குழவிக்கல் முதலிய கருவிகளைக் கற்களைத் தேய்த்துத் தயாரித்தனர்.

புதிய கற்காலத்தில் மக்கள் நிலையான வாழ்க்கை வாழத் தொடங்கினர். வசிப்பதற்கு வீடுகள் கட்டிக்கொண்டனர். மண்பாண்டங்கள் தயாரிக்கவும், நூல்களைக் கொண்டு ஆடைகள் தயாரிக்கவும், ஆடுமாடுகள் வளர்க்கவும் கற்றுக்கொண்டனர்.

ஏறத்தாழ கி. மு. 4000-ல் உலோகக் காலம் தோன்றியது. அப்பொழுது பயன்பாட்டுக்கு வந்த உலோகம் செம்பு. கி மு. 3000-ல் வெண்கலம் பயன்பாட்டுக்கு வந்தது. கி. மு. 1500-ல் இரும்பு பயன்பாட்டுக்கு வந்தது. இரும்பு

மிகுதியாகக் கிடைத்ததால் கருவிகளும், ஆயுதங்களும், பாண்டங்களும், இன்ன பிற பொருள்களும் மிகுதியாகத் தயாரிக்கப்பட்டன. எல்லாவித மக்களுக்கும் தேவையான அளவுக்குக் கருவிகளும், ஆயுதங்களும், பாண்டங்களும், பிற பொருள்களும் கிடைத்தன.

இரும்புக் காலத்தில்தான் எழுத்துமுறை வளர்ந்தோங்கியது. சமயம், தத்துவம், வாணிகம், கணிதம், வானவியல், அறிவியல் முதலிய துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. இத்துறைகளில் எழுந்த சிந்தனைகள், கண்டுபிடிப்புகள் எல்லாம் கல்வெட்டுகளிலும், பனையோலைகளிலும், காலப்போக்கில் காகிதத்திலும் வடிவமைக்கப்பட்டன. சட்டங்களும் பிறந்தன. உலகின் தலைசிறந்த பண்டைய நாகரிகங்களான எகிப்து, கிரேக்க, ரோம், மெசபொடேமிய, இந்திய, மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் நாகரிகங்கள் இக்காலத்தில்தான் தோன்றின.

இவ்வாறு பண்பாட்டு வளர்ச்சிக்கேற்பக் சமூகமும் வளர்ந்து வந்தது. பண்பாடு இரும்புக் காலத்தை அடைந்ததும், சமூகம் நாகரிக நிலையை எய்தியது.

## வினாக்கள்

1. சமூகத்திற்கு மனிதர்கள் எவ்விதம் அவசியம் என்பதை விளக்குக.
2. மனிதனுக்குச் சமூகம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
3. 'காட்டுநிலையில் வாழ்ந்தோர்', 'ஓநாய்க் குழந்தைகள்', 'தனிமர்கள்' — இச்சொற்களுக்குப் பொருள் தருக.
4. பண்பாடு மனிதனுக்கு எவ்விதம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குக.
5. சமூகத்தின் தோற்றம் பற்றி ஆராய்க.
6. சமூகப் பரிணாமம்பற்றி ஆராய்க.
7. பண்பாடு வளர்ந்த விதம்பற்றி எடுத்துக் கூறுக.

# 4. சமூகவியல் அடிப்படைக் கருத்துகள்

சமூகவியல் சமூகத்தை ஆராய்கிற இயல் என்று கண்டோம். சமூகம் என்றால் என்ன என்பதையும், சமூகத்தோடு இணைந்துள்ள தொடர்புடைய பொருள்கள் என்னென்ன என்பதையும், அவற்றுக்கும் சமூகவியல் எப்படி விளக்கங்கள் தருகிறது என்பதையும் இங்கு பார்ப்போம்.

## சமூகம் (Society)

'சமூகம்' என்ற சொல் சாதாரணப் பேச்சு வழக்கில் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. மனிதகுலம் முழுவதையும் குறிக்கும் வகையில் இச்சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. மற்றும், இதற்கு மாறான வகையில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக அமைக்கப்படும் ஒரு சங்கத்தைக் குறிப்பிடும் வகையில் கூட இச்சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமையைத் தவிர்ப்பதற்காக அமைக்கப்படும் சங்கம் (Society for the Prevention of Cruelty to Animals) என்றுதான் அழைக்கப்படுகிறது. இங்கு 'சமூகம்' 'சங்கம்' என்ற பொருளில் அமைகிறது.

ஆனால் சமூகவியலில் இப்பொருள்களில் 'சமூகம்' பயன்படுத்தப்படுவதில்லை. பொதுவாக, 'சமூகம்' சமூக உறவுகளின் தொகுப்பு என்ற பொருளைத் தந்தாலும், நடைமுறையில் சமூகவியல் அறிஞர்கள் இப்பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்துவதில்லை. இப்பொருள் ஒரு நுட்பமான பொருள். இப்பொருளைக் கொண்டு 'சமூகம்' என்றால் இதுதான் என்று தெளிவாக, குறிப்பாகப் புரிந்துகொள்ள முடியாது. ஆகவே சமூகவியல் அறிஞர்கள் நடைமுறையில் 'சமூக'த்தை வேறொரு பொருளில் பயன்படுத்துகிறார்கள். 'ஒரு நிலப்பகுதியில் நிலையாகக் கூடி வாழும் பெருந்திரளான மக்கள்' என்ற பொருளில் 'சமூகத்'தைக் குறிப்பிடுகிறார்கள் (இம்பால் யங் & ரேமாண்ட் மார்க்).

ஆக, நடைமுறையில் 'சமூகம்' என்பது ஒரு நிலப்பகுதியில் நிலையாகக் கூடி வாழும் பெருந் திரளான மக்களைக் குறிக்கிறது.

ஒரு சமூகம் கீழ்க்கண்ட சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும்:

(1) ஒரு சமூகம் அதிக எண்ணிக்கையிலான (பெருந் திரளான) மக்களைக் கொண்டிருக்கும்.

(2) அந்த மக்கள் ஒரு தொகையாக ஒரு நிலப்பகுதியில் கூடி வாழ்வார்கள்.

(3) பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தெரிந்துகொண்டு உறவுகள் வைத்து வாழ்வார்கள். பரஸ்பரத் தொடர்பு இல்லாவிட்டாலும் இன்னார் நம்முடைய நிலப்பகுதியில்தான் வாழ்கிறார், நம்மைச் சேர்ந்தவர்தான் என்று தெரிந்து வைத்திருப் பார்கள்.

(4) ஒரு பொதுப் பண்பாட்டைக் கொண்டிருப்பார்கள். அவர்களைத் தனியாக இனம் காட்டக்கூடிய அளவில் இப் பண்பாடு அமைந்திருக்கும். அவர்களிடையே எழும் உறவு களையும், அவர்களுடைய செயல்களையும் இப் பண்பாடே நெறிப்படுத்தும்.

(5) அவர்களிடையே ஓர் ஒற்றுமை உணர்வு இருக்கும். ஒரு பொது நிலப்பகுதியில் வாழ்கிறோம் என்ற உணர்வும் ஒரு பொதுப் பண்பாட்டைப் பெற்றிருக்கிறோம் என்ற உணர்வும் அவர்களிடையே ஓர் ஒற்றுமையைத் தோற்றுவிக்கின்றன.

(6) அவர்களிடையே ஒரு கூட்டுறவு இருக்கும். இயல்பாக ஒருவரையொருவர் சார்ந்து செயல்படுவார்கள். இந்தக் கூட்டுறவின் காரணமாகச் சமூகம் ஒன்றாக ஒருமித்துச் செயல்படும் அலகாகத் தோன்றும்.

(7) சமூகத்தில் பல வகையான பணிகள் புரியும் குழுக்கள் அமைந்து இருக்கும். பொதுவாக ஒவ்வொரு சமூகத்திலும் ஆறுவகையான குழுக்கள் அமைந்திருக்கும். அவை குடும்பக் குழு, கல்விக் குழுக்கள், பொருளாதாரக் குழுக்கள், அரசியல் குழுக்கள், சமயக் குழுக்கள், பொழுதுபோக்குக் குழுக்கள். இவை மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கும். இக் குழுக்கள் ஒன்றாக இணைந்து செயல்படும். இதன் காரணமாகச் சமூகம் ஓர் அமைப்பாக விளங்கும்.

(8) ஒவ்வொரு சமூகமும் ஒரு தனி அலகாக இருக்கும். அதனுடைய பண்பாடும், எல்லைகளையுடைய அதன் நிலப் பகுதியும், அதனிடம் அமைந்திருக்கிற ஒற்றுமையுணர்வும், கூட்டு

வாழ்க்கையும் அதைப் பிற சமூகங்களிலிருந்து பிரித்துக் காட்டும். குறிப்பாக பண்பாடுதான் ஒரு சமூகத்தைத் தனி அலகாகக் காட்டும்.

•சமுதாயம் (Community)

இச் சொல்லும் 'சமூக'த்தைப் போலப் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்த உலகமே ஒரு சமுதாயம்தான் என்ற பொருளில் உலகத்தைக் குறிக்கும் வகையில் இச்சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. உலகச் சமுதாயம் (World Community) என்ற சொல்லாட்சி இதைப் புலப்படுத்தும். மற்றும், ஒரு குறுகிய பொருளில், மக்களில் சில பிரிவினரைக் குறித்திடும் வகையில் இச் சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. (எ-டு.) 'மாணவர் சமுதாயம்', 'தொழிலாளர் சமுதாயம்' என்ற சொல்லாட்சிகள்.

சமூகவியலில் 'சமுதாயம்' என்பதற்கு ஒரு தனிப் பொருள் உண்டு. 'ஒரு சிறிய வட்டாரத்தில் ஒரு பொதுவாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டாக வாழும் ஒரு மக்கள் தொகுதியே சமுதாயம்' என்று விளக்கம் தரப்படுகிறது (ஆர்னால்ட் க்ரீன்).

இவ்விளக்கத்தின்படி ஒரு வட்டாரத்தில் மக்கள் கூடி வாழும் பொழுது, அவர்கள் ஒரு சமுதாயத்தை அமைக்கிறார்கள் என்று புலப்படுகிறது.

மெக்ஈவர் கீழ்கண்ட அம்சங்களை ஒரு சமுதாயத்தின் அடிப் படைகள் என்று குறுப்பிடுகிறார் :

1. தலம் (Locality)

ஒரு சமுதாயம் ஒரு தலத்தைக் கொண்டிருக்கும், அதாவது மக்கள் ஒரு வட்டாரத்தில் குழுமி வாழ்வார்கள். ஒரு வட்டா ரத்தில் மக்கள் குழுமி வாழும்பொழுது அந்த மக்கள் ஒரு சமுதாயம் என்று கருதப்படுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்கள் கூடி வாழும்பொழுது அவர்களுடைய வாழ்க்கை அதற்குள்ளேயே அமைந்துவிடுகிறது. அவர்களுடைய தேவைகள் அதற்குள்ளேயே நிறைவேற்றப்பட்டு விடுகின்றன. அந்த வட்டாரத்தைத் தாண்டிப் போகவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. சொல்லப்போனால், ஒரு சமுதாயத்திற்குரிய அடையாளம் அந்தச் சமுதாயத்தில்

வாழும் மக்களுடைய வாழ்க்கை அதற்குள்ளேயே அமைந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்த வட்டாரம், அங்கு மக்கள் குழுமி வாழ்வதாலேயே சமுதாயமாக ஆகிவிடாது.

மக்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தாங்கள் வாழும் வட்டாரத்திற்குள் நிலையாக அமைத்துக் கொள்ளும்பொழுது, அந்த வட்டாரத்தின் புறச் சூழ்நிலை மக்களுடைய வாழ்க்கை முறையை, அவர்களுடைய குணநலன்களைத் தீர்மானிக்கின்றன. வாழும் வட்டாரத்தின் தட்பவெப்ப நிலை, மண்ணின் தன்மை, இயற்கை அமைப்பு முதலியன அவர்களுடைய செய்தொழில், வாழ்க்கை வழி முதலியவற்றை நிர்ணயிப்பது மட்டுமல்லாமல் அவர்களுடைய குணங்களையும் மனப் போக்குகளையும்கூட நிர்ணயிக்கின்றன.

இப்படி அவர்களுக்கு அவர்கள் வாழும் வட்டாரம் எல்லாமாக இருந்து அவர்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கிறது. அவர்களுடைய குணங்களையும் போக்குகளையும் நிர்ணயிக்கிறது.

2. சமுதாய உணர்வு (Community Sentiment)

மேற்குறிப்பிட்ட அம்சத்தைவிட இந்த அம்சம்தான் ஒரு சமுதாயத்திற்கு மிக முக்கியமானது. ஒரு வட்டாரத்தில் மக்கள் குழுமிக் கூடி வாழும்பொழுது அந்த வட்டாரத்துக் குள்ளேயே அவர்களுடைய வாழ்க்கை நிலைபெற்று அமைந்து விடுகிறபொழுது அந்த வட்டாரத்துடன் அவர்கள் ஐக்கியமாகி விடுகிறார்கள். இந்த வட்டாரம் சமுதாயம் நமக்குரியது என்ற ஓர் உணர்வை அவர்கள் அடைகிறார்கள். இந்த உணர்வு மூன்று உணர்வுகளை உள்ளடக்கியிருக்கிறது என்று மெக்ஈவர் குறிப்பிடு கிறார்.

(அ) நாம் - உணர்வு (We Feeling): 'ஒரே வட்டாரத்தில் வாழும் நாம் எல்லோரும் ஒன்று' என்ற உணர்வு அவர்களுக்கு அமைகிறது. இந்த உணர்வு அவர்களுக்குள் ஒற்றுமையை வளர்க் கிறது. அவர்கள் பேதமில்லாமல் ஒன்றாகக் கூடி வாழ வழி வகுக்கிறது.

(ஆ) பங்கு உணர்வு (Role Feeling): 'இந்தச் சமுதாயம் நமக்குரியது' என்ற உணர்வு அவர்களுக்கு ஒரு பங்கு உணர்வையும் தோற்றுவிக்கிறது. 'இந்தச் சமுதாயம் நமக்குரியது, ஆகவே இதற்கு நம்முடைய கடமை எதுவோ அதை ஒழுங்காகச் செய்திடல்

வேண்டும்' என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே தங்களுடைய சமுதாயத்தின் ஒழுங்கையும், கட்டுக்கோப்பையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்தும் வண்ணம் கடமையெனக் கருதி அவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள்.

3. சார்பு உணர்வு (Dependency Feeling)

'நம்முடைய தேவைகள் நம்முடைய சமுதாயத்தால்தான் நிறைவேற்றப் படுகின்றன. எனவே நாம் நம்முடைய சமுதாயத்தைச் சார்ந்துதான் வாழ முடியும், வாழ வேண்டும்' என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகிறது.

இவ்வாறு ஒரு தலமும் (வட்டாரமும்), இந்தத் தலத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்ற உணர்வும் ஒரு மக்கள் தொகுதி ஒரு சமுதாயமாக அமைய வழி வகுக்கின்றன என்று மெக் ஈவர் குறிப்பிடுகிறார்.

ஆக ஒரு சமுதாயத்தின் சிறப்பியல்புகள் என்னவென்றால் முக்கியமாக இதற்கு ஒரு தலம் (வட்டாரம்) இருக்கும். அங்கு மக்கள் குழுமி வாழ்வார்கள். அவர்களுக்கு 'நாம் அந்தத் தலத்துக்குரியவர்கள்' என்ற சமுதாய உணர்வு அமைந்திருக்கும். இவையல்லாமல், அந்த மக்களுடைய வாழ்க்கை அந்தத் தலத்திலேயே முழுவதுவாக நிலையாக அமைந்திருக்கும். அவர்கள் ஒரு பொதுவான வாழ்க்கை வழி கொண்டிருப்பார்கள்.

மேலோட்டமாகப் பார்த்தால் சமுதாயம் சமூகத்தை ஒத்திருப்பதுபோலத் தோன்றும். இரண்டிலும் மக்கள் கூடி வாழ்வர்; கூட்டுறவு கொண்டிருப்பர்; ஒருவருக்கொருவர் சார்ந்து வாழ்வர். பொதுவான வாழ்க்கை வழி கொண்டிருப்பர். ஆயினும் இரண்டும் வெவ்வேறானவை. சமூகம் என்பது ஒரு பெரிய மக்கள் தொகுதி, அதனுடைய உறுப்பினர் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும். அவர்கள் ஒரு பெரிய நிலப்பகுதியில் கூடி வாழ்வர். ஆனால் சமுதாயம் சமூகத்திற்குள் அடங்கியிருக்கும். ஒரு சிறிய மக்கள் தொகுதியாக இருக்கும். சமூகம் அமைந்திருக்கிற நிலப்பகுதியில் ஒரு சிறிய தலத்தில் ஒரு வட்டாரத்தில் அது அமைந்திருக்கும்.

எவ்வாறு ஒரு சமூகத்தில் மக்கள் சமுதாயங்களாக பல வட்டாரங்களில் குழுமி வாழ்கிறார்களோ, அவ்வாறு ஒரு சமுதாயத்திலும் மக்கள் சிறு சிறு பகுதிகளில் குழுமி வாழ்வார்கள். அத்தகைய குழுக்கள் அண்டையங்கள் (Neighbourhoods) எனப்படும். ஒவ்வொரு சமுதாயமும் பல அண்டையங்களைக் கொண்

டிருக்கும். ஒவ்வோர் அண்டையத்திலும் பல குடும்பங்கள் குழுமி யிருக்கும். அவற்றிடையே நெருக்கமான உறவுகள் நிலவும்.

சமுதாயம் பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படு கிறது. ஒன்று 'கிராமச் சமுதாயம்'. மற்றொன்று 'நகரச் சமுதாயம்'.

பண்பாடு (Culture)

ஒரு சமூகத்தின் முக்கியமான அம்சம் பண்பாடு. எந்த அளவுக்குப் பண்பாடு சமூகத்துக்கு முக்கியம் என்பதை மேலே கண்டோம்.

சமூகத்தைப் போலவே பண்பாடும் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. ஒருவனுடைய தூய்மைப்பாட்டைக் குறிக்கும் வகையில் இச்சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. தூய்மைப்பாடு உடைய ஒருவனைப் 'பண்பாடு உடைய மனிதன்' (Cultured person) என்பதும், தூய்மைப்பாடு அற்ற மனிதனைப் 'பண்பாடற்ற மனிதன் (Uncultured person) என்பதும் இதற்குச் சான்றுகள். சமஸ்கிருத மொழியிலும் பண்பாடு இப்பொருளில் தான் பயன்படுத்தப்படுகிறது. அம்மொழியில் பண்பாட்டைக் குறிக்கும் சொல் 'சமஸ்க்ருதி' என்பது. இச்சொல்லுக்கு உரிய பொருள்: சடங்குகளின் (சமஸ்கார்களின்) மூலமாக ஒருவன் பெற்றிடும் 'தூய்மைப்பாடு'.

மேலான ரசனை உணர்வைக் குறிக்கும் வகையிலும் இச் சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. ஆங்கிலக் கவிஞர் மாத்யூ ஆர்னால்ட் 'பண்பாட்டை' இப்பொருளில்தான் முழங்குகிறார். நல்லதைக்கொண்டு நல்லன ஆல்லாதவற்றை விலக்கும் மனிதனை அவர் பண்பாடு உடைய மனிதன் என்கிறார்.

காசீரர் (Cassirer), சரோகின் (Sorokin) போன்ற அறிஞர்கள் 'பண்பாடுள்ள மனிதன் என்றால் சிறந்த தார்மீக நடத்தையும், ஆன்மீகக் குணங்களும், அறிவுத் திறமும் ஒருங்கே பெற்றவன்' என்று கூறுகிறார்கள்.

வரலாற்றாசிரியர்களும், இச்சொல்லைப் பயன்படுத்து கிறார்கள். பலதுறைகளில், குறிப்பாக கலை, இசை, இலக்கியம் தத்துவம், சமயம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் ஒரு குறிப் பிட்ட காலகட்டத்திலோ அல்லது தொடர்ச்சியாகவோ ஒரு குழு அடைந்திடும் சாதனைகளைக் குறிப்பிட இச் சொல்லைப் பயன் படுத்துகிறார்கள்.

சமூகவியல் அறிஞர்கள் பண்பாட்டை வேறு வகையாக விளக்குகிறார்கள். 1871-ல் ஈ. பி. டைலர் (E. B. Tylor) பண்பாடு பற்றி ஒரு விளக்கம் தந்தார். 'பண்பாடு' என்பது 'அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம், மற்றும் ஒரு சமூகத்தின் உறுப்பினன் என்ற முறையில் (சமூகத்தில்) ஒரு மனிதன் பெற்றிடும் திறமைகள், பழக்கங்கள் முதலியவை உள்ளிட்ட ஒரு சிக்கலான தொகுதி' என்று கூறினார். க்ளைட் க்ளக்கான் (Clyde Kluckhon), கெல்லி (Kelly) என்ற அறிஞர்கள் (1945) பண்பாட்டில் மேற்கண்ட உறுப்புகள் மட்டுமன்றி, மனிதன் உண்டாக்குகிற புத்தகங்கள், ஓவியங்கள், கட்டடங்கள் முதலியவையும் உள்ளடங்கியிருக்கும் என்று தெரிவித்தனர்.

இந்த விளக்கங்கள் பண்பாடு என்னென்ன தன்மைகள் கொண்டிருக்கும் என்று பட்டியல் போட்டுக் காண்பிக்கின்றன. ஆனால் பண்பாட்டின் பட்டியல் நீளமானது. அதனுடைய உருப்படிகளை எண்ண இயலாது.

ஆகவே இன்றைய சமூகவியலறிஞர்கள் பண்பாட்டிற்குச் சுருக்கமான அதே நேரத்தில் விரிவான பொருளைத் தரக்கூடிய ஒரு விளக்கம் வரைந்து தருகிறார்கள். அந்த விளக்கம் : 'பண்பாடு என்பது சமூக உறுப்பினர்கள் என்ற முறையில் நாம் சிந்திக்கிற, செய்கிற, கொண்டிருக்கிற எல்லா செய்திகளையும் உள்ளடக்கியிருக்கிற ஒரு சிக்கலான தொகுதி'.

சில சமூகவியலறிஞர்கள், இந்த விளக்கத்தைக் கொண்டு பண்பாட்டின் உருப்படிகளைப் பொதுவாக இரண்டு வகையினங்களில் அடக்கிவிடலாம் என்று கருதுகிறார்கள். ஒரு பொருள்சார் (Material) வகையினம், இரண்டாவது பொருள் சாரா (Non-material) வகையினம். பொருள்சார் வகையினம் என்றால் என்ன என்பதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். தொட்டு உணரக் கூடிய (Tangible) பொருள்கள் அவ்வகையினத்தில் அடங்கியிருக்கும் என்பது மிக எளிதான உண்மை. ஆனால், பொருள் சாரா வகையினம் என்றால் என்ன என்பதை எளிதில் புரிந்துகொள்ள இயலாது. தொட்டு உணரமுடியாத பொருள்களே அவ்வகையினத்தில் இருக்கும் என்று விளக்கம் தரப்படலாம். ஆனால் தொட்டு உணர முடியாத பொருள்களோ பல வகைகளில் இருக்கின்றன. அவற்றில் எந்தெந்த வகைகள் பொருள் சாராப் பண்பாட்டில் இருக்கின்றன என்பது ஒரு கேள்விக்குறி.

ராபர்ட் பியர்ஸ்டெட் என்ற சமூகவியலறிஞர் பண்பாட்டிற்கான விளக்கமே இந்த நிலையைத் தெளிவு படுத்திவிடும்

என்கிறார். பண்பாட்டின் எண்ணிக்கைகளைச் சிந்தனை (Thinking), செயலாக்கம் (Doing), உடைமை (Having) ஆகிய மூன்று வகையினங்களிலேயே அந்த விளக்கம் அடங்கிவிடுகிறது. ஆகவே பண்பாட்டின் உருப்படிகள் எந்தெந்த வகையினங்களில் அடங்கக் கூடியவை என்று குழப்பமடைய வேண்டியதில்லை என்கிறார். சிந்தனை வகையினத்தில் வரக்கூடிய உருப்படிகளைப் பொதுப்படையாக எண்ணங்கள் (Ideas) என்றும், செயலாக்க வகையினத்தில் வரக்கூடிய உருப்படிகளை நெறிகள் (Norms) என்றும், உடைமை வகையினத்தில் வரக்கூடிய உருப்படிகளை ஆக்கப்பொருள்கள் (Materials) என மூன்று வகையானதாகக் குறிப்பிடலாம் என்று பியர்ஸ்டெட் கூறுகிறார்.

### 1. எண்ணங்கள் (Ideas)

மக்கள் எவ்வளவோ விஷயங்களைச் சிந்திக்கிறார்கள். அவையெல்லாம் என்னென்ன என்று நாம் பட்டியல் போட இயலாது. அவை தொடர்ந்து விரிந்து கொண்டே வரும். கல்வியறிவுடைய சமூகங்களில் மக்கள் தங்கள் எண்ணங்களை நூல்கள் வடிவில் வடிக்கிறார்கள். அப்பொழுதும் எல்லா எண்ணங்களும் நூல்கள் வடிவில் வெளிவருவதில்லை. ஒருசில எண்ணங்களே நூல்கள் வடிவில் அமைகின்றன. கல்வியறிவு பெறாத சமூகங்களில் எண்ணங்கள் பதிவு செய்யப்பட வாய்ப்பில்லை. ஆயினும் அவை செவிவழி நம்பிக்கைகளாக, கதைகளாகத் தலைமுறை தலைமுறையாய் நிலவி வருகின்றன.

மக்களுடைய எண்ணங்கள் பல துறைகளைத் தழுவியிருக்கும். குழந்தை பிறப்பு, கடவுள், பிரபஞ்சம், அரசு என்று பல்வேறு விஷயங்களைப்பற்றி அமைந்திருக்கும். அவையெல்லாம் சரியா தவறா, பகுத்தறிவுக்கு ஒப்பானவையா இல்லையா என்பதுதான் இங்கே முக்கியம்.

எண்ணங்கள் சமூகத்துக்குச் சமூகம் மாறுபடக்கூடும். உதாரணமாக இந்துக்கள் பல கடவுள்களில் நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால் முஸ்லிம்களுக்கு ஒரே கடவுளில்தான் நம்பிக்கை உண்டு. இதற்கு முற்றிலும் மாறாக சோவியத் யூனியன் மக்களுக்குக் கடவுள் நம்பிக்கையே கிடையாது.

எண்ணங்கள் மக்களுடைய நடத்தையை நிர்ணயிக்கின்றன.

பல சமூகங்களில் மக்களுக்கு மந்திரத்தில் (Magic) நம்பிக்கை இருக்கிறது. மந்திரத்தால் எதையும் செய்யலாம் என்று

அவர்கள் எண்ணுகிறார்கள். இதன் காரணமாக நோய் நொடி வந்தால், குணம் பெற மந்திரத்தை நாடுகிறார்கள். மழை பொய்த்தால், வறட்சி ஏற்பட்டால், கடும் வெப்பமோ வெள்ளமோ ஏற்பட்டால் மந்திரத்தின் மூலம் இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளைப் போக்க முனைகிறார்கள். தங்களுடைய பகைவர்களை முறியடிக்கவும், போரில் வெல்லவும், செய் தொழிலில் உரிய பலனைக் காணவும்கூட மந்திரத்தை நாடுகிறார்கள். சுருங்கச் சொன்னால் தங்களால் இயலாது என்ற நிலை அவர்களுக்கு வரும்பொழுது மந்திரத்தை நாடுகிறார்கள்.

## 2. நெறிகள் (Norms)

ஒருவனுடைய நடத்தை எப்படி அமையவேண்டும் என்பதற்குப் பல நியதிகள் சமூகத்தில் நிலவுகின்றன. அந்த நியதிகளே நெறிகள் எனப்படுகின்றன.

ஒருவன் பலவகையான சந்தர்ப்பங்களைச் (Situations) சந்திக்க நேரிடுகிறது. ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஒவ்வொரு விதமானது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் எவ்வாறு நடந்துகொள்ளலாம், நடந்துகொள்ள வேண்டும் என்று நெறிகள் வழிகாட்டி, அவனுடைய நடத்தையை ஒழுங்குபடுத்துகின்றன. எடுத்துக் காட்டாக, ஒரு விருந்தினர் வரும்பொழுது அவரை அவன் எப்படி வரவேற்க வேண்டும் என்பதை ஒரு நெறி சுட்டிக் காட்டுகிறது. அந்த நெறிக்கேற்ப அவன் விருந்தினரைக் கரம் கூப்பி 'வணக்கம்' என்று சொல்லியோ அல்லது கை குலுக்கியோ அல்லது ஆரத் தழுவியோ வரவேற்கிறான். இப்படிப்பட்ட நெறியொன்று இல்லாத நிலையில் அவன் அவரை வரவேற்கத் தெரியாமல் தடுமாறக்கூடும். இல்லாவிடில் வரவேற்காமல் இருந்துவிடக்கூடும் அல்லது வேறு வகையில் நடந்துகொள்ளக்கூடும்.

நெறிகள் இல்லாத நிலையில் மக்களுடைய நடத்தை சீராக அமையாமல் ஒழுங்கின்றி அமைந்துவிடும். அதனால் சமூகத்தில் ஓர் ஒழுங்கே இல்லாமல் போய்விடும். ஆகவே சமூக ஒழுங்கிற்கு நெறிகள் மிகவும் இன்றியமையாதவை.

சமூக நெறிகள் மனிதனுடைய நடத்தையை இரண்டு வழிகளில் நிர்ணயிக்கின்றன. ஒன்று, அவன் இன்னவற்றைச் செய்யலாம், செய்யவேண்டும் என்று ஆணையிடுகின்றன. இரண்டாவது, அவன் இன்னவற்றைச் செய்யலாகாது என்று தடைப்படுத்துகின்றன. இந்த அளவில் சமூக நெறிகள் ஆணையிடும் நெறிகள் (Prescriptive norms), தடைப்படுத்தும்

நெறிகள் (Proscriptive norms) என்று இரண்டு வகைகளாக அமைகின்றன.

பியர்ஸ்டெட் இந்த இரண்டு வகைகளையும் விரிவுபடுத்தி நெறிகளைக் கீழ்க்கண்ட வகைகளாகப் பிரிக்கிறார்:

(அ) நாட்டவர் வழக்குகள் (Folkways*)

'சமூகத்துக்குப் பொதுவாக அமைந்து, தலைமுறை தலைமுறையாய் நிலவி வரும் செயற்பாட்டு வழிகளே நாட்டவர் வழக்குகள்' என்று ஆர்னால்ட் க்ரீன் நாட்டவர் வழக்குகளுக்கு விளக்கம் தருகிறார்.

சமூகத்தில் மக்கள் பல காரியங்களைக் குறிப்பிட்ட வழிகளில் செய்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காரியம் ஒரு குறிப்பிட்ட வழியில் செய்யப்படும்பொழுது, அதனைச் சமூகம் அங்கீகரித்தால் அல்லது ஏற்றுக்கொண்டால், அந்தச் செயற்பாட்டு வழி நாட்டவர் வழக்கு என்று கருதப்படுகிறது. ஆகவேதான் மெக்ஈவர் நாட்டவர் வழக்குகளைக் குறிப்பிடும்பொழுது 'சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுகலாற்று வழிகளே நாட்டவர் வழக்குகள்' என்கிறார்.

ஆகவே, நாட்டவர் வழக்குகள் என்பது (1) சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட, (2) சமூகத்துக்குப் பொதுவாய் அமைகிற, (3) தலைமுறை தலைமுறையாய் நிலவி வருகிற காரியமாற்றும் வழிகளை—செயற்பாட்டு வழிகளைக் குறிக்கின்றன என்பது தெளிவு.

நம்முடைய சமூகத்தில் நாம் வேட்டி (ஆண்கள்) அல்லது சேலை (பெண்கள்) அணிகிறோம். தலைமுடியை வாரிச் சீவுகிறோம் (ஆண்கள்) அல்லது தலைமுடியைச் சீவிப் பின்னலிட்டுக் கொள்ளுகிறோம் (பெண்கள்). பல் விளக்கியபின் காலை உணவு உட்கொள்ளுகிறோம். தினசரி மூன்றுவேளை சாப்பிடுகிறோம். காலணிகளைக் கழற்றிவிட்டு வீட்டுக்குள் நுழைகிறோம். பெரியவர்களைக் கண்டால் எழுந்துகொள்ளுகிறோம். விருந்தினரைக் கரம் கூப்பி 'வணக்கம்' சொல்லி வரவேற்கிறோம். இப்படி ஆயிரக் கணக்கான காரியங்கள் செய்கிறோம். இவற்றை வழக்கமாகச் செய்து வருகிறோம். உணர்வு இன்றிச் செய்து வருகிறோம். இத்தகைய செயல்களே நாட்டவர் வழக்குகளாகும்.

---

* 'Folkways என்ற சொல்லைச் சமூகவியலில் அறிமுகப்படுத்தியவர் வில்லியம் கிரஹாம் சம்னர் (William Graham Sumner) என்ற அமெரிக்கப் பேராசிரியர். 1907-ல் இச்சொல்லைப் புழக்கத்தில் கொண்டுவந்தார்.

நாட்டவர் வழக்குகள் கட்டாயமானவையல்ல. அவற்றைக் கடைபிடிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. அவை விருப்பத்தேர்வுக்குட்பட்டவை. விரும்பினால் நாம் கடைபிடிக்க லாம். கடைபிடிக்காமலும் இருக்கலாம். குவளையைத் தூக்கிப் பிடித்துத்தான் தண்ணீர் குடிக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. உறிஞ்சியும் குடிக்கலாம். ஆயினும் பொதுவாக எல்லோரும் உணர் வின்றி குவளையைத் தூக்கிப் பிடித்துத்தான் தண்ணீர் குடிக் கிறோம்.

(ஆ) வழக்கடிப்பாடுகள் (Mores*)

சில செயற்பாட்டு வழிகள் சமூக நன்மைக்கு உகந்தவை. ஒழுங்குக்கு இன்றியமையாதவை என்று கருதப்பட்டு அவை கட்டாயமாகக் கடைபிடிக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டால், அவை வழக்கடிப்பாடுகள் எனப்படும்.

வழக்கடிப்பாடுகள் கட்டாயமாகக் கடைபிடிக்கப்பட வேண் டியவை. இதற்குக் காரணம் சமூக நன்மைக்கும் ஒழுங்குக்கும் அவை இன்றியமையாதவை என்பதுதான். இப்படிப்பட்ட நிலையில் 'வழக்கடிப்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டுமா, ஏன் கடைபிடிக்க வேண்டும்' என்ற கேள்விகளுக்கே இடமில்லை.

நம்முடைய சமூகத்தில் ஆடை அணிவது ஒரு வழக்கடிப்பாடு. இவ்வாறே ஒருவன் ஒருத்தியை மணமுடிப்பது, மனைவி கற்புடன் வாழ்வது முதலியனவும் வழக்கடிப்பாடுகளே. இவையெல்லாம் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. உணவுப் பழக்கங் களும்கூட ஒருசில சூழ்நிலைகளில் வழக்கடிப்பாடுகளே. உணவுப் பழக்கங்கள் சமய நம்பிக்கையோடு இணைந்திடும்பொழுது அவை வழக்கடிப்பாடுகள் ஆகின்றன. சைவ உணவுப் பழக்கம் பௌத்தர், சமணர் போன்ற சமயத்தாரிடையே வழக்கடிப்பாடாக இருக்கிறது.

வழக்கடிப்பாடுகள் இரண்டு வகைப்படும். ஒன்று, இன்னதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துபவை. மற்றொன்று, இன்னதைச் செய்யக் கூடாது என்று தடுப்பவை. முந்திய வகை 'வழக்கடிப்பாடுகள்' என்றே அழைக்கப்படுகிறது. பிந்திய வகை 'தடைகள்' (Taboos) என்று அழைக்கப்படுகிறது. (அதாவது எதிர்மறையான வழக்கடிப்பாடுகளே தடைகள் என்று அழைக்கப்

* 'Mores' என்ற இந்தச் சொல்லும் வில்லியம் கிரஹாம் சம்னரால் சமூகவியலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

படுகின்றன.) எடுத்துக்காட்டாக, வழக்கடிப்பாடு ஒருவன் ஆடை அணிந்தாக வேண்டும் என்று வற்புறுத்துகிறது. தடையோ ஒருவன் ஆடையின்றி நிர்வாணமாய் இருக்கக்கூடாது என்று கூறுகிறது. சுருங்கச் சொன்னால், தடை வழக்கடிப்பாட்டுக்கு விரோதமானச் செயலைத் தடுக்கிறது.

நாட்டவர் வழக்குகளும் வழக்கடிப்பாடுகளும் பொதுவாகப் பல விஷயங்களில் ஒத்த தன்மையைக் கொண்டிருக்கின்றன. இரண்டும் செயற்பாட்டு வழிகளைக் குறிக்கின்றன. இரண்டும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. சமூகத்துக்குப் பொதுவானவை, தலைமுறை தலைமுறையாய் நிலவி வருபவை. ஆயினும் நாட்டவர் வழக்குகளைக் கடைபிடித்தாக வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அவை விருப்பத் தேர்வுக்குட் பட்டவை. அவற்றைக் கடைபிடிக்கலாம் கடைபிடிக்காமலும் இருக்கலாம். ஆனால் வழக்கடிப்பாடுகளோ கட்டாயமானவை. அவை விருப்பத் தேர்வுக்கு அப்பாற்பட்டவை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவற்றைக் கடைபிடித்தே ஆக வேண்டும். எடுத்துக்காட்டாக, நாம் விரும்பினால் வேட்டியோ (ஆண்கள்) சேலையோ (பெண்கள்) அணியலாம். இல்லாவிடில் வேறோர் ஆடை அணியலாம். ஆனால் ஆடை அணிவது என்ற செயல் நம்முடைய விருப்பத்தேர்வுக்கு இடம் கிடையாது. அதைக் கட்டாயம் கடைபிடித்தே ஆகவேண்டும்.

வழக்கடிப்பாடுகள் சமூக நன்மைக்கு, ஒழுங்குக்கு இன்றியமையாதவை என்பதால் அவை மீறப்படுவதைச் சமூகம் பொறுத்துக் கொள்ளாது. அந்த மீறலைக் கேவலமான, இழிவான செயல் என்று கடுமையாகக் கண்டிக்கும். மீறியவர்களை வெறுப்புடன் பார்க்கும். ஆனால் நாட்டவர் வழக்குகள் மீறப்பட்டால் அந்த மீறலைச் சமூகம் கடுமையாக எடுத்துக்கொள்ளுவதில்லை.

### (இ) சட்டங்கள் (Laws)

சட்ட மன்றங்களாலோ அல்லது உயர் அரசியல் பதவிகளில் இருப்பவர்களாலோ இயற்றப்படுகிற விதிமுறைகள் சட்டங்கள் எனப்படும். நாட்டவர் வழக்குகளும் வழக்கடிப்பாடுகளும் எல்லாச் சமூகங்களிலும் இருக்கும். ஆனால் சட்டங்கள் எல்லாவற்றிலும் இருப்பதில்லை, அரசாங்கம் என்ற ஓர் அரசியல் நிலையமைப்பு உடைய சமூகங்களில் மட்டுமே இருக்கும். ஏனெனில் சட்டங்கள் நாட்டவர் வழக்குகளையும் வழக்கடிப்பாடுகளையும் போன்றவை அல்ல. சட்டங்களை நிறைவேற்ற, அமல்படுத்த,

வியாக்கியானம் செய்ய மூன்று வகையான அமைப்புகள் தேவைப் படுகின்றன. அவை: (1) சட்டமியற்றும் அமைப்பு (Legislature), (2) நிர்வாக அமைப்பு (Executive), (3) நீதித்துறை அமைப்பு (Judiciary). அரசு அமைந்திருக்கும் நிலையமைப்பில்தான் இம் மூன்று அமைப்புகளும் நிலவும். ஆகவேதான் அரசு அமைந் திருக்கிற சமூகங்களில் மட்டும் சட்டங்கள் நிலவுகின்றன.

சட்டங்கள் எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யக் கூடாது என்று நிர்ணயிக்கின்றன. பெரும்பாலும் சட்டங்கள் இன்னின்ன காரியங்கள் செய்யக்கூடாது என்று தடுத்து இவற்றைச் செய்வது குற்றம் என்று அறிவிக்கின்றன. சட்டங்களை மீறுவோர் குற்றவாளிகள் என்று கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு விதி முறை சார்ந்த (Formal) தண்டனை கிடைக்கிறது. அபராதம், சிறைத் தண்டனை, மரண தண்டனை என்று சட்ட மீறலின்— குற்றத்தின் தன்மைக்கேற்பத் தண்டனை கிடைக்கிறது.

சட்டங்கள் கட்டாயமானவை. அவை மக்கள்மீது திணிக்கப் படுகின்றன. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மக்கள் அவற்றை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். அவற்றை எக்காரணம்கொண்டும் மீறக் கூடாது. மீறினால் நிச்சயம் தண்டனைதான். தண்டனைக்கு அஞ்சி மக்கள் சட்டங்களை மீறுவதில்லை.

இத்தகைய ஒரு வலிமை இருப்பதனாலேயே சட்டங்கள் மற்ற நெறிகளைவிட, குறிப்பாக வழக்கடிப்பாடுகளைவிட உறுதியான, வலுவான நெறிகளாக இருக்கின்றன. வழக்கடிப் பாடுகளை அமல்படுத்த எந்த அமைப்பும் கிடையாது. ஆனால் சட்டத்திற்கோ ஓர் உறுதியான அமைப்பு இருக்கிறது.

பொதுவாக நாட்டவர் வழக்குகளும், வழக்கடிப்பாடுகளும், சட்டங்களும் மக்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதியீடுகள் (Sanctions), அதாவது பரிசுகளும் தண்டனைகளும் துணை செய்கின்றன. அவை மீறப்படும்பொழுது, சமூகத்தின் ஒப்புதலின்மை, விமர்சனம், கண்டனம், நிந்தனை முதலிய தண்டனைகளும் கிடைக்கின்றன. சட்டங்களைப் பொறுத்த அளவில் சிறப்பாக அவற்றின் மீறல்களுக்கு இத்தகைய விதிமுறை சாராத தண்டனைகளின்றி, அபராதம், சிறைத் தண்டனை என்று நீதிமன்றம் வழங்கிடும் விதிமுறை சார்ந்த தண்டனைகளும் கிடைக்கின்றன.

விழுமியங்கள் (Values)

நெறிகள் விழுமியங்களிலிருந்து (Values) பிறந்தால் அவை மிக வலுவான சக்திகளாக அமைய முடியும். மக்கள் எவற்றைச் சமூக மேம்பாட்டுக்கு சமூக நன்மைக்கு உகந்தவை, முக்கிய மானவை என்று கருதி மதிப்பு அளிக்கிறார்களோ அவை விழுமியங்கள் எனப்படும். விழுமியங்களை மக்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ளுவார்கள். தங்களுடைய சமூக மேம்பாடும், சமூக நன்மையும் அவற்றோடுதான் பிணைந் திருக்கும் என்று கருதுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவற்றுக்குப் பெரிதும் மதிப்புக் கொடுத்து அவற்றைப் போற்றிப் பேணுவார்கள். அவற்றுடன் உணர்ச்சி பூர்வமான பிணைப்பு வைத்திருப்பார்கள். அவற்றுக்காகத் தங்களைப் பலியிடவும், போரிடவும், உயிர் துறக்கவும் துணிவார்கள்.

எடுத்துக்காட்டாக, கற்பு, தேசபக்தி, வாக்கு நாணயம் முதலியன விழுமியங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றை மக்கள் மிகவும் மதிப்போடு போற்றிப் பேணுகிறார்கள். உயிரைக் கொடுத்தாவது இவற்றைப் பேண வேண்டும் என்று உணர்ச்சி பூர்வமான துடிப்பு கொள்ளுகிறார்கள்.

இத்தகைய விழுமியங்களைத் தழுவி, நெறிகள் குறிப்பாக வழக்கடிப்பாடுகள் அமைகிறபொழுது அவை வலுவான சக்தி களாக மாறுகின்றன. கற்போடு வாழ்வது (பெண்கள்), தேசபக்தி வைத்திருப்பது, வாக்கு நாணயம் காப்பாற்றுவது முதலிய வழக்கடிபாடுகள் விழுமியங்களைத் தழுவி அமைந்திருப்பதால் மக்கள் இந்த விழுமியங்கள் காட்டுகிற மதிப்பு, மரியாதை உணர்வை வழக்கடிப்பாடுகளுக்கும் காட்டுகிறார்கள். அந்த நிலையில், அந்த வழக்கடிப்பாடுகள் அவர்களை மிக எளிதில் கட்டுப்படுத்தித் தங்கள் வசத்தின்கீழ் கொண்டுவருகின்றன.

3. ஆக்கப் பொருள்கள் (Materials)

மக்கள் பலவிதமான தொட்டு உணரக்கூடிய பொருள்களைச் செய்வதோடு பயன்படுத்துகிறார்கள்; அவை எந்த அளவில் இருந்தாலும் பண்பாட்டில் ஆக்கக் கூறுகளாகவே அமையும். குண்டூசியானாலும், கம்ப்யூட்டரானாலும், செங்கலானாலும், வானளாவிய கட்டடமானாலும், சிறிய பொம்மையானாலும், பெரிய போர்க் கப்பலானாலும் அவை எல்லாம் பண்பாட்டுக் கூறுகளே.

சில ஆக்கப் பொருள்கள் எல்லாச் சமூகங்களிலும் காணப் படும். ஊசி, ஊக்கு, கத்தி, கரண்டி, நூல், ஆடை முதலிய ஆக்கப் பொருள்கள் எல்லாச் சமூகங்களிலும் காணப்படும். சில ஆக்கக் கூறுகள் ஒரு சில சமூகங்களில்தான் இருக்கும். மற்ற சமூகங்களில் இருக்காது. அமெரிக்க, பிரிட்டிஷ் மக்களிடம் காணப்படுகிற கூடைப்பந்தையோ, எலெக்ட்ரானிக் கால்குலேட்டரையோ, டெலி விஷன் செட்டையோ, எஸ்கிமோக்களிடமோ, லாப் மக்களிடமோ காண முடியாது. அவ்வாறே எஸ்கிமோக்களிடமும், லாப் மக்க ளிடமும் காணப்படுகிற 'இக்கு' வீட்டையும், 'ஸ்லெட்ஜ்' வண்டி யையும் அமெரிக்க, பிரிட்டிஷ் மக்களிடம் காணமுடியாது.

சில ஆக்கப்பொருள்கள் பல சமூகங்களில் பொதுவாகக் காணப்பட்டாலும், அவற்றின் பயன்பாடு வேறுபட்டு விளங்கும். சில சமூகங்களில் பாசிமணிகள் பணமாகப் பயன்படுத்தப் படுகின்றன. மற்ற சமூகங்களில் அவை அலங்காரப் பொருள் களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

முடிவுரை: இவ்வாறு பண்பாடு, எண்ணங்கள், நெறிகள், ஆக்கப்பொருள்கள் இவற்றைத் தன்னுடைய ஆக்கக் கூறுகளாகக் கொண்டிருக்கிறது. இந்த ஆக்கக் கூறுகளில் ஒன்றை விட்டு விட்டாலும், பண்பாடு முழுமை பெறாது. இம்மூன்றும் ஒருங்கே அமைந்தால்தான் பண்பாடு முழுமை பெறும்.

பண்பாடு கீழ்க்கண்ட இயல்புகளைக் கொண்டிருக்கும்:

*(1)* பண்பாடு சமூகத்தில் ஒரு சிலரால் மட்டும் கண்டு பிடிக்கப்படுவதில்லை. இது சமூகத்தில் பெரும்பான்மையினரால் கடைபிடிக்கப்படுகிறது.

*(2)* அது சமூகத்தில் உள்ள அனைவர்களாலும் கடை பிடிக்கப்படாவிட்டாலும் (அதாவது ஒரு சிலர் கடைபிடிக்காம லிருந்தாலும்), அது எல்லோருக்கும் பொதுவானதாகவே அமைந் திருக்கும். சமூகத்தில் உள்ள யாவரும் கடைபிடிக்கக்கூடிய வண்ணம் அது அமைந்திருக்கும்.

*(3)* அது கற்கப்பட்டுக் கடைபிடிக்கப்படுகிறது. ஒருவன் தன்னுடைய பிறப்பிலேயே பண்பாட்டைப் பெற்றுக்கொண்டு வருவதில்லை. பிறந்து வளர்ந்து, கல்வி கற்கும் பருவம் வந்ததும் தன்னுடைய பண்பாட்டு ஆக்கக் கூறுகளைப் பெற்றோர், உடன் பிறந்தோர், நண்பர், ஆசிரியர், உறவினர் முதலானோரிடமிருந்து கற்றுப் பெற்றுக்கொள்ளுகிறான். பிறகு தன்னுடைய நண்பர்

களுக்கும், இளவல்களுக்கும், வாரிசுகளுக்கும் மற்றவர்களுக்கும் தான் கற்றறிந்ததைத் தருகிறான்.

(4) பண்பாடு தலைமுறை தலைமுறையாய் நிலவி வரும்; பெற்றோரிடமிருந்து பிள்ளைகள், பிறகு அவர்களிடமிருந்து அவர்களுடைய பிள்ளைகள் என்று தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்து வரும். ஒரு தலைமுறையினர் தங்களுக்கு முந்திய தலைமுறையினரிடம் கற்றவற்றைத் தங்களுக்குப் பின் வருகிற தலைமுறையினருக்குக் கற்றுத் தருவர். இப்படியே பண்பாடு கற்றல் மூலமாகத் தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்து வரும்.

(5) பண்பாடு நிலையாக இருப்பதில்லை. அது தொடர்ந்து மாறிக்கொண்டே வரும். கால மாறுதலுக்கேற்பப் பண்பாடும் மாறிக்கொண்டே வரும்.

(6) பண்பாடு ஒரு நிலையமைப்பைக் கொண்டிருக்கும் அதனுடைய மூலகங்கள் — கூறுகள் ஒரு நிலையான அமைப்பாக அமைந்திருக்கும்.

பண்பாட்டின் நிலையமைப்பு கீழ்க்கண்டவிதமாக இருக்கும்:

1. தனிக்கூறுகள் (Traits) : மிகச் சிறிய துணுக்காக அமைந்திருக்கும் ஓர் உருப்படியைத்தான் நாம் தனிக்கூறு என்கிறோம். அது கூறுபோட்டுப் பிரிக்க முடியாத அளவில் இருக்கும். கைக்குட்டை, ஊக்கு, வில், டயர், பென்சில், பந்து முதலிய பொருள்கள் தனிக் கூறுகளே. (மற்றவர்களை வரவேற்கும்பொழுது) கைகுலுக்குவது, பெரியவர்களைக் காணும்பொழுது எழுந்து நிற்பது, இடது புறமாக வண்டி ஓட்டுவது முதலிய செயல்களும் தனிக்கூறுகளே. இவற்றையெல்லாம் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது.

2. தொகுதிகள் (Complexes) : இயல்பான சம்பந்தமுடைய பல பண்பாட்டுத் தனிக்கூறுகள் ஒன்றாக இணையும்பொழுது தொகுதி தோன்றுகிறது. உதாரணமாகப் பல உறுப்புகள் இணைக்கப்பட்டு உருவாகும் ஒரு மோட்டார் கார் ஒரு தொகுதி, அவ்வாறே கிரிக்கெட் ஆட்டம் ஒரு தொகுதி. மட்டை, ஸ்டம்ப்ஸ், பந்து, கோடுகள், விளையாட்டுக் களம், விளையாட்டு விதிகள் முதலிய தனிக் கூறுகள் எல்லாம் சேர்ந்து கிரிக்கெட் ஆட்டத்தை உருவாக்குகின்றன. விருந்தினரை வரவேற்பதுவும் ஒரு தொகுதியே. புன்முறுவல், கரம் கூப்புதல், 'வணக்கம்' கூறுதல் முதலிய தனிக் கூறுகள் சேர்ந்து அதை உருவாக்குகின்றன.

3. கோலம் (Pattern) : பல பண்பாட்டுத் தொகுதிகள் ஒன்றாக இணையும்பொழுது கோலம் தோன்றுகிறது. பூமியைப் பற்றிய கோட்பாடுகளின் தொகுதியும், சூரியனைப் பற்றிய கோட்பாடுகளின் தொகுதியும் இணையும்போது வானவியல் பிறக்கிறது. அவ்வாறே பல வினைமுறைகள் (தொகுதிகள்) இணையும்பொழுது விழா பிறக்கிறது. (எ-டு.) பொங்கல் விழா.

ஒரு பண்பாடு சில தன்மைகளில் மற்ற எல்லாப் பண்பாடு களுடனும் ஒத்து இருக்கக் கூடும். அதாவது ஒருசில அம்சங்கள் எல்லாப் பண்பாடுகளிலுமே காணப்படக்கூடும். எல்லாப் பண் பாடுகளிலும் பொதுவாய்க் காணப்படும் அம்சங்களை 'உலகளாவிய பண்பாட்டு அம்சங்கள்' (Cultural universals) என்பார்கள்.

எடுத்துக்காட்டாக, உலகெங்கும் மொழியின்மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுகிறார்கள். உறவுமுறைச் சொற் களைப் பயன்படுத்தி உறவினர்களை அழைக்கிறார்கள். திருமணம் செய்துகொள்ளுகிறார்கள். கல்வி கற்கிறார்கள். ஆடுகிறார்கள். விளையாட்டுகள் நடத்துகிறார்கள். இப்படி எண்ணற்ற செயல்கள் எங்கும் பொதுமையாய்ப் பரவியிருக்கின்றன.

இவை அல்லாமல், தலைவாரிக் கொள்ளுதல், உடல் அலங்காரம் செய்துகொள்ளுதல், சுத்தமாக இருக்கச் சொல்லிக் கொடுத்தல், சமையல், ஒரு வேலையைப் பகுத்துப் பங்கிட்டுக் கொள்ளுதல், கூடி உழைத்தல், நாள் கணக்கு பார்த்தல், விருந்து ஏற்பாடு செய்தல், தீ மூட்டுதல், காலைக் கடன்களைக் கழிக்கும்பொழுது நயமாக நடந்துகொள்ளுதல், வீடு கட்டுதல், பெயர் சூட்டுதல், சாவுச் சடங்குகள் செய்தல், மருத்துவம் பார்த்துக்கொள்ளுதல் முதலிய எண்ணற்ற நிகழ்ச்சிகளும் உலக முழுவதும் பரவியிருக்கின்றன.

இப்படி ஒரு பண்பாடு மற்றெல்லாப் பண்பாடுகளுடனும் ஒருசில செயல்களில் ஒத்து இருக்கும்பொழுது, பிற பண்பாடு களுடன் அது மாறுபட்டு இருக்கவும் கூடும். அந்தப் பண்பாட்டின் சில அம்சங்கள் பிற பண்பாடுகளுக்கு மாறான வகையில் அமைந் திருக்கக் கூடும்.

ஒரு பண்பாட்டில் சரி என்று கருதப்படுகிற ஒரு செயல் இன்னொரு பண்பாட்டில் தவறு என்று கருதப்படலாம். ஒரு சமூகத்தில் கடவுள் நம்பிக்கை மிகவும் உயர்ந்ததாகக் கருதப் படுகிறது. இன்னொரு சமூகத்தில் (எ-டு. சோவியத் யூனியன்)

கடவுள் நம்பிக்கை அறியாமையின்பாற்பட்டது, பகுத்தறிவுக் கொவ்வாதது என்று கருதப்பட்டு விலக்கப்படக் கூடும்.

ஒரு சமூகத்தில் மிகவும் வற்புறுத்தப்படுகிற செயல் இன்னொரு சமூகத்தில் வற்புறுத்தப்படாமல் இருக்கக்கூடும். நம் சமூகத்தில் மகளிர் கற்பு மிகவும் வற்புறுத்தப்படுகிறது. ஆனால் ஒருசில சமூகங்களில் (எ-டு. மத்திய ஆஃப்ரிக்காவில் வாழும் பழங்குடிகள்) மகளிர் கற்பு வற்புறுத்தப்படுவதில்லை.

ஒரு சமூகத்தில் ஒரு காரியம் ஒரு வகையில் செய்யப் படும்போது, பிற சமூகங்களில் அது மாறுபட்ட வகையில் செய்யப்படலாம். சமூகங்களில் குழந்தை வளர்ப்பு தாயிடம் இருக்கிறது. தாய்தான் குழந்தையைப் பேணி வளர்க்கிறாள். சில சமூகங்களில் குழந்தை வளர்ப்பு தந்தையின் பொறுப்பாக இருக்கிறது. குழந்தை தந்தையின் பேணுதலில் வளர்கிறது. சில சமூகங்களில் வீட்டில் இருக்கும் முதியவர்களிடம் குழந்தை வளர்ப்பு ஒப்படைக்கப்படுகிறது.

இப்படி ஒரு பண்பாடு சில தன்மைகளில் பிற பண்பாடு களிலிருந்து மாறுபட்டு விளங்கினால் அதன் சில அம்சங்கள் பிற பண்பாடுகளிலிருந்து மாறுபட்டு அமைந்திருந்தால் அந்த நிலையைப் 'பண்பாட்டு உலைவு'(Cultural variability) என்பார்கள். அதாவது ஒரு பண்பாடு பிற பண்பாடுகளிலிருந்து மாறுபட்டு விளங்கும் நிலையைப் பண்பாட்டு உலைவு என்பார்கள்.

### அந்தஸ்து (Status)

அந்தஸ்து என்பது ஒருவன், அவன் வாழும் சமூகத்தில் பெற்றிருக்கிற நிலைமையை (Position) அல்லது படி நிலையைக் (Rank) குறிக்கும். ஒருவன் சமூகத்தில் எந்த நிலையில் இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது அந்தஸ்து.

ஒருவனுடைய அந்தஸ்து பல காரணிகளால் நிர்ணயிக்கப் படுகிறது. அவற்றில் முக்கியமானவை:

1. குடிப்பிறப்பு: ஒருவனுடைய அந்தஸ்து அவனுடைய குடிப்பிறப்பைப் பொறுத்து அமைகிறது. முன்னேறிய சமூகங் களில்கூட குடிப்பிறப்பின் அடிப்படையில் ஒருவனுடைய அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவனுடைய பிறப்பின் தன்மை, பெற்றோர்களின் பெருமை, அவனுடைய குடும்பத்தின் பழமை முதலியவற்றைப் பொறுத்து அவனுடைய அந்தஸ்து அமைகிறது. அவனுடைய பிறப்பு முறையாக இருந்தால் அவனுக்கு மதிப்பும்,

பிறப்பு முறைகேடானதாக இருந்தால் இழிவும் கிடைக்கின்றன. அவ்வாறே பெற்றோர்கள் பெருமையுடையவர்களாக இருந்தால், குடும்பத்தின் பழமை குறைபாடு அற்று விளங்கினால் மதிப்பும், மாறாக இருந்தால் இழிவும் ஏற்படுகின்றன.

மேலும் சாதி, இனம் ஆகியவற்றைப் பொறுத்தும் ஒருவனுடைய அந்தஸ்து அமைவதுண்டு. அவன் எந்தச் சாதியை, எந்த இனத்தைச் சேர்ந்தவன் என்பதைப் பொறுத்து அவனுடைய அந்தஸ்து அமைகிறது. சமூகத்தில் அவனுடைய சாதிக்கு அல்லது இனத்திற்கு எத்தகைய அந்தஸ்து இருக்கிறதோ, அது உயர்ந்த நிலையில் இருக்கிறதா, தாழ்ந்த நிலையில் இருக்கிறதா என்பதைப் பொறுத்து அவனுடைய அந்தஸ்து அமைகிறது.

2. செல்வம்: ஒருவனுடைய செல்வத்தின் அளவைக் கொண்டும், அதாவது எவ்வளவு சொத்துகள் வைத்திருக்கிறான் என்பதைப் பொறுத்தும் ஒருவனுடைய அந்தஸ்து அமைகிறது. செல்வந்தன் உயர் அந்தஸ்தும், செல்வமில்லாத ஏழை தாழ்ந்த அந்தஸ்தும் அடைவது சாதாரணமான நிகழ்ச்சிகளே.

3. செய்தொழில்: ஒருவனுடைய செய்தொழிலைப் பொறுத்தும் அவனுடைய அந்தஸ்து அமைகிறது. அவன் எத்தகைய செய்தொழிலைச் செய்கிறான் என்பது முக்கியமில்லை. அவனுடைய செய்தொழில் மக்கள் மதிப்பீட்டில் எத்தகைய இடம் பெற்றிருக்கிறது என்பதுதான் முக்கியம். அவனுடைய செய்தொழில் மக்களுடைய மதிப்பீட்டில் உயர்ந்த இடம் பெற்றிருந்தால் அவனுடைய அந்தஸ்து உயர்ந்திருக்கும். இல்லாவிடில் அது உயர்வாக இருக்காது. எடுத்துக்காட்டாக, ஆசிரியர்களை விட மருத்துவர்களே உயர் அந்தஸ்து பெறுகிறார்கள். இதற்குக் காரணம், மக்களுடைய மதிப்பீட்டில் ஆசிரியத் தொழிலைக் காட்டிலும், மருத்துவத் தொழிலுக்கே உயர்ந்த இடம் இருக்கிறது.

4. கல்வி: கல்வியும் அந்தஸ்தை நிர்ணயிக்கிற காரணியாக இருக்கிறது. சாதாரணமாக கற்றவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்தும், கல்லாதவர்களுக்குத் தாழ்ந்த அந்தஸ்தும் அமைகின்றன. ஆயினும், கற்றவர்களிடையேயும் அந்தஸ்து வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். அவர்கள் எந்த அளவு கற்றிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும், எத்தகைய கல்வி பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இந்த நிலைமை ஏற்படுகிறது. குறைவான கல்வித் தகுதிகள் உடையவர்களைக்

காட்டிலும் கல்வித் தகுதிகள் அதிகம் பெற்றிருப்பவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து அமைகிறது. கலையியல் (Humanities) துறையில் கல்வி பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழிலியல் (Professional) துறைகளில் கல்வி பெற்றிருப்பவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து அமைகிறது. ஆகவே வெறும் கல்வியினால் மட்டும் அந்தஸ்து அமைவதில்லை. கல்வியின் அளவு, தன்மை ஆகியவற்றைப் பொறுத்தும் அந்தஸ்து அமைகிறது என்பது தெளிவு.

5. சமயம்: சமயமும்கூட அந்தஸ்தை நிர்ணயிக்கிறது. ஒருவன் எந்தச் சமயத்தைச் சார்ந்திருக்கிறான், தன்னுடைய சமயத்தில் எந்த அளவுக்குப் பற்றும் பிடிப்பும் வைத்திருக்கிறான் என்பதைப் பொறுத்தும் ஒருவனுடைய அந்தஸ்து அமைகிறது. ஒரு சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட சமயம் பெரும்பான்மைச் சமயமாக இருந்து இன்னொரு சமயம் சிறுபான்மைச் சமயமாக இருந்தால் பெரும்பான்மைச் சமயத்துக்குரியவர்கள் உயர்ந்த நிலையிலும், சிறுபான்மைச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் தாழ்ந்த நிலையிலும் இருப்பார்கள். குறிப்பாக, சிறுபான்மைச் சமயம் பெரும்பான்மை யோரால் அருவருப்பாக நடத்தப்பட்டால், சிறுபான்மைச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் கீழ்த்தரமான நிலையில் இருப்பார்கள்.

ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரேவிதமான அந்தஸ்து அமைந்தபோதிலும், அவர்களிடையே அந்தஸ்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக்கூடும். சமயத்தில் ஆழ்ந்த பற்றும் பிடிப்பும் உடையவர்களுக்கு சமயத்தில் மேம்போக்கான தொடர்பு வைத் திருப்பவர்களைக் காட்டிலும் உயர்ந்த மதிப்பு இருக்கும். பொது வாக மிகுந்த பக்தி உடையவர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த மதிப்பு இருக்கும்.

6. உயிரியல் கூறுகள்: உயிரியல் கூறுகளும் அந்தஸ்தை நிர்ணயிக்கின்றன. பாலினத்தின் அடிப்படையிலும், வயதின் அடிப்படையிலும் அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது. பெரும் பாலான சமூகங்களில் ஆண்கள் உயர்ந்த நிலையிலும், பெண்கள் தாழ்ந்த நிலையிலும் இருக்கிறார்கள். வயதானவர்கள் இளைஞர் களைக் காட்டிலும் பெரும் மதிப்போடு வாழ்கிறார்கள்.

பாலினம், வயது மட்டுமல்லாமல், உடல் நிறம், உடல் அமைப்பு, அழகு முதலியவற்றின் அடிப்படையிலும் அந்தஸ்து நிர்ணயிக்கப்படுவதுண்டு.

இவ்வாறு அந்தஸ்து பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. எந்தவொரு சமூகத்திலும் அந்தஸ்து ஓரேயொரு காரணியால் நிர்ணயிக்கப்படுவதில்லை. பல காரணிகளால் நிர்ணயிக்கப் படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள காரணிகளை இரண்டு வகைகளில் அடக்கி விடலாம். ஒன்று ஒருவனுடைய கட்டுப்பாட்டுக்கு உட்படாத காரணிகள். எடுத்துக்காட்டாக, குடிப்பிறப்பு, பாலினம், வயது போன்ற உயிரியல் கூறுகள் ஒருவனுடைய கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகள். அவற்றை அவன் எதுவும் செய்ய முடியாது. இரண்டாவது, ஒருவனுடைய கட்டுப் பாட்டுக்கு உட்படுகிற காரணிகள். எடுத்துக்காட்டாக, செல்வம், தொழில், கல்வி, சமயச்சார்பு முதலியன ஒருவனுடைய கட்டுப் பாட்டுக்கு உட்பட்டவை. அவற்றை அவன் மாற்றியமைக்க முடியும்.

இப்படி அந்தஸ்துக் காரணிகள் இருவேறு வகைகளாக இருப்பதால், அந்தஸ்தும் இருவேறு வகைகளாக அமைகிறது. ஒன்று ஒருவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணி களால் அமைகிற அந்தஸ்து. இந்த அந்தஸ்தை சார்த்தப்படுகிற அந்தஸ்து (Ascribed status) என்பார்கள். இத்தகைய அந்தஸ்தை ஒருவன் தானாக, சுயமாகப் பெறுவதில்லை. அதுவாக அவன்மீது சார்த்தப்படுகிறது; திணிக்கப்படுகிறது. அவன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். இன்னொரு வகை, ஒருவனுடைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட காரணிகளால் அமைகிற அந்தஸ்து. இந்த அந்தஸ்தை "எய்தப் படுகிற அந்தஸ்து" (Achieved status) என்பார்கள். இத்தகைய அந்தஸ்தை ஒருவன் தானாக, தன்முயற்சியால் பெறுகிறான். அவன் அதை மாற்றியமைக்க இயலும். எடுத்துக்காட்டாக, குறைந்த செல்வம் அல்லது குறைந்த கல்வி உடையவன் அதை உயர்த்திக் காட்டினால், அவனுடைய அந்தஸ்து உயரும்.

## பங்கு (Role)

ஒவ்வோர் அந்தஸ்துக்கும் ஒரு செயல் இருக்கிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட அந்தஸ்தைப் பெற்றிருக்கும் ஒருவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது. அந்த எதிர்பார்ப்புக்கேற்ப அவன் நடந்துகொள்ளுகிறான். இப்படி, 'ஒருவன் தன் அந்தஸ்துக்கென்று எதிர்பார்க்கப்படுகிற நடத்தையைக் கடைபிடிப்பதுதான் பங்கு' எனப்படும்,

சிறு பிள்ளைகள் பெரியவர்களைக் காட்டிலும் தாழ்வான அந்தஸ்து உடையவர்கள். அவர்கள் பெரியவர்களுக்கு மரியாதை காட்ட வேண்டுமென்று ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது. அதற்கேற்ப அவர்கள் பெரியவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளுகிறார்கள். படை வீரர்கள் பொதுமக்களைவிட மேலான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த துணிவுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. அதற்கேற்ப அவர்கள் துணிவுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளுகிறார்கள்.

ஒரு சமூகத்தில் ஒருவனுக்கு ஒரேயோர் அந்தஸ்து மட்டும் அமைவதில்லை. பல்வேறு அந்தஸ்துகள் அமைகின்றன. ஒருவன் வீட்டில் கணவனாக இருக்கிறான். அலுவலகத்தில் கடைநிலைப் பணியாளனாக இருக்கிறான். தொழிற்சங்கத்தில் தலைவனாக இருக்கிறான். இப்படிப் பல்வேறு அந்தஸ்துகள் அவனுக்கு அமைகின்றன. இந்தப் பல்வேறு அந்தஸ்துகளுக்கேற்பப் பல்வேறு பங்குகளும் அமைகின்றன. கணவன் என்ற நிலையில் அவன் வீட்டுக்குச் சம்பாதித்துப் போடுகிறான். அலுவலகத்தில் கடைநிலைப் பணியாளன் என்ற முறையில் அதிகாரிகளின் உத்தரவுகளுக்குக்கேற்பப் பணியாற்றுகிறான். தொழிற்சங்கத் தலைவன் என்ற முறையில் தொழிற்சங்க உறுப்பினர்களின் நலன்களைக் காக்கப் போராடுகிறான்.

### சமூக அடுக்கமைப்பு (Social stratification)

ஒரு சமூகம் அந்தஸ்து அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அப்பிரிவுகள் ஓர் ஒழுங்கான வரிசை நிலையில் அமைந்தால், அந்த அமைப்புமுறைக்குச் 'சமூக அடுக்கமைப்பு' என்று பெயர்.

பொதுவாக, ஒவ்வொரு சமூகத்திலும் அந்தஸ்து காணப்படும் என்று பார்த்தோம். ஒரு குறிப்பிட்ட அந்தஸ்து உடையவர்கள் ஓர் அலகாக அமைவார்கள். இப்படிப் பல்வேறு அந்தஸ்துகள் உடையவர்கள் தனித்தனியான அலகுகளாக அமைவார்கள். சமூகம் இவ்வாறு அந்தஸ்து அடிப்படையில் பல அலகுகளாகப் பிரிந்து நிற்கும். இந்த அலகுகள் ஒரு வரிசைக்கிரமமான நிலையில் அடுக்கப்பட்டால் அந்த அமைப்பு முறைக்குச் சமூக அடுக்கமைப்பு முறை என்று பெயர். மேலான அந்தஸ்து உடையவர்களின் அலகு மேல் நிலையிலும், அதற்கடுத்த அந்தஸ்தில் இருப்பவர்களின் அலகு அடுத்தபடியாகவும் இப்படி வரிசையாக

அமைந்து கடைசியில் மிகக் கீழான அந்தஸ்தில் இருப்பவர்களின் அலகு கடைசி நிலையிலும் அமையும். இப்படி ஒரு படிக்கட்டுப் போலச் சமூகம் அந்தஸ்து அடிப்படையில் அமைந்திருக்கும்.

எனவே, சமூக அடுக்கமைப்பு என்பது அந்தஸ்தைச் சார்ந்து அமைகிறது. அந்தஸ்து இருவகைப்படும் என்று பார்த்தோம். ஒன்று எய்தப்படுகிற அந்தஸ்து. இன்னொன்று சார்த்தப்படுகிற அந்தஸ்து. இந்த இரு வகைகளுக்கேற்பச் சமூக அடுக்கமைப்பையும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அதாவது எய்தப்படுகிற அந்தஸ்தை உடைய சமூக அடுக்கமைப்பு என்றும், சார்த்தப் படுகிற அந்தஸ்தை உடைய சமூக அடுக்கமைப்பு என்றும் பிரிக்கலாம்.

### எய்தப்படுகிற அந்தஸ்தை உடைய சமூக அடுக்கமைப்பு

எய்தப்படுகிற அந்தஸ்து ஒருவனுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணிகளால் அமைகிறது. எனவே அவன் அதை மாற்றியமைக்க இயலும். ஓர் அந்தஸ்து நிலையிலிருந்து பிரிதோர் அந்தஸ்து நிலைக்கு மாறமுடியும். அதாவது மேலான அந்தஸ்து நிலையிலிருந்து கீழான அந்தஸ்து நிலைக்கும், கீழான அந்தஸ்து நிலையிலிருந்து மேலான அந்தஸ்து நிலைக்கும் போகமுடியும். ஓர் அந்தஸ்து நிலையிலிருந்து மற்றோர் அந்தஸ்து நிலைக்குப் போகக்கூடிய நிகழ்வை இயக்கம் (Mobility) என்று பெயர். இப்படிப்பட்ட அந்தஸ்து முறையில் ஓர் அடுக்கமைப்பு முறையைக் கொண்டிருக்கும் அமைப்பு முறைக்குத் திறந்த அமைப்பு முறை (Open System) என்று பெயர்.

திறந்த அமைப்பு முறைக்கு வர்க்க அமைப்பு முறை (Class System) ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பொருளாதார நிலையின் (வருமானமும் செல்வமும்) அடிப்படையில் அந்தஸ்து அமைந்து, மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து நின்றால் அப்பிரிவு களுக்கு வர்க்கங்கள் (அ) வகுப்புகள் (Classes) என்று பெயர். பொதுவாக, வர்க்கங்கள் ஏழை, பணக்காரர் என்று இரண்டாக அமையும். சில வேளைகளில் அவை 'கீழ்த்தர வர்க்கம், நடுத்தர வர்க்கம், உயர்தர வர்க்கம்' என்று மூன்றாகவும் அமைவதுண்டு. மற்றும், 'கீழ்த்தர வர்க்கம், உழைக்கும் வர்க்கம், நடுத்தர வர்க்கம், உயர்தர வர்க்கம்' என்று நான்காகவோ; 'கீழ்-கீழ்த்தர வர்க்கம், உயர்-கீழ்த்தர வர்க்கம், கீழ்-நடுத்தர வர்க்கம், உயர்-நடுத்தர வர்க்கம், கீழ்-உயர்தர வர்க்கம், உயர்-உயர்தர வர்க்கம்' என்று ஆறாகவோ அமைவதுண்டு,

வர்க்க அமைப்பு முறையில் இயக்கத்திற்கு (Mobility) வாய்ப்புண்டு. ஒரு வர்க்கத்திலிருந்து இன்னொரு வர்க்கத்திற்குச் செல்ல முடியும். வர்க்கங்கள் பொதுவாகப் பொருளாதார நிலையின் அடிப்படையில் அமைவதால், பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்படும்பொழுது; ஒருவன் இருக்கிற வர்க்கத்திலிருந்து இன்னொரு வர்க்கத்திற்குப் போகமுடியும். எடுத்துக்காட்டாக, ஓர் ஏழை பொருளாதார மேம்பாடு அடையும் பொழுது அவன் கீழ்த்தர வர்க்கத்திலிருந்து, நடுத்தர வர்க்கத்திற்கோ உயர்தர வர்க்கத்திற்கோ செல்லுகிறான்.

வர்க்க அமைப்பு முறையில் ஒரு வர்க்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட பொருளாதார நிலை மட்டுமில்லாமல், அந்த நிலைக்கு ஒத்த வாழ்க்கை வழியும் அமைகிறது. அந்த வர்க்கத்திற்கென்று ஒரு வீட்டு அமைப்பும், வசிக்கும் இடமும், கல்வி நிலையும், பொழுதுபோக்கு முறையும், பல நடவடிக்கைகளும் அமைகின்றன. ஒருவனுடைய பொருளாதார நிலையின் மாற்றம் காரணமாக வர்க்கச் சார்பு மாறும்பொழுது, இத்தகைய நிலைமைகளும் மாற்றமடைகின்றன.

சார்த்தப்படுகிற அந்தஸ்தை உடைய அமைப்பு முறை

சார்த்தப்படுகிற அந்தஸ்து ஒருவனுடைய கட்டுப்பாட்டுக்கு உட்படாத காரணிகளால் அமைகிறது. ஆகவே அவன் அதை மாற்றியமைக்க இயலாது. ஓர் அந்தஸ்து நிலையிலிருந்து மற்றோர் நிலைக்கு மாற முடியாது. எந்த அந்தஸ்து நிலையில் இருக்கிறாரோ அதே அந்தஸ்து நிலையில்தான் அவர் கடைசி வரையிலும் இருக்க முடியும். அப்படிப்பட்ட நிர்ணயமான அந்தஸ்து முறையில், ஓர் அடுக்கமைப்பு முறையைக் கொண்டிருக்கும் முறைக்கு மூடப்பட்ட அமைப்பு முறை (Closed System) என்று பெயர்.

மூடப்பட்ட அமைப்பு முறைக்குச் சாதி அமைப்பு முறை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சாதி அமைப்பு முறையில் சமூகம் பல சாதிகளாகப் பிரிந்து நிற்கும். சில சாதிகள் மேலான அந்தஸ்தைப் பெற்று 'மேல் சாதிகள்' என்ற பெயரில் மேல்தட்டில் இருக்கும். பிற சாதிகள் கீழான அந்தஸ்து பெற்று 'கீழ்ச்சாதிகள்' என்ற பெயரில் கீழ்த்தட்டில் இருக்கும். சாதிகளின் அந்தஸ்துகள் மாறாதவை. அவை என்றும் மாறாமலேயே இருக்கும்.

சாதி அமைப்பு முறையில் ஒருவனுடைய அந்தஸ்து அவன் சேர்ந்துள்ள சாதியின் அந்தஸ்தைப் பொறுத்தே அமையும்.

ஒரு கீழ்ச்சாதியில் பிறந்தவனுடைய அந்தஸ்து கீழானதாகவே இருக்கும். அந்த அந்தஸ்து அவனுக்கு எந்த நிலையிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் மாறாமல் தொடர்ந்து இருக்கும். அவன் அதை மாற்ற இயலாது. ஒருவன் மேல்சாதியில் சேர்ந்து அந்தச் சாதியின் அந்தஸ்தைப் பெற்றுத் தன்னுடைய கீழான அந்தஸ்தை விட்டு விடலாமா என்றால் அதற்கு வாய்ப்பே கிடையாது. அவன் எந்தச் சாதியில் பிறந்தானோ அதே சாதியில்தான் கடைசிவரை இருக்கமுடியும். ஒரு சாதியிலிருந்து பிரிதோர் சாதிக்குப் போக முடியாது. இதே போன்ற நிலைமைதான் மற்ற சாதிக்காரர்களுக்கும்.

ஆக, சாதி அமைப்பு முறையில் ஒருவன் எந்தச் சாதியில் பிறந்தானோ அதில்தான் கடைசி வரை இருக்க வேண்டும். வேறொரு சாதிக்குப் போக முடியாது. தன்னுடைய சாதிக்கு எத்தகைய அந்தஸ்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அத்தகைய அந்தஸ்தைத்தான் அவன் அடைய முடியும். அதை அவன் மாற்ற இயலாது. அந்த அந்தஸ்து நிலையிலிருந்து வேரோர் அந்தஸ்து நிலைக்குப் போக முடியாது. இப்படி இயக்கம் தடைப்பட்டிருப்பதால்தான் சாதி அமைப்பு முறை மூடப்பட்ட அமைப்பு முறை எனப்படுகிறது.

சாதி அமைப்பு முறையில் பொதுவாக ஒவ்வொரு சாதிக்கும் ஒரு செய்தொழில் அமைவதுண்டு. ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் பொதுவாகத் தங்கள் சாதிக்குரிய குலத்தொழிலைப் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருவார்கள். அவ்வாறே ஒவ்வொரு சாதிக்கும் சில உணவுப் பழக்கங்களும் சடங்கு வினைமுறைகளும் அமைவதுண்டு. சாதி உறுப்பினர்கள் அவற்றைக் கடைபிடிப் பார்கள். மேலும் ஒவ்வொரு சாதியும் ஒரு குறிப்பிட்ட மூதாதையைக் கொண்டிருக்கும். இதற்கு மேலாக, சாதி அமைப்பு முறையில் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தவன் அந்தச் சாதியில்தான் மணமுடிக்க வேண்டும் என்ற கட்டாயம் உண்டு. ஆகவே ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சாதிக் குள்ளேயே மணமுடித்துக் கொள்ளுகிறார்கள்.

### குழுக்கள் (Groups)

குழு என்பது 'பரஸ்பரச் செய்தித் தொடர்பு கொள்ளும் மனிதர்களைக் குறிக்கும்' என்று ஜான் ஸ்யூபர் (John Cuber) என்பவர் கூறுகிறார். ஒரு குழுவிற்கு அடிப்படை பரஸ்பர செய்தித் தொடர்பே ஆகும். உடலளவில் இருக்கக்கூடிய

அணிமையோ நெருக்கமோ மட்டும் ஒரு குழுவை ஏற்படுத்தாது. அத்தகைய அணிமை கொண்டவர்களிடையே பரஸ்பரச் செய்தித் தொடர்பு இருந்தால்தான் குழு அமையும்.

ஒரு குழுவில் உள்ளவர்களிடையே இருக்கும் செய்தித் தொடர்பு நேரிடையாக, முகத்துக்கு முகமாகவோ, பேச்சு மூல மாகவோ இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. சாடை மூல மாகவோ கடிதம் மூலமாகவோ இருக்கலாம். ஒரு குழுவில் உள்ளவர்களுக்கிடையே நேரிடையான தொடர்பு இல்லாமல் இருந்தாலுங்கூட, அவர்கள் மறைமுகமான செய்தித் தொடர்பின் வாயிலாக 'நாமெல்லோரும் ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள்' என்று இயல்பாகத் தெரிந்து வைத்திருப்பார்கள்.

ஒரு குழுவிற்கு என்று குறிப்பிட்ட, வரையறுத்த அளவு கிடையாது. ஒரு குழுவில் இருவர் மட்டுமே இருக்கக்கூடும் அல்லது நூற்றுக் கணக்கானவர் இருக்கக்கூடும்.

ஒரு குழுவிற்கு என்று சில பொதுவான நெறிகளும் விதிகளும் இருக்கும். இவற்றை அனைவரும் ஏற்றுக்கொண்டு அவற்றிற் கேற்ப முறையோடு நடந்து கொள்ளுவார்கள். அது மட்டு மில்லாமல் அவர்களுக்குப் பொதுவான பற்றுகளும் நடவடிக்கை களும் இருக்கும்.

குழுக்கள் பல வகையில் வகைபாடு செய்யப்படுகின்றன. அவற்றில் முக்கியமான வகைபாடுகள், சி. எச். கூலீயும் (C.H. Cooley), சம்னரும் செய்துள்ள வகைபாடுகளே. சி. எச். கூலி குழுக்களை முதல் நிலைக் குழுக்கள் (Primary groups), வழி நிலைக் குழுக்கள் (Secondary Groups) என்று பிரித்துக் காட்டு கிறார். முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராக, நெருக்கமாக, ஆழமாக, உணர்ச்சிபூர்வமாக, நிலையாக இருக்கும். (எ-டு.) குடும்பம், நண்பர்குழாம், சிறு பிள்ளைகளுடைய விளையாட்டுக் குழு முதலியன. இரண்டாம் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராக இருக்கக்கூடும். ஆயினும் அவை நெருக்கமாக, ஆழமாக, உணர்ச்சிபூர்வமாக இருக்காது. மேம் போக்காக, நிலையற்றவையாக இருக்கும். (எ-டு.) அரசியல் கட்சி, பொழுதுபோக்கு மன்றம் முதலியன.

சம்னர் குழுக்களை அகக் குழுக்கள் (In-groups), புறக்குழுக் கள் (Out-groups) என்று பிரிக்கிறார். நம்முடைய குழுக்கள் என்று நாம் சொந்தம் கொண்டாடுகிற—நாம் சேர்ந்திருக்கிற குழுக்கள்

அகக்குழுக்கள் எனப்படும். நமக்குச் சம்பந்தப்படாத, அந்நிய மான, நாம் சேராத குழுக்கள் புறக் குழுக்கள் எனப்படும்.

குழுக்கள் பெரிய குழுக்கள், சிறிய குழுக்கள் என்றும்; பெரும் பான்மைக் குழுக்கள், சிறுபான்மைக் குழுக்கள் என்றும்; கிடை நிலைக் குழுக்கள் (ஒரேவிதமான அந்தஸ்து உடையவர்களைக் கொண்டவை), நெடுநிலைக் குழுக்கள் (பலவிதமான அந்தஸ்து கள் உடையவர்களைக் கொண்டவை) என்றும்; திறந்த வெளிக் குழுக்கள் (யார் வேண்டுமானாலும் சேரக்கூடிய குழுக்கள்); மூடப்பட்ட குழுக்கள் (குறிப்பிட்ட சிலரே சேரக்கூடிய குழுக்கள்) என்றும்; விருப்பத் தேர்வுக்குட்பட்ட குழுக்கள், விருப்பத் தேர்வுக்குட்படாத குழுக்கள் என்றும்; நிரந்தரமான குழுக்கள், தற்காலிகமான குழுக்கள் என்றும்; சுதந்திரமாக இயங்கும் குழுக்கள், பிறவற்றைச் சார்ந்து இயங்கும் குழுக்கள் என்றும் வகைப்படுத்துவதுண்டு.

## நிறுவனங்கள் (Institutions)

'நிறுவனம் என்றால் ஒரு செயலைச் சுற்றி அமையும் நாட்டவர் வழக்குகள், வழக்கடிப்பாடுகள், சட்டங்கள் ஆகிய வற்றின் தொகுதி' என்று சூதர்லாண்ட், வுட்வார்ட், மாக்ஸ்வெல் ஆகியோர் கூறுகிறார்கள். அதாவது நிறுவனம் என்பது ஒரு செயலைச் சுற்றி அடையும் நெறிகளின் தொகுதி என்று கூறுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, கல்வி கற்பது என்பது சமூகத்தில் நடை பெறுகிற ஒரு செயல். இச்செயல் சம்பந்தமாகப் பல நாட்டவர் வழக்குகளும், வழக்கடிப்பாடுகளும், சட்டங்களும் அமைந்திருக் கின்றன. கல்வி நிலையம் சென்று கற்பது, ஆசிரியர்களிடம் மரியாதை காட்டுவது, ஒழுங்காக உடை அணிந்து செல்வது, விரிவுரைகளைக் கவனிப்பது, குறிப்புகள் எடுப்பது என்று பல நாட்டவர் வழக்குகள் அமைந்திருக்கின்றன. இவையல்லாமல், கட்டணம், பாடத் திட்டம், தேர்வுகள் என்ற வழக்கடிப்பாடு களும் அமைந்திருக்கின்றன. தேர்வுக்கூடத்தில் ஆள்மாறாட்டம் போன்ற சட்ட விரோதமான செயல்களைச் செய்யக்கூடாது, கல்வி நிலையங்களில் கலவரத்தில் ஈடுபடக்கூடாது என்ற அளவிலும், இன்னார்தான் அரசினரின் கல்வி உபகாரச் சம்பளங்கள் பெறத் தகுதியுடையவர் என்ற அளவிலும் பல சட்ட நியதிகளும்கூட அமைந்திருக்கின்றன. இப்படிக் கல்வி கற்பது சம்பந்தமாக அமைந்திருக்கிற நாட்டவர் வழக்குகளையும் வழக்

கடிப்பாடுகளையும், சட்டங்களையும் ஒருசேர நிறுவனம் என்கிறோம். இந்த நிறுவனத்திற்குக் கல்வி நிறுவனம் (சுருக்கமாக, கல்வி) என்று பெயர்.

ஆக, ஒரு தேவையை நிறைவேற்றுவதற்காக நாம் ஒரு காரியம் செய்யவேண்டியிருக்கிறது. அந்தக் காரியத்தை எப்படிச் செய்வது என்ற வழியைக் காட்டுகிறது நிறுவனம். எடுத்துக்காட்டாக, அறிவுத் தேவையை நிறைவேற்ற நாம் கற்க முனைகிறோம். இந்தக் 'கற்றல்' என்ற காரியத்தை எப்படிச் செய்வது என்பதைத் தான் கல்வி நிறுவனம் காட்டுகிறது. ஆகவேதான் ராபர்ட் பியர்ஸ்டெட் நிறுவனம் என்பது 'ஒரு காரியத்தைச் செய்யும் நிலையமைப்புடைய வழி' என்று குறிப்பிடுகிறார்.

சமூகத்தில் எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் முக்கியத்துவம் உடைய காரியங்களுக்கு மட்டுமே நெறிகள் அமைந்திருக்கும். அந்த வகையில் அடிப்படைத் தேவை களை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் காரியங்களே முக்கியத்துவம்பெற்று அவற்றிற்கு நிறுவனங்கள் அமைந்திருக்கும். இல்வாழ்க்கை, கல்வி, உற்பத்தி, ஆட்சி, வழிபாடு, பொழுது போக்கு முதலிய காரியங்கள் முக்கியத்துவமானவை. அவை சம்பந்தப்பட்ட குடும்ப நிறுவனம், கல்வி நிறுவனம், பொருளாதார நிறுவனம், அரசியல் நிறுவனம், சமய நிறுவனம், பொழுதுபோக்கு நிறுவனம் ஆகியன அமைந்திருக்கின்றன. இப்படி முக்கியமான காரியங்களுக்காக அமைகிற நிறுவனங்களை முக்கியத்துவம் மிக்க நிறுவனங்கள் (Major institutions) என்று அழைக்கிறார்கள்.

மேற்கண்ட ஒவ்வொரு முக்கியமான காரியத்தோடும் சில காரியங்கள் துணை போகும். எடுத்துக்காட்டாக, கல்வி கற்றலோடு பட்டம் பெறுவது துணைபோகும். அவ்வாறே உற்பத்தியோடு கடனுதவி பெறுதல் துணைபோகும். இப்படி முக்கிய காரியங்களோடு துணையாய்ப் போகிற காரியங்களுக் கென்றும் நிறுவனங்கள் அமைந்திருக்கும். அவற்றைத் துணை சார்ந்த நிறுவனங்கள் (Subsidiary institutions) என்று அழைக் கிறார்கள். அவை பெரும்படியான நிறுவனங்களில் உள்ளடங்கி யிருக்கும். எடுத்துக்காட்டாக, கல்வி நிறுவனத்தில் பட்ட மளிப்பும், பொருளாதார நிறுவனத்தில் கடனுதவியும் துணை சார்ந்த நிறுவனங்களாக இருக்கின்றன.

நிலையங்கள் (Associations)

நிலையம் என்பது சில பொதுவான பற்றுகளை நிறைவேற்று வதற்காகச் சிலரோ பலரோ சேர்ந்து அமைக்கும் குழுவாகும். அமைக்கப்படுவதால் நிலையத்திற்கு ஒரு முறையான நிலை யமைப்பு இருக்கும். (எ-டு.) தொழிற்சங்கம், பள்ளிக்கூடம், பொழுதுபோக்கு மன்றம்.

ஒரு நிலையத்திற்கென்று கீழ்க்கண்ட இயல்புகள் இருக்கும்:

1. ஒரு குறிப்பிட்ட செயல் : ஒரு நிலையம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக அல்லது ஒருசில நோக்கங்களுக்காக அமைக்கப் படுவதால், அது அந்த நோக்கத்தை அடைவதற்காகச் செயல்படும். எடுத்துக்காட்டாக, கலப்படத்தை முறியடிப்பதற்காக அமைக்கப் படும் 'நுகர்வோர் பாதுகாப்புக் குழு' கலப்படம் ஏற்படுவதைத் தடுக்கப் பாடுபடும்.

2. நெறிகள் : ஒவ்வொரு நிலையமும் சில விதிமுறைகளைக் கொண்டிருக்கும். அதன் உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அந்த விதிமுறைகள் வகுத்துத் தரும். எடுத்துக் காட்டாக, ஓர் அலுவலகத்தில் பல விதிமுறைகள் இருக்கும். அதிகாரிகளும் அலுவலர்களும் எப்படி நடந்துகொள்ளவேண்டும், செயலாற்ற வேண்டும் என்பதை அவ்விதிமுறைகள் நிர்ணயிக்கும்.

3. அந்தஸ்துகள் : ஒவ்வொரு நிலையத்திலும் அந்தஸ்துகள் இருக்கும். எடுத்துக்காட்டாக, ஓர் அலுவலகத்தில் பல பதவிகள் (பொது மேலாளர், மேலாளர், கண்காணிப்பாளர், மேற்பார்வை யாளர், ஊழியர் என்று) இருக்கும். ஒவ்வொரு பதவிக்கும் ஓர் அந்தஸ்து அமைந்திருக்கும். முதலில் பொது மேலாளர், பிறகு மேலாளர், பின்பு கண்காணிப்பாளர், பிறகு மேற்பார்வையாளர் என்று வரிசை முறையில் அந்த அந்தஸ்துமுறை வரும்.

4. அதிகாரம் : ஒரு நிலையத்தில் ஒவ்வொரு பதவிக்கென்று ஓர் அதிகாரம் அமைந்திருக்கும். உதாரணமாக, ஓர் அலுவல கத்தில் பொது மேலாளருக்கு எல்லோருக்கும் ஆணைகள் பிறப் பிக்க அதிகாரம் உண்டு. மேலாளருக்குத் தன்னுடைய பிரிவின் கீழ் இருப்போருக்கு ஆணையிட அதிகாரங்கள் உண்டு. கண்காணிப் பாளர், மேற்பார்வையாளர் என்று பல்வேறு பதவிகளில் இருப் போர்க்கும் அவரவர்களுக்கென்று தனி அதிகாரங்கள் உண்டு.

5. உறுப்பினராவதற்கான சோதனைகள்: நிலையங்கள் திறந்த சத்திரங்களாக இருப்பதில்லை. சேர வருகிறவர்களைச் சில விதி

முறைகளுக்கு உட்படுத்திச் சேர்த்துக் கொள்ளுகின்றன. உறுதி மொழி எடுக்கச் சொல்லியோ, உறுப்பினர் விண்ணப்பத்தாள் களைக் கொடுத்துப் பூர்த்திசெய்து தரச் சொல்லியோ, சில தீக்கைச் சடங்குகளைச் (Initiation rites) செய்தோ அவர்களை உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளுகின்றன. உறுப்பினராக நீடிக்கக் கட்டணம் தரவேண்டும் என்று வற்புறுத்துகின்றன. (எ-டு.) ரோட்டரி கிளப், தொழிற் சங்கம்.

6. சொத்து: பொதுவாக நிலையங்கள் தங்களுக்கென்று சொத்துகள் வைத்திருக்கும். அவற்றைப் பணமாகவோ கட்ட டங்கள் போன்ற உடைமைகளாகவோ வைத்துக்கொண்டிருக்கும்.

7. பெயரும் சின்னங்களும்: ஒவ்வொரு நிலையமும் ஒரு பெயரைக் கொண்டே அமையும். சில வேளைகளில் தனக்கென்று அடையாளவில்லையும் கொடி போன்ற சின்னங்களைக் கொண்டி ருக்கும் இவை அதைத் தனியாக அடையாளங்காட்டி நிற்கும்.

நிறுவனங்களுக்கு நிலையங்கள் துணையாய் அமைகின்றன. நிறுவனங்கள் குறிப்பிட்ட காரியங்கள் சம்பந்தமாய் அமைபவை. அந்தக் காரியங்கள் நடைபெற நிலையங்கள் தேவை. எடுத்துக் காட்டாக, கல்வி நிறுவனம் கல்வி கற்றலோடு சம்பந்தப்பட்டிருக் கிறது. ஆனால் கல்வி கற்றல் நடைபெற—ஒருவன் கல்வி கற்க ஒரு நிலையம்—இடம் தேவை. அதுதான் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி. அவ்வாறே உற்பத்தி சம்பந்தப்பட்ட பொருளாதார நிறுவனத்திற்குத் தொழிற்சாலை தேவைப்படுகிறது. உற்பத்தி நடைபெற ஓர் இடம் தேவை. அந்த இடம்தான் தொழிற்சாலை. இப்படி நிறுவனங்கள் எல்லாம் தமக்கென்று சில நிலையங்களைக் கொண்டு அவற்றின் துணையுடன் இயங்குகின்றன.

நிறுவனமும் நிலையமும் வெவ்வேறானவை. இதை அவற் றிடையேயுள்ள வேறுபாடுகளைக் கொண்டு எளிதில் புரிந்து கொள்ளலாம்.

(1) நிறுவனம் நெறிகளை உட்கொண்டிருக்கிற ஒரு தொகுதி. நிலையமோ மனிதர்களை உட்கொண்டிருக்கிற ஒரு குழு.

(2) ஒருவன் 'நான் இந்த நிலையத்தைச் சேர்ந்தவன்' என்று சொல்லிக்கொண்டு அதை அடையாளங் காட்ட முடியும். ஆனால் அவன் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவனாக இருக்கமுடியாது. ஏனெனில் அவன் 'நான் இந்த நெறிகளைச் சேர்ந்தவன்' என்று சொல்லிக்கொள்ள முடியாது. 'இன்ன காரியம் சம்பந்தமாக

அதற்குரிய இன்னின்ன நெறிகளைக் கடைப்பிடிக்கிறேன்' என்று தான் சொல்ல முடியும்.

(3) நிலையம் ஓர் இடத்தில் அமைந்திருக்கும். ஆனால் நிறுவனத்திற்கு இடம் என்று எதுவும் கிடையாது. 'இந்த நெறிகள் இங்கே இருக்கின்றன' என்று ஓர் இருப்பிடத்தை நிறுவனத்துக்குக் காட்ட முடியாது.

## சமூக அமைப்பு (Social structure)

உடம்பில் உள்ள உறுப்புகள் எப்படி ஒன்றோடொன்று உறவுடைய நிலையில் ஓர் ஒழுங்கு முறையோடு அமைந்திருக்கின்றனவோ, அவ்வாறே சமூகத்திலும் அதனுடைய பல்வேறு ஆக்கக் கூறுகள் ஒன்றோடொன்று உறவு கொண்டுள்ள நிலையில் ஓர் ஒழுங்கான முறையில் அமைந்திருக்கின்றன. இத்தகைய அமைப்பைச் சமூக அமைப்பு என்பர்.

சமூகத்தில் உள்ள பல்வேறு நிறுவனங்கள், நிலையங்கள், குழுக்கள் முதலிய யாவும் ஒன்றோடொன்று உறவு கொண்டு அமைந்திருக்கும். எடுத்துக்காட்டாக, திருமண நிறுவனமும் குடும்ப நிறுவனமும் உறவு கொண்டிருக்கும். குடும்ப நிறுவனமும் அரசியல் நிறுவனமும் உறவு கொண்டிருக்கும். அரசியல் நிறுவனமும் சமய நிறுவனமும் உறவு கொண்டிருக்கும். இவ்வாறே நிலையங்களும் குழுக்களும் தம்முள் உறவு கொண்டு ஓர் ஒழுங்கு முறையோடு அமைந்திருக்கும்.

சமூகத்தின் ஒவ்வோர் ஆக்கக் கூறும் ஒரு பணியைச் செய்யும். இந்தப் பணியைச் செயல் (Function) என்று குறிப்பிடுவார்கள். பரஸ்பர உறவுடன் சமூகத்தின் ஆக்கக் கூறுகள் ஓர் ஒழுங்கு முறையோடு அமைந்திருக்கும்போது ஒவ்வோர் ஆக்கக் கூறும் ஒரு குறிப்பிட்ட செயலை அல்லது செயல்களைச் செய்யும். ஒன்றின் செயல் இன்னொன்றுடன் ஒத்து அல்லது இணைந்து இருக்கும்.

சமூகக் கூறுகளின் உறவிலும் செயல்களிலும் தொடர்ச்சியாக குறிப்பிட்ட கோலங்களையுடைய மாற்றங்கள் ஏற்பட்டால் அவற்றைச் செயற்பாங்குகள் (Processes) என்பர். சமூகக் கூறுகளுக் கிடையே கூட்டுறவோ, போட்டியோ, பூசலோ ஏற்படலாம். பிறகு அவை தம்முள் இசைந்து போகலாம் அல்லது ஒன்றுபட்டுப் போகலாம். அவை அமைந்திருக்கிற விதத்தில் அல்லது ஆற்றும் செயல்களில் மாற்றங்கள் ஏற்படலாம். இவையெல்லாம் சமூகம் இயங்கும் செயற்பாங்கை எடுத்துக்காட்டுகின்றன.

சமூக அமைப்பைப் பார்த்து சமூகம் அமைந்திருக்கிற ஒழுங்கை நாம் காணலாம். சமூகச் செயற்பாங்குகளைப் பார்த்து சமூகம் இயங்குகிற விதத்தை நாம் உணரலாம்.

## வினாக்கள்

1. சமூகம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்துக.
2. சமூகத்தின் சிறப்பியல்புகள் யாவை?
3. சமுதாயம் என்றால் என்ன? அதனுடைய அடிப்படைகள் யாவை?
4. சமூகத்திற்கும், சமுதாயத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன?
5. பண்பாடு பற்றிச் சமூகவியலாளர்கள் தரும் விளக்கம் என்ன?
6. பண்பாட்டின் ஆக்கக் கூறுகளைப் பற்றிச் சுருக்கமாக விவரிக்கவும்.
7. நெறிகள் என்றால் என்ன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
8. நாட்டவர் வழக்குகள் என்றால் என்ன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
9. வழக்கடிப்பாடுகள் என்றால் என்ன என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.
10. நாட்டவர் வழக்குகளுக்கும் வழக்கடிப்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடு யாது?
11. விழுமியங்கள் என்றால் என்ன? விழுமியங்களுக்கும் நெறிகளுக்கும் உள்ள உறவை விளக்குக.
12. பண்பாட்டின் இயல்புகளை விளக்குக.
13. பண்பாட்டுத் தனிக்கூறுகளுக்கும் பண்பாட்டுத் தொகுதிகளுக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துக.

14. 'உலக முழுதும் அளாவிய பண்பாட்டு அம்சங்கள்' என்றால் என்ன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

15. 'பண்பாட்டு உலைவு' என்றால் என்ன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

16. அந்தஸ்து என்றால் என்ன? அதனுடைய வகைகள் யாவை?

17. அந்தஸ்து எந்தெந்தக் காரணிகளால் நிர்ணயிக்கப் படுகிறது?

18. அந்தஸ்துக்கும், பங்குக்கும் உள்ள வேறுபாடு யாது?

19. சமூக அடுக்கமைப்பு என்றால் என்ன? அதனுடைய வகைகள் யாவை?

20. திறந்த அமைப்பு முறைக்கும் மூடிய அமைப்பு முறைக் கும் உள்ள வேறுபாடு யாது?

21. குழு என்றால் என்ன? அதனுடைய இயல்புகள் யாவை?

22. குழுவின் வகைபாடுகளைக் குறிப்பிடுக.

23. முதல் நிலைக்குழு என்றால் என்ன? அது வழிநிலைக் குழுவினின்று எவ்விதம் வேறுபடுகிறது?

24. நிறுவனம் என்றால் என்ன என்பதை எடுத்துக்காட்டு களுடன் விளக்குக.

25. நிலையம் என்றால் என்ன? அதனுடைய இயல்புகள் யாவை?

26. நிறுவனத்திற்கும் நிலையத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

27. சமூக அமைப்பு என்றால் என்ன? சமூக அமைப்புக்கும் சமூகச் செயற்பாங்குக்கும் உள்ள வேறுபாடு என்ன?

# 5. முக்கியச் சமூக நிறுவனங்கள்

எல்லாச் சமூகங்களிலும் சில முக்கியமான காரியங்கள் பெரும்படியான நிறுவனங்களின்மூலம்தான் நிறைவேறுகின்றன. இல்வாழ்க்கை, ஆட்சி, வழிபாடு, பொருளாதார நடவடிக்கை, கற்றல் ஆகிய காரியங்கள் திருமணம், குடும்பம், அரசாங்கம், சமய, பொருளாதார நிறுவனம், கல்வி முதலிய பெரும்படியான நிறுவனங்களின்மூலம் ஆற்றப்படுகின்றன. முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பெரும்படியான நிறுவனங்களைப்பற்றி இங்கு பார்ப்போம்.

## திருமணம் (Marriage)

திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் ஓர் உறுதியான இணைப்பு வைத்துக்கொள்வதைக் குறிக்கும். பாலின உறவு ஏற்படுத்திக்கொள்வதற்காக அந்த இணைப்பை அவர்கள் மேற்கொள்ளுகிறார்கள், பெற்றோராகவேண்டும் என்ற நோக்கத்திற்காக அவர்கள் பாலின உறவு கொள்ளுகிறார்கள். ஆகவே விளக்கமாகக் கூறினால் பெற்றோராக வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பாலின உறவு வைத்துக்கொள்ள வேண்டி ஓர் ஆணும் பெண்ணும் ஓர் உறுதியான இணைப்பு வைத்துக்கொள்வதே திருமணம் ஆகும் (ஆண்டர்சனும் பார்க்கரும்).

இப்படி அமைகிற இணைப்பு குழந்தைகள் பிறந்ததும் பெற்றோர் என்ற நிலை ஏற்பட்டதும் முடிந்து விடுவதில்லை. அதற்கு மேலும் சென்று கடைசி வரையில் இரண்டு பேரும் மறையும் வரையில் நீடித்து நிற்கிறது.

### திருமணத்தின் வகைகள்

திருமணம் பல வடிவங்களில் (Forms) அமைகிறது.

(அ) எத்தனை பேர்கள் எத்தனை துணைகளை (Mates) ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்ற அளவில் திருமணம் ஒரு துணை மணம் (Monogamy), பல துணை மணம் (Polygamy) என்று இரண்டாக அமையும்.

ஒரு துணை மணம் : ஒரு துணை மணம் என்பது ஒருவன் ஒருத்தியை (அல்லது ஒருத்தி ஒருவனையோ) மணமுடிப்பதைக் குறிக்கும். பெரும்பாலான சமூகங்களில் ஒரு துணை மணமே சாதாரணமாக நடைபெறுகிறது.

பல துணை மணம் : பல துணை மணம் என்பது (i) ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களையோ அல்லது (ii) ஒருத்தி ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களையோ அல்லது (iii) பல ஆண்கள் பல பெண்களையோ (அல்லது பல பெண்கள் பல ஆண்களையோ) மணப்பதைக் குறிக்கும். ஒருவன் பல பெண்களை மணப்பதற்குப் பலதார மணம் (Polygyny) என்று பெயர். ஒருத்தி பல ஆண்களை மணப்பதற்கு பல கணவர் மணம் (Polyandry) என்று பெயர்*. பல ஆண்கள் பல பெண்களை (அல்லது பல பெண்கள் பல ஆண்களை) மணப்பதற்குக் குழு மணம் (Group marriage) என்று பெயர்†. (பெரும்பாலும் குழுமணத்தில் சகோதரர்களே ஒன்று சேர்ந்து சகோதரிகளாக இருக்கின்ற பெண்களை மணமுடிக்கிறார்கள்.)

(ஆ) துணைகள் எங்கிருந்து (குழுவுக்குள்ளிருந்தா அல்லது குழுவுக்கு வெளியிலிருந்தா) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற அளவில் திருமணம் (1) அகமணம் (Endogamy), (2) புறமணம் (Exogamy) என்று இரண்டாக அமையும்.

அகமணம் : ஒருவன் (அல்லது ஒருத்தி) தான் இருக்கிற குழுவுக்குள்ளேயே, அதாவது உறவுக் குழுக்குள்ளேயே அல்லது ஊருக்குள்ளேயே அல்லது சாதிக்குள்ளேயே அல்லது சமயத்துக் குள்ளேயே திருமணம் செய்து கொண்டால் அதற்கு அகமணம் என்று பெயர்.

புறமணம் : ஒருவன் (அல்லது ஒருத்தி) தான் இருக்கிற குழுவுக்கு வெளியிலிருந்து, அதாவது தன்னுடைய உறவுக் குழுக்கு வெளியே அல்லது ஊருக்கு வெளியே அல்லது சாதிக்கு வெளியே அல்லது சமயத்துக்கு வெளியே திருமணம் செய்துகொண்டால் அதற்குப் புறமணம் என்று பெயர்.

---

*இத்தகைய திருமணம் திபெத்தியர், லடாக்கில் வாழும் போடியாக்கள், ஹிமாசலப் பிரதேசத்தில் வாழும் கின்னோர்கள், நீலகிரியில் வாழும் தோடர்கள் முதலியோரிடையே நிலவுகிறது.

† இத்தகைய திருமணம் நியூகினியாவிலும் ஹவாய்த் தீவுகளிலும் சில பழங்குடியினரிடையே காணப்படுகிறது.

ஒரே நேரத்தில் அகமணமும் புறமணமும் சேர்ந்து நிகழ வாய்ப்புண்டு. இந்தியச் சாதி அமைப்பு முறையில் ஒருவன் தன்னுடைய சாதிக்குள்ளேயே திருமணம் (அகமணம்) செய்து கொள்ளவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அவன் தன்னுடைய குலத்திற்கு வெளியேதான் திருமணம் (புறமணம்) செய்துகொள்ளவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இருக்கிறது. இப்படி ஒரே நேரத்தில் அகமணமும் புறமணமும் இந்தியச் சாதி அமைப்பு முறையில் நிகழ்கின்றன.

திருமணம் ஒரு முதல் நிலை நிறுவனம். நிறுவனங்களில் முதலில் அமைவது திருமணம்தான். இதனுடைய முதன்மையான பணி குடும்பத்தைத் தொடங்கி வைப்பதுதான். திருமணம் என்ற கடைக்காலில்தான் குடும்பம் அமைகிறது.

### குடும்பம் (Family)

ஒரு கணவனும் மனைவியும் தங்களுடைய பிள்ளைகளுடன் இணைந்து வாழும் அமைப்புதான் குடும்பம் என்பது. குடும்பம் அமைய கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய மூவரும் அவசியம். இதில், மூன்று பேரும் ஒரே நேரத்தில் இருக்கவேண்டும் என்பதில்லை. பிள்ளைகள் இல்லாமல் கணவனும் மனைவியும் இருந்தாலும் குடும்பம் அமையும். கணவன் இல்லாமல் மனைவியும் பிள்ளைகளும் இருந்தாலும் குடும்பம் அமையும். மனைவி இல்லாமல் கணவனும் பிள்ளைகளும் இருந்தாலும் குடும்பம் அமையும். ஆகவே குடும்பம் என்பதற்கு 'ஓர் ஆணையும் அவனுடைய மனைவியையும், அல்லது ஓர் ஆணையும் அவனுடைய பிள்ளைகளையும், அல்லது ஒரு பெண்ணையும் அவளுடைய பிள்ளைகளையும் கொண்டு அமைந்திருக்கும் ஒரு நிலையான குழு என்று விளக்கம் தரலாம்.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய மூன்று பேர்கள் மட்டுமே (அல்லது அவர்களில் இருவர்) இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவர்களுடைய உறவினர்கள் கூட அவர்களோடு சேர்ந்து இருக்கலாம்.

### குடும்பத்தின் வகைகள்

குடும்பம் பல வழிகளில் பல வகைகளாகப் பிரிக்கப்படுவதுண்டு.

(அ) குடும்பத்தில் அமையும் உறவுகளின் (Kinships) எண்ணிக்கைக்கேற்ப, குடும்பம் (1) கருக்குடும்பம் (Nuclear Family)

என்றும், (2) கூட்டுக் குடும்பம் (Joint Family) என்றும் பிரிக்கப் படுவதுண்டு.

கருக்குடும்பம் : கணவன், மனைவி, அவர்களுடைய பிள்ளை கள் மட்டுமே அடங்கிய குடும்பத்தைக் கருக்குடும்பம் என்பார்கள்.

கூட்டுக் குடும்பம் : பரஸ்பரம் உறவுடைய இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கருக்குடும்பங்கள் ஒன்றாக ஒரே கூரையின் கீழ் இணைந்து வசித்தால் அந்தத் தொகுதிக்குக் கூட்டுக்குடும்பம் என்று பெயர். ஒருவன் தன் மனைவி மக்களோடும் பெற்றோர் களோடும் கூட்டாக வாழலாம். (அதாவது ஒருவனுடைய குடும்பமும், அவனுடைய பெற்றோர்களின் குடும்பமும் ஒன்றாக இணைந்து வசிக்கலாம்.) அல்லது ஒருவன் தன் மனைவி மக்க ளோடும், சகோதரனுடைய குடும்பத்தோடும் (அல்லது சகோதரர் களுடைய குடும்பங்களோடும்) கூட்டாக வாழலாம். அல்லது ஒருவன் தன் மனைவி மக்களுடனும், பெற்றோர்களுடனும், சகோதரனுடைய குடும்பத்தோடும் (அல்லது சகோதரர்களுடைய குடும்பங்களோடும்) கூட்டாக வாழலாம். இவ்வாறு கூட்டுக் குடும்பம் எப்படி வேண்டுமானாலும் அமையக்கூடும்.

ஒரு கூட்டுக் குடும்பத்தின் முக்கியமான சிறப்பியல்புகள் என்னவென்றால் அக்குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒரு பொது மூதாதையைக் கொண்டிருப்பர். ஒரு பொதுவான சொத்தைக் கொண்டிருப்பர். உறுப்பினர்களுக்கென்று தனியான சொத்து இருக்காது. உறுப்பினர்கள் ஈட்டுகிற சம்பாத்தியங்கள் ஒரு பொது நிதியாக வைக்கப்படும்.

சில சமூகவியலறிஞர்கள் கருக்குடும்பத்தைத் தாம்பத்தியக் குடும்பம் (Conjugal Family) என்றும், கூட்டுக் குடும்பத்தைக் குருதி உறவுக்குடும்பம் (Consanguine Family) அல்லது விரிந்த குடும்பம் (Extended Family) என்றும் குறிப்பிடுகிறார்கள்.

(ஆ) குடும்பம் யார் தலைமையில் நிர்வகிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்தும் குடும்பம் வகைபாடு செய்யப்படுவதுண்டு.

ஒரு குடும்பம் ஓர் ஆணின் தலைமை அதிகாரத்தில் இயங்கினால் அதற்குத் தந்தையாட்சிக் குடும்பம் (Patriarchal Family) அல்லது தந்தைத் தலைமைக் குடும்பம் (Patripotestal Family) என்று பெயர்,

ஒரு குடும்பம் ஒரு பெண்ணின் தலைமை அதிகாரத்தில் இயங்கினால் அதற்குத் தாயாட்சிக் குடும்பம் (Matriarchal Family) அல்லது தாய்த் தலைமைக் குடும்பம் (Matripotestal Family) என்று பெயர்.

கணவன், மனைவி இருவரும் சேர்ந்து சமத்துவ அடிப்படையில் குடும்பத்தை நிர்வாகம் செய்தால் அந்தக் குடும்பத்திற்குச் சமத்துவக் குடும்பம் (Egalitarian Family) என்று பெயர். குடும்ப நிர்வாகம் கணவன் மனைவி இருவர் கையிலும் இருப்பதால் இக்குடும்பத்தை இருபாலார் ஆட்சிக் குடும்பம் (Biarchal Family) என்றும் சொல்வதுண்டு.

(இ) வம்சாவளியும் (Descent) சொத்துரிமையும் (Inheritance) வரும் வழியைப் பொறுத்தும் குடும்பம் வகைபாடு செய்யப் படுவதுண்டு.

ஒரு குடும்பத்தில் தந்தை வழியில் வம்சாவளியும் சொத்துரிமையும் வந்தால் அக்குடும்பத்திற்குத் தந்தை வழிக் குடும்பம் (Patrilineal Family) என்று பெயர்.

ஒரு குடும்பத்தில் தாய் வழியில் வம்சாவளியும் சொத் துரிமையும் வந்தால் அக்குடும்பத்திற்குத் தாய்வழிக் குடும்பம் Matrilineal family) என்று பெயர்.

(ஈ) ஒரு துணை மணம், பல தார மணம், பல கணவர் மணம், குழு மணம் ஆகிய திருமணங்களின் அடிப்படையிலும் குடும்பம் முறையே ஒரு துணை மணக் குடும்பம், பல தாரக் குடும்பம், பல கணவர் குடும்பம், குழு மணக் குடும்பம் என்று வகைபாடு செய்யப்படுவதுண்டு.

(உ) மேலும், குடும்பம் பிறந்தகம் (Family or Origin Family of Orientation) என்றும், வேட்டகம் (Family of Procreation) என்றும் வகைபாடு செய்யப்படுவதுண்டு.

ஒருவன் பிள்ளையாக அமையும் குடும்பம் பிறந்தகமாகும். ஒருவன் தந்தையாக அமையும் குடும்பம் வேட்டகமாகும். ஒரு குடும்பஸ்தனுக்கு இரண்டு குடும்பங்களும் அமையும்.

### குடும்பத்தின் சிறப்பியல்புகள்

குடும்பம் உலகம் முழுவதும் காணப்படுகிறது. அது இல்லாத சமூகம் ஏதுமில்லை. எல்லாச் சமூகங்களிலும் அது சில பொதுவான இயல்புகளைக் கொண்டிருக்கிறது.

(1) ஒரு குடும்பம் திருமணத்தின் அடிப்படையில்தான் அமைகிறது. வெறுமனே ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்ந்தால் அதைக் குடும்பம் என்று சொல்லமுடியாது. இருவரும் கணவன் மனைவியாக இருக்கவேண்டும்.

(2) ஒரு குடும்பத்தில் இரண்டு வகையான உறவுகள் இருக்கும். ஒன்று தாம்பத்திய உறவு (Conjugal relation). இது கணவன் மனைவிக்கிடையே நிலவுகிற உறவு. இன்னொன்று குருதி உறவு (Consanguineal relation). இது தந்தைக்கும் பிள்ளை களுக்கிடையேயும், தாய்க்கும் பிள்ளைகளுக்கிடையேயும், பிள்ளைகளுக்கிடையேயும் நிலவுகிற உறவு. குருதி உறவு இரத்த சம்பந்தத்தின் அடிப்படையில் எழுகிறது.

(3) அதனுடைய உறுப்பினர் எண்ணிக்கை அளவாகவே இருக்கும். பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் குடும்பத்தின் அளவு அமையும். பிறப்புகளுக்கு ஓர் எல்லை உண்டு. எல்லையில்லாமல் குழந்தைகள் பிறந்துகொண்டே போவதில்லை. ஆகவே பிறப்புகளுக்கு எல்லை இருப்பதால், குடும்பத்தின் அளவும் ஒரு வரையறைக்குட்பட் டிருக்கும், ஓர் அரசியல் கட்சியைப்போல உறுப்பினர்களை வெளியிலிருந்து எடுத்துக்கொள்ளக் குடும்பத்தில் வழி இல்லை.

(4) ஒரு குடும்பத்தின் கால நீட்சி (Duration) ஒரு வரையறைக்கு உட்பட்டதாகத்தான் இருக்கும். ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் காலமாகிவிட்டால் அந்த நொடியே அந்தக் குடும்பம் மறைந்துபோய்விடும்.

(5) ஒரு குடும்பம் பொதுவாகத் தன்னிறைவு பெற்றிருக்கும். உறுப்பினர்களுடைய தேவைகள் பெரும்பாலும் குடும்பத்திற் குள்ளேயே நிறைவேற்றப்பட்டுவிடுகின்றன.

### குடும்பத்தின் பணிகள்

குடும்பம் பல பணிகளை ஆற்றுகிறது. அவை:

(1) எல்லாச் சமூகங்களிலும் ஒருவன் தன்னுடைய பாலினத் தேவைகளைக் குடும்பத்தின் மூலமாகவே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற நியதி இருக்கிறது. எனவே, ஒருவன் குடும்பம் அமைத்து அதன்மூலம் தன் பாலினத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகிறான். குடும்பத்திற்கு அப்பால் ஒருவன் தன் பாலினத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளமுடியும். ஆனால், அதை

அவன் உரிமையோடு செய்யமுடியாது. முறையான செயல் என்றும் நிலைநாட்ட முடியாது. மேலும் அது நிரந்தரமாகவும் அமையாது. ஆனால் குடும்பத்தில் அவன் உரிமையோடு, தயக்கமின்றித் தன்னுடைய பாலினத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

(2) குழந்தைகள் பெறுவது என்பது குடும்பத்தில் நடைபெறுகிற இன்னொரு முக்கியமான செயல். ஒருவன் குடும்பத்திற்கு வெளியே குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஆனால், அவன் அவர்கள்மீது எந்தவிதமான உரிமையும் கொண்டாட முடியாது. அவ்வாறே அந்தக் குழந்தைகளும் அவன் மீது எந்த விதமான உரிமையும் கொண்டாட முடியாது. குடும்பத்தின் மூலமாகக் குழந்தைகளைப் பெறும்போதுதான் பெற்றவனும் குழந்தைகளும் பரஸ்பரம் உரிமை கொண்டாட முடியும்.

(3) ஒருவன் சமூகமயமாவது* முதலில் குடும்பத்தில்தான் ஏற்படுகிறது. பெரியோர்கள் குழந்தைகளுக்குச் சமூகத்தின் நெறிகளையும் விழுமியங்களையும் கற்றுத்தருகிறார்கள். மற்றவர்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும், எந்தக் காரியங்களைச் செய்யலாம், எந்தக் காரியங்களைச் செய்யக்கூடாது, செய்யத் தக்க ஒரு காரியத்தை எப்படி எந்த வழியில் செய்யவேண்டும் என்றெல்லாம் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்து அவர்களை ஆளாக்குகிறார்கள். பெற்றோர்களிடம் பெறுகிற பயிற்சி, குழந்தைகள் தங்களுடைய நடத்தையைச் செப்பமுற அமைத்துக் கொள்ளவும் சமூகத்தோடு ஒட்ட ஒழுகவும் உதவுகிறது.

(4) ஒரு மனிதனுக்கு அவசியம் தேவைப்படுவது பிறருடைய அன்பும் ஆதரவும். பிறருடைய அன்பும் ஆதரவும் கிடைக்காத பொழுது அவனுடைய வாழ்வு ஒழுங்குற அமைவதில்லை. பல உளவியல் ஆய்வுகள் 'பிறருடைய அன்பும் ஆதரவும் கிடைக்காதவர்களுக்கு உணர்ச்சிக் கோளாறுகள், மனநிலை பாதிப்பு, நடத்தைச் சிக்கல்கள் மற்றும் உடல் நலக் குறைவு ஆகியவை ஏற்படுகின்றன' என்று கூறுகின்றன. குடும்பம் தன்னுடைய உறுப்பினர்களுக்கு அன்பையும் ஆதரவையும் நல்குகிறது. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள். பிள்ளைகள் தங்களுக்குள் அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள். ஒரு கடமையுணர்வோடு இவர்கள் ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள்.

---

* சமூகமயமாகுதல் (Socialization) என்றால் என்ன என்பது 6ஆம் அத்தியாயத்தில் விளக்கப்படுகிறது.

(5) குடும்பம் தன்னுடைய உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது. முக்கியமாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் குடும்பத்தில்தான் பெரிதும் பாதுகாப்பு கிடைக்கிறது. சொல்லப் போனால் ஒருவன் தனக்குக் குடும்பத்தில்தான் பாதுகாப்பு கிடைக்கிறது என்ற உணர்வு பெறுகிறான். குடும்பத்திலிருந்து நீங்கினால் தன் வாழ்வு பாதுகாப்பு அற்றுப் போய்விடும் என்று அவன் உணர்கிறான். குடும்பத்தில் கிடைக்கும் பாதுகாப்பு (நோய் நொடிகள், மற்றவர்களுடைய தாக்குதல் முதலியவற்றிலிருந்து குடும்பத்தின் மூலமாகக் கிடைக்கும் பாதுகாப்பு) இத்தகைய உணர்வை ஏற்படுத்துகிறது.

(6) குடும்பம் சமூக அந்தஸ்து வழங்கும் பணியையும் செய்கிறது. குடிப்பிறப்பு ஒருவனுடைய சமூக அந்தஸ்தை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்று. குடும்பத்தின் பின்னணி, பூர்வீகம் இவற்றைப் பொறுத்து ஒருவனுடைய சமூக அந்தஸ்து அமையக் கூடும். இந்த வகையில் குறைபாடு இல்லாத, பெருமையான பின்னணியும், பூர்வீகமும் உடைய குடும்பம் தன்னுடைய உறுப்பினர்களுக்கு உயர்ந்த சமூக அந்தஸ்து ஏற்பட வழி வகுக்கிறது. குடும்பத்தின் பின்னணியும் பூர்வீகமும் மோசமாக இருந்தால் ஒருவன் சமூகத்தில் இழிந்த நிலையைப் பெறுகிறான். அப்பொழுது அவனுடைய குண நலன்களும், சிறப்புத் தகுதிகளும் செயலற்றுப் போய்விடுகின்றன. அவற்றால் அதனை ஒன்றும் செய்ய முடியாமல் போய்விடுகிறது.

(7) குடும்பம் ஒரு பொருளாதார அலகாய்ச் செயல்படுகிறது. ஆண்கள் வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிறார்கள். பெண்கள் வீட்டில் இருந்து வீட்டு வேலைகளையும், குழந்தை பராமரிப்பையும் கவனித்துக்கொள்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் ஒரு பணியைச் செய்வதால் குடும்பத்தில் எல்லோருடைய தேவைகளும் ஒருங்கே நிறைவு பெறுகிறது.

அரசாங்கம் (Government)

சட்டங்களின் மூலமும் அரசியல் தீர்மானங்களின் மூலமும் சமூகத்தில் ஒரு விதிமுறைக்குட்பட்ட ஒழுங்கை ஏற்படுத்த அமையும் அமைப்பு முறைக்கு (System) அரசாங்கம் என்று பெயர்.

அரசு (State) எனப்படும் அரசியல் முறையில் நிலையான அமைப்புடன் விளங்கும் சமூகத்தில்தான் அரசாங்கம் காணப்படும். அரசின் ஒரு மூலகம் அரசாங்கம்.

அரசாங்கத்தின் நோக்கமே மக்களை ஆளுவதும், சமூகத்தில் ஒரு விதிமுறைக்குட்பட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதும் தான். இந்த நோக்கத்தை அடைய அது சட்டங்களையும், அரசியல் தீர்மானங்களையும் தன்னுடைய கருவிகளாக வைத்துக் கொள்ளுகிறது.

பொதுவாக அரசாங்கம் மூன்று உறுப்புகளைக் கொண்டிருக்கும். (1) சட்டமியற்றும் அமைப்பு, (2) நிர்வாக அமைப்பு, (3) நீதித்துறை அமைப்பு—இம்மூன்று அமைப்புகளின் மூலம் அரசாங்கம் ஆட்சி செலுத்துகிறது.

சட்டமியற்றும் அமைப்பு சட்டங்களையும், அரசியல் தீர்மானங்களையும் வகுக்கிறது. நிர்வாக அமைப்பு அவற்றை அமல்படுத்துகிறது. நீதித்துறை அமைப்பு அவற்றுக்கு விளக்கம் தருகிறது. மூன்றாவது அமைப்பு அரசாங்க அமைப்பு முறையில் முக்கியமான இடம் பெறுகிறது. அது சட்டங்களையும் அரசியல் தீர்மானங்களையும் விளக்கஞ் செய்து அவை ஏற்புடையனவா அல்லது ஏற்கத் தகாதவையா என்று அறிவிக்கிறது. அதனுடைய வியாக்கியானத்துக்கும், தீர்ப்புக்கும் ஏற்ப சட்டங்களும் அரசியல் தீர்மானங்களும் சரிசெய்யப்பட்டு மீண்டும் அமலுக்கு வருகின்றன.

**அரசாங்கத்தின் வகைகள்**

அரிஸ்டாட்டில் அரசாங்கம் கீழ்க்கண்ட வடிவங்களில் அமைந்திருக்கும் என்கிறார்.

(1) தனிநபர் ஆட்சி (Monarchy) — தனி ஒருவன் ஆளுவது.

(2) பிரபுக்கள் ஆட்சி (Aristocracy) — ஆளுவதற்கென்று தனியுரிமை பெற்ற சிலர் ஆளுவது.

(3 குடியாட்சி (Democracy) — மக்கள் ஆளுவது.

மெக்ஈவர் மேற்கண்ட அரிஸ்டாட்டிலின் வகைபாட்டைச் சற்றுத் திருத்தி, அரசாங்கம் சிலர் ஆட்சி (Oligarchy), குடியாட்சி என்ற இரண்டு வடிவங்களில்தான் அமைந்திருக்கும் என்கிறார். தனிநபர் ஆட்சியை அவர் நீக்கிவிடுகிறார். அதற்கு அவர் கூறும் காரணம்: தனி நபர் ஆட்சி என்று ஒன்று இருக்கமுடியாது. ஏனெனில் அப்படி ஒருவன் மட்டுமே ஆட்சிபுரிவதாக இருந்தால் பிறர் துணையில்லாமல் அவன் ஆட்சி புரிவதில்லை. ஆட்சி

புரியவும் இயலாது. ஆக, ஒரு சிலர் ஆட்சிதான் அமையுமே தவிர தனி நபர் ஆட்சி அமையாது.

மோஸ்கா (Mosca) என்ற அறிஞர் எப்படி தனிநபர் ஆட்சி என்பது ஒருசிலர் ஆட்சி என்பதாக அமையுமோ, அப்படியே குடியாட்சி என்ற பலர் ஆட்சி என்பதுவும் ஒரு சிலர் ஆட்சியாகவே அமையும் என்று கூறுகிறார். குடியாட்சியில் பலர் சேர்ந்து ஆளுவது போலத் தோன்றும். ஆனால் உண்மையில் அவர்களுள் செல்வாக்கு பெற்ற ஒரு சிலரே ஆட்சி என்ற கடிவாளத்தைக் கையில் பிடித்திருப்பர். இந்த வகையில் குடியாட்சி என்பது ஒருசிலர் ஆட்சியாக இருக்குமே தவிர, பலர் ஆட்சியாக இருக்காது என்கிறார். ஆகவே, எந்த அரசாங்கமும் ஒரு சிலர் ஆட்சி என்ற வடிவத்தில்தான் இருக்கும் என்கிறார் மோஸ்கா.

நடைமுறையில் இன்றைக்கு இரண்டுவிதமான அரசாங் கங்களே இருக்கின்றன. ஒன்று சர்வாதிபத்திய அரசாங்கம் (Totalitarian Government). இன்னொன்று ஜனநாயக அரசாங்கம் (Democratic Government).

சர்வாதிபத்திய அரசாங்கத்தில் ஆட்சி ஒருவர் கையில் அல்லது ஒருசிலர் கையில்தான் இருக்கிறது. ஆட்சி பீடத்தில் இருப்பவர் (கள்) என்ன சொல்கிறார்களோ, அதுவே அரசாங்கக் கட்டளை. அவர்(கள்) என்ன ஆணை இடுகிறார்களோ, அதை மக்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். அவருக்கு / அவர்களுக்குப் பிறகு யார் ஆட்சிப் பொறுப்புக்கு வருவது என்பதை அவர்களே தீர்மானிக்கிறார்கள். அவர்கள் தீர்மானத்தை மக்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இத்தகைய ஆட்சிமுறை முடியாட்சி நிலவுகிற நாடுகளிலும், ஒரு கட்சி மட்டுமே ஆளக்கூடிய உரிமை நிலவுகிற நாடுகளிலும், இராணுவத் தலைவர்களின் கட்டுப் பாட்டின்கீழ் இருக்கும் நாடுகளிலும் காணப்படுகிறது.

ஜனநாயக அரசாங்கத்தில் மக்களால், அவர்கள் விருப்பத்திற் கேற்பத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் முறையின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஜனநாயக அமைப்பு முறையில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை மாற்றிக்கொள்ளலாம். பிரதிநிதிகள் பிடிக்காமல் போனால், மீண்டும் தேர்தல் மூலம் அவர்களை மாற்றிவிட்டு மற்றவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

**அரசாங்கத்தின் பணிகள்**

முக்கியமாக அரசாங்கம் இரண்டு பணிகளைச் செய்கிறது. அவை :

(1) அரசாங்கம் சமூகத்தின் ஒழுங்கை நிலைநாட்டுகிறது. சட்டங்களை இயற்றி மக்கள் எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யக்கூடாது என்று நிர்ணயிக்கிறது. அந்தச் சட்டங்களைக் கடைபிடித்து அவற்றின்படி நடந்துகொள்ளவேண்டும் என்று மக்களைக் கட்டாயப்படுத்துகிறது. யாரும் அந்தச் சட்டங்களை மீறாமல் பார்த்துக்கொள்ளுகிறது. யாராவது மீறினால் அதற்கு வலி தரக்கூடிய தண்டனையைத் தருகிறது. தண்டனைக்கு அஞ்சி மக்கள் ஒழுங்காக நடந்துகொள்ளுகிறார்கள்.

நாட்டவர் வழக்குகளும் வழக்கடிப்பாடுகளும்கூடச் சட்டங் களைப்போல மக்கள் நடத்தையை நெறிப்படுத்தி ஒழுங்கை நிலை நாட்ட அமைந்த நெறிகள்தான். ஆயினும் அவற்றை யாராவது மீறினால் அதை ஒன்றும் செய்யமுடியாது. அந்த மீறலைத் தடுக்கவோ மீறியவர்களைத் தண்டிக்கவோ இயலாது. இத்தகைய நிலையில் சிலர் அவற்றை உடைத்தெறிந்தால் அவர் களைத் தடுக்க முடியாது. அவர்களைத் தடுக்காவிட்டால் அவற்றை உடைத்தெறியும் போக்கு எவரிடத்திலும் பரவக்கூடும். இப்படி அந்தச் சமூக நெறிகளுக்கு மரியாதை போய், அவை செயலற்றுப்போனால் சமூகத்தில் எந்தவிதமான ஒழுங்கும் நிலவாது. ஒரே குழப்பம்தான் நிலவும்.

ஆனால் சட்டங்களுக்கு அத்தகைய நிலைமை நேராது. அரசாங்கம் சட்டங்களை யாரும் மீற அனுமதிப்பதில்லை. யாராவது மீறினால் அவர்களைப் பிடித்துத் தண்டிக்கிறது. இது எல்லோருக்கும் ஒரு பாடமாய் அமைந்து, எலலோரும் சட்டங் களுக்கு மரியாதை கொடுத்து அவற்றின்படி நடந்துகொள்ளு கிறார்கள். இதன் காரணமாகச் சமூகததில் ஒழுங்கு நிலை நிற்கிறது.

(2) அரசாங்கம் சமூகத்திற்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்ளுகிறது. ஒரு சமூகத்திற்கு உள்ளிருந்தும ஆபத்து வரலாம், வெளியிலிருந்தும் ஆபத்து வரலாம். சமூகததில் தனிப் பட்ட இரு நபர்களுக்கிடையே ஏதாவதொரு விஷயமாக(உதாரண மாக, நிலம் சம்பந்தமாக) சண்டை சச்சரவு நேரலாம். இந்தத் தனி நபர் சண்டை ஒரு குழுச் சண்டையாக மாற வாய்ப்புண்டு. சம்பந்தப்பட்ட நபர்களின் உற்றார் உறவினர்களும் அந்தச் சண்டையில் ஈடுபட்டு, இரண்டு கட்சிகளாக நின்று சண்டை

போடக்கூடிய நிலைமை ஏற்படலாம். அத்தகைய நிலையில் இந்தக் குழுச் சண்டை சமூகத்தின் அமைதிக்கும், ஒழுங்குக்கும், மக்களுடைய வாழ்க்கைப் பாதுகாப்புக்கும் ஆபத்தாக அமையும். அரசாங்கம் அந்தச் சண்டையைத் தீர்த்து வைத்து அதனால் வரும் ஆபத்தைத் தடுக்கிறது. அரசாங்கம் தனிநபர் சண்டையானாலும் குழுச் சண்டையானாலும் எந்தச் சண்டையையும் தீர்த்து வைக்கிறது. இதனால் சமூகத்தில் அமைதி நிலவ முடிகிறது. மக்கள் வாழ்க்கையும் பாதுகாப்பாக அமைய முடிகிறது.

மற்றவர்களுடைய தாக்குதல்களிலிருந்தும் அரசாங்கம் சமூகத்தைப் பாதுகாக்கிறது. அந்நியரின் தாக்குதல் ஏற்படும் பொழுது அரசாங்கம் மக்களை ஒன்று திரட்டுகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கிறது. தாக்குதலை எதிர்த்து நின்று முறியடிக்கிறது. எந்த ஒரு சமூகத்திலும் அந்நியரின் தாக்குதல்களிலிருந்து ஆபத்து ஏற்படும்பொழுது இந்தக் காரியங்களைச் செய்து ஆபத்தைப் போக்கவும், பாதுகாப்பை உண்டாக்கவும் ஒரு மையமான அமைப்பு இருக்கவேண்டும். இந்த அமைப்புதான் அரசாங்கம்.

அரசாங்கம் இவ்வாறு சமூக ஒழுங்கை நிலைநாட்டுதல், சமூகத்தை ஆபத்துகளிலிருந்து பாதுகாத்தல் ஆகிய இரண்டு காரியங்களை முக்கிய பணிகளாக ஆற்றுகிறது. இந்தப் பணிகள் மட்டுமில்லாமல் வேறுசில இரண்டாம் நிலைப் பணிகளையும் அரசாங்கம் ஆற்றுகிறது.

மக்களுடைய ஆரோக்கியம், கல்விநிலை, பொருளாதார நிலை முதலியன மேம்பாடு அடைய நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி அவர்கள் வாழ்வில் நலம் சிறக்கச் செய்கிறது. மக்களுக்கு தபால்தந்தி, போக்குவரத்து முதலிய வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களுக்குச் சேவை செய்கிறது. மக்களுக்குத் தீ, வெள்ளம், வறட்சி, பஞ்சம், விபத்து முதலியவற்றால் துன்பம் விளையும்போது அவர்களுக்கு நிவாரணம் வழங்குகிறது. பலவகையான பாதுகாப்புத் (Insurance) திட்டங்களைத் தீட்டி மக்களை இடர்களிலிருந்து காப்பாற்றுகிறது. நிலம், நீர், காடு முதலிய இயற்கை வளங்கள் வீணாகாமலும் அழியாமலும் பாதுகாக்கிறது. வாணிபத்தில் ஈடுபடுதல், தொழிற்சாலைகள் நிறுவுதல், வரி வசூலித்தல், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துதல் முதலிய பொருளாதாரச் செயல்களையும் புரிகிறது. செல்வம் ஒரு சிலரிடையே குவிந்து போகாமல் தடுத்து எல்லோருக்கும் சமமான பொருளாதார வாய்ப்புகள் கிட்டச் செய்கிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளுகிறது.

அரசாங்கம் எண்ணற்ற இரண்டாம் நிலைப் பணிகளைச் செய்கிறது; அவற்றைப் பட்டியல் போட்டுக் காண்பிப்பது என்பது எளிதான செயலன்று.

## சமயம் (Religion)

மக்கள் இயற்கை நிகழ்ச்சிகள், சக்திகள் இவையெல்லாம் இயற்கைக்கு மிஞ்சிய சக்திகளால் — தெய்விகச் சக்திகளால்* (Supernatural powers) ஆளப்படுகின்றன என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையோடு அச்சம், பக்தி, மரியாதை ஆகிய உணர்வுகளும் இயைகின்றன. (அதாவது தெய்விகச் சக்திகளிடம் மக்கள் அச்சமும், பக்தியும், மரியாதையும் வைக்கிறார்கள்.) அந்த நம்பிக்கை வழிபாடு, பூசனைகள், சடங்கு வினைமுறைகள் என்ற நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படுகிறது.

இப்படி 'தெய்விகச் சக்திகளிடம் வைக்கிற நம்பிக்கையும். அந்த நம்பிக்கையோடு இயைந்த உணர்வுகளும், அந்த நம்பிக்கை வெளிப்படுகிற நடவடிக்கைகளும் அமைந்த ஒரு தொகுதிதான் சமயம்' என்பதாகும். ஆக சமயம், நம்பிக்கை, உணர்வுகள், நடவடிக்கைகள் ஆகிய மூன்று அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

வெறும் நம்பிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு சமயம் அமைந்து விடுவதில்லை. உணர்வுகளும் நடவடிக்கைகளும் இருந்தாக வேண்டும். தெய்விகச் சக்திகளிடம் மக்கள் அச்சமும், பக்தியும், மரியாதையும் காட்டவேண்டும். அந்த உணர்வு களையொட்டிப் பூசனைகள், சடங்கு வினைமுறைகள் என்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

மக்கள் தெய்விகச் சக்திகள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவை. அவற்றால் எதையும் செய்ய முடியும். அவற்றை பக்தி யோடும் மரியாதையோடும் வணங்கிப் பூசனைகளும், சடங்கு வினைமுறைகளும் செய்தால் வேண்டியதைப் பெறலாம் என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையில் அவர்கள் பக்தியோடும், மரியாதையோடும் தெய்விகச் சக்திகளிடம் நடந்துகொள்ளு கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கும்போதுதான் அங்கே சமயம் நிலவுகிறது.

ஆனால் இதற்கு மாறாக, தெய்விகச் சக்திகளை நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டால் விரும்பியதை

---

* ஒரேயொரு தெய்விகச் சக்தி உண்டென்றுகூட நம்பப்படலாம்.

அடையலாம் என்று மக்கள் நினைத்து, அவற்றைக் கட்டுப்படுத்த முனைந்தால் அந்த நிலையில் அங்கே மந்திரம் (Magic) என்ற அமைப்பு முறைதான் அமையும். 'தெய்விகச் சக்திகளைச் சில சூத்திரங்களின்மூலம் கட்டுப்படுத்தும் முறைக்கு மந்திரம்' என்று பெயர்.

மந்திர அமைப்பு முறையில் சில சூத்திரங்களைக் கொண்டு, அதாவது குறிப்பிட்ட சில உச்சாடனங்கள், சடங்குகள் ஆகிய வற்றைக் கடைபிடித்து தெய்விகச் சக்திகளை அடக்கிவிடலாம் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் மந்திர உச்சாடனங்கள், மாந்திரீகச் செயல்கள் இவற்றின் மூலம் தெய்விகச் சக்திகளை அடக்க முயல்கிறார்கள்.

மந்திரம் இரண்டு கொள்கைகளின் அடிப்படையில் அமை கிறது. 'ஒத்த வினைகள் ஒத்த விளைவுகளை உண்டாக்குகின்றன' என்ற ஒரு கொள்கையின் அடிப்படையிலும், 'ஒரு தடவை பிணைப்பு அமைந்தால் கடைசி வரை அந்தப் பிணைப்பு நீடிக்கும்' என்ற இன்னொரு கொள்கையின் அடிப்படையிலும் அமைகிறது.

முதல் கொள்கையின்படி அமைகிற மந்திரத்திற்கு ஒப்புப் போலி மந்திரம் (Initative or mimetic magic) அல்லது ஓமியோபதி மந்திரம் (Homeopathic magic) என்று பெயர். எத்தகைய விளைவு ஏற்படவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்களோ அந்த விளைவை ஒத்த ஒரு செயலைச் செய்தால் ஒப்புப்போலி மந்திரம் அமையும்.

இரண்டாவது கொள்கையின்படி அமைகிற மந்திரத்திற்குத் 'தொற்று மந்திரம்' (Contagious magic) என்று பெயர். ஓர் உறுப்பு அது இணைந்திருந்த பொருளிலிருந்து விலகிப் போனால் கூட, அதற்கும் அப்பொருளுக்கும் இருந்த இணைப்பு அறுந்து விடாமல் நீடிக்கும் என்று மக்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக் கையில் இணைப்பு நீங்கிய அந்த உறுப்பைக் கொண்டு அது இணைந்திருந்த பொருளுக்கு ஏதாவது (நன்மையோ தீமையோ) விளைவித்தால் தொற்று மந்திரம் அமையும்.

தெய்விகச் சக்திகளை அடக்குவதற்கு ஒப்புப் போலி மந்திரமே பயன்படுத்தப்படுகிறது. மழையின்மை, கடுமையான வெயில், இயற்கை இடர்கள் ஆகியன ஏற்பட்டால் அவற்றைப் போக்க ஒப்புப் போலி மந்திரம் பழங்குடிச் சமூகங்களில் அதிகமாகக் கடைபிடிக்கப்படுகிறது. உதாரணமாக, அமெரிக்காவில் வாழும்

அபாச்சீ இந்தியர்கள் (Apache Indians) மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்டால் மழைக்காக வேண்டி ஒரு மாந்திரீகச் செயலை மேற் கொள்ளுகிறார்கள். ஒரு மலையுச்சிக்குத் தண்ணீரை எடுத்துக் கொண்டு போய், அங்கிருந்து அதைக் கொட்டுகிறார்கள். இப்படிச் செய்தால், வானிலிருந்து மழை பெய்யும் என்று நம்புகிறார்கள். இதற்குப் பிறகு, மழை வராமல் போனால் மழை (தற்செயலாக) வரும் வரை தொடர்ந்து அந்தச் செயலையே செய்து வருகி றார்கள். மழை பெய்வதற்குத் தங்களுடைய மாந்திரீகச் செயலே காரணம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இப்படி மந்திரமும், சமயமும் வேறுபட்டு விளங்குகின்றன. மந்திரத்தில் மனிதன் தெய்விகச் சக்திகளைவிட தான் உயர்ந் தவன், ஆற்றல் மிக்கவன் என்ற எண்ணங்கொள்கிறான். தன்னால் தெய்விகச் சக்திகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்று நம்புகிறான். அந்த நம்பிக்கையில் சில சூத்திரங் களைக் கொண்டு அவற்றைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயல்கிறான். ஆனால் சமயத்தில் அவன் தான் தெய்விகச் சக்திகளுக்கு முன்னால் சாமானியமானவன் என்று உணர்கிறான். தெய்விகச் சக்திகள் தன்னிலும் மேலானவை, ஆற்றல் மிக்கவை என்று நம்புகிறான். அவற்றிடம் சரணடைந்து அவற்றைப் பிரார்த்தித்து வாழ்கிறான்.

இதன்றி, வேறு சில வேறுபாடுகளும் மந்திரத்துக்கும், சமயத் துக்குமிடையே இருக்கின்றன. இரண்டிலும் உச்சாடனங்கள் சடங்குகள் முதலியவை இருந்தாலும் மந்திரத்தில் உள்ள உச்சாடனங்களும் சடங்குகளும் மறைவடக்கமாக, விளங்காத வகையில் புதிராக இருக்கும். ஆனால் சமய உச்சாடனங்களும், சடங்குகளும் புரியக்கூடிய முறையில் இருக்கும்.

மந்திரத்தைச் செய்கிற மந்திரவாதிகளுக்கு மக்களிடம் அச்சம் இருக்குமே தவிர இயல்பான மரியாதை இருக்காது. ஆனால் சமயச் சடங்குகளைச் செய்கிற அர்ச்சகருக்கோ மக்களிடம் ஓர் இயல்பான மரியாதை இருக்கும். இந்த வேறுபாட்டுக்குக் காரணம் மந்திரவாதியின் தோற்றம், நடை, உடை, பாவனைகள் எல்லாம் பயங்கரமாக இருக்கும். ஆனால் அர்ச்சகரின் தோற்றம், நடை, உடை பாவனைகள் எல்லாம் எளிமையாக அமைதியாக இருக்கும்.

இப்படி மந்திரம் சமயத்துடன் வேறுபட்டிருந்தாலும், அதற்கு சமயத்துடன் ஒரு தொடர்பு இருக்கிறது. ஃப்ரேஸர் (Frazer) சமயத்தின் தோற்றமே மந்திரத்துடன்தான் இணைந்திருக்கிறது

என்கிறார். முதலில் மனிதன் தான் விரும்பியவற்றை அடைவதற்காக மந்திரத்தின் மூலம் தெய்விகச் சக்திகளைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயல்கிறான். அந்த முயற்சி தோற்றாலும் மீண்டும் மீண்டும் அதே செயலையே தொடர்ந்து புரிகிறான். கடைசியில் தன் முயற்சி பலனளிக்காமல் போகும் போது, தன்னுடைய தோல்வியை ஏற்றுக்கொண்டு, இயலாமையைப் புரிந்துகொண்டு தெய்விகச் சக்திகளிடம் சரண் அடைகிறான். அவற்றைப் பிரார்த்தித்து வழிபட்டு வாழத் தொடங்குகிறான். இந்த நிலையே சமயம் தோன்றுகிற நிலை என்று ஃப்ரேஸர் கூறுகிறார். மந்திரத்தின் தோல்வியில் சமயம் பிறந்தது என்பது அவருடைய கருத்து.

### சமயத்தின் வடிவங்கள்

சமயம் இரண்டு வடிவங்களில் அமையக்கூடும். ஒன்று எளிமையாக அமைந்திருக்கும் சமயம். இன்னொன்று சிக்கலாக அமைந்திருக்கும் சமயம். ஒரு சமயத்தில் தெய்விகச் சக்திகளுடன் மனிதன் உளப் பூர்வமாக இயைவதுதான் முக்கியம். அதற்கு எளிமையான வழிபாடு போதும். விரிவான சடங்கு வினைமுறைகள் தேவையில்லை என்று அறிவுறுத்தப்பட்டால் அச்சமயம் எளிமையாக அமைந்திருக்கும். விரிவான சடங்கு வினைமுறைகளின் மூலமே தெய்விகச் சக்திகளைத் திருப்திப்படுத்த முடியும் என்று வற்புறுத்தப்பட்டு, அதன் காரணமாக அதிகமாகவும் விரிவாகவும் சடங்கு வினைமுறைகள் நிகழ்ந்தால் அந்தச் சமயம் சிக்கலாக அமைந்திருக்கும்.

### சமயத்தின் பணிகள்

சமயம் தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் பல பணிகளை ஆற்றுகிறது.

தனி மனிதனைப் பொறுத்த அளவில் சமயம் அவனைத் தெய்விகச் சக்திகளோடு இணைத்து வைக்கிறது. அந்த இணைப்பிற்குப் பிறகு தனி மனிதன் தெய்விகச் சக்திகளைச் சார்ந்து தன் வாழ்வை அவற்றுடன் பிணைத்துக் கொள்ளுகிறான்.

தனி மனிதன் தனக்குத் துன்பங்களும் சிக்கல்களும் வரும்போது சமயத்தை நாடுகிறான். துன்பங்களும் சிக்கல்களும் ஏற்படும்போது அவற்றைப் போக்க வேண்டித் தெய்விகச் சக்திகளைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறான். சர்வ வல்லமை வாய்ந்த தெய்விகச் சக்திகள் தன்னுடைய பிரார்த்தனைக்கு

இணங்கித் தன்னுடைய துன்பங்களையும், சிக்கல்களையும் போக்கும் என்று நம்புகிறான். அந்த நம்பிக்கையின் காரணமாக, துன்பங்களையும் சிக்கல்களையும் கண்டு அவன் மனமுடைந்து போவதில்லை. துன்பங்களிலிருந்தும் சிக்கல்களிலிருந்தும் தெய்விகச் சக்திகளின் அருளால் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மன அமைதியோடும் ஆறுதலோடும் வாழ்க்கையை ஓட்டுகிறான். ஆனால், இந்த நம்பிக்கை அமையாமல் போகிறவர்களுக்குத் துன்பங்களும் சிக்கல்களும் நேரும்போது அவை தீரும் என்ற நம்பிக்கை ஏற்பட எந்தவொரு மூலாதாரமும் இல்லாமல் போவதால் அவர்கள் மனமுடைந்து தங்களை மாய்த்துக்கொள்ளுகிறார்கள். பல உளவியல் ஆய்வுகள் சமய நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை இல்லாத பலர் துன்பங்களும் சிக்கல்களும் ஏற்படும்போது தங்களை மாய்த்துக்கொள்வதை எடுத்துக்காட்டுகின்றன.

சமயம் பொழுதுபோக்குச் சாதனமாயும் அமைவதுண்டு. பொழுதுபோக்க வசதியில்லாதவர்கள், வாழ்க்கையில் ஓய்ந்து போன கிழவர்கள் முதலானோர் வழிபாடு, சமய நடவடிக்கைகள், சமயப் பிரச்சாரம் முதலியவற்றில் ஈடுபட்டுத் தங்களுடைய பொழுதைப் போக்குகிறார்கள். லிஸ்டன் போப் (Liston Pope) என்பவர் 'கீழ்த்தர வர்க்க மனிதர்களுக்குப் பெரும்பாலும் வழிபாட்டுக் கூட்டங்களே பொழுதுபோக்குச் சாதனங்களாக அமைகின்றன' என்று கூறுகிறார்.

சமூகத்திற்குச் சமயம் ஆற்றுகிற பணிகள் எண்ணிலடங்கா. அவற்றில் முக்கியமான பணிகளை மட்டும் இங்கு பார்ப்போம்:

(1) சமயம் மக்களை ஒன்றுபடுத்திச் சமூக ஒருமைப்பாட்டை உருவாக்குகிறது. பொதுவான சமய நம்பிக்கை, கோட்பாடுகள் முதலியவை அமையும்போதும், மக்கள் பொதுவான சமயச்சடங்கு வினைமுறைகள், விழாக்கள் இவற்றில் கலந்துகொள்ளும்போதும் ஒற்றுமைப்படுகிறார்கள். இதற்கு மேலாக 'நாமெல்லாம் ஒரே சமயத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற உணர்வு நமக்கு ஏற்படும் போது மக்களிடையே ஒற்றுமை மிகவும் வலுப்படுகிறது. இதனால் சமூகத்தில் ஒருமைப்பாடு உண்டாகிறது.

(2) சமூகம் சமூகக் கட்டுப்பாட்டுச் செயலியாகப் பணி புரிந்து சமூகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுகிறது. சமயம் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யக்கூடாது என்று பல நெறிகளை விதிக்கிறது;

அந்த நெறிகளின்படி மக்கள் தங்கள் நடத்தையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகிறது. மக்கள் அவற்றைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பதற்காகப் பாவ - புண்ணியம், தெய்வ தண்டனை, சொர்க்கம் - நரகம் என்ற கருத்துகளை உருவாக்குகிறது. சமய நெறிகளைப் பின்பற்றுவது ஒரு புண்ணிய மான செயல். அச்செயலைச் செய்தால் தெய்வத்தின் அருள் கிடைக்கும். இறந்த பிறகு சொர்க்க வாழ்வு கிடைக்கும் என்று இக-பர நன்மைகளை அறிவித்து மக்களைச் சமய நெறிகளின்படி ஒழுகச் செய்கிறது. மக்கள் சமய நெறிகளின்படி ஒழுகி வாழும் போது சமூகத்தில் ஒழுங்கு நிலைபெறுகிறது.

சமயம் நேரிடையாக மட்டுமல்லாமல் மறைமுகமாகவும் சமூக ஒழுங்கு நிலைபெற வழி வகுக்கிறது. சமூகக் கட்டுப்பாட்டை நிறுவி சமூக ஒழுங்கை நிலைநிறுத்தும் பணியில் சமயநெறிகள் மட்டுமல்லாமல் வழக்கடிப்பாடுகளும், ஒழுக்க நெறிகளும் (Moral Standards) கூட ஈடுபட்டிருக்கின்றன. சமயம் இந்த நெறிகளுக்குத் தன்னுடைய ஆதரவினைத் தந்து அவற்றைப் பலப்படுத்துகிறது. பலப்படுத்தப்பட்ட இந்த நெறிகள் வலுவான சமூகக் கட்டுப் பாட்டுக் கருவிகளாக அமைந்து சமூக ஒழுங்கை நிலை நாட்டு கின்றன. ஆரம்ப காலக் கிறித்துவர்கள், ஹீப்ருக்கள் முதலி யோரிடையே நிலவிய பாலின ஒழுக்க நெறிகள் சமய ஆதரவு பெற்றிருந்தன. 'பாலின ஒழுக்க நெறிகள் தெய்வக் கட்டளைகள். அவற்றை மீறுவது தெய்வக் கட்டளைகளை அவமதிப்பதாகும்' என்று கருதப்பட்டது. இதன் காரணமாக ஹீப்ருக்களும், ஆரம்ப காலக் கிறித்துவர்களும் மிகவும் கட்டுப்பாடான, ஒழுக்கமான பாலின வாழ்க்கையைக் கொண்டிருந்தார்கள். இன்னும் பல சமய அமைப்புகளில் களவு, அவதூறு, பிறரை வஞ்சித்தல், பிறர் மனை நயத்தல் (Adultery) முதலிய ஒழுக்கக் கேடான செயல்கள் சமய விரோதமான செயல்களாகக் கருதப்படுகின்றன. இதன் காரண மாக அச்செயல்களைத் தடைபடுத்தும் நெறிகள் வலிமை பெற்று வலுவாகச் செயல்படுகின்றன.

சமயம் சட்டங்கள்மீது தன்னுடைய செல்வாக்கைப் பயன் படுத்தி அவற்றைத் தனது கோட்பாடுகளுக்கும் நெறிகளுக்கும் ஏற்ப அமையச் செய்து, அவற்றின்மூலமும் சமூகக் கட்டுப்பாட்டை உண்டாக்குகிறது. சமயச் சார்புடைய நாடுகளில் சட்டங்கள் சமய கோட்பாடுகளுக்கும் நெறிகளுக்கும் ஏற்ப இயற்றப்படுகின்றன. அவற்றின்மூலம் சமயம் மக்களுடைய நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துகிறது. (உ-ம்.) இஸ்லாமிய நாடுகள். சமயச்சார்பற்ற நாடு களிலும்கூட சமயத்தின் செல்வாக்கு சட்டங்கள்மீது படிகின்றது. சட்டங்கள் சமய நெறிகளுக்கேற்ப அமைக்கப்படுகின்றன.

(3) சமயம் சமூக அமைப்பை (Structure) நிலைபெறச் செய்கிறது. ஒரு சமூகத்தின் அமைப்பு உண்மையில் சமயத்திற்குச் சம்பந்தமில்லாமல்தான் ஏற்படுகிறது. ஆனால் அது நிலைபெறுவதற்குச் சமயம் உதவுகிறது. உதாரணமாக, இந்தியாவில் சமூகம் சாதி அமைப்பு முறையின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்த அமைப்பு இந்து சமயத்தால் ஏற்படாவிட்டாலும்கூட, இந்து சமயத்தின் ஆதரவு காரணமாக நிலைநின்றது.

(4) சமயம் பிற சமூக நிறுவனங்கள் நிலைபெற உதவுகிறது. சமயம் ஒரு சமூக நிறுவனத்தின் ஆதரவு தரும்போது அந்நிறுவனம் வலுப்பெறுகிறது. சமயத்தின் ஆதரவு நீங்கும்போது அந்நிறுவனம் வலுவிழந்து போகிறது. ஜப்பானில் ஷிண்டோ சமயம், 'அரசன் சூரியனின் வழித்தோன்றல்' என்று அறிவித்து முடியாட்சி முறைக்கு ஆதரவு கொடுத்தபோது முடியாட்சி முறை நன்றாக வேரூன்றியிருந்தது. ஆனால் ஷிண்டோ சமயம் போய் பௌத்த சமயம் வந்தபோது, அந்தச் சமயம் முடியாட்சி முறைக்கு ஆதரவு தரவில்லை. இதன் பலனாக முடியாட்சி முறை வலுவிழந்து சீர்குலைந்தது.

அரசாங்க நிறுவனத்தைப் போலவே, பொருளாதார நிறுவனமும் தான் நிலைபெறச் சமயத்தின் ஆதரவைச் சார்ந்து நிற்கிறது. மாக்ஸ் வேபர் (Max Weber) முதலாளித்துவ முறை தோன்றுவதற்கும், நிலை நின்று வளர்ச்சி பெறுவதற்கும் பிராட்டஸ்டன்ட் சமயம் காரணமாக அமைந்தது என்று கூறுகிறார் (பார்க்க: அத்தியாயம்—2). சமயத்தின் எதிர்ப்பு இருந்தால் ஒரு பொருளாதார அமைப்பு முறை சரியாக வேரூன்றாது என்பதைக் கருத்தில் கொண்டுதான் ஜெர்மனியில் நாஸி அரசாங்கம் நாஸிசப் பொருளாதார அமைப்பு முறையை ஏற்படுத்தியபோது கிறித்துவச் சமயத்தைத் தடை செய்தது. அவ்வாறே சோவியத் யூனியனில் போல்ஷெவிக் அரசாங்கம் சமதர்ம முறையை அறிமுகப்படுத்திய போது பழமைப் பிடிப்புள்ள கிறித்துவத் திருச்சபைகளைத் தடை செய்தது.

(5) சமயம் பண்பாடு நிலைபெற்று நிற்பதற்கு உதவுகிறது. யூதர்கள் பல நாடுகளில் பரவிக் கிடந்தபோதிலும் தங்களுடைய சமயமான ஜூடாயிசத்தை விடாமல் கடைபிடித்ததால் அவர்களுடைய பண்பாடு சிதையாமல் அப்படியே இருந்தது. அவர்களுடைய தனித்தன்மையும் நீடித்தது.

இந்தப் பணிகள் அல்லாமல் வேறு சில பணிகளையும் சமயம் ஆற்றுகிறது. அமைப்புகள் (உ-ம். திருச்சபைகள், தேவஸ்

தானங்கள்) மூலம் அப்பணிகளைச் செய்கிறது. கல்வி நிலையங்களை நிறுவி மக்களுக்குக் கல்வி வழங்குகிறது. சமயச் சார்புடைய கல்வி மட்டுமல்லாமல், சமயச் சார்பற்ற கல்வியையும் சமயம் வழங்குகிறது. மருத்துவ மனைகள், சுகாதார நிலையங்கள் முதலியன நிறுவிப் பொதுமக்களுக்குச் சேவை செய்கிறது. வறட்சி, பஞ்சம் நில நடுக்கம், புயல், தீ, வெள்ளம் முதலியவற்றால் மக்கள் இடர் அடையும்பொழுது நிவாரணம் வழங்கிச் சேவை புரிகிறது. அகதிகள், அநாதைகள், கிழவர்கள், தொழுநோயாளிகள், கால்கை ஊனமுற்றோர், விழியிழந்தோர், வாழ்க்கையில் தவறியோர் முதலியவர்களுக்கு இல்லங்கள் அமைத்து அவர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு கொடுக்கிறது. சமயச் சித்தாந்தங்கள், வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடிய வழிகள், சமயப் பெரியோருடைய வாழ்க்கைகள் முதலியன சம்பந்தப்பட்ட நூல்களையும், வேதப்புத்தகங்களையும் வெளியிட்டு இலக்கியம் வளர உதவி செய்கிறது. சமயப் புத்தகங்கள் தத்துவம் வளரத் துணை செய்கின்றன. 'சமயம் விஞ்ஞானத்திற்கு முரணானது' என்று கூறப்பட்டாலும் விஞ்ஞான வளர்ச்சிக்கு சமயம் உதவுகிறது. விஞ்ஞான இதழ்கள் (உ-ம். Christian Science Reporter) நூல்கள் முதலியன வெளியிட்டும், விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தும் விஞ்ஞானம் வளரவும் சமயம் உதவுகிறது.

## சொத்து (Property)

பொருள் உற்பத்தி, பங்கீடு சம்பந்தமாய் அமைகிற அமைப்பு முறைகள், தொழிற்பகுப்பு, சொத்து முதலியன பொருளாதார நிறுவனங்களாகும். இவற்றில் சொத்து அடிக்கடி விவாதிக்கப் படுகிற முக்கியத்துவமும், சமூகத்தின் போக்குகளை நிர்ணயிப்பதில் பெரும் பங்கும் வகிக்கும் பெருமையும் கொண்டிருப்பதால் அதனை இங்கு விரிவாக ஆராய்வோம்.

சொத்து என்பது ஒருவர் தன்னுடைய பொருள் என்று தனிப்பட்ட உரிமை கொண்டாடும் ஒரு பொருளைக் குறிக்கும். ஒருவர் ஒரு பொருளைத் தன்னுடைய சொத்து என்று உரிமை கொண்டாடும்பொழுது அவருக்கு மட்டுமே அந்தப் பொருள் உரியதாக இருக்கும். அவருக்கு அதை வைத்திருக்க, அநுபவிக்க, தீர்த்துக்கட்ட தனிப்பட்ட உரிமை உண்டு. மற்றவர்கள் அதில் பங்கு பெற முடியாது. அவர்கள் அதை வைத்திருக்க, அநுபவிக்க தீர்த்துக்கட்ட முடியாது.

ஆயினும் ஒருவர் தன் சொத்தின்மீது கொண்டாடும் தனியுரிமை கட்டுப்பாடற்ற உரிமையாக இருக்காது. அதை அவர் அநுபவிக்கக்கூடிய உரிமைபெற்றிருந்தாலும், அவர் அதைத்

தன் மனம் போனவாறு கண்டபடிப் பயன்படுத்த முடியாது; பிறருடைய நலன்களுக்குக் குந்தகம் விளையும் வகையில் அதைப் பயன்படுத்த முடியாது. தன்னுடைய உடைமைதானே என்று ஒருவர் தன்னுடைய வீட்டுக்குத் தீ வைக்க முடியாது. ஏனெனில் அந்தத் தீ பரவி மற்ற வீடுகளையும் அழித்துவிடக்கூடிய அபாயம் இருப்பதால் அந்தச் செயல் அனுமதிக்கப்படுவதில்லை.

மேலும் தன் சொத்தின்மீது ஒருவர் பாராட்டும் உரிமை என்றைக்கும், காலாகாலத்துக்கும் அவரிடமே இருக்கும் என்பதில்லை. அரசாங்கம் சமூக நன்மையை முன்னிட்டு அந்த உரிமையைப் பறித்து அவருடைய சொத்தை எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய நிலை ஏற்படாத வரையில் ஒருவருக்கு அவருடைய சொத்தின்மீதுள்ள உரிமை நிலைத்தே இருக்கும்.

சொத்து இரண்டு வடிவங்களில் இருக்கும். பருப்பொருள் சார்ந்த சொத்தாகவும் (Material Property), பருப்பொருள் சாராத சொத்தாகவும் (Incorporeal property) இருக்கும். பருப்பொருள் சார்ந்த சொத்து தொட்டு உணரக்கூடியதாக இருக்கும். அது இரண்டு வகையில் இருக்கும். ஒன்று அசையும் சொத்து. இன்னொன்று அசையாச் சொத்து. அசையும் சொத்து என்பது ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு எடுத்துச் செல்லக்கூடிய முறையில் இருக்கும். (உ-ம்.) பணம், நகைகள், கருவிகள், ஆக்கப் பட்ட பொருள்கள், கால்நடைகள் முதலியன. அசையாச் சொத்து என்பது ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு எடுத்துச் செல்ல முடியாதவாறு நிலைப்பட்டதாக இருக்கும். (உ-ம்.) நிலம், வீடு. பருப்பொருள் சாராத சொத்து தொட்டு உணர முடியாதவாறு இருக்கும். (உ-ம்.) பதிப்புரிமை (Copy right), கண்டுபிடிப்பு உரிமை (Patent right), மாந்திரீகச் சூத்திரம், பாடல், பெயர் (Name) முதலியன.

தனி நபர்கள் மட்டுமே சொத்து வைத்திருப்பார்கள் என்பதில்லை. ஒரு குழு அதாவது ஒரு குடும்பம் அல்லது ஒரு குலம் சொத்து வைத்திருக்கலாம். ஒரு சமூகம்கூட சொத்து வைத்திருக்கலாம். ஆயினும் தனி நபர்கள் சொத்து வைத்திருக்கும் முறையே உலகில் அதிகமாகக் காணப்படுகிறது. இந்தத் தனியுடைமை முறை (private property system) எப்படித் தோன்றியது, வளர்ந்தது என்பதை இங்கு ஆராய்வோம்.

### தனியுடைமை முறையில் வளர்ச்சி

சமூகப் பரிணாமவாதிகள் பூர்வீகத்தில், சமூகத்தின் தொடக்க காலத்தில் முழுமையான பொதுவுடைமையே நிலவியது என்று

கூறுகிறார்கள். தங்களுடைய கூற்றுக்கு ஆதரவாகப் பல பழங் குடிச் சமூகங்களில் முழுமையான பொதுவுடைமையே நிலவுகிறது. எல்லாம் சமூகத்துக்கே சொந்தமாக இருக்கின்றன. எதுவும் தனியார் உடைமையில் இல்லை என்று எடுத்துக் காட்டுகிறார்கள். முழுமையான பொதுவுடைமை என்ற பூர்வீக நிலையிலிருந்து பல நிலைகளைத் தாண்டி வந்தே இன்றைக்கிருக்கிற தனியுடைமை முறை வந்தது என்று கூறுகிறார்கள்.

ஆனால் கோல்டன்வீசர் (Goldenweiser) என்ற அறிஞர் சமூகப் பரிணாமவாதிகளின் கூற்றை மறுக்கிறார். 'சமூகத்தின் தொடக்க காலத்தில் முழுமையான பொதுவுடைமை நிலவியது என்ற கருத்து ஒரு கற்பனைப் படைப்பு' என்று விமரிசனம் செய்கிறார். இக் கருத்துக்கு ஆதரவாய்ச் சான்றுகள் ஏதுமில்லை என்கிறார். சமூகப் பரிணாமவாதிகள் தங்கள் கருத்துக்கு உதாரணமாய்க் காட்டும் பழங்குடிச் சமூகங்களில் நிலம் சமூகத்தின் பொது உடைமையாக இருந்தபோதிலும், அசையும் பொருள்கள் தனி உடைமை களாகவே இருக்கின்றன என்று குறிப்பிடுகிறார். ஆகவே சமூகத்தின் தொடக்க காலத்தில் ஓரளவு தனியுடைமை இருந்திருக் கிறது என்று வாதிடுகிறார். ஹெர்பர்ட் ஸ்பென்சர் ஒரு சமூகப் பரிணாமவாதி. ஆயினும் அவரே, சமூகத்தின் தொடக்க காலத்தின் தனி மனிதர்கள் தாங்கள் செய்த பொருள்களைத் தங்களுடைய தனி உடைமைகளாகவே வைத்துக்கொண்டனர் என்கிறார்.

அறிஞர்கள் ஆரம்பத்தில் நிலங்கள் பொது உடைமையாக இருந்தன, அசையும் பொருள்கள் தனி உடைமைகளாக இருந்தன என்கிறார்கள். மக்கள் ஆரம்பத்தில் வேட்டையாடியும் மீன் பிடித்தும் வாழ்ந்து வந்தனர். அந்த நிலையில் வேட்டை நிலங் களும் மீன் பிடிக்கும் இடங்களும் எல்லோருக்கும் பொதுவாகவே இருந்தன. எல்லோரும் எந்த இடத்திலும் வேட்டையாடலாம், மீன் பிடிக்கலாம் என்ற நிலைமை இருந்தது. வேட்டையாடுதலும் மீன் பிடித்தலும் செய்தொழில்களாக இருந்த நிலையில் மக்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு நிலையான வாழ்க்கை இல்லாமல் இருந்தது. அத்தகைய நிலையில் அவர்கள் தங்களுக்கென்று நிலங்கள் சொந்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய நிலையே ஏற்படவில்லை. இடம்விட்டு இடம் போய்க்கொண்டிருந்தபொது அங்கங்கே இருந்த நிலங்களிலும், இடங்களிலும் வேட்டையாடியும் மீன் பிடித்துக்கொண்டும் இருந் தனர். ஆயினும் வேட்டைக் கருவிகளையும் மீன் பிடிக்கும் கருவி களையும் தங்களுடைய சொந்த உடைமைகளாகவே வைத்துக் கொண்டனர்,

பிறகு மக்கள் கால்நடை மேய்த்தலைத் தங்களுடைய செய் தொழிலாக மேற்கொண்டனர். அந்த நிலையில் மேய்ச்சல் நிலங்கள் எல்லோருக்கும் பொதுவாக இருந்து பயன்பட்டன. யாரும் எந்த நிலத்திலும் கால்நடைகளை மேய்க்கலாம் என்றிருந்தது. மேய்ச்சல் நிலங்களைத் தனியுடைமைகளாகக் கொண்டிருக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் கால்நடை மேய்த்தல் நிலையிலும் இடம் விட்டு இடம் போய் வாழும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். ஆகவே அவர்களுக்குச் சொந்தமாக மேய்ச்சல் நிலங்கள் வைத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படவில்லை. ஆயினும் கால்நடைகளைத் தங்களுடைய சொந்த உடைமைகளாக வைத்துக்கொண்டனர்.

கால்நடை மேய்த்தலை விடுத்து வேளாண்மையை மக்கள் மேற்கொண்டபொழுது சொத்து அமைப்பு முறையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. தனியுடைமைப் போக்கு மக்களிடம் வளரத் தொடங்கியது. வேளாண்மையில் கடுமையான உழைப்பு தேவைப்பட்டது. ஒருவன் கடுமையான உழைப்பின் மூலமே ஒரு பண்படாத நிலத்தைக் கழனியாக்க வேண்டியிருந்தது. இந்த நிலையில் ஒருவன் தன்னுடைய உழைப்பால் விளைந்த பொருளை —கழனியைத் தனக்கே உடைமையாக்கிக்கொள்ள நினைத்தான். கழனிக்குச் சம்பந்தப்படாத மற்றவர்கள் அதனை அநுபவிக்க அவன் மனம் இடம் தரவில்லை. இதன் காரணமாகத் தன் உழைப்பால் விளைந்த கழனியை அவன் தனக்கே சொந்தமாக்கிக் கொண்டு அதைத் தான்மட்டுமே அநுபவிக்கத் தொடங்கினான். இப்படியாக வேளாண்மை செய்யப்பட்ட நிலங்கள்— கழனிகள் அவற்றை உருவாக்கியவர்களுக்கே சொந்தமாக அமைந்தன. வேளாண்மையின் காரணமாக மக்களுக்கு ஒரு நிலையான வாழ்வு அமைந்தது. உழுத நிலத்தை அதன் அருகிலேயே இருந்து பேண வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவர்கள் நிரந்தரமாக ஒரே இடத்திலேயே தங்கி வேளாண்மை செய்து வந்தனர். நிலையான வாழ்வு அமைந்த நிலையில் ஒரே நிலத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. மீண்டும் மீண்டும் ஒரு நிலத்தைப் பயன்படுத்தி அந்த நிலத்தின்மீது தங்களுக்குள்ள உரிமையை — அது தங்களுடைய உடைமை என்பதை நிலை நாட்டிக்கொண்டனர்.

ஆயினும் தரிசு நிலங்கள் யாவருக்கும் பொதுவாகவே அமைந்தன. அவை எல்லோருக்கும் பொதுவான உடைமைகளாக இருந்தன. வழக்கம்போலக் கால்நடைகளும், உழவுக் கருவிகளும் தனிநபர் உடைமைகளாகவே இருந்தன.

வரலாறு தொடங்கிய காலத்தில், முடியாட்சிமுறை—தனிநபர் ஆட்சி முறை ஏற்பட்டதும், நிலங்கள் எல்லாம் அரசனுக்கே சொந்தம் என்று அறிவிக்கப்பட்டது. மக்கள் தாங்கள் வைத்திருக்கும் நிலங்களைத் தங்களுடைய உடைமைகள் என்று உரிமை பாராட்ட முடியாது. அவற்றை அரசனின் அனுமதியின்றி விற்கவோ, அடைமானம் வைக்கவோ, பிறருக்குத் தானமாக வழங்கவோ முடியாது. அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய உரிமை மட்டுமே அவர்களுக்கு உண்டு. அந்த உரிமையை அவர்களுடைய பிள்ளைகளும் பெற்றுக்கொள்ளலாம் என்ற அனுமதி இருந்தது.

இடைக்காலத்தில் (Middle Ages) அதாவது கி.பி.600—1500 வரையுள்ள வரலாற்றின் இடைநிலைக் காலத்தில் நிலங்கள் எல்லாம் பிரபுக்கள் கையிலும், சமய குருமார்களின் கையிலும் போய்ச் சேர்ந்தன. அவை பெரும் பண்ணைகளாக (Manors) அமைக்கப்பட்டு வேளாண்மையைச் செய்வதற்குப் பண்ணையடிமைகள் (Serfs) என்ற தொழிலாளிகள் அமர்த்தப்பட்டார்கள். இப்படி நிலங்கள் எல்லாம் பிரபுக்களிடத்திலும், சமய குருமார்களிடத்திலும் குவிந்து கிடந்த அமைப்பு முறையை நிலமானிய முறை (Feudal system) என்கிறார்கள்.

பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிறகு நிலமானிய முறை வீழ்ச்சியடைந்தபோது பிரபுக்களுடைய ஆதிக்கமும், சமய குருமார்களுடைய ஆதிக்கமும் சரிந்து வீழ்ந்தபோது பண்ணை அடிமை முறை ஒழிந்தது. பண்ணைகள் சிதறுண்டு சிறுசிறு நிலங்களாக மாறின. நிலங்களை உழுது வாழ்ந்தவர்கள் அவற்றுக்குச் சொந்தக்காரர்களாக மாறினர்.

முதலாளித்துவ முறை சமய ஆதரவுடன் தோன்றி வளரத் தொடங்கியபோது தனியுடைமை முறை வேகமாக வளரத் தொடங்கியது. தொழிற் புரட்சி ஏற்பட்ட பிறகு முதலாளித்துவ முறை நிலைநிறுத்தப்பட்டு, அதன் பலனாகப் பல வழிகளிலும் தனியுடைமைகளைத் திரட்டும் போக்கு வளர்ந்தது. நிலங்கள், வீடுகள், கட்டடங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்து வாகனங்கள், நகைகள், பணம் என்ற பருப்பொருளான பொருள்களையும், பதிப்புரிமை, கண்டுபிடிப்பு உரிமை என்ற பருப்பொருளற்ற பொருள்களையும் திரட்டும் போக்கு வளர்ந்தது. 'தனியுடைமை வைத்துக்கொள்வது இயற்கை உரிமை' என்ற சித்தாந்தம் ஏற்பட்டு, அதன் காரணமாகத் தனியுடைமை நிறுவனம் உறுதியாக நிலைநின்றது.

**தனியுடைமையின் பணிகள்**

தனியுடைமை பல பணிகளை ஆற்றுகிறது. ஒரு மனிதன் தனக்கென்று சொத்துகள் வைத்திருக்கும்போது கவலையில்லாமல் வாழ்கிறான். அவற்றைக்கொண்டு தன்னுடைய தேவைகள், ஆசைகள் முதலியவற்றை நிறைவேற்றிக் கொள்ளுகிறான். வாழ்வில் ஒரு திருப்தி அவனுக்குக் கிடைக்கிறது. மேலும் எதிர் காலத்தைப் பற்றிய கவலையில்லாமல், ஒரு பாதுகாப்பு உணர்வுடன் வாழ்கிறான்.

தன்னுடைய குடும்பத்தின் உறுப்பினர்களுடைய தேவைகளையும் ஆசைகளையும் அவனால் நிறைவேற்ற முடிகிறது. அவர்களைத் திருப்திப்படுத்தி மகிழ்ச்சியுடன் வாழ வைக்க முடிகிறது. தங்களுடைய தேவைகளும் ஆசைகளும் நிறைவேறித் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகிற குடும்பத்தினர் அவனிடம் பற்றுதலாக நடந்துகொள்ளுகிறார்கள்.

சொத்து சமூக அந்தஸ்துக் காரணியாகவும் அமைகிறது. சொத்தைக் கொண்டு ஒருவருடைய அந்தஸ்து மதிப்பிடப் படுகிறது. சொத்துடைய ஒருவன் மதிப்பும் செல்வாக்கும் பெறுகிறான். சொத்தில்லாதவன் மதிப்பு அடைவதில்லை.

சொத்தினால் மகிழ்ச்சியும், வாழ்வில் பாதுகாப்பும், மற்றவர்களிடமிருந்து மதிப்பும், சமூக அந்தஸ்தும் கிடைக்கும்போது ஒருவன் சொத்து சேர்க்கப் பெரிதும் முயல்கிறான். சொத்து சேர்க்கவேண்டும் என்ற ஆர்வம் அவனை உழைப்பில் ஈடுபாடு காட்டிக் கடினமாகப் பணி புரிய வைக்கிறது. அவனுடைய பணியின் அளவும் தரமும் உயர்கின்றன.

மேலும், தொழிற்சாலைகள், எந்திரங்கள் எல்லாம் அவற்றை நிறுவியவர்களுக்கே உரிமையானவை என்ற நிலை இருக்கும்போது, உரிமையாளர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளில் உற்பத்தித் தொழில் வளர்ச்சியடையவும், எந்திரங்கள் பழுதற அமைந்து பணிகள் தடையின்றி நடைபெறவும் ஆர்வம் காட்டுகிறார்கள். இதன் காரணமாக உற்பத்தி சீராக வளர்ச்சி விகிதத்தில் முன்னேறுகிறது.

மக்களுடைய உழைப்பின் அளவும் தரமும் உயரும்போதும் தொழிற்சாலைகள் எந்திரங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் உற்பத்தியில் அதிக ஈடுபாடு காட்டும்போதும் உற்பத்தி அதிகரிக்கிறது. பொருள்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. பொரு

ளாதாரம் மேம்பாடு அடைகிறது. மக்களுடைய தேவைகளும் நிறைவேறி சமூகம் செழிப்படைகிறது.

ஆயினும் தனியுடைமை முறையினால் சமூகத்தில் சொத்துடையவர்கள் சொத்து இல்லாதவர்கள் என்ற பிரிவுகள் ஏற்பட்டுச் சமூகம் பிளவுபடுகிறது. செல்வம் ஒரு சிலர் கையில் குவியும் பொழுது பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அதிகரிக்கின்றன. செல்வம் குவிக்கவேண்டும் என்ற ஆசை காரணமாகப் பலர் மற்றவர்களுடைய உழைப்பைச் சுரண்டி, அவர்களுக்குரிய ஊதியத்தைக் குறைத்துத் தங்களுடைய இலாபத்தைப் பெருக்கிக் கொள்ளுகின்றனர். மக்களிடம் சுயநலப் போக்கு அதிகரிக்கிறது. மற்றவர்களுடைய நலன்கள் பாதிக்கப்பட்டாலும் கவலையில்லை. தங்களுடைய நலன்கள் உயரவேண்டும் என்ற முனைப்பில் சொத்து சேர்க்க முயல்கிறார்கள். இதன் காரணமாகச் சமூகத்தில் பூசல்களும் சண்டைகளும் ஏற்பட்டுச் சமூக அமைதி கெடுகிறது.

கல்வி (Education)

ஒரு சமூகம் தொடர்ந்து அமைவுறுவது அதனுடைய மரபுரிமை (Heritage) இளைய தலைமுறையினருக்குச் செல்லுவதைப் பொறுத்திருக்கிறது. இளைய தலைமுறையினருக்குச் சமூகத்தின் வாழ்க்கை வழிகளும் நெறிகளும் (மரபுரிமை) கற்பிக்கப்பட்டு அவர்கள் அவற்றின்படி ஒழுகி நடந்தால்தான் சமூகம் தொடர்ந்து அமைவுற முடியும். சமூகத்தின் வாழ்க்கை வழிகளும் நெறிகளும் இளைய தலைமுறையினருக்குப் போகாமல் நின்றுவிட்டால் சமூகம் இயங்க முடியாது. தொடர்ந்து அமையுற முடியாது. இத்தகைய இன்றியமையாத தேவைக்கு முக்கியமாக வேண்டியது கல்வியே.

கல்வி என்பது ஒரு சமூகம் தன்னுடைய இளைய தலைமுறையினருக்குத் தன்னுடைய மரபுகள், வழக்கங்கள், விழுமியங்கள் முதலியவற்றைச் (அதாவது பண்பாட்டை) செலுத்த முயலும் செயற்பாங்கு ஆகும். வேறுவகையில் சொன்னால், கல்வி என்பது ஒரு சமூகத்தில் அதனுடைய பண்பாடு ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குச் செலுத்தப்படும் செயற்பாங்கு ஆகும்.

ஆக, கல்வி என்பது இளையதலைமுறை தன்னுடைய மூத்த தலைமுறையினரிடமிருந்து தன்னுடைய சமூகத்தின் பண்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாங்கைக் குறிக்கும் என்பது தெளிவு.

கல்வி இரண்டு வகைப்படும். ஒன்று விதிமுறை சாராத கல்வி (Informal Education). எந்த விதிமுறைகளுக்கும் உட்படாமல் இயல்பாகப் பிறர் நடந்துகொள்ளுவதைப் பார்த்து, பிறர் கூறுவதைக் கேட்டுச் சமூகத்தின் மரபுரிமையைத் (பண்பாட்டை) தெரிந்து கொள்ளுகிற செயற்பாங்குக்கு விதிமுறை சாராத கல்வி என்று பெயர். இன்னொன்று விதிமுறை சார்ந்த கல்வி (Formal Education). கல்வி நிலையங்களுக்குச் சென்று வகுப்புகளில் கலந்து கொள்வது, நேரப்படி போய்வருவது, விரிவுரைகளைக் கேட்பது, தேர்வுகள் எழுதுவது என்ற விதிப்படியான நடவடிக்கைகளைச் செய்து ஒரு விதிமுறைப்படி அமைந்த பாடத்திட்டத்தின்மூலம் சமூகத்தின் மரபுரிமையைக் கற்றுக்கொள்ளும் செயற்பாங்குக்கு விதிமுறை சார்ந்த கல்வி என்று பெயர்.

பழங்குடிச் சமூகங்களில் விதிமுறை சாராத கல்வியே அமைகிறது. இளைய தலைமுறையினர் மூத்த தலைமுறையினருடன், அதாவது பெற்றோர்கள், மூத்த உறவினர்கள், பெரியோர்கள் முதலானோருடன் தொடர்புகள் கொள்ளும் போது, அத்தொடர்புகள் மூலமாகத் தங்களுடைய சமூகத்தின் வாழ்க்கை வழிகள், மரபுகள், விழுமியங்கள், நெறிகள், முதலானவற்றைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். கல்வியறிவு முதிர்ந்த நாகரிகச் சமூகங்களில் விதிமுறை சாராத கல்வியோடு விதிமுறை சார்ந்த கல்வியும் அமைகிறது. அச்சமூகங்களில் இரண்டு முறைகளின் மூலமும் இளைய தலைமுறையினர் தங்கள் சமூகத்தின் பண்பாட்டைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

குழந்தைகள் முதலில் விதிமுறை சாராத கல்வியின் மூலமே தங்கள் சமூகத்தின் பண்பாட்டை அறிந்துகொள்ளுகிறார்கள். வீட்டில் பெற்றோர்களும் மூத்தவர்களும் தங்கள் அறிவுரையின் மூலமும் தங்கள் நடத்தையின் மூலமும் குழந்தைகளுக்குப் பண்பாட்டைக் கற்றுத் தருகிறார்கள். வீட்டிற்கு வெளியே பெரியோர்களும் விளையாட்டுத் தோழர்களும் சொல்லிக் கொடுக்கிறார்கள். பிறகு பள்ளிக்கூடம் போகும் நிலையை அடைந்ததும் குழந்தைகள் விதிமுறை சார்ந்த கல்வியின் மூலம் தங்கள் சமூகத்தின் பண்பாட்டை மேலும் அறிந்து கொள்ளுகிறார்கள். பாடத்திட்டங்களின் அடிப்படையில் ஆசிரியர்கள் கற்றுத்தரும் கல்வியின் மூலம் பண்பாட்டை மேலும் நன்கு அறிந்துகொள்ளுகிறார்கள்.

**கல்வியின் பணிகள்**

கல்வி பல பணிகளை ஆற்றுகிறது. அவை:

(1) ஏமீல் டர்க்ஹீம் கல்வியை 'இளைய தலைமுறையினரைச் சமூகமயமாக்கும் செயற்பாங்கு' என்று குறிப்பிடுகிறார்.

கல்வியின் மூலம் இளைய தலைமுறையினர் தாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், பிறரிடம் எப்படிப் பழகவேண்டும், எந்தக் காரியங்களைச் செய்யலாம் எந்தக் காரியங்களைச் செய்யக் கூடாது, எப்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் கற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படிக் கற்றுக் கொண்டு சமூகத்தில் அதன்படி ஒழுகுகிறார்கள். இவ்வாறு கல்வி இளைய தலைமுறையினரைச் சமூகத்தோடு இயைந்து ஒட்டி ஒழுகி வாழச் செய்கிறது. அதனால்தான் டர்க்ஹீம் கல்வியை 'இளைய தலைமுறையினரைச் சமூகமயமாக்கும் செயற்பாங்கு' என்கிறார்.

(2) அதே நேரத்தில் கல்வி இன்னொரு பணியும் ஆற்றுகிறது. சம்னர் சொல்லுவதைப் போல, கல்வி மனிதர்களுக்கு 'திறனாயும் திறமையைக் (Critical faculty) கொடுக்கிறது. எவற்றையும் அலசி ஆராய்ந்து எந்த அம்சங்கள் ஏற்கத் தக்கவை, எந்த அம்சங்கள் ஏற்கத் தகாதவை என்று கண்டுபிடிக்கக்கூடிய திறமையைக் கொடுக்கிறது. எவற்றையும் திறனாயும் திறமை அமையும்போது மனிதர்கள் தாங்கள் கற்றுக்கொள்கிற பண்பாட்டு அம்சங்களில் எவை பொருத்தமானவை, நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றவை, காலத்துக்கு ஒத்தவை என்று இனங்கண்டு அவற்றையே ஏற்றுக் கொள்ளுகிறார்கள். பதுமை போன்று தங்களுக்குக் கற்பிக்கப் படுவதையெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. கல்வியே இதற்குக் காரணமாக அமைகிறது.

(3) கல்வியறிவு பெற்ற மக்கள் காலத்துக்கு ஒவ்வாதவை, ஏற்றுக்கொள்ளத் தகாதவை என்று விலக்கி வைக்கிற பண்பாட்டு அம்சங்கள் காலப்போக்கில் வழக்கிலிருந்து மறைந்துவிடுகின்றன. ஆயினும், கல்வியின் மூலமாக அறிவு வளர்ச்சி ஏற்படுவதால் மக்கள் புதிய பண்பாட்டு அம்சங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். அந்தப் புதிய அம்சங்கள் வழக்கில் இடம் பெறுகின்றன. பழையன கழிந்து, புதியன புகுவதால் பண்பாடு தேக்கம் (Stagnation) அடையாமல் மாற்றமடைந்து வளர்ச்சியடைகிறது.

(4) கல்வியினால் அறிவு வளர்கிறது. அறிவு வளர்ச்சி யினால் புதிய தொழில்நுட்பங்கள் தோன்றுகின்றன. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஏற்படுகின்றன. இதன் பலனாகச் சமூகத்தில் முன்னேற்றம் அமைகிறது. அதனால்தான் ஆகஸ்ட் கோம்ட், 'முன்னேற்றத்துக்கு அடிப்படை கல்வியே' என்றார்.

(5) லெஸ்டர் வார்ட் (Lester Ward) 'கல்வி அறிவை வளர்க் கிறது. அதனால் மக்கள் சமூகக் கேடுகளை ஆராய்ந்து அவற் றுக்குத் தீர்வு காண முடிகிறது' என்கிறார்.

இவ்வாறு கல்வி தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் பல பணிகளை ஆற்றுகிறது. குறிப்பாக, பண்பாடு தலைமுறை தலைமுறையாய் அமைவுறவும், சமூக முன்னேற்றம் ஏற்படவும் உதவுகிறது.

## வினாக்கள்

1. திருமணம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, அதனுடைய வகைகளைக் குறிப்பிடுக.
2. குடும்பம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, அதனுடைய வகைகளைக் குறிப்பிடுக.
3. குடும்பத்தின் சிறப்பியல்புகள் யாவை?
4. குடும்பத்தின் பணிகளை விவரிக்கவும்.
5. அரசாங்கம் என்றால் என்ன? அதனுடைய வடிவங்கள் யாவை?
6. அரசாங்கத்தின் உறுப்புகள் யாவை?
7. அரசாங்கத்தின் பணிகளை விவரிக்கவும்.
8. சமயம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, அதனுடைய அம்சங்களைக் குறிப்பிடுக.
9. மந்திரம் என்றால் என்ன? அதனுடைய வகைகள் யாவை?
10. சமயத்துக்கும் மந்திரத்திற்கும் உள்ள உறவை விளக்குக.
11. சமயத்துக்கும் மந்திரத்துக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துக.
12. சமயம் தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும் ஆற்றும் பணிகளைச் சுருக்கமாக விவரிக்கவும்.
13. சொத்து என்றால் என்ன? அதனுடைய வடிவங்கள் யாவை?
14. தனியுடைமை முறையின் வளர்ச்சியை ஆராய்க.
15. தனியுடைமையின் பணிகளை விமர்சிக்கவும்.
16. கல்வி என்றால் என்ன என்பதை விளக்குக. அதனுடைய வகைகள் யாவை?
17. கல்வி ஆற்றும் பணிகளை விவரிக்கவும்.

# 6. சமூகமயமாகுதல்

தனி மனிதன் தான் வாழும் சமூகத்தில் உறுப்பினனாக எடுத்துக் கொள்ளும் முயற்சி — பயிற்சி — இதனைச் சமூகமய மாகுதல் என்றுக் குறிப்பிடலாம். சமூகத்தின் வரையறைகள், வாழ்க்கைமுறை, வழக்காறுகள் இவைகளுக்குத் தக்கவாறு தன்னை அவன் மாற்றி நடத்திக்கொள்கிறான். பல சூழ்நிலை களில் அவன் தன்னை மற்றவர்கள் பாராட்டவும் போற்றவும் அனுமதிக்கவும் அல்லது சகித்துக்கொள்ளவும் எடுத்துக்கொள்ளும் முயற்சியே சமூகமயமாகுதல் என்று 'கில்லன் & கில்லன்' கூறுகின்றனர். வில்லியம் ஆக்பர்ன் என்ற அறிஞர் 'ஒருவன் தான் வாழும் சமூகத்தின் சட்டதிட்டங்கள், கோட்பாடுகள், விதிகள், வரையறைகள் இவைகளுக்குத் தக்கவாறு தன்னுடைய நடத்தை, எண்ணங்கள் இவைகளை அமைத்துக்கொள்ளும் முறையே சமூகத்தோடு ஒன்றியங்கும் பான்மை' என்று கூறுகிறார்.

இவ்வாறு தனி மனிதன் சமூகத்தில் உறுப்பினனாக அனுமதிக் கப்பட சமூகத்தின் குழுவின் மற்றவர்கள் அனுமதிக்கத் தக்க வகையிலும், விரும்பத்தக்க வகையிலும் மதிக்கத்தக்க வகையிலும் தன்னைத் தயார் செய்துகொள்ளும்பொழுது சமூகத்தில் நாட்டவர் வழக்குகள், வழக்கடிபாடுகள், உறுதியீடுகள் இவற்றைக் கற்றுக்கொண்டும் அதன்படி நடக்கவும் முயற்சி செய்கிறான். இவ்வாறு செய்யும்பொழுது தன் சமூகத்தின் பண்பாட்டின் முக்கிய அம்சங்களைத் தெரிந்துகொள்கிறான்.

அவன் கற்றுக்கொள்வது அவனுடைய தாய்மொழி மட்டுமல்ல; பல்வேறு திறமைகளும் ஆகும். அவன் படிப்படியாக அந்தக் குழுவின் வாழ்வில் பங்கேற்று தன்னால் இயன்றதைச் செய்து மற்றவர்களுடைய போற்றுதலையும் பெறுகிறான்.

இந்தப் பயிற்சியை அவன் சிறு வயது முதற்கொண்டே பெற்றோர்களிடமிருந்தும் அடுத்து உடன்பிறப்புகளிடமிருந்தும் மேலும் குடும்பத்தில் வாழுகின்ற ஏனையோரிடமிருந்தும் பெற்றுக்கொள்கிறான். குடும்பத்தில் இருக்கின்ற வேலை

யாளிடமிருந்தும்கூட அவர்கள் பேசும் மொழி, நடையுடை பாவனைகளையும் கற்றுக்கொள்கிறான்.

தாய்தந்தையர் நீண்டநேரம் வெளியே வேலை பார்க்க, குழந்தை செவிலித் தாயாரால் வளர்க்கப்பட்டு அது செவிலித் தாயிடம் காணப்படும் பேச்சுமுறை, சில பிரத்தியேக வார்த்தைகள் இவற்றை உபயோகிப்பதைக் காண்கிறோம். மேலும், நண்பர்களுடன் விளையாடும்போதும், பழகும்போதும், வகுப்பில் ஆசிரியரிடம் பாடம் கற்கும்போதும், இன்னும் இதுபோன்ற மற்ற சூழ்நிலைகளிலும் குழந்தைகள் மற்றவர்களின் பேச்சு முறைகள் இவைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து கற்றுக்கொள்கின்றன— இவற்றைத் தன்னுடையதாக்கிக் கொள்கின்றன. அதை அப்படியே மீண்டும் சொல்லவும் முயற்சி செய்கிறது.

வானொலி கேட்கும்போதும், திரைப்படம், தொலைக்காட்சி பார்க்கும்போதும் பேச்சு முறைகளையும் பழக்கவழக்கங்களையும் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. இவ்வாறு கற்றுக்கொள்வதை ‘சமூகமயமாகுதல்’ என்று கூறுகிறோம்.

சமூகமயமாகுதலின் நோக்கமும் இன்றியமையாத் தன்மையும்

சமூகமயமாகுதலின் நோக்கங்களாவன:

1. புதிய உறுப்பினர்களுக்கு அவன் வாழும் சமூகத்தின்மீது நம்பிக்கை—அந்த சமூகத்தின் இலட்சியங்கள்மீது பிடிப்பு கொண்டு சமூகத்துடன் இசைவான நம்பிக்கையை வளர்த்துக் கொள்வது.

2. ஒரு தலைமுறையினர் இளந்தலைமுறையினர்க்குத் தங்கள் சமூகத்தின் பண்பாடுகளைப் போதித்தல்.

3. ஒரு சமூகத்தில் வாழ்பவர்கள் அதன் கொள்கை கோட்பாடுகள் பிடிக்காததனால் விரக்தி மனப்பான்மையுடன் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுத் தங்களை மாய்த்துக்கொள்வதைத் தடுத்தல். இக் கருத்தினை ஏமில் டர்க்ஹீம் குறிப்பிடுகின்றார்.

4. ஆளுமை வளர்ச்சிக்கு உதவுதல்—சமூகமயமாகுதல் இல்லாமல் ஆளுமை வளர்ச்சியில்லை. ஒருவன் தன் ஆளுமைத் தன்மைகளான குணாதிசயங்கள் பழக்கவழக்கங்கள் மனோபாவம் ஆகியவை சமூக மயமாகுதலினால் உருவாகின்றன. இரட்டைக் குழந்தைகள் இரண்டு வேறுபட்ட சமூகங்களில் பிரிக்கப்பட்டு வளர்க்கப்படுவார்கள் எனில் வேறுபட்ட குணாதிசயங்களை

வெளிப்படுத்துவர் என்று எச். எச். நியூமன் ஆராய்ந்து கண்டுள்ளார். இதன்மூலம் சமூகமயமாகுதல் மூலமே ஆளுமை வளர்ச்சியடைகிறது என்று உணர்ந்துகொள்ளலாம்.

சமூகமயமாகுதலுக்கான காரணங்கள்

ஒரு குழந்தை சமூகமயமாகுதலின்மூலம் வளர்ச்சியை அடைந்துகொள்வதற்குத் தனது பிறவிக்குணங்களும் (Heredity) சூழ்நிலையும் (Environment) காரணங்களாக உள்ளன என்று பொதுவாகக் கூறப்படுவதுண்டு. இவற்றுள் எது விஞ்சி நிற்கின்றது என்பதிலும் கருத்துவேறுபாடுகள் உள்ளன. பல்வேறு ஆராய்ச்சிகளின் விளைவாகக் கீழ்க்காணும் காரணிகள் சமூகமய மாகுதலுக்கு முக்கியமான காரணிகள் என்று கருதப்படுகின்றன. அவையாவன :

1. ஒருவனது பிறவிக் குணங்கள்.
2. ஒருவன் வாழும் பண்பாடு.
3. ஒருவனுக்கு ஏற்படும் தனிச் சிறப்பான அனுபவங்கள்.

இவற்றினைச் சுருக்கமாகக் கீழ்க்காணும் வகையில் விளக்கலாம்:

1. பிறவிக் குணங்கள் (Heredity): பிறவிக் குணங்களை ஒருவன் தனது பரம்பரையை ஒற்றிப் பெற்றுக்கொள்கிறான்; அவனது உருவ அமைப்பு இவ்வகையில்தான் ஏற்படுகின்றது. எல்லா மனிதர்களும் இவ்வகையில் ஒரேமாதிரி இருந்தபோதிலும் குணங்களில் வேறுபாடு கொண்டவர்களாக இருப்பதைக் காணலாம். குடும்பத்தின் பரம்பரைத் தன்மைகளை ஒற்றி மனிதர்களுக்கு குணங்கள் உருவாவதும் உண்டு.

2. பண்பாட்டுச் சூழல் (Cultural Environment): ஒருவன் வாழும் பண்பாட்டுச் சூழ்நிலையை விளக்குவது என்பது கடினமாகும். ஒரே பண்பாட்டுச் சூழலில் வாழ்பவர்களுக்கு அது ஒரே மாதிரியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று கூறமுடியாது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபாடான தன்மையைப் புலப்படுத்தும். வயது வேறுபாடு கொண்டவர்களிடையேயும் பல வகுப்புகளிடையேயும் (ஒரே பண்பாட்டில்) வேறுபட்ட முறை நிலவுவதும் உண்டு.

3. தங்களுக்கே உரித்தான அனுபவங்கள் (Unique Experience) ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் அவருக்கே உரித்தான சில

அனுபவங்கள் ஏற்படுகின்றன. பிறருடன் பழகும்போது இதன் காரணமாகச் சில கருத்துகளையும் வெறுப்புகளையும் விருப்பங் களையும் ஒருவன் பெற்றுக்கொள்கிறான். இத்தகைய தன்மைகள் அவன் வாழும் சமூகத்தில் பெரும்பான்மையோர் கொண்டிருக்கும் தன்மைகளிலிருந்து வேறுபட்டும் காணப்படக்கூடும்.

சமூகமயமாக்கும் செயல்கள்

**1.** குடும்பம்: சமூகமயமாவதற்கு முதலாவது இடம் குடும்பமே. சிறு குழந்தை அடிப்படைக் கருத்துகள் பலவற்றையும், பல செய்கைகளையும், கட்டுப்பாடுகள் சட்ட திட்டங்கள் பலவற்றையும் குடும்பத்திலேயே கற்றுக்கொள்கின்றனர்.

இவற்றைக் குழந்தைகள் அவசியம் அறிந்து கடை பிடிக்கவேண்டும் என்ற எண்ணத்திலேயே பெற்றோர்கள் இவற்றைக் கற்றுக் கொடுக்கின்றனர். குடும்பத்திலுள்ள மற்ற வர்களும் அதாவது பெரியோர்களாக விளங்கும் தாத்தா, பாட்டி மாமா, மாமி ஆகியோரும் இவற்றைக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

வழிபாடு முதலிய சமயம் சம்பந்தப்பட்ட ஆசாரங்களையும், உண்மை பேசுதல் முதலிய நீதி நெறிகளையும், மரியாதையாக நடந்துகொள்ளும் நடத்தைமுறைகளையும் குழந்தைகள் பெரியோர்களிடமும் மற்றவர்களிடமும் குடும்பத்தில் கற்றுக் கொள்கின்றனர்.

மேலும், குடும்பமே குழந்தையின் பொழுதுபோக்கு விளையாட்டு இவற்றிற்கு ஓர் அடிப்படையான தொடக்கக்கூட மாக அமைகிறது. குடும்பத்தில் நடக்கும் சடங்கு வினைமுறைகள், சமய நடவடிக்கைகள் விழாக்கள் முதலியவை குழந்தைகள் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள உதவுகின்றன. குழந்தைகள் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் அவற்றை விளையாட்டாகவும் பொழுதுபோக்காகவும் அவற்றில் பங்கேற் றாலும் பல விரும்பத்தக்க விஷயங்களைக் கற்றுக்கொள்கின்றன.

கல்வியறிவு பெறுதலைப் பொறுத்தவரை, குடும்பத்தில் தரும் பயிற்சியே குழந்தையின் பிற்காலப் பள்ளிக்கூடக் கல்விப் பயிற்சிக்கு அடித்தளமாக அமைகிறது. பெற்றோர்கள் குழந்தைகளுக்கு அடிப்படையான கல்வியைத் தருகிறார்கள். நல்ல பழக்க வழக் கங்களையும் நடத்தை நெறிகளையும் கற்றுத் தருகிறார்கள். அவர்கள் தரும் கல்விப் பயிற்சி குழந்தைகளுடைய ஒழுகலாறு ஒழுங்குற அமையக் காரணமாக அமைகிறது.

சுகாதாரப் பழக்கவழக்கங்கள், மற்றவர்களுடன் நடந்து கொள்ளும் முறை முதலியவற்றைப் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர். பெற்றோர்கள் தங்கள் நடத்தையின்மூலம் குழந்தைகளுக்கு முன் மாதிரியாக விளங்கு கின்றனர். அவர்களுடைய பழக்கவழக்கங்களை நடத்தையைப் பார்த்தே பெரும்பாலும் குழந்தைகள் கற்றுக்கொள்ளுகிறார்கள். பெற்றோர்களிடம் பெறும் பயிற்சியே பிற்காலத்தில் குழந்தைகள் பள்ளிக்கூட ஆசிரியர்கள், சமய குருமார்கள், காவலர்கள், மற்ற வர்கள் ஆகியோரிடமும் பெறும் பயிற்சிக்கு அடிப்படையாக அமைகிறது. பெற்றோரால் முறையாகப் பயிற்றுவிக்கப்படாத குழந்தைகள் பின்னாளில் பிரச்சினைக்குரிய மனிதர்களாய் மாறிச் சமூகத்துக்கு ஒரு பாரமாக அமைகிறார்கள்.

ஒரு செயலைச் செய்யும்போது அது வேண்டத்தக்கது என்று பெரியோர்கள் குழந்தையைப் பாராட்டுகின்றனர். தீதான செயல்களினில் கண்டிக்கின்றனர். இதனால் பாராட்டுதல், தண்டித்தல் ஆகியவற்றின்மூலம் குழந்தை நல்லது எது, தீயது எது என்று குடும்பத்தின்மூலம் உணர்ந்துகொள்கின்றது.

குழந்தைகள் நாளடைவில் குடும்பத்துக்கு வெளியே அமைந் திருக்கிற குழுக்களுடன் தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளு கின்றனர். அந்தத் தொடர்புகள் அவர்கள் மேலும் புதிய பழக்க வழக்கங்களையும் புதிய திறமைகளையும் கற்றுக்கொள்ளவும், மனப்பக்குவம் பெறவும் உதவுகின்றன. சுயமாகத் தங்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய வலிமையையும் பெறுகிறார்கள்.

2. நண்பர் குழாம் : குழந்தைகளுக்கு நண்பர் குழாம் (விளை யாட்டுக் குழாம், ஒரே வயதினர் குழாம்) என்று பல அமைப்புகள் தானாகவே இயங்கிவருவதைக் காண்கிறோம். இந்தக் குழாம்கள் இன்றியமையாத பலவற்றைச் செய்கின்றன. கீழ்க்காணும் சில :

1. விரும்பத்தக்க செயல்.
2. விழுமிய எண்ணங்கள்.
3. உயர் நோக்கங்கள்.

இந்தக் குழாம்கள் மூலமாகச் சமூகத்திலே அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை ஒருவன் அறிந்து நடக்க ஏதுவாகிறது. இந்தக் குழாம்களே குடும்பத்தோடு ஒப்பிடும்போது இளைஞர்களுக்குச்

சம உரிமை அந்தஸ்து, விரும்பிய காரியத்தைச் செய்யத் துணிவு போன்ற வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதே நேரத்தில் குடும்பத்தைப் பார்க்கும்போது பெற்றோர்களுடைய ஆதிக்கம், அனுமதி, வழக்கமாக சமூகத்திலே அனுமதிக்கப்படுகின்ற செயல் முறை ஆகியவைகளைப் பின்பற்றவேண்டிய அவசியமும் பணிவுடன் நடக்க வேண்டிய நிலைமையையும் காண்கிறோம்.

கூட்டுறவுத் தன்மையின் பலன் இக் குழாத்தின்மூலம் கிடைக்கிறது. சிலசமயம் வலிமையைப் பயன்படுத்தவேண்டும் என்பதையும் ஒருவன் இங்குதான் அறிந்துகொள்கிறான். மனிதாபிமானம் முதலியவற்றையும் கற்றுக்கொடுக்கிறது. பள்ளி, குழந்தைகள் அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஒரு தேர்ந்த சூழ்நிலையை அமைக்கும்போது பள்ளிக்கூடம் ஒரு சிறந்த சமூகமயமாக்கும் செயலியாக அமைகிறது.

பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்து குழந்தைகள் அவரிடமிருந்து கற்றுக்கொள்வது அதிகம். குழந்தைகள் அவர்களின் நடையுடை பாவனைகளையும் பழக்க வழக்கங்களையும் ஒழுகலாற்று முறைகளையும் பார்த்து அவற்றைப் பின்பற்றுகின்றனர்.

3. அண்டையங்கள் (Neighbourhood) : குழந்தைகள் நடக்கப் பயின்றுவிட்டால், வீட்டைவிட்டு வெளியே வந்து அண்டை அயலார்களுடன் பழகிக்கொள்ளும். குழந்தைகள் 'கால் முளைத்து' விட்டப் பருவத்தை அடையும்போது பல வற்றை அண்டை அயலார்மூலம் கற்றுக்கொள்கின்றனர். குடும்பத்தைச் சாராத வெளியார்கள் கருத்துகளையும் வழக்கங்களையும் நடைமுறைகளையும் ஒருவன் இந்தப் பருவத்தில் கற்றுக்கொள்கிறான்.

4. பள்ளி : பள்ளிகள் குழந்தைகளுக்குப் படிக்கும் திறமை, மொழியார்வம், அறிவு வளர்ச்சி ஆகியவற்றை அளிக்கின்றன. மேலும், சில வாழ்க்கை இலட்சியம், குறிக்கோள்களையும் போதித்து அவற்றினை அடையவும் வழிகாட்டுகின்றன. பள்ளிகள் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மனிதாபிமானம் ஆகியவற்றையும் போதிக்கிறது.

5. பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் : திரைப்படம், வானொலி, தொலைக் காட்சி, பத்திரிக்கைகள் முதலியன சிறு குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் சமூகத்தில் இருக்கு

வேண்டிய நன்னடத்தைகளைத் தெரியப்படுத்தி அவர்கள் நல்லது கெட்டது, தேவையானது தேவையற்றது ஆகியவற்றைப் புரிந்து கொள்ளச் செய்கின்றன. சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோரும் இவற்றைப் பார்த்தும் கேட்டும் எளிதில் புரிந்து கொள்கின்றனர். சுதந்திர நாடுகளில் இச்சாதனங்கள் தம் விருப்பம்போல் செய்திகளையும் கருத்துகளையும் வெளியிடு கின்றன. சர்வாதிகார நாடுகளில் எவை அரசாங்கத்தால் வற்புறுத்தப்படுகின்றனவோ அவற்றையே வெளியிடுகின்றன. இதைக் கருத்துத் திணிப்பு என்றுகூடக் கூறலாம்.

### சமூகமயமாகுதலின் இன்றைய போக்குகள்

பொதுவாக, இன்று பல்வேறு சமூகத்திலேயும் நாம் காண்கின்ற ஒரு நிகழ்ச்சி என்னவென்றால் மக்கள்தொகைப் பெருக்கம். அந்தச் சமூகங்கள் விஞ்ஞானத்தாலும், தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியாலும், பொருளாதார முன்னேற்றத்தாலும் அரசியல் சுதந்திரம் பெற்றமையாலும், பெண்கள் நிலையில் வெகு வான முன்னேற்றம் காணப்படுவதாலும் பழைய பண்பாட்டு விழுமியங்கள் பெருமளவு மாறவும் அதனால் சமூகத்தின் அமைப்பு முறை பல மாறுதல்கள் தோன்றவும், குடும்பம் போன்ற நிலை யான அமைப்புகள் தங்களுக்கென்றிருந்த வழக்கமான தொண்டினைச் செய்ய முடியாத சூழ்நிலையிலும் பள்ளி போன்ற நிறுவனங்கள், முறைசார்ந்த நிறுவனங்கள் இந்தச் சமூகமயமாக்கு தலில் பெரும் பங்கேற்றுக்கொள்ளத் தலைப்பட்டிருக்கின்றன. தொழிற் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட மாறுதல்கள் பலவற்றுள் நகர வளர்ச்சி, தொழிற்சாலை நகரங்கள், தொழிற் சாலை நகரங்களின் பெருக்கம், அங்கு வாழும் மக்களின் புதிய விருப்பம் வெறுப்பு நிறைந்த கட்டுப்பாடற்ற தன்னிச்சையில் வாழ விரும்பும் மக்களின் எண்ணிக்கை உயர்வு இவைகள் சமூக மயமாக்குதலுக்குப் புதிய பல பிரச்சினைகளை முன்வைக்கின்றன. குறிப்பாக அறிவியல் தொழில்நுட்ப அறிவியல், அரசியல் ஞானத் திலும் சாதி சமய வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வருங்காலக் குழந்தைகள் அறிந்திருக்கவேண்டிய சமூகப் பண்பாடுகளும் கடந்த கால இந்தியாவின் வாழ்க்கை முறையோடு ஒப்பிடும்போது பெரிதும் மாறுபட்டு இருப்பதனால், வளரும் குழந்தைகளுக்கும் வரவிருக்கும் குழந்தைகளுக்கும் சமூகமயமாக்குதலில் பயிற்றுவிக்க வேண்டிய பாடங்களும், புதியதொரு சமுதாயத்தை நிர்ணயிப் பதில் அவர்கள் பெற்றிருக்கவேண்டிய அறிவை வலியுறுத்துவ தாகும்.

முன்பு முதல்நிலைக் குழுக்கள் சமூகமயமாகுதலில் மேற்கொண்ட செயல்களை இப்போது இடைநிலைக் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. கூட்டுக்குடும்பங்கள் சிதைவுண்டதும் இடை நிலைக் குழுக்கள் அதிக எண்ணிக்கையில் பெருகியுள்ளதும் முக்கியக் காரணங்களாகும்.

கல்வி நிலையங்கள் புதிய கருத்துகளைப் போதிக்கின்றன. எல்லோரும் கல்வி வசதிபெற எல்லோரும் பள்ளிகளுக்குச் செல்வதனால் புதிய கருத்துகளை எல்லோரும் அறிந்துகொள்ள அதிகம் வாய்ப்புள்ளது.

## வினாக்கள்

1. சமூகமயமாகுதல் என்றால் என்னவென்று சுருக்கிக் கூறு.
2. சமூகமயமாகுதலின் நோக்கங்கள் என்ன?
3. சமூகமயமாகுதலில் பங்கேற்கும் செயலிகள் யாவை?
4. சமூகமயமாகுதலில் குடும்பத்தின் பங்கைப்பற்றி விவரித்துக் கூறு.
5. சமூகமயமாகுதலில் பள்ளியின் பங்கைச் சுருக்கமாக விவரித்துக் கூறு.

# 7. சமூக ஊடாட்டச் செயற்பாங்குகள்

ஒருவரோடு ஒருவர் கலந்து உறவு கொள்ளுதல் இல்லாது குழு வாழ்க்கை அமைய முடியாது. ஒருவருக்கு ஒருவர் அருகில் வசித்தால் மட்டும் சமூக வாழ்க்கை அமையாது. பல்வகைக் குழுக்களைச் சேர்ந்த மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி, உறவாடி, சண்டையிட்டு இப்படியாகப் பல செயல்களில் ஈடுபடும் பொழுதுதான் சமூக வாழ்வு ஆரம்பமாகிறது.

வளர்ந்துவரும் சமூக உறவில் தொடர்பு நேருக்கு நேரோ, மனிதருக்கு மனிதரோ பேச்சின் மூலமாகவும் சமிக்ஞை மூலமாகவும் நிகழவேண்டிய அவசியம் உள்ளது. தொலை தூரத்தில் உள்ளவர்களோடு தொலைபேசி மூலமாகவோ கடிதங்கள் மூலமாகவோ தொடர்பு கொள்கிறோம்.

## கூட்டுறவு (Co-operation)

சமூகவியலில் கூட்டுறவு என்பதைத் தனி மனிதர்கள் ஒன்று சேர்ந்தோ, இரண்டு குழுக்கள் ஒன்று சேர்ந்தோ ஏதோ ஒரு காரியத்தை, குறிக்கோளை அடைய எடுக்கும் முயற்சி என்று கூறுகிறோம்.

இந்தக் கூட்டு முயற்சி — ஒத்துழைக்கும் மனப்பாங்கு சிறு பிராயத்திலேயே தோன்றுகிறது; குடும்பத்தில் பெற்றோர் களுடனும் உடன் பிறப்புகளுடனும் சேர்ந்து வளரும்பொழுது மிகுந்து வளர்கிறது. பின் இப்பண்பு பெரியனவாகும்பொழுது மிகுந்து பரிமளிக்கக் காண்கிறோம். இந்த நற்பண்பு வளர உதவியாக இருக்கவேண்டியது, முதலாவதாக நல்ல பல குறிக் கோள்கள். இரண்டாவது இவ்வாறு ஒத்துழைப்பால் அடையப் போகும் பல நற்பலன்களை அறிந்திருத்தல். மூன்றாவது கூடி வேலை செய்யும்பொழுது வேலையில் மட்டும் பகிர்ந்து கொள்வது இல்லை. அதனால் கிடைக்கும் பலனையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை. இறுதியாக இவ்வாறு ஒத்துழைக்கவேண்டியதற்கான திறமை அவர்களிடையே காணப்படுதல். இந்நற்பண்புகள் காணுமிடத்து, கூட்டுறவு, வெற்றியடைய வாய்ப்புண்டு.

கூட்டுறவு, மனிதன் தான் நெருங்கி வாழும் குழுவில் அமையும் பழக்கவழக்கங்களால் தோன்றுவதாகும். போட்டி, பொறாமை, எதிர்ப்பு போன்றவைகள் குழுவின் வாழ்வில் தோன்றியபோதிலும் கூட்டுறவு அதே குழுவில்தான் எழுகிறது. குழுவினுடைய ஒற்றுமைத்தன்மை ஒருவருக்கொருவர் உதவி செய்தல், உதவும் மனப்பான்மை, பிறருக்கு விசுவாசம் காட்டுதல் ஆகிய பண்புகளால் வெளிக்காட்டப்படுகிறது. தன்னுடைய குழு அதற்கு எதிரிடையாக மற்றவர்கள் குழு என்ற அடையாளம் காணப்படும் நேரத்தில் தன்னுடைய குழுவினரிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் பரவிக் கிடக்கக் காண்கிறோம். நம்முடைய குழுவின்பால் இருக்கும் அன்பு, பாசம், ஒற்றுமை உணர்வு மற்றவர்களின் குழுவின்பால் இருக்கும் எதிர்ப்பு உணர்வால் தெளிவாகிறது. கூட்டுறவு பலவிதமான கட்டுப் பாடுகளை விதிக்கிறது. மற்றவர்களுடன் சேர்ந்து உழைக்கும் போது தன்னிச்சையாக ஏதும் செய்வதற்கில்லை. தன்னிச்சை யாகச் செயல்புரிய முற்படும்பொழுது ஒத்துழைப்பு கூட்டுமுயற்சி நின்று விடுகிறது. போட்டி ஏற்படவும் வாய்ப்பு ஏற்படுகிறது. கூட்டுறவு என்றாலே தன்னுடைய, தான் என்ற அகம்பாவ உணர்வுகளுக்கு இடமிருக்க முடியாது. ஒரு குழந்தை மற்றவர் களுடன் விளையாடும்பொழுது எப்போதும் தானே முக்கிய பாகத்தை எடுத்துக்கொள்ள முடியாது; மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும்.

### கூட்டுறவின் வடிவங்கள்

கூட்டுறவு பல வகையில் காணப்படுகின்றது.

1. பற்றுறுதி : எல்லோரும் ஒரே ஒரு குறிக்கோளைக் கருத் தில்கொண்டு, அதை அடைய ஒன்றுசேர்ந்து பற்றுகொண்டு உழைப்பதைப் பற்றுறுதி என்று கூறுகிறோம்.

2. ஒருவரையொருவர் சார்ந்திருத்தல்: சமூகத்திலே ஒருவரை யொருவர் தவிர்க்க முடியாத வகையில் சார்ந்தே வாழவேண்டி யுள்ளது. வேலைப் பங்கீட்டிலும் மற்றப் பல நிலைகளிலும் இதைக் காணலாம்.

3. ஒற்றுமையுணர்வு : குழுக்களுக்குள் போட்டியிருப்ப தனால், ஒவ்வொரு குழுவிலும் அதன் உறுப்பினர்களிடையே ஒற்றுமை நிலவுவதைக் காண்கிறோம்.

4. நிர்ப்பந்த நிலை : சில சூழ்நிலைகளில் குழுவும் தனி மனிதர்களும் ஒத்துழைத்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படுகிறது.

5. எதிர்மறைக் கூட்டுறவு: சமூகத்தில் பல நிலைகளில் எதிர்மறையான விருப்பு வெறுப்புகள் காணப்படுகின்றன. (எ-கா.) தொழிற்சாலையின் நோக்கம் இலாபம்; தொழிலாளிகளின் நோக்கம் அதிக ஊதியம். இந்த இருவருக்குமிடையே நோக்கங்கள் எதிர்மறையாக இருந்தபோதிலும் பொருள் உற்பத்தியில் சமூக நலனை முன்னிட்டு இருவரும் ஒத்துழைக்கக் காண்கிறோம்.

### கூட்டுறவும் பண்பாடும்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. சமூகத்தில் வாழும் உணர்வு கொண்டவன். அவனுக்கு அந்த உணர்வு உண்டா இல்லையா என்ற பிரச்சினைக்கே இடமில்லை. மனிதன் குடும்பத்தில் வாழ்ந்து வருவதிலிருந்து நாம் அவனுக்குப் பிறருடன் ஒத்துழைக்கும் எண்ணம் இருப்பதை உணரமுடியும். குடும்ப உறவு மட்டுமின்றி விளையாட்டுக் குழாம், பள்ளிக்கூடம் போன்ற மற்ற எல்லா குழுக்களிலேயும் அவன் மற்றவர்களுடன் ஒத்துழைத்தே வாழ்கிறான். தனி மனிதர்களிடையேயும் குழுக்களிடையேயும் ஒரு குறிக்கோளை அடையவே கூட்டுறவு ஏற்படுகிறது; இதற்கு உறுதுணையாக அமைகிறது.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்ற அமரகவி பாரதியின் கருத்தைச் சிறு குழந்தை மனத்தில் பதியும்படி நாம் போதிக்கும்போது அது கூட்டுறவு—கூட்டு முயற்சி நாட்டின் விடுதலைக்கு வழிவகுத்த பாடத்தை அறிந்து, கூட்டு முயற்சியினால் பல நன்மைகளை அடையலாம் என்று தெரிந்து அவ்வழி நடக்க முயல்கிறது. நம் நாட்டில் வளர்ந்துவரும் கூட்டுறவு இயக்கம் நாட்டின் மக்களிடையே கூட்டுறவின் அவசியம் தெரிந்திருப்பதை விளக்குகிறது.

## போட்டி (Competition)

ஒரு குறிக்கோளை அல்லது பொருளை அடைய தனி மனிதர்களும் அல்லது குழுக்களும் பரஸ்பரம் எதிர்த்துக்கொண்டால், எதிர்ப்பு முயற்சியில் ஈடுபடுவதைப் போட்டி என்கிறோம். இது இடம், காலம், நேரம் பொருள் இவைகளை ஒட்டியே ஏற்படுகிறது.

### போட்டியின் வடிவங்கள்

போட்டியில் பல வடிவங்கள் காணப்படுகின்றன. அவை யாவன:

1. முழுமையான போட்டியும் ஒத்திட்ட போட்டியும்: சில போட்டிகளிலே வெற்றி ஒருவருக்கே கிடைக்கக்கூடும். உதாரண

மாகக் குடியரசு தலைவர் போட்டியில் இருவர் போட்டியிட்டால் ஒருவருக்கே வெற்றி கிடைக்கிறது. இதை முழுமையான போட்டிக்கு உதாரணமாகக் கூறலாம்.

அடுத்து பணம், பொருள், புகழ் இவைகளைச் சம்பாதிப்பதில் மக்களிடையே இருக்கக்கூடிய போட்டியை ஒத்திட்ட போட்டிக்கு உதாரணமாகக் கூறலாம்.

சொந்தப் போட்டியும் பொதுமுறைப் போட்டியும்: சொந்தப் போட்டியில் தனி மனிதர்கள் தங்கள் எதிரிகளுடன் நேரிடையாகப் போட்டியிடுகிறார்கள். எதிரி இருப்பதை உணர்ந்து அவனை தோற்கடித்துத் தன் வெற்றியை நிலைநிறுத்த முயல்கிறார்கள்.

அடுத்து பொதுமுறைப் போட்டிக்கு உதாரணமாகத் தொழிலாளி, தொழில்துறை நிர்வாகத்துக்குமிடையே ஏற்படும் போட்டி, பொதுவாகத் தொழிலாளர் நலனை ஒட்டியும் நிர்வாகத்தின் நலனை ஒட்டியும் அமைகிறது. இது பொது முறையைக் கருத்தில் கொண்டதாக அமைகிறது.

போட்டியும் பண்பாடும்

சில பண்பாட்டு முறைகளில் போட்டியை மையமாகக் கொண்டு மக்கள் வாழ்க்கை அமையலாம். கண்டுபிடிப்புகள், அரசியல் புரட்சிகள், பொருளாதார மாற்றங்கள் இவைகள் போட்டியிடும் முறையில் பல மாற்றங்களை உண்டுபண்ணலாம். பண்பாடு கீழ்க்கண்டவைகளில் போட்டியின் வடிவங்களை நிர்ணயிக்கலாம்:

1. பண்பாடு சமூகத்திலே எது விரும்பத்தக்கது, எது விரும்பத்தகாதது என்று நிர்ணயிக்கிறது.

2. எதைப் போட்டியிட்டு அடைவது, தகைமையானது எது, தகைமையற்றது எது என்றும் கூறுகிறது.

3. மேலும் யார் யார் எதற்காகச் சமூகத்திலே போட்டியிடலாம் என்றும் பண்பாட்டின் விதிகள் வரையறுக்கின்றன.

4. முதலிலே பண்பாடு பெரும்பாலும் எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை எடுத்துக்கூறி அதன் படியே போட்டிகள் அமைய வழிவகுக்கிறது.

பூசல் (Conflict)

உணர்ச்சிவசப்பட்ட பலாத்கார எதிர்ப்பைப் பூசல் என்று கூறுகிறோம். இதில் எதிராளியை மடக்கி ஒடுக்கித் தன்னுடைய

குறிக்கோளை அடையவே ஒருவன் முயற்சி செய்கிறான். இருவரிடையேயோ அல்லது இரண்டு குழுக்களுக்கு இடையேயோ உள்ள நேரிடை மோதலாகவோ அல்லது மறைமுகமான எதிர்ப்பாகவோ அமையலாம். இதன் நோக்கம் எல்லாம் தான் விரும்பிய குறிக்கோளை அடைவதுதான். இந்தப் பலாத்காரப் போட்டியின் நோக்கமெல்லாம் எதிரியைப் பணியவைப்பது, ஒழித்துக்கட்டுவது, தோற்கடிப்பது, தன் குறிக்கோளை அடைவது. குறிக்கோள் கூடக் கவனத்தில் படுவது இல்லை. எதிரியை ஒழிப்பதுதான் முதல் கவனமாகப் படுகிறது. போட்டியுடன் ஒப்பிடும்போது பூசல் ஓர் உணர்வோடு செய்யப்படும் செயலாகவே காணப்படுகிறது.

பூசல் பண்பாட்டால் பாதிக்கப்படுகிறது. குழுவினுடைய தன்மையும் அதைப் பாதிக்கிறது. பூசல்களுக்கு சொத்து, அதிகாரம், ஆதிக்கம், கௌரவம், சிந்திக்கவும் செயல்படவும் உரிமை போன்றவைகளே காரணங்களாக அமையும்.

பொருளாதாரப் பூசல்கள் விளையக் காரணம் பொருளாதாரத்துறையில் நெருக்கடி, பற்றாக்குறை, ஆதிக்க நோக்கம் போன்றவைகள். போட்டி வலுவடையத் தீவிர பலாத்காரப் போட்டியாக மாறக் காண்கிறோம். இதேபோல் சமயச் சண்டைகள் ஏற்படக் காரணமாக இருப்பது சமயச் சகிப்புத் தன்மை குறைவது.

## இசைவுபடுதல் (Accommodation)

நடைமுறையாக இது ஒரு வழிமுறை என்று எண்ணும்போது மனிதர்கள் தாங்களாகவே முயற்சி எடுத்துத் தங்களுக்குள்ளாகவே போட்டியை, பூசலைத் தவிர்க்கக் கையாளும் வழிமுறை என்று கூறலாம். இந்த வழிமுறையால் அவர்கள் வீண் முயற்சியைத் தவிர்த்து ஒருவருக்கொருவர் மேன்மேலும் பகையையும் பழியையும் வளர்த்து அழிந்துபோவதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வழி என்றும் கூறலாம். இதை ஓரளவுக்கு நடைமுறைக்கு ஒத்துவரும் வழியாகக் கருதலாம். சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஒப்ப இந்த ஏற்பாடு பலன் அளிக்கக்கூடும். சிலவேளைகளில் இரு பிரிவினரிடையே போட்டி பூசலைத் தவிர்த்துப் பிறகு இருவருக்குள்ளேயும் வேறுபாடுகள் மறைந்து நல்லதொரு புதிய தொடர்பு ஏற்பட வழி வகுக்கலாம்.

பண்பாட்டின் உந்தலால் ஒன்றுசேருவது நல்லதல்ல என்று நினைக்கும்போது அவை முழுமையாக இணையாமல் ஓரளவுக்கு நடைமுறைக்கு ஒத்துப்போக உதவும் வகையில் இசைவுபடுதல் ஆக்கபூர்வமாக அமையலாம்.

இசைவுபடுத்தலின் வடிவங்கள்

இந்த வழிமுறை பலவகைப்படலாம்.

1. கட்டாயப்படுத்துதல், 2. சமரச உடன்பாடு, 3. சமரசம், 4. நடுவர் தீர்ப்பு, 5. சகிப்புத் தன்மை.

1. கட்டாயப்படுத்துதல் (Coersion): இந்த வழிமுறையில் உறவானது கட்டாயத்தின் பேரிலும் பலவந்தத்திலும் கட்டுப்பாட்டிலும் உருவாகலாம். இது எதைக் குறிப்பது என்றால் இருதரப்பினரிடையே ஒருவர் பலம் பொருந்தியும் மற்றவர் பலமற்றவராகவும் விளங்குகிறார் என்பதைக் குறிக்கலாம்.

இது இரண்டு வகையாகலாம். ஒன்று, நேரிடையாக பலத்தைப் பிரயோகிப்பது. இரண்டு, உள்ளத்தில் மறைமுகமாக பலத்தைப் பிரயோகம் செய்வது.

எடுத்துக்காட்டாக, அடிமைமுறையை எடுத்துக்கொள்வோம். அடிமைகள் எஜமானனுக்கு உரிமையானவர்கள், எஜமானனுக்காகக் கடுமையாக உழைத்து உயிர்விடவேண்டிய நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உரிமை ஏதும் கிடையாது. இதை நேரிடையாகக் கட்டாயப்படுத்தும் செயலுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

அரசியலில் சர்வாதிகார நாடுகளில் விளங்கும் அடக்குமுறையாட்சியில் சிறுபான்மையோர் ஆட்சியைப்பற்றிப் பெரும்பாலான மக்களின்மீது பலவந்தமாகத் தன் கொள்கையைத் திணிப்பதை மறைமுகமாகக் கட்டாயப்படுத்தும் செயலுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

2. சமரச உடன்பாடு (Compromise): இந்த முறையில் இருதரப்பினரிடையேயும் பேரம் பேசிப் பிணக்கைத் தீர்த்துக்கொள்ளப் போதிய அளவு உரம் இருப்பதோடு மட்டுமல்லாமல் நியாயத்துக்குக் கட்டுப்பட்டு வலிமையினால் மட்டும் காரியம் சாதிக்கும் முறையில் விட்டுக்கொடுக்க ஆயத்தமாகிறார்கள். இந்த முறையின் முக்கியத்துவம் என்னவென்றால், இருதரப்பினரும் சமாதானத்தை விரும்பி ஏதோ ஒருவகையில் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்க முன் வருவதேயாகும். இந்த முறையில் உணர்ச்சிவசப்படாமல் தன் நிலையையே மற்றவர் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ அந்த நிலையில் நின்றுபார்த்து ஒரு சமாதான உடன்பாட்டுக்கு வழி வகுக்கும் முறை என்று சொல்லலாம். போட்டியில் சண்டையின் காரணமாக ஏற்படும் வேகம் குறைந்து நியாய

உணர்வு தலைதூக்க ஆரம்பிக்கிறது. நிர்வாகம், தொழிலாளர் தகராறுகள் ஆகிய இருதரப்பினரிடையேயும் நியாய உணர்வு ஏற்பட்டுத் தகராறு தீருகிறதோ அதுவே இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

3. சமரசம் (Conciliation): சமரச இணக்கம் போன்ற இதுவும் போட்டியிடுபவர்களை ஒன்றுசேர்த்துப் பிணக்கைத் தீர்க்க வழிவகை காணும் முயற்சி என்று சொல்லலாம். தற்காலத் தொழில்துறைத் தகராறுகளில் தகராறை நீக்கச் சில வழிமுறைகள் கையாளப் படுகின்றன. இது தொழிலாளியின் குறைகள் பலவற்றைக் களைய உதவியாக இருக்கிறது.

4. நடுவர் தீர்ப்பு (Arbitration): போட்டியிடும் இருதரப் பினரும் தங்களுக்குள் நல்லதொரு முடிவைக் காணமுடியாத நிலையில் ஒரு நடுவரைக் கொண்டு தீர்வு காண்பது நடுவர் தீர்ப்பு எனப்படும். அரசாங்கமோ அல்லது பலம் பொருந்திய ஒரு அமைப்போகூட நடுவரைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு நியமிக்கக் கூடும். இரு தரப்பினரும் அவர் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளலாம். பொதுவாக இம்முறை தொழில்துறைத் தகராறுகளில் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

நிர்வாகத்தின் கவனத்திற்குப் பல விஷயங்களைக் கொண்டு வந்து பிரச்சினை எழாமலும், எழுந்தால் தீர்த்துவைக்கவும் முயற் சிக்கிறது. சமரசம், கட்டாயப்படுத்துதல்போல ஒரு சாதாரண அமைதியான வழிமுறை. முடிவில் சமரசம், சகிப்புத் தன்மை போன்ற ஒன்றோடொன்று இணைவதற்கு வழி வகுக்கிறது.

எந்த ஒரு தகராறும் என்றுமே தீராது இருக்க முடியாது. தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய அவசியத்தைக் காலப் போக்கில் நாம் உணர்கிறோம். தகராறுகள் இருந்துகொண்டே தான் இருக்கும். அவற்றை நாம் சந்தித்தே ஆகவேண்டும்.

5. சகிப்புத்தன்மை (Tolerance): இதுவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு வழிமுறை. இதில் சாதாரண ஏற்பாடு எதுவும் கிடை யாது. பகைமையைப் பற்றிய பூசல் தவிர்ப்பதே பிணக்கைத் தீர்த்துக்கொள்ளும் ஒரு வழி என்று கருதலாம். சிறுபான்மை யினரிடையேயும் பெரும்பான்மையினரிடையேயும் நாளடைவில் வளர்ந்துவரும் ஒருவிதமான சகிப்புத் தன்மையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஒன்றுபடல் (Assimilation)

ஒன்றுபடல் என்பது இரண்டு மனிதர்களிடையே அல்லது குழுக்களிடையே உள்ள வேற்றுமைகள் நாளடைவில் மறைவதைக்

குறிக்கும். இது கூட்டுறவு இல்லாமல் ஒருவரோடு ஒருவர் ஒன்றாக இணைவது ஆகும். இவ்வாறு ஏற்படுவதற்குத் தொடர்ந்தாற் போல் நேரிடையான தொடர்பு இருக்கவேண்டும். இது சாதாரண மாக மிகவும் மெதுவாக ஏற்படும். இதற்கு இந்தியாவில் ஏற்பட்டுள்ள திராவிட-ஆரிய நாகரிக, இனக்கலப்பையும் இந்து-முஸ்லிம் பண்பாட்டு ஒற்றுமையையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

### ஒன்றுபடலின் வடிவங்கள்

மனிதன் சமூகமயமாகும்போது அந்தக் குழுவின் பண்பாட்டை அறிந்தவனாகிறான். அவனுக்கு வேறு ஒரு குழுவினுடைய தொடர்பு ஏற்படும்போது தனது சொந்தப் பண்பாட்டினின்றும் அது வேறுபட்டிருப்பதைக் காண்கிறான். இந்த இரு பண் பாட்டிற்குமிடையேயும் வேறுபாடுகள் இருப்பதால் காலப் போக்கில் ஒன்றுபடுகிறான். ஆனால் முழுவதும் ஒன்றுபடுகிறான் என்று சொல்வதற்கில்லை.

2. இரண்டு வேறுபட்ட பண்பாடுகள் மூன்றாவது பண் பாட்டுடன் கலக்கலாம். இந்த மூன்றாவது பண்பாட்டிலே முதல் இரண்டு பண்பாட்டின் பல அம்சங்கள் காணப்படலாம். காலப் போக்கில் இந்த வேறுபட்ட பண்பாட்டு அம்சங்கள் மாறி ஒன்றுபடுகின்றன.

3. ஒன்றுபடல் சில சிறு குழுக்களிலே உள்ள உறுப்பின ரிடையேயும் அணிகள் வெளிப்புறச் செயல்களில் செய்கைகளில் காணப்படும் மாறுதல்கள்கூட வளர்ந்தோ உணர்வு இல்லாம லேயோ மாறி ஒன்றுபடுகிறது. இதன் விளைவாகப் புது மாற்றங்கள் தோன்றினாலும் தோன்றலாம்.

## வினாக்கள்

1. சமூக ஊடாட்டச் செயல்கள் என்றால் என்ன?
2. கூட்டுறவின் அவசியம், பயன் பற்றி விவரி.
3. பூசல் என்றால் என்ன? எப்படி ஏற்படுகிறது?
4. 'இசைவுபடுதல்' என்றால் என்ன? விவரி.
5. போட்டி எவ்வாறு பண்பாட்டால் பாதிக்கப்படுகிறது.
6. ஒன்றுபடல் என்ற சமூக ஊடாட்டத்தை விளக்கு.
7. இசைவுபடுதலின் வடிவங்கள் யாவை? சுருக்கமாக விவரி.
8. கூட்டுறவின் வடிவங்கள் யாவை?

# 8. சமூக மாற்றம்

மாறுதல் இயற்கையின் நியதி. மாறுதல் இல்லாமல் ஏதும் இருக்கமுடியாது. மாறுதல் முன்னேற்றத்தையும் குறிக்கலாம். அதற்கு முரணானதையும் குறிக்கலாம். சமூகத்திலே மாறுதல் ஏற்படுவது இயற்கை. சமூகவியலாளர்கள் இதைச் சரிவரப் புரிந்து கொள்ளவேண்டும்.

சமூக மாற்றம் என்பது சமூக வாழ்வில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும்.

எல்லாச் சமூகங்களிலுமே திரும்பத் திரும்ப மாற்றங்கள் ஏற்பட்டவண்ணம் இருக்கின்றன. இந்த மாற்றங்கள் பல நேரங்களிலும் பல அறிஞர்கள் பல காரணங்களை வலியுறுத்துவதால் பல காரணிகளிடையே உள்ள தொடர்பு, உறவு முறையைப் புரிந்துகொண்டால் மாறுதல்களில் வேகம், அவை செல்லும் திசை இவற்றை நாம் அறியமுடியும். இன்றும் சமூகவியலில் இவற்றுக்கு விளக்கம் கூறும் வகையில் ஓர் அறுதியிட்டுக் கூறும் கோட்பாடு ஏற்படவில்லை. ஆயினும் சமூக மாற்றத்தில் ஏற்படும் குறிப்பிட்ட சில வரலாற்று நிலைகளை விளக்கிக் கூறமுடியும்.

மாற்றங்களுக்குச் சமூகத்தின் உட்சக்திகளும் வெளிச் சக்திகளும் காரணமாக இருக்கின்றன. உட்சக்திகளுக்கு எடுத்துக் காட்டுகள்: புதுக் கருத்துகள், புதுக் கண்டுபிடிப்புகள், புது பழக்க வழக்கங்கள். வெளிச் சக்திகளுக்கு எடுத்துக்காட்டு: பிற சமூகங்களுடன் ஏற்படும் தொடர்பு.

எந்த ஒரு சமூகமும் முற்றிலும் ஒன்றிணைந்ததாகவோ முழுவதும் மாறாததாகவோ காணப்படுவதில்லை. மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய சக்திகள் என்றும் இருந்துகொண்டே இருக்கும்.

### சமூக மாற்றக் கோட்பாடுகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சமூகப் பரிணாம வாதிகள் நாகரிகம், பிற்போக்கான நிலையினின்று வளர்ந்து

படிப்படியான முன்னேற்ற நிலையை அடைந்தது என்கிறார்கள். பழங்குடியினர் சமூகங்களைப் (உதாரணமாக ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள், அமெரிக்க இந்தியர்கள் வாழ்கின்ற சமூகம்) பிற்போக்குச் சமூகத்திற்கும், மேலைநாட்டுச் சமூகத்தையும் வளர்ந்து முன்னேற்றம் அடைந்த சமூகத்திற்கும் உதாரணமாகக் கொண்டு சமூக மாற்றம் படிப்படியாக ஏற்பட்டு வருகிறது என்று கருத்து தெரிவிக்கின்றனர். ஆகஸ்ட் கோம்ட், சமூகம் (1797-1857) மூன்று கட்டங்களில் வளர்ந்தது என்கிறார்.

ஸ்பெங்ளர், வில்ஃப்ரட் பாரட்டோ, சரோகின், டாயின்பீ போன்றவர்கள் காலங்கள் மாறி மாறி வருவதுபோல் சமூக மாற்றங்களும் மாறிமாறி அமைகின்றன என்று கூறுகிறார்கள். ஸ்பெங்ளர் 'பகல் இரவு ஏற்படுவதுபோல் சமூகத்தில் பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, வீழ்ச்சி இவை மாறி மாறி வருகின்றன' என்று கருதுகிறார்.

சமூக மாற்றத்திற்கான காரணிகள்

1. உயிரியல் காரணி (Biological Factor): சமூக மாற்றங்களுக்குச் சிலர் உயிரியல் அடிப்படையைக் கூறுகின்றனர். உயிரியல் அடிப்படையில் மனிதர்களிடையே திறமை, செயல்முறை ஆகியவற்றில் வேறுபாடுகள் உள்ளன என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். இக் கருத்தினை ஏற்றுக்கொள்ளல் இயலாது.

உயிரியல் அடிப்படையில் சில இனங்கள் உயர்ந்தவை என்றும் கூறப்படுவதுண்டு. இக் கருத்தும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஒவ்வோர் இனமும் தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்றும் தங்கள் பண்பாடுதான் சிறந்தது என்றும் கருதுகின்றனர்.

ஒவ்வொரு நாட்டின் உயர்விற்கும் அந்த நாட்டின் இனம் தான் காரணம் என்றும் கருதப்படுகின்றன. ஒரு நாட்டின் வளர்ச்சியை ஆராய்ந்தால் உயிரியல் அடிப்படையிலான இக் காரணிகள் இதற்கு ஆதாரமில்லை என்றும் வேறு சில காரணிகள்தான் காரணமாக உள்ளன என்றும் அறிந்துகொள்ளலாம்.

2. மக்கள்தொகைக் காரணி (Demographic Factor): மக்கள் தொகை சம்பந்தப்பட்ட பல நிகழ்ச்சிகள் சமூக மாற்றங்களுக்குக் காரணமாக அமைகின்றன. மக்கள்தொகை வளர்ச்சி, வயது அமைப்பு, நகர மக்கள்தொகை விகிதம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் முதலியன சமூகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடியேறும்போது கிராம மக்கள் தொகை குறையவும் நகர மக்கள்தொகை கூடவும் செய்

கின்றன. இதனால் நகரங்களில் பல விளைவுகள் ஏற்பட்டுப் பல சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன.

3. புவியியல் காரணி (Geographical Factor): சமூகத்தில் தோன்றும் மாறுதல்களுக்குக் காரணம், புவியியல் மாற்றங்கள் தான் என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். புவியியல் அமைப்புகள் பூமியின் மேற்பரப்பில் காணப்படும் மாறுதல்கள், மழை, வறட்சி, தட்பவெப்ப மாறுதல்கள், காடு மலை பள்ளத்தாக்கு, பாலைவனம், நல்ல செழிப்புமிக்க நதியோரப் பகுதிகள் இவைகள் மக்களுடைய வாழ்க்கை முறையைப் பெருமளவிற்கு பாதிக்கின்றன.

4. பொருளாதாரக் காரணி (Economics Factor): சமூக மாற்றங்களுக்குப் பொருளாதாரமே காரணம் என்று கூறிய அறிஞர் கார்ல்மார்க்ஸ் ஆவர். கார்ல்மார்க்ஸ்க்கு முன்னமேயே பல அறிஞர்கள் இந்தக் கருத்தைச் சொல்லியுள்ளார்கள். உயிர்வாழ உணவு தேவை. உணவைத் தேட உழைப்பு தேவை. எனவே, உழைப்பின்றி உயிர் வாழ முடியாது. எல்லோருக்குமே தேவையானது கிடைப்பது இல்லை. பொருள் பற்றாக்குறையினால்—பொருள் பற்றாக்குறையையொட்டி கிடைத்தவர்கள் - கிடைக்கப்பெறாதவர்கள் அல்லது இருப்பவர்கள் - இல்லாதவர்கள் என்ற இரு பெரும் பிரிவுகள் சமூகத்தில் தோன்றுகின்றன. இந்த இரண்டு பிரிவுகளும் எப்போதுமே போட்டி போட்டுக் கொள்கின்றன. இந்தப் போட்டியைத் தவிர்க்க சமூகம் பல நிபந்தனைகள், நெறிகள் இவற்றை உண்டுபண்ணி இவற்றை மக்கள் பின்பற்றச் செய்கிறது.

பொருளாதார உற்பத்திதான், மக்களிடையே பொருளாதார உறவுமுறைக்குக் காரணமாக அமைகிறது. உற்பத்தித் திறன் மாறும்போது உறவுகளும் மாறுகின்றன. சமூகத்திலே உள்ள தொழில்நுட்ப அறிவு பொருளாதார உற்பத்தியையும் மக்களிடையே உறவுமுறையையும் பாதிக்கிறது. இந்தப் பொருளாதார முறைதான் சமூக அமைப்பை விளக்குவதாகவும், சமூக மாறுதல்களுக்குக் காரணமாகவும் விளங்குகிறது. சமூகத்தில் பொதுவாக இரண்டு சாரார் உள்ளனர் என்று சொல்லலாம். ஒருவர் பொருள் உடையவர். மற்றொருவர் பொருள் இல்லாதவர். இந்த இருவருக்குமிடையே போராட்டம் இருந்துகொண்டே இருக்கும். இந்தப் போராட்டத்தை வர்க்கப் போராட்டம் என்று வர்ணிக்கிறார் கார்ல்மார்க்ஸ். பொருள் இல்லாதவர் முயற்சி செய்து தன்னிலைமையை மாற்ற நினைக்கும்போது பொருள் உடையவர் தடுக்க எத்தனிக்கிறார்கள். இதனால் சமூகத்தில் ஒரு புரட்சி

ஏற்படுகிறது. இந்தச் சமூகப் புரட்சியின் விளைவாகப் புது சமூகம் ஒன்று நிர்மாணிக்கப்படுகிறது. அந்தச் சமூகவர்க்கமே இல்லாத சமூகமாக இருக்கும் என்று கார்ல் மார்க்ஸ் கருதுகிறார்.

உண்மையில் பொருளாதாரக் காரணிகள் பெருமளவுக்குச் சமூக மாற்றங்களுக்குக் காரணமாகவே இருக்கின்றன. மக்கள் உடல் நலம், பிறப்பு, இறப்பு, திருமணம், தற்கொலை, குடியேற்றம் குற்றங்கள் முதலியவைகளுக்கும் பொருளாதாரத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கத்தான் செய்கிறது என்று சமூக விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார்கள். இருந்த போதிலும் பொருளாதாரக் காரணிகளே முழுமையும் சமூக மாற்றங்களுக்குக் காரணம் என்று கூறுவதற்கில்லை.

5. தொழில் நுட்பவியல் காரணி (Technological Factor): சமூகத்தின் தொழில்நுட்ப அறிவு, திறன் சமூக மாற்றங்களுக்குக் காரணமாக அமைகிறது என்று பல சமூகவியல் அறிஞர்கள் கருது கிறார்கள். இவர்களில் மிகவும் முக்கியமானவர் பேராசிரியர் ஆக்பர்ன் என்பவர் (1886—1959). பேராசிரியர் ஆக்பர்ன், பண்பாட்டை இரண்டாகப் பிரிக்கிறார். ஒன்று, பொருள்சார் பண்பாடு. மற்றொன்று, பொருள்சாராப் பண்பாடு. முதலில் வழக்கமாகப் பொருள்சார் பண்பாட்டில்தான் மாற்றங்கள் ஏற்படும். அதை ஒட்டித்தான் பொருள்சாராப் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். எனவே, பொருள்சார் பண் பாட்டில் ஏற்படும் மாற்றங்களேதான் பொருள்சாராத பண் பாட்டில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைகின்றன. பொருள்சாராப் பண்பாடு பொருள்சார் பண்பாட்டைவிடப் பின்தங்கிய நிலையில் இருந்தபோதிலும் காலப்போக்கில் பொருள்சார் பண்பாட்டோடு ஒத்துப்போய் மாற ஆரம்பித்து விடுகிறது. எனவே, தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் மாறுதல்கள்தான் பண்பாட்டு மாறுதல்களுக்கு அடிப்படையாய் அமைகின்றன என்று வில்லியம் ஆக்பர்ன் கூறுகிறார்.

சமூக அமைப்பிலும் வாழ்க்கை முறையிலும் பல மாற்றங்கள், புதிய கண்டுபிடிப்புகளால் தோன்றியுள்ளன. அச்சிடும் எந்திரம், நீராவி எந்திரம், தொலைபேசி, கார், வானொலி, திரைப்படம் போன்ற பல கண்டுபிடிப்புகள் மனித வாழ்க்கையைப் பெரும் அளவிற்கு மாற்றிவிட்டன. மக்களுடைய சமூக, பண்பாட்டுத் துறை மாற்றங்களுக்கு இந்தப் புதிய தொழில்நுட்ப சாதனங்களின் கண்டுபிடிப்பே காரணம்.

பல புதிய கண்டுபிடிப்புகள் பயன் உள்ளவை என்று அறியவும், அதை ஒத்துக்கொள்ளவும் மக்கள் சமூகம் பல காலம் எடுத்துக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம், அதைப்பற்றிய அர்த்தமற்ற பயம், அதன் விலை, அதைக் கையாளக் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியம், பழமையை விரும்புதல், மக்களுடைய பழக்க வழக்கங்கள், முதியோர்களுடைய கடுமையான எதிர்ப்பு இப்படி யாகப் பல காரணங்களால் நல்ல பல கண்டுபிடிப்புகள், மக்களால் ஒத்துக்கொள்ளப்பட — பல காலம் பிடிக்கிறது. இதையே வில்லியம் ஆக்பர்ன் பண்பாட்டுப் பின்னடைவு (cultural lag) என்று கூறுகிறார். பண்பாட்டின் ஒருதுறையில் ஏற்படும் மாறுதல்கள் வேகமாகவும், மற்றொரு துறையில் பின்னடைந்து காணப்படுதலையே ஆக்பர்ன் பண்பாட்டுப் பின்னடைவு என்று குறிப்பிடுகிறார். இதன் விளைவாக சமூகத்திலே பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. இந்தப் புதிய கண்டுபிடிப்புகளை மக்கள் ஒத்துக் கொள்ளப் பல வருடங்கள் ஆகலாம். அவ்வாறு காலம் செல்லச் செல்ல மீண்டும் கண்டுபிடிப்புகள் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருக்க, இதனால் தொடர்ந்து பண்பாட்டுப் பின்னடைவு காணப்படுகிறது.

புதிய கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்பச் சாதனைகளும்தான் சமூக, பண்பாட்டு மாற்றங்களுக்குக்கூட காரணம் என்ற கருத்தை ஒத்துக்கொள்வோமாயினும் கண்டுபிடிப்புக்குக் காரணமாக அமைவது அறிஞர்களின் கருத்து, அறிவுக்கூர்மை ஆகியவை இருப்பதால்தான்; மாற்றங்களுக்குக் காரணம், மனித மூளையின் திறமை என்பதை நாம் ஒத்துக்கொண்டாகவேண்டும்.

### திட்டமிட்ட சமூக மாற்றம்

சமூக மாற்றம் இன்றியமையாதது என்றும், அதற்குப் பல காரணங்களும் உண்டு என்றும் பல அறிஞர்கள் பல காரணிகளை வலியுறுத்தி விளக்கம் கூறியிருப்பதையும் கண்டோம். இப்பொழுது திட்டமிட்ட சமூக மாற்றம் என்னவென்று பார்ப்போம்.

ஒரு சமூகம் பிற்பட்ட சமூகமாகவோ அல்லது பல துறை யிலே முன்னேறிய சமூகமாகவோ இருக்கக்கூடும். பின்தங்கிய சமூகத்தை முன்னேற்றச் செய்ய சில மாற்றங்கள் அச் சமூகத்திலே நிகழச் செய்யவேண்டும். இவ்வாறு மாற்றங்கள் நிகழச்செய்ய மக்களிடையே புதிய கருத்துகளைப் பரப்பி, அதன் பயனையும் எடுத்துரைத்து, பழமையை மறக்கச் செய்து புதிய கருத்துகளின் பயன்பாட்டை உணரச் செய்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட அளவேனும் முன்னேற்றமடைய, மாறுதலடைய

எடுத்துக்கொள்ளும் முயற்சியைத் திட்டமிட்ட மாற்றம் என்று கூறலாம். உதாரணமாக, பொருளாதாரத் துறையிலே பின் தங்கிய நாடுகள் தங்களுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தங்கள் நாடு விவசாய, தொழில் துறைகளில் முன்னேற்றமடையவும், மக்கள் கல்வி அறிவு வளர்ச்சி பெறவும் தங்களிடையே உள்ள மூலதனங்கள், வசதிகள் இவைகளைக் கொண்டு ஒரு சில குறிப்பிட்ட காலத்துக்குள் எத்தனை முன்னேற்ற மடையவேண்டும் என்று அறுதியிட்டுக்கொண்டு திட்டமிட்டுச் செயல்படுகின்றன. அவ்வாறு பொருளாதார முன்னேற்றமடையப் பொதுமக்கள் ஒத்துழைப்பும் மிகவும் தேவைப்படுகிறது. பொது மக்கள் ஈடுபாடில்லாத எந்த ஒரு திட்டமும் வெற்றிபெறுவதில்லை. இது பொருளாதார துறைக்கே பொருந்துமென்று கூறும்போது சில சிக்கலான சமூகப் பிரச்சினைகளான தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு என்ற இலட்சியங்களில் நாடும் அரசும் எத்தனை முயன்றும் விரும்பத்தக்க சமூக மாற்றத்தை உண்டுபண்ண முடியாமற்போகிறது.

எனவே, மக்களின் மனமாற்றமும் ஈடுபாடும் திட்டமிட்ட சமூக மாற்றத்துக்கு அவசியம் தேவைப்படுகிறது. திட்டமிட்ட சமூக மாறுதலுக்கு உதவியாக இருப்பவை அந்நாட்டின் அரசியல் சாசனம், சட்டங்கள், சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள், கல்வி நிறுவனங்கள், அறிஞர்கள், பொதுமக்கள் தொடர்பு சாதனங் களாகிய செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்றவைகளாகும். இவையெல்லாவற்றையும்விட ஆர்வமும் ஈடுபாடும்கொண்ட பொதுமக்கள்தான் திட்டமிட்ட சமூகமாற்றம் ஏற்பட வழிவகை செய்ய முடியும். சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் ஒரு திட்டமிட்ட சமூக மாற்ற முயற்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

## வினாக்கள்

1. சமூக மாற்றம் என்றால் என்ன?
2. சமூக மாற்றத்திற்கான காரணிகளை விவரி.
3. பொருளாதாரக் காரணிகள் எப்படி சமூக மாற்றத்தை உண்டுபண்ணுகின்றன?
4. தொழில்நுட்ப சாதனைகளுக்கும் சமூக மாற்றத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது?
5. 'பண்பாட்டுப் பின்னடைவு' என்னவென்று விவரி.

# 9. சமூகக் கட்டுப்பாடு

சமூகத்தில் அமைதி, சட்டம், ஒழுங்கு, நிலையான வாழ்க்கை அமைய, நிலைக்க இருக்கும் அமைப்பு முறைகளை சமூகக் கட்டுப் பாடு என்று கூறுகிறோம். பொதுவான சமூகக் கட்டுப்பாடு என்றால், சமூகத்திலே நிலவும் மரபுகள், வேலைப் பங்கீடு, இவற்றை சமூகக் கட்டுப்பாட்டுக்கு உதவும் வழிவகைகளாகக் கருதுகிறோம். ஏனெனில், அவை சமூகத்தை நிலையாகவும், ஒன்று பட்டதாகவும் விளங்க வழிவகை செய்கிறது. சமூகக் கட்டுப் பாட்டை ஆக்பர்னும் நிம்காஃபும் ஒரு முறை, ஒரு கருவி என்று கருதுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட முறையைப் பயன்படுத்தி ஒரு சில கருவிகளைக்கொண்டு, சமூகம் தன்னுடைய உறுப்பினர்களைச் சமூகக் கோட்பாடுகளையும் நெறிகளையும் மீறும்பொழுது எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தி, ஒழுங்கு பண்ணுகிறது என்று பொருள் படக் கூறுகிறார். எனவே மரபுகள் சமூகக் கட்டுப்பாட்டிற்குக் கருவியாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, 'இகழ்ச்சி' ஒரு சமூகக் கட்டுப்பாட்டுக் கருவியாக அமைகிறது. மற்றவர்கள் இகழ்வார்கள் என்று பயந்து, மக்கள் சமூகத்தின் நெறிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறார்கள் சில சமூகத்தில்.

திருடக்கூடாது என்பது ஒரு நெறி. இதுபோன்ற நெறிகள் மக்கள் நிம்மதியாக வாழவும் ஒற்றுமையாக வாழவும் வழிவகை செய்கின்றன. சமூகத்தின் நெறிகளின்படி நடப்பதால் சமூகம் ஒன்றுபட்டுக் காணப்படுகிறது. நெறிகளை மீறுபவர்களை நெறி களைப் புறக்கணிப்பவர்களை நெறி பிறழ்ந்தவர்கள் என்று கூறு கிறோம். அவர்களைச் சமூகம் அநுமதிக்க முடியாது. ஏனெனில் அது சமூகச் சூழ்நிலையைப் பாதிக்கிறது. எனவே மக்களைக் கட்டாயப்படுத்தி அவர்களுடைய செய்கை, நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது மட்டுமன்றி அவர்கள் கட்டுப்பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் நடந்துகொள்ளும்படியும் செய்கிறது. டர்க்ஹீம் என்ற அறிஞர் சமூக வாழ்க்கைதான் முக்கிய அம்சம். சமூகம் தன் உறுப்பினர்களிடையே கட்டுப்பாட்டை உண்டு பண்ணி, அவர்களைச் சமூகத்துடன் இணைந்து வாழச் செய்கிறது என்று கூறுகிறார். இவ்வாறு கட்டுப்பாட்டை உண்டாக்குவதால்

வேறுபட்ட பலவிதமான நடத்தைகளுக்கு இடமளிக்க மறுக்கின்றது. ஆல்போர்ட் (Alport) என்ற அறிஞர் தன்னுடைய ஆராய்ச்சியின் வாயிலாக, சமூகத்திலுள்ள தனிமனிதர்களின் முடிவை ஒட்டி சமூகத்தின் முடிவு அமைவது இல்லை. பரவலாகப் பெரும்பான்மை யானவர்களிடம் காணப்படும் முடிவை ஒட்டியே தனி மனிதர்கள் நடக்க வேண்டியதாகிவிடுகிறது. மூர் (Moore) என்பவர் 95 மாணவர்களுக்கு ஒரு தேர்வு வைத்தார். அதில், 'நண்பர்களுக்கு துரோகம் செய்வது', 'பரிட்சையில் காப்பி அடிப்பது' என்ற இரண்டு கருத்துகளை முன்வைத்து, இதில் எது மிகவும் மோச மானது என்று கேட்டார். 95 பேர்களும் தங்களுடைய சொந்தக் கருத்துகளைத் தெரிவித்தனர். மொத்தக் கருத்து கூட்டத்தி னருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, மீண்டும் அவர்களுக்குத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க மற்றொரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இந்த முறை, அவர்களுடைய கருத்து, பெரும்பான்மையோர் கொண்ட கருத்தோடு ஒத்து இருந்தது என்று கூறுகிறார். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் குழுவினுடைய முடிவு தனி மனித னுடைய நடத்தையை மாற்றியமைக்கும் என்பதைக் காண் கிறோம். சில நெறிகள், உதாரணமாக, திருடக்கூடாது, கொலை செய்யக்கூடாது என்பவை நிலையாகவும் மாறாததாகவும் அமைந்துவிடுகின்றன. ஆனால் வேறு பல நெறிகள் காலத்துக்கு ஏற்ப மாறி வருகின்றன.

நாம் சமூகத்தின் நெறிகளுக்கு ஒப்ப நடக்கும்போது சமூகத்தின் வலியுறுத்தலுக்காகப் பெரும்பாலும் மனம் ஒப்பியே செய்கிறோம். சமூகத்தினரின் மனக் கசப்பைப் பெறவிரும்பாத தாலும், சமூகத்தில் தனித்து நிற்க விரும்பாததாலும், சமூகத்தை விட்டுத் தனித்து இயங்க விரும்பாததாலும், மக்கள் சமூகத்தோடு ஒட்டி வாழ்கிறார்கள்.

சமூகத்தின் நெறிகள் சமூகத்தின் வரையறைகளாகின்றன. சமூகம் தன் உறுப்பினர்கள் அவற்றைப் பின்பற்றும்படி வலியுறுத் துகிறது. ஆயினும் பலர் வேறுபட்டு நடப்பதைக் காண்கிறோம். இந்த வேறுபட்ட நடத்தை குறைந்த அளவாக இருக்கும் போது சமூகம் அதைப் பொருட்படுத்தாமல் இருக்கின்றது. இதே நடத்தை மிகவும் கண்டிக்கத்தக்க வகையில் அதிக அளவு அமையும்போது, சமூகம் அதைப் பொறுத்துக் கொள்ளாமல், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கிறது.

ஒவ்வொரு சமூகத்திலும் சமூக எதிர்பார்ப்புகளுக்கு மாறு பாடாகப் பலர் நடந்துகொள்வதை நாம் காணமுடியும். சமூக

எதிர்பார்ப்புகள் பின்பற்றுவதற்குக் கடினமாக அமையும்போது, அவை பின்பற்றப்படாமல் போகின்றன. சமூகமும் அந்தச் செயலை சகித்துக்கொள்ளலாம். அதனுடைய சகிப்பு (1) அவரையும் (2) அவர் செய்த காரியத்தையும் (3) அவர் அந்தஸ்தையும் (4) நடைபெற்ற சூழ்நிலையையும் பொறுத்தே அமைகிறது.

சமூக மரபுரிமை

ஒவ்வொருவரும் குழுவின் வாழ்க்கை முறையோடு ஒத்துப் போகும்போதும், அது நிலைத்து ஒரு வழிமுறை, விதிமுறையாக மாறிவிடுகிறது. அதைப் பின்பற்றவே யாவரும் விழைகிறார்கள். இப்படிப் பின்பற்றி நடக்கும்போது அது ஒரு மரபுரிமையாகவே மாறிவிடுகிறது. ஒருங்கிணைந்த சமூகத்தில் விதிமுறைகளுக்கு மாறுபட்ட செயல்கள் பெரும் அளவுக்கு ஒத்துக்கொள்ளப்படுவ தில்லை. அதே நேரத்தில் பெரிய, சிக்கலான, தன்னகத்தே பல வேறுபாடுகளைக்கொண்ட சமூகத்தில் மாறுபட்ட செயல் களை அதிகம் காண்கிறோம். அவற்றை அந்தச் சமூகம் ஓரள வுக்கு ஒத்துக்கொள்கிறது.

குழு பெரியதாக இருந்தால், தனி மனிதனை அடையாளம் கண்டுகொள்வது கடினம். அவன் செயலும் மற்றவர்களால் கண்டுகொள்ளப்படாது. எனவே அவன் சுதந்திரமாகச் செயல் படுகிறான். சிக்கலான குழுவில் பல தரப்பட்ட வரம்புகள் காணப்படலாம். இவை ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகக் காணப்படலாம். ஒன்றுக்கொன்று எதிர்மறையாகவும் இருக்கலாம். எனவே சமூகக் கட்டுப்பாடு தற்காலத்துச் சமூகத்தில் அதிக வலிமையுள்ளதாகக் காணப்படுவது இல்லை. ஆனால் பழைய சமூகத்தில் இது பெருமளவிற்கு வலிவுள்ளதாகவே காணப்பட்டது. குடும்பத்தினர், அண்டை அயலார், சமய குருமார்கள் ஆகியவர்கள் தற்காலத்தில் சமூகக் கட்டுப்பாட்டை உண்டுபண்ணும் செயலிகளாகச் செயல்பட அவ்வளவாக முடிவது இல்லை. அந்தக் காலத்தில் குடும்பத்தின் தலைவனாக இருந்த தகப்பனுக்கு மதிப்பு, கௌரவம், அதிகாரம் மிகவும் அதிகமாக இருந்தன. அவனால் தன்னுடைய குடும்பத்தினுடைய செயல் களைக் கட்டுப்படுத்த முடிந்தது. மேலும் ஒரு குறிப்பிட்ட பகுதி வாழ் மக்கள் தங்களுக்குள்ளேயே பலவித கட்டுப்பாடுகளை உண்டு பண்ணிக்கொண்டு, உறுப்பினரிடையே அவற்றை வலியுறுத்தி, சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். தற்பொழுது குடும்பம் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாமல் வலுவிழந்து கிடக்கக் காண்கிறோம், அந்தக் காலத்தில் குடும்பத்தின் தலைவன்

தண்டனை கொடுத்துக் குடும்பத்தினரிடையே கட்டுப்பாட்டை வலியுறுத்தி நிலைநாட்ட முடிந்தது. இப்பொழுது குடும்பத்தின் தலைவருடைய அதிகாரம், கௌரவம் யாவும் வீழ்ச்சியுற்று விட்டன. ஆகவேதான், தற்காலத்தில் குடும்பம் வலுவான சமூகக் கட்டுப்பாட்டுச் செயலியாக அமையவில்லை.

பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஓர் இடத்தில் வசிக்கும் போது, அந்த அமைப்பைச் சமுதாயம் என்று கூறுகிறோம். இந்த அமைப்பானது குடும்பம் செய்யும் சமூகக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து மேலும் உறுப்பினர்களிடையே சமூக நெறிகள், கோட்பாடுகள் இவற்றை வலியுறுத்தி அவற்றின்படி நடந்து சமூக ஒற்றுமையையும், அமைதியையும் நிலவ வகை செய்கிறது. அதே போல் சமயம். எடுத்துக்காட்டாக, கிறித்து சமயம், கிறித்தவர் களிடையே ஒற்றுமை, சமயத் தத்துவத்தில் ஈடுபாடு, ஆர்வம் இவற்றை ஏற்படுத்தி கட்டுப்பாட்டுடன் நடக்கச் செய்கிறது. தவறு செய்கிறவர்களைத் தண்டிக்கவும், ஒதுக்கி வைக்கவும் தயங்குவதில்லை. பாவ மன்னிப்பு, குற்றத்தை ஒத்துக் கொள்ளுதல், வருந்துதல் போன்ற பலவகையான வழிகளின் மூலமாகவும் அவர்களைத் திருத்துகிறது.

இன்று பொருள் உற்பத்தி, குடும்பத்திலிருந்து தொழிற் பேட்டைக்கும் தொழிற்சாலைக்கும் மாறிவிட்டது. இதன் விளைவாக, இதுவரை குடும்பம் செய்துவந்த சமூகக் கட்டுப்பாடு வேலை, தொழிற்பேட்டைக்கும் தொழிற்சாலைக்கும் மாறி விட்டது. மேலும் இன்று சமயத்தினுடைய பிடிப்பும், பலவந்தமும் குறைந்து காணப்படுவதால் சமூகக் கட்டுப்பாட்டில் தொழிற் சாலைகளும் அரசாங்கமும் முக்கிய பங்கு வகிக்கவும் தலைப் பட்டுள்ளன. தலையாய, முடிவான அதிகாரம் இன்றைய சமூகத்தில் அரசாங்கத்தினிடமேதான் இருக்கிறது. இது சட்டங்கள் மூலமும், காவல்துறையினர்மூலமும், ராணுவத்தின் மூலமும், நீதி மன்றங்கள் மூலமும், சிறைச்சாலைகள் மூலமும், இன்னும் பல சமூக விதிமுறைகளின் மூலமும் மக்களை அடக்கி மதித்து நடக்கச் செய்கிறது.

ஒரு மனிதன் தன் சமூகத்தின் நெறிகளுக்கும், கோட்பாடு களுக்கும் ஒப்ப நடக்கும்போது, நிறைய அந்தஸ்தும் கௌரவமும் அவனுக்கு ஏற்படுகின்றன.

### பொதுமக்கள் தொடர்பு சாதனங்களும் சமூகக் கட்டுப்பாடும்

சமூகக் கட்டுப்பாட்டுக்கு இன்று மிகுதியாகப் பயன்படுவது பொதுமக்கள் தொடர்பு சாதனங்களாகிய செய்தித்தாள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவையாகும்,

செய்தித்தாள்கள் : செய்தித்தாள்களை அவை கொண்டுள்ள கருத்துகள், அவை வலியுறுத்தும் கொள்கைகள் இவற்றைக் கொண்டு நாம் அவைகளை அடையாளம் கண்டுகொள்ளலாம். படிக்கத் தெரிந்தவர்களிடையேதான் செய்தித்தாள்கள் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும். படிக்காதவர்களிடையே செய்தித்தாள்கள் அதிக அளவில் மாற்றத்தை ஏற்படுத்தாது. செய்தித்தாள்கள் படிப்பவர்கள் எல்லோருமே செய்தித்தாளில் காணப்படும் கருத்தை அந்த ஆசிரியருடைய நோக்கத்தை, எண்ணத்தை ஆதரிப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. இருந்தபோதிலும் ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான கி. மீட்டர்களுக்கு அப்பால் வசிக்கும் மக்கள் மத்தியிலே ஒரு கருத்தை எடுத்து வைப்பதன்மூலம் ஆங்காங்கே செய்தித்தாள்கள் கருத்துரிமை, விழிப்புணர்ச்சி, ஒற்றுமை, போராட்டம் இவற்றை வாசகர்கள் மத்தியில் தூண்டுவதன் மூலம், அவர்களுடைய சமூக நடத்தையைக் கட்டுப்படுத்த முடிகிறது.

வானொலி: வானொலி பொதுமக்களுக்கு செய்திகளையும் பல தகவல்களையும், பல நிகழ்ச்சிகள்மூலம் ஒலி பரப்பி அவர்களை முதலில் நாட்டின் நடப்பை அறியவைத்து, பல புதிய கருத்துக்களையும் தெரிவித்து, ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்பட வைக்கிறது. தேர்தல் செய்திகளைச் சுடச்சுட வானொலி அறிவிக்க ஆவலுடன் கேட்டிருப்போர் மனத்தில் மகிழ்ச்சியும் மனச் சோர்வும் ஏற்படுவதைக் காண்கிறோம். மகிழ்ச்சியுற்றோர் ஆரவாரம் செய்தலையும் மனச்சோர்வுற்றோர் கட்டுப்பாடற்று நடப்பதையும்கூட நாம் காண்கிறோம்.

'வதந்திகளை நம்பாதீர்கள்; அரைகுறை உண்மைகளுக்குச் செவி சாய்க்காதீர்கள்; பொறுமையுடன் இருங்கள்; எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்' என்றெல்லாம் எடுத்துக்கூறி மக்களிடையே கட்டுப்பாடு வளர்க்கவும், அதன் வழியாக சமூக நடத்தையைக் கட்டுப்படுத்தவும் வானொலி ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, வானொலி செய்தி, மகிழ்ச்சி தரும் பாடல்கள், நாடகங்கள், அறிவுரை இதன் மூலமாக சமூகக் கட்டுப்பாட்டை பெருமளவு உண்டுபண்ணுகிறது என்று கூறலாம்.

திரைப்படம்: திரைப்படங்கள் பொழுதுபோக்குச் சாதனங்களாக இருந்தாலும், அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகின்றன. அறிவு வளர்ச்சி பொறுப்புணர்ச்சியை வளர்த்து, தனித்தன்மையைக் கட்டுப்படுத்தி, சமூகத்தோடு ஒட்டி வாழ வழி வகுக்கிறது. குணச்சித்திர நடிகர்கள் மக்களிடையே நல்லதொரு கருத்தை தங்கள் நடிப்பின்மூலம் எடுத்துவைத்து அவர்களுடைய

மனத்திலே புதிய உணர்வு, உற்சாகம் ஏற்படுத்துகின்றனர். உதாரணமாக, குடிப்பதின் தீமையும், குடி எப்படி குழந்தை களையும் குடும்பத்தினரையும், குறிப்பாக பெண்ணினத்தையும் பாதிக்கிறது என்பதைத் திரைப்படத்தின் மூலம் தெளிவாக எடுத்துக்காட்டி மக்கள் மனத்திலே ஒரு மாற்றத்தை உண்டுபண்ணி அவர்களைஅக்கொடிய பழக்கத்திலிருந்து மீட்க, அவர்களுடைய சமூகக்கட்டுப்பாட்டை வளர்க்க திரைப்படங்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. மேலும் சிறு குழந்தைகள் ஒரு பொருளை கண்ணால் பார்க்கும்போது எளிதில் புரிந்துகொள்வது மட்டுமின்றி நினைவிலும் அதிக நேரம் கொள்கிறார்கள் என்பதால் நல்ல பல கொள்கைகளையும், இலட்சியங்களையும் உதாரணமாக நாட்டுப் பற்று, மொழிப்பற்று, பண்பாட்டில் நம்பிக்கை இவைகளைத் திரைப்படங்கள் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டி அவர்கள் மனத்திலே நல்ல கருத்துகளையும் இலட்சியங்களையும் வளர்த்து அதன்மூலம் வருங்கால சமூகத்தில் கட்டுப்பாடும் அமைதியும் முன்னேற்றமும் ஏற்பட முடிகிறது.

திரைப்படங்கள் தேவையற்ற காட்சிகளையும், எண்ணங் களையும் மக்கள் மனத்தின்கண் கொண்டுவந்து நிறுத்தி நாட்டிலே அமைதியின்மை, வன்முறை, சமூகக் கட்டுப்பாடு குலைவு இவை களுக்கு வழிவகுக்கின்றது என்று குறைகூறுவாருமுண்டு. தணிக்கை மூலம் இந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க முடியும்.

தொலைக்காட்சி: நகரங்களிலே நடுத்தர குடும்பங்களி லேயும் வசதி பெற்றவர்களிடையேயும் பள்ளிகளிலும், பொது நிறுவனங்களிலும் தொலைக்காட்சி பெட்டி இருக்கக் காண் கிறோம். இந்தியாவிலே இன்னும் இது பெருமளவிற்குப் பரவ வில்லை. ஆனால், பெருநகரங்களில் அதையடுத்து 50 கி. மீ. தொலைவில் உள்ள பகுதிகளிலும் தொலைக்காட்சி வசதி இருக் கின்றது. மேலை நாடுகளில் தொலைக்காட்சி சமூகக்கட்டுப் பாட்டை குலைக்கவும், உண்டுபண்ணவும், குழந்தைகள் படிக் கவும், நல்லறிவு பெறவும், படிக்காது போகவும், கெட்டுப் போகவும் காரணமாக அமைந்துள்ளது என்று இரண்டுவிதக் கருத் துகளும் எடுத்துக்கூறப்படுகிறது. சமூகவியலாளர்களும், உளவிய லாளர்களும் தொலைகாட்சியினுடைய விளைவை ஆராய்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

தொலைக்காட்சியில் வியாபார விளம்பரம், மலிந்துகாண மக்களிடையே பொருள்களுக்கான மோகமும் ஈடுபாடும் ஏற்பட்டு வியாபாரம் ஓங்கவும் இதனால் மக்களிடையே நுகர்தல் பழக்கத்

தினையும் கட்டுப்படுத்த முடிகிறது என்று அறிஞர்கள் கண்டுள்ளனர்.

வழக்கம்: வழக்கம் ஒரு குழுவில் நாளடைவில் ஏற்படுவது. இது சட்டத்தைப்போல இயற்றப்படுவதன்று. வழக்கம் இன்னார் ஏற்படுத்தினார் என்றும் சொல்வதற்கில்லை. வழக்கம் பொதுவாக எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படும்பொழுது நிலைத்து நிற்கிறது. இதை எவரும் கீழ்படியும்படியும் அமைகிறது. இதை கீழ்படியும்படி எவரும் வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லாது எல்லோருமே தன்னிச்சையாகவே ஒத்துக்கொள்ளும்படியும் பின்பற்றும்படியும் அமைகிறது. வழக்கங்கள் நம் வாழ்க்கையிலே பெருமளவு ஒன்றிப்போய்விட்டமையால், காலை முதல் இரவு வரை, நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் ஆராய்ந்து பார்க்கும்போதுதான் வழக்கங்கள் எவ்வளவு தூரம் நம் வாழ்க்கையோடு ஒன்றிப்போயிருக்கின்றன என்பது நமக்கு விளங்குகிறது.

இம்மாதிரி வழக்கங்கள் சாதாரணமாக நம்மை அறியாமலேயே பின்பற்றப்படுவதல்ல. ஏனெனில் இந்த வழக்கங்களைச் சுற்றி உணர்வுகளும் விழுமியங்களும் அடங்கியுள்ளமையால், வழக்கத்தைப் பின்பற்றாத நேரத்தில் சமூகத்தின் தண்டனையை கோபத்தைப் பெறவேண்டியுள்ளது. இந்த மாதிரி வழக்கங்கள் உணர்வுகளும் விழுமியங்களும் அடங்கியிருக்கிற நேரத்தில் அவற்றை வழக்கடிப்பாடுகள் என்று கூறுகிறோம். இந்த வேறுபாட்டை அமெரிக்கச் சமூகவியல் அறிஞர் வில்லியம் கிரகாம் சம்னர் தெளிவாகப் பிரித்துக்காட்டி, சாதாரண வழக்கங்கள் நாட்டவர் வழக்குகள், உணர்வுகளும் விழுமியங்களும் அடங்கிய வழக்கங்கள் வழக்கடிப்பாடுகள் என்றும் கூறுகிறார்.

வழக்கங்கள் சமூகத்திற்கு சமூகம் வேறுபட்டு காணப்படுகின்றன. சமூகத்திலே மனிதனுடைய நடத்தையை கட்டுப்படுத்துவதற்காகவே இவைகள் அமைந்தமையால், இவைகள் இல்லாத சமூகத்தை நாம் பார்க்க முடியாது. இந்த வழக்கங்கள் சமூக அமைப்புக்கு காரணமாக அமைவது மட்டுமின்றி சமூகம் செவ்வனேயும் சிறப்பாகவும் இயங்க இவைகள் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றன. சமூக நல்வாழ்வை எண்ணத்தில் கொண்டு இந்த வழக்கங்கள் பின்பற்றப்படும்பொழுதுதான் அவை வழக்கடிப்பாடுகளாக மாறுகின்றன என்று ராபர்ட் பியர்ஸ்டர்ட் கூறுகிறார்.

சமூகத்தில் நியாயம், அநியாயம், தர்மம், அதர்மம் என்று பல வற்றை மக்களுக்கு உணர்த்தி அவ்வாறு செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தி மனிதர்களுடைய நடத்தையை கட்டுப்படுத்த முனை கிறார்கள். உதாரணமாக விற்பனைப் பொருள்களில் கலப்படம் செய்வதையும், பொருள்களை அதிக விலையில் பற்றாக்குறை நேரத்தில் விற்பதையும் மக்கள் அநியாயம் என்று கூற தயங்கு வதில்லை. விற்பனையாளரும் ஓரளவுக்கு இந்த பொதுமக்க ளுடைய வழக்கத்தின் அடிப்படையில் அமைந்த கண்டிப்புக்குப் பயந்து தன்னுடைய நடத்தையை மாற்றிக்கொள்ள வேண்டியிருக் கிறது. எனவே, சமூகத்தில் சாதாரண வழக்கங்களும் நாட்டவர் வழக்குகளும் சமூக நல்வாழ்வை மேம்படுத்தும் வழக்கங்களும் தனி மனிதனுடைய நடத்தையை கட்டுப்படுத்துகின்றன என்று நாம் கூறலாம்.

சட்டம் : ஒரு சிக்கலான சமூகத்தில் அல்லது எல்லாவகையிலும் முன்னேற்றமடைந்த சமூகத்தில் ஒரு நிலையான அரசியலமைப் பைக் காண்கிறோம். அதன் கையில் அதிகாரமும், அதை நிறை வேற்றத் தேவையான பலமும் இருக்கக் காண்கிறோம். அந்த நாட்டின் அரசு சட்டத்தின் உதவியால் மக்களுடைய நடை யுடை பாவனைகளைக் கட்டுப்படுத்துகிறது. இந்துச் சட்டத்தின் மூலம் உரிமை, சுதந்திரம், கடமை இவை மக்களுக்குத் தெளிவு படுத்தப்பட்டு அதன்படி மக்கள் நடக்கவும் செய்கிறார்கள்.

சில மேம்பாடடைந்த சமூகங்களில்கூட சட்டம், சமயம், நன்னடத்தை இவைகளுக்குள் அதிக வேறுபாடின்றி இருக்கக் காண்கிறோம். குறிப்பாக இந்தியாவில் சுதந்திரமடைவதற்கு முன்பு வழக்கத்திலிருந்தது இந்து சமயச் சட்டங்களே. இன்றைய இந்துச் சட்டங்கள்கூட பெரும்பாலும் சமயச் சட்டத்தினடிப் படையில் வந்தன என்று கூறலாம். இந்து சமயம் நன்னடத்தை, நிலையான வாழ்க்கை இவற்றை வலியுறுத்துகிறது. எனவே, இந்துச் சட்டம் நன்னடைத்தை, நெறியான வாழ்க்கை இவை களை வலியுறுத்தி தனி மனிதனுடைய நடத்தையைப் பெருமளவு கட்டுப்படுத்துகிறது என்று கூறலாம். அரசியலதிகாரத்தின் பலத்தைப் பின்கொண்டதாக சட்டங்கள் அமைந்தும் பொது மக்கள் கருத்து அதற்கொப்ப இல்லாத நேரத்தில் சட்டங்கள் பெரும்பாலும் பின்பற்றப்படாமலே இருத்தலைக் காண்கிறோம்.

இன்றைய சட்டங்கள் மனிதனுடைய சமூக வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் உட்படுத்துகின்றன. அவனுடைய வாழ்க்கையின் பொருளாதார குடும்ப வாழ்வு, அரசியல், சமூக

அம்சங்கள் எல்லாவற்றையும் சட்டங்கள் கட்டுப்படுத்துகின்றன. சமூகநலன் கருத்தில் கொண்டு பொதுவாழ்வில் சிக்கல்களைத் தவிர்க்க இயற்றப்படும் சட்டங்களை பின்பற்றியே மனிதன் சமூகத்திலே வாழவேண்டியிருக்கிறது.

### பொதுமக்கள் கருத்து

ஒரு குறிப்பிட்ட சமூக மக்களிடையே எந்த ஒரு பிரச்சனையைப்பற்றியும் எழுகின்ற தெளிந்த கருத்தை அந்த சமூகத்தின் பொதுக்கருத்து என்று நாம் கூற முடியும். எந்த ஒரு பொதுப்பிரச்சனையையும் மக்கள் கவனத்திற்குக் கொண்டுவர பலரும் பல்வேறு கருத்துகளை அதைப்பற்றி எடுத்துக்கூற, முடிவிலே அவர்களுக்குள்ளே ஒரு தெளிவான கருத்து அந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரை எழுகிறது. இது அந்த சமூகத்தின் பெரும்பான்மையோரின் கருத்தாகவும் இருக்கலாம். இந்த கருத்தை உண்டுபண்ண பத்திரிக்கைகளும், வானொலியும், தொலைக்காட்சியும் மற்றும் பல சாதனங்கள்கூட ஒத்துழைத்திருக்கலாம். ஜனநாயக நாடுகளில் வேறுபட்ட கருத்துகள் பரிமாறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. முடிவிலே பெரும்பான்மையோரின் ஒருங்கிணைந்த கருத்து பொதுக்கருத்தாக பரிணமிக்கக் காண்கிறோம். பொதுமக்களுக்கு முன் இருக்கக்கூடிய பிரச்சினைகள் அரசியலோ பொருளாதாரமோ மற்றும் ஏனைய பல பிரச்சனைகளாகவும் இருக்கக்கூடும். இந்த பிரச்சனைகளுக்குத் தங்களது தெளிந்த கருத்தை மக்கள் எடுத்துக்கூற வாய்ப்பளிக்கவும் முடியும். அம்மக்களுடைய கருத்தை அளவிட்டும் நாம் கண்டுகொள்ள முடியும். இவ்வாறு பொதுமக்கள் கருத்தையறிந்த அரசு அதற்கொப்ப தன்னுடைய சட்டதிட்டங்களை இயற்றவும் மாற்றவும், அந்த சட்டத்தின் வாயிலாக மக்களுடைய நடத்தையை மாற்றவும் முடிகிறது.

## வினாக்கள்

1. சமூகக் கட்டுபாடு என்றால் என்ன?
2. சமூகக் கட்டுப்பாட்டில் 'வழக்கம்' எப்படி வேலை செய்கிறது.
3. சட்டம் எப்படி சமூகக் கட்டுப்பாட்டுக்கு உதவுகிறது?
4. பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் எவ்வாறு சமூகக் கட்டுபாட்டை வளர்க்க உதவுகின்றன.
5. சமூகக் கட்டுபாடு குலைவதால் என்ன இடையூறுகள் ஏற்படுகின்றன?

# 10. சமூக ஒழுங்கு குலைதல்

சமூக வாழ்க்கையில் தொடர்ந்து மாறுதல்களும், அந்த மாறுதல்களைச் சமாளிக்க முயற்சியும் நடைபெற்றவண்ணமே இருக்கக் காண்கிறோம். மாறுதல் சமூகத்தின் சில பாகங்களை மட்டுமே ஒருவேளை பாதிக்கலாம். அப்பொழுது அந்த பாகங்கள் மற்ற பாகங்களுடன் ஒன்றி இயங்கமுடியாது போய்விடுகிறது. ஏனென்றால் சமூகத்தின் வெவ்வேறு பாகங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன. இது சமூகமே ஒன்றியங்கு வதையே கூட பாதிக்கலாம். இவ்வாறு சமூகத்திலே காணப்படும் பல்வேறு பாகங்களிடையே இயற்கையாகவே ஏற்பட்டுள்ள சமன் பாடுகள் குலைந்து சமூகம் ஒன்றியங்க முடியாத நிலையை சமூக ஒழுங்கு குலைவு என்று கூறுகிறோம். சமூகத்தின் வழக்கங்கள் அமைப்புகள், குழுக்கள், சமுதாயங்கள் இவைகளில் ஏற்படும் குலைவுகளை சமூக ஒழுங்கு குலைவு என்று கூறுகிறோம். இந்த ஒழுங்கு குலைவுகள் தனிமனிதனின் வாழ்விலும் ஏற்படலாம். சமூக வாழ்விலும் ஏற்படலாம்.

சமூகத்தின் பல பாகங்கள் பல வேலைகளை செய்கின்றன. இந்த வேலைகள் தடைபடும்போதும், செய்யத் தவறும்போதும் அல்லது செய்யவேண்டிய முறையினின்றும் முறன்பட்டு செய்யப் படும்போதும் சமூகச் சமன்பாடு பாதிக்கப்பட்டு சமூக ஒழுங்கு குலைவுக்கு வழி ஏற்படுகிறது. சமூகக் கட்டுப்பாடு விதிமுறைகள் தளர்ந்து, தனிமனிதனும் சமூகமும் தன்னிஷ்டம்போல் வாழ முயலும்போது சமூக ஒழுங்கு குலைவு ஏற்படுகிறது. எமிலி துர்க்கேம் (Emile Durkhem) என்ற அறிஞர் சமூக ஒழுங்கு குலைவு சமூகத்தின் பல பாகங்களிடையே ஏற்படும் சமன்பாடு குலைவு, சமூக மக்களிடையே காணப்படும் ஒற்றுமை உணர்வு குலைவு என்று கருதுகிறார். மேலும் சில அறிஞர்கள், சமூக ஒழுங்கு குலைவு என்பது சமூகத்தினோடு ஒன்றியங்கும் வாழ்க்கை முறைக்கு எதிர்மாறானது. இந்த நிலையில் சமூகக் குழுக் களிடையே ஒற்றுமை உணர்வு இன்மை, சமூகக் கட்டுப்பாடு தளர்தல் ஆகியவை காணப்படுகின்றன. எனவே பிணக்குகளும், பூசல்களும் தோன்றுகின்றன. இது சமூக ஒழுங்கு குலைவுக்கு

வழி வகுக்கிறது. எனவே சமூக ஒழுங்கு குலைவு ஒரு ஊட்டம் என்று கருதுகின்றனர்.

சமூக ஒழுங்கு குலைவு மக்களிடையேயும் குழுக்களிடையேயும் காணப்படும் / சரி செய்துகொள்ள இயலாமையைக் (maladjustment) காட்டுகிறது.

சமூக ஒழுங்கின் அடிப்படைகள்

**1.** சார்ந்திருத்தல்: ஒருவர் மற்றவர்களை சார்ந்திருத்தல் என்பது அடிப்படையான உண்மை. பழங்காலம் முதல் இக்காலம் வரை இவ்வுண்மை சமூகத்தில் நிலவக் காண்கிறோம். மனிதன் தனித்து இயங்க முடியாதவனாகப் பிறந்து குழந்தைப் பருவத்திலிருந்து மற்றவர்களை நம்பி வாழ்கிறவன். வளர்ச்சி யடைந்து தனித்து இயங்கத் தொடங்கும்பொழுதும் அவன் சமூகத்திலுள்ள மற்றவர்களது உதவியை நாடியே வாழவேண்டி யிருக்கிறது. இன்று சமூக அமைப்பில் வேலைப் பங்கீடு, பல வகையாகப் பிரிக்கப்பட்டு, பல மனிதர்களால் செய்யப்படுவதால் தனி மனிதர்களும் குழுக்களிடமும் காண்கின்ற முயற்சிகளையும் செயல்களையும் சரிவர செயல்படுத்த சமூகத்தில் மிக விரிவான தொரு அமைப்புத் தேவைப்படுகிறது. ஒரு குழுவினர் மற்றக் குழுவினர்களோடு சேர்ந்து செயல்படவேண்டியிருக்கிறது. இல்லையெனில் சமூக வாழ்க்கை குழுவாழ்க்கையாக சிறந்து ஒன்றியங்கி காணப்படாது. நமது சமூக அமைப்பில் இன்று காணப் படும்நவீன சாதனங்களாகிய இரெயில், வானவூர்தி, தொலை பேசி போன்றவைகள் ஒரு பகுதிவாழ் மக்கள் மற்ற பகுதிவாழ் மக்களோடு சார்ந்து இருக்கவும் செம்மையாகச் செயல்படவும் உதவுகின்றன.

2. பண்பாடு: உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிபந்தனை களுக்காக மட்டும் சமூகங்கள் ஒன்றாக இயங்குகின்றன என்று கருத முடியாது. பண்பாட்டு உந்தலால், சமயம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று போன்ற எண்ணங்களும் மதிப்புகளும் சமூகப் பிணைப்பை ஏற்படுத்தியுள்ளன. சமூக ஒருமைப்பாட்டிற்கு பண்பு, சார்ந்திருத்தல் ஆகிய இரண்டும் மிக இன்றியமையாதன. உயிர் வாழ்வதற்கான தேவைகளும் விழுமியங்களும் மக்களை ஒன்றுசேர்த்து சமூகமாக்குகிறது. நிறுவனங்களும் சமூக அமைப் புகளும் மக்களை ஒன்று சேர்ப்பதால் இவைகள் மக்களால் இன்றியமையாதவை என்று கருதப்படுகின்றன. மக்களுக்கு தம் நடத்தையை முறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பண் பாட்டின் மூலம் கிடைக்கிறது.

சமூக ஒழுங்கு குலைதலுக்குச் சில விளக்கங்கள்

சமூக அமைப்பு அடிக்கடி நிலை மாறி சமூக அமைப்பின் எந்திரம் உடைந்து துண்டுகளாவது போலக் காணப்படுகிறது. பிறகு வழக்கத்திற்கு மாறான எதிர்பாராத அசாதாரண நடத்தையும் நிகழ்ச்சிகளும் ஏற்படுகின்றன. இந்நிலைகள் சமூக அமைப்பிற்கு எதிராகத் தெரிவதால் இவைகளை நாம் சமூக ஒழுங்கு குலைவு என்கிறோம் என்பது ஸ்யூபரின் (Cuber) கருத்து.

சமூக அமைப்பும், சமூக ஒழுங்கு குலைதலும் தொடர்புடையன. சமூக அமைப்பு என்றால் தனி மனிதனின் விருப்பங்களுக்கும், சமூக மதிப்புகளுக்கும் இடையேயுள்ள இசைவு ஆகும். சமூக ஒழுங்கு குலைதல் என்பது இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள பிணக்கைக் குறிக்கும் என்று கருதுகிறார் மெம்மோரியா (Memoria).

தனி மனிதனின் ஒழுங்கு குலைதலுக்கும் சமூக ஒழுங்கு குலைதலுக்கும் ஒருவித தொடர்பு இருக்கிறது என 'கூலீ'யும் (Cooley) மற்றவர்களும் கருதுகிறார்கள். உடல் சார்ந்த சச்சரவினால் ஒழுங்கு குலைதல் ஏற்படுவதில்லை. அது தற்செயலாக ஏற்படுகின்ற நிகழ்ச்சியாகும். மனிதர்கள் அங்கீகரிக்கப்பட்ட வழிகளில் தங்கள் கடமைகளைச் செய்யாதிருக்கும்போது இது ஏற்படுகிறது.

ஒழுங்கு குலைதலின் முக்கிய அம்சமாவது வழக்கமான அனுமதிக்கப்பட்ட நடத்தைகள், சமூகத்தில் நிலவாது இருப்பதாகும். இது குழப்பத்தை ஏற்படுத்தும். கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுபவர்கள் தங்கள் பணியை ஆற்றாது எதிர்பாராத அல்லது அசாதாரண நடத்தையை வெளிப்படுத்துவதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இந்தியாவில் குடும்பத்தை ஆராயும் சில ஆய்வாளர்கள் தற்கால இந்தியக் குடும்பம் சீர்குலைந்து இருக்கிறது எனக் குற்றம் சாட்டுகிறார்கள். பலர் மணமுறிவு செய்கிறார்கள். இதுபோன்ற புதிய நடத்தைகள் மரபுரிமைகளை ஒத்து அமையவில்லை என்பதற்குச் சான்றாகும். இதைப்போன்ற மாற்றங்களைப் பொருளாதார, சமய நிறுவனங்களிலும் காணலாம்.

சமூக ஒழுங்கு குலைதலை அறிய பின்கண்டவைகளை நாம் அளவுகோலாகப் பயன்படுத்தலாம்,

1. தனி மனிதனின் நடத்தையைக் கட்டுப்படுத்தும் சமூகக் கட்டுப்பாடுகள் சீர்குலைதல்.

2. சமூகக் குறிக்கோள்களிலும் அவைகளை அடையும் வழி முறைகளிலும் காணப்படும் மாறுதல்கள்.

3. மனிதர்கள் நடத்தையில் ஏற்படும் குழப்பம்.

மரபு வழி வரும் பணிகள் சீர்கெட்டு விடுகின்றன. புதிய பணிகள் தோன்றுகின்றன. இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ள முடியாமைதான் இந்த பிரச்சனைகளுக்குக் காரணமாகின்றன. மேலும் எண்ணற்ற சமூக மாறுதல்கள் ஏற்படுகின்றன என்ற உண்மையை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இதனால் பல புதிய சமூகப் பணிகள் தோன்றுகின்றன. பழைய பணிகள் மறைகின்றன. அவைகள் சமூக ஒழுங்கு குலைதல்போல் தோன்றுகின்றன. ஏனெனில் பழமையில் இருந்து வந்த பணிகள் நமக்குத் தெரிந்தவையாக இருக்கின்றன. நமக்குத் தெரியாத புதிய பணிகள் தோன்றும் போது அது நமக்கு சமூக ஒழுங்கு சீர்குலைதலாகத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டு: சாதி ஒழிப்பினால் உயர்ந்த தாழ்ந்த சாதிகளின் பணிகள் மாறுதல் அடைகின்றன. இவ்வாறு சாதிகளில் வழக்கமான வழிகளும் எண்ணங்களும் செயல்முறைகளும் மறைகின்றன. இவை ஒழுங்கு குலைவு என்று சிலர் கருதலாம்.

தனி மனிதர்கள் குழு இலக்குகளைப் பொது நோக்கோடு பார்க்காமல் தனி நோக்கோடு காணும்போது சமூகத்தில் ஒழுங்கு குலைந்து காணப்படுகிறது. மேலும் சமூகக் குழுவின் உறுப்பினர்களிடையே உள்ள உறவு சிதைவுபடும்போதும் சமூகத்தில் எதிர்பாராத மாற்றங்கள் திடீரென ஏற்படும்போதும் சமூக நெறி முறைகளில் முரண்பாடுகள் ஏற்படும்போதும் சமூக ஒழுங்கு குலைந்து பல சமூகப் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன.

### சமூகப் பிரச்சனை

நன்றாக ஒருங்கிணைந்து காணப்படும் ஒரு சமூகத்தில்கூட பல பிரச்சனைகள் தோன்றலாம். அந்த சமூகம் தன் மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த முடியாத நேரத்திலும், அதனுடைய நிறுவனங்கள் சரிவர வேலை செய்யாத நேரத்திலும், அதனுடைய சட்ட திட்டங்கள் அனுசரிக்கப்படாத நேரத்திலும், அதனுடைய பண்பாட்டு நெறிகள் வருங்கால சமூகத்திற்குக் கிடைக்கச்செய்யாத நேரத்திலும், விரும்பத்தக்க வரவேற்கத்தக்க

நிகழ்ச்சிகள் ஏற்படாத நேரத்திலும் அந்தச் சமூகத்திலே சமூகப் பிரச்சனைகள் எழுந்துள்ளன என்று நாம் கூறலாம். சமூகப் பிரச்சனை என்பது ஒரு சமூக நிலை விரும்பத்தக்கதா என்பது பற்றிய கருத்து வேற்றுமையேயாகும் என்று கூறுகிறார் ஸ்யூபர் (Cuber). எந்த ஒரு சமூக நிலைமையும் சமூகத்தில் பெரும் பாலோர்களால் அந்த சக்தி வாய்ந்த வகுப்பினரால் விரும்பத் தகாதது என்றும் கவனிப்பு தேவை என்றும் கூறப்படும் ஒரு நிலை, சமூகப் பிரச்சனை என சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ஒரு சமூக நிலைமை ஒரு சமூகப் பிரச்சனை ஆவதற்கு முன்பு அந்தச் சமூகத்தில் காணப்படவேண்டும். எடுத்துக்காட்டாக: குற்றம், ஏழ்மை முதலிய பிரச்சனைகள் எழுவதற்கு முன் அந்த சமூகத்திலே குற்றவாளிகளும், ஏழை மக்களும் காணப்படு கிறார்கள். ஒரு சமூக நிலைமை ஒரு காலத்தில் சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பிறகு அதுவே ஒரு பிரச்சனையாக மாறுகிறது. எடுத்துக்காட்டாக : ஒரு காலத்தில் பெண்களும் குழந்தைகளும் நீண்டநேரம் குறைந்த ஊதியத்திற்கு கடின வேலைகளைச் செய்தனர். இது விரும்பத்தகாதது. இந்த நிலைமையில் மாற்றம் வேண்டும் என்று கருதுவதற்குள் சில காலம் கடந்துவிட்டது. பிறகு அதுவே ஒரு சமூகப் பிரச்சனை யாகிவிட்டது.

விழுமியங்கள், நம்பிக்கைகள், எண்ணங்கள் முதலியன ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்புடையன. இவை மாறும்போது அந்த சமூக நிலைமைகள் பிரச்சனையாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குடும்பத்தில் பெண்களுக்கு இதுகாறும் இருந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டதால், பெண்கள் ஆற்ற வேண்டிய சமூகப் பணிகளான குழந்தைப் பராமரிப்பு போன்றவை பாதிக்கப் படுகின்றன. பின்பு அதுவே ஒரு சமூகப் பிரச்சனையாகிறது.

மாறிவரும் சமூக விழுமியங்கள், ஒரு சமூக நிலையைச் சமூகப் பிரச்சனையாக மாற்றக்கூடுமெனில், மாறிவரும் விழுமியங்கள் அந்த நிலையை ஏற்றுக்கொள்ளுமாறு செய்யக்கூடும். சுற்றுப்புறத் தூய்மைக் கேடு சிலகாலமாக ஒரு பிரச்சனையாக இருக்கிறது. ஆனால் மக்களுக்கு வேலைவாய்ப்பு, பொருளாதார வசதி முதலிய காரணங்களை ஒட்டி சுற்றுப்புறத் தூய்மைக்கேடு இன்று சகித்துக்கொள்ளப்படுகிறது.

சில நேரங்களில் ஒரு சமூக நிலைமை குறிப்பிடத்தக்க சமூகத்தின் ஒரு பகுதியால் விரும்பத்தகாதது என எண்ணக்கூடும். இருந்தபோதிலும் அது ஒரு பிரச்சனையாக விளக்கப்படாமல்

இருப்பதற்குக் காரணம் அந்த நிலையில் முன்னேறச் செய்யக் கூடிய வழி தெரியாமல் இருத்தலாகும். நவீன மருத்துவத் துறையில் முன்னேற்றத்திற்கு முன்பு அனைத்துலக இறப்பு விகிதம் குறிப்பாகக் குழந்தைகள் இறப்புவிகிதம் மிக அதிகமாக இருந்தது. அது விரும்பத்தகாதது எனக் கருதப்படவில்லை, ஆனால் அது ஒரு சமூகப் பிரச்சனை என விளக்கப்படவில்லை. ஏனெனில் அது தவிர்க்கமுடியாதது போலத் தோன்றியது.

நம் நாட்டிலும் நமக்குச் சில தனியான பிரச்சனைகள் இருக்கின்றன. பண்பு, சமூக அமைப்புகளில் வேறுபாடுகள், வரலாறு — அரசியல் காரணங்களாலும் இத்தகைய சமூகப் பிரச்சனைகள் உள்ளன. (எ-கா.) வேலையில்லாத் திண்டாட்டம், குற்றம், சூதாட்டம் போன்ற சமூகப் பிரச்சனைகள் உலகெங்கும் காணலாம். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், இவர்கள் பிரச்சனைகள் நம்நாட்டில் மட்டும் காணலாம். மேலும் நாடு விடுதலை பெற்றுப் பாகிஸ்தான் பிரிந்தபோது அகதிகள் பிரச்சினை நம் நாட்டில் ஏற்பட்டது.

### சமூகப் பிரச்சனைகளை அறிவதன் நோக்கம்

சமூகப் பிரச்சனைகளைக் கற்பதற்குப் பல காரணங்கள் உள. சமூகப் பிரச்சனைகளை அறிவதற்கும் அகற்றுவதற்கும், சமூக அறிவியலின் பங்கினை அறிந்துகொள்ளவும் இது முக்கியமான தாகும். இரண்டாவதாக சமூகப் பிரச்சனைகளைப் பற்றிய அறிவு, எவ்வாறு விரும்பத்தகாத சமூக நிலைமைகள், தனி மனிதர்களின் தினசரி வாழ்வை பாதிக்கின்றன என்பதைத் தெரிந்துக்கொள்ள உதவுகிறது. மூன்றாவதாக அநேக சமூகப் பிரச்சனைகள் சமூக நெறியினின்று விலகிச் செல்வதன் விளைவாக இருந்தபோதிலும் வேறு சில சமூகப் பிரச்சனைகள் சமூக எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஒத்துப் போவதாலும் ஏற்படு கின்றன. கடைசியாக சமூகப் பிரச்சனைகள் சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. சமூகத்தில் நிறுவனங்களிடையே மிக நெருங்கிய பிணைப்பும் உறவும் இருப்பதால் ஒரு பிரச்சனை மற்றப் பிரச்சனைகளோடு சேர்ந்தே காணப்படுகிறது. (எ-கா.) சூதாடுகின்ற இடத்தில் குடி, விபச்சாரம் போன்றவைகளையும் காணலாம். மேலும் சமூக மாற்றம், சமூகப் பிரச்சினை, சமூக ஒழுங்கு கெடுதல் முதலியன ஒன்றுக்கொன்று தொடர்பு உடையன. சமூக மாற்றம் சமூக முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானதாகும். எனவே, மாறிவரும் சமூகத்தில் காணும் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு சமூக முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தவேண்டும்.

பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணப் பல வழிகளை சமூகம் கடைப்பிடிக்கலாம். பொதுவாகக் கல்வி வளர்ச்சி, சீர்திருத்தச் சட்டங்கள், மக்களிடையே விழிப்புணர்ச்சி, சமூகப் பற்று, சகிப்புத் தன்மை போன்றவை சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண உதவுகின்றன.

## வினாக்கள்

1. சமூக ஒழுங்குக் குலைவு என்றால் என்ன?
2. சமூக ஒழுங்குக் குலைவுக்கு காரணங்கள் யாவை?
3. சமூகப் பிரச்சனை என்றால் என்ன?
4. சமூக ஒழுங்குக் குலைவின் விளைவுகள் என்னவாக இருக்கக்கூடும்?
5. சமூக ஒழுங்குக் குலைவு எப்படி சமூகப் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது?

# கலைச்சொற்கள்

A

Accomadation — இசைவுபடுத்தல்
Adoption — தத்து
Age composition — வயது அமைப்பு
Agencies — செயலிகள்
Anuloma — உயர்சாதி மணமுறை
Arbitration — நடுவர் தீர்ப்பு
Aristocracy — பிரபுக்கள் ஆட்சி
Aspects — அம்சங்கள்
Assimilation — இசைவுபடல்
Association — நிலையம்
Associational process — இணைக்கும் சொற்பாங்குகள்
Attitude — மனப்பான்மை
Authority — அதிகாரம்
Avoidance — தவிர்ப்பு
Avunculate — தாய்மாமன் உரிமை

B

Barbaric — காட்டுமிராண்டி நிலை
Behaviour — ஒழுகலாறு
Belief — நம்பிக்கை
Biarchal family — இருபாலார் ஆட்சிக் குடும்பம்
Bilateral kinship — இருவகைச் சார்பான உறவு
Birth rate — பிறப்பு விகிதம்
Bureaucracy — அதிகாரவர்க்க ஆட்சி

C

Caste law — சாதி விதிமுறை
Cells — உயிர்மங்கள்
Ceremonies — சடங்கு முறைகள்
Charismatic — காந்த சக்தி சார்ந்த

Charismatic authority — காந்த சக்தி சார்ந்த அதிகாரம்
City — நகரம்
Civilisation — நாகரிகம்
Clan — கால்வழி, குலம்
Class — வகுப்பு, வர்கம்
Classical evolution — பண்டைய பரிணாமம்
Closed system — மூடிய முறை
Coersion — கட்டாயப்படுத்தல்
Collateral kinship — ஒருதலைமுறை விட்ட உறவு முறை
Collective representation — கூட்டுப் பிரதிநிதித்துவச் சின்னம்
Communal — வகுப்புவாதம்
Communism — பொது உடைமை
Community — சமுதாயம்
Community sentiment — சமுதாய உணர்வு
Competition — போட்டி
Complex — தொகுப்பு
Complex society — சிக்கலான சமூகம்
Component — கூறு
Compromise — உடன்பாடு
Conciliation — சமரச இணக்கம்
Concrete — நிதர்சனமாக
Conflict — பூசல்
Conjugal family — தாம்பத்தியக் குடும்பம், கருக் குடும்பம்
Consanguine family — குருதி உறவுக் குடும்பம்
Consumption — நுகர்தல்
Criminal tribe — குற்றப் பரம்பரை
Cult — வழிபாட்டு மரபு
Cultural complex — பண்பாட்டுத் தொகுதி
Cultural lag — பண்பாட்டுப் பின்னடைவு
Cultural trait — பண்பாட்டுக் கூறு
Cultural variability — பண்பாட்டு உலைவு
Culture — பண்பாடு
Custom — வழக்கம்

## D

Death rate — இறப்பு விகிதம்
Decent — வம்சாவளி

| | | |
|---|---|---|
| Democracy | — | குடியாட்சி |
| Demography | — | மக்கள் தொகை ஆய்வு, மக்கள் தொகையியல் |
| Dependence | — | சார்ந்திருத்தல் |
| Dependency feeling | — | சார்பு உணர்வு |
| Deviant | — | நெறி பிறழ்ந்த |
| Division of labour | — | வேலைப் பங்கீடு |
| Divorce | — | மணமுறிவு |
| Dowry | — | வரதட்சிணை |

E

| | | |
|---|---|---|
| Economic determinism | — | பொருளாதார நிர்ணயம் |
| Ethnic | — | மரபு இனக் குழு |
| Empirical science | — | செய்முறை சார்ந்த அறிவியல் |
| Endogamy | — | அகமணம் |
| Equalitarian family | — | சமத்துவக் குடும்பம் |
| Exogamy | — | புறமணம் |
| Expectation | — | எதிர்பார்த்தல், எதிர்பார்ப்பு |
| Extended family | — | விரிந்த குடும்பம் |

F

| | | |
|---|---|---|
| Factors | — | காரணிகள் |
| Family | — | குடும்பம் |
| Family of origin | — | பிறந்தகம் |
| Family of procreation | — | வேட்டகம் |
| Fantacy | — | மனக்கண் வடிவம் |
| Feudalism | — | நிலமானியமுறை |
| Field worker | — | களப்பணியாளர் |
| Folk lore | — | மக்கள் மரபியல் |
| Folk ways | — | நாட்டவர் வழக்குகள் |
| Formal method | — | வடிவம்சார் முறை |
| Forms | — | வடிவங்கள் |

G

| | | |
|---|---|---|
| Germ | — | துன்மம் |
| Government | — | அரசாங்கம் |
| Group | — | குழு |
| Group marriage | — | குழுமணம் |
| Group relation | — | குழு உறவு |

**H**

Hierarchy — வரிசைக் கிரமம்
Homogeneous — ஒரே மாதிரியான
Human ecology — மனிதச் சூழ்நிலையியல்
Hypergamy — உயர்சாதி மணம்
Hypogamy — இயற்கை ஒவ்வாத மணம்

**I**

Ideal — தேர்ந்த
Ideas — எண்ணங்கள்
Imitative magic — ஒப்பு மாந்திரீகம்
Incest taboo — முறைக் காப்புணர்ச்சித் தடை
Industrial society — தொழிற் சமூகம்
Industrialisation — தொழில்மயமாதல்
Infant mortality — சேய் இறப்பு
Informal — விதிமுறை சாரா
Ingroup — அகக் குழு
Inheritance — சொத்துரிமை
Institution — நிறுவனம்
Interaction — ஊடாட்டம், உறவு தொடர்பு
Interest — பற்று
Isolate — தனிமர்

**J**

Joint family — கூட்டுக் குடும்பம்
Joking relations — கேலிசெய்யும் உறவுகள்

**K**

Kinship — உறவுமுறை

**L**

Levirate — மதனி மணம்
Life expectancy — ஆயுட்காலம்
Locality — வட்டம்

**M**

Major — பெரும்படியான
Marriage — திருமணம்

| | |
|---|---|
| Mass | — பொருண்மை |
| Mass media | — பொதுமக்கள் தொடர்பு சாதனம் |
| Mate | — துணை |
| Material | — ஆக்கப் பொருள்கள் |
| Material culture | — பொருள்சார் பண்பாடு |
| Maternal mortality | — தாய்மார்களின் இறப்பு |
| Matriarchal family | — தாயாட்சிக் குடும்பம் |
| Matrilinial | — தாய்வழி |
| Matrilinial family | — தாய்வழிக் குடும்பம் |
| Matripotested family | — தாய்த் தலைமைக் குடும்பம் |
| Mechanical Solidarity | — இயந்திர ஒருமைப்பாடு, இயந்திரத்திற்குரிய கட்டொருமைப்பாடு |
| Metaphysical stage | — நுண்பொருள் கோட்பாட்டியல் துறை |
| Middleman | — இடைத் தரகர் |
| Migration | — குடியிருப்பு |
| Militant | — பொருகிற |
| Militant Society | — பொருகிற சமூகம் |
| Mobility | — இயக்கம் |
| Modernisation | — நவீனமய மாற்றம் |
| Monarch | — தனிநபர் ஆட்சி |
| Monogamy | — ஒருதார மணம், ஒரு துணை மணம் |
| Mores | — வழக்கடிபாடுகள் |

**N**

| | |
|---|---|
| Neighbourhood | — அண்டையம், அண்டை அயலார் |
| Non-formal | — முறைசாரா |
| Non-material culture | — பொருள்சாரா பண்பாடு |
| Norms | — நெறிகள் |
| Nuclear family | — கருக்குடும்பம் |

**O**

| | |
|---|---|
| Open system | — திறந்த அமைப்பு |
| Organic analogy<br>Organic analysis | — உயிரினம் சார்ந்த ஒப்புமை |

Organic solidarity — உயிரின ஒருமைப்பாடு
Organism — உயிரினம்
Origin of species — உயிரினங்களின் தோற்றம்
Out-group — புறக் குழு

## P

Pardha — படுதா
Patriarchal family — தந்தை ஆட்சிக் குடும்பம்
Patrilinial — தந்தைவழி
Patrilinial family — தந்தைவழிக் குடும்பம்
Patripotestal family — தந்தைத் தலைமைக் குடும்பம்
Patterns — கோலங்கள்
Patterns of culture — பண்பாட்டுக் கோலங்கள்
Peer group — நண்பர் குழாம்
Personality — ஆளுமை
Polyandry — பல கணவர் மணம்
Positive — புது மெய்மை
Positive philosophy — புற மெய்மைத் தத்துவம்
Positive stage — புற மெய்மை நிலை
Poverty — ஏழ்மை
Poverty line — ஏழ்மைக் கோடு
Prescriptive Norms — ஆணையிடு நெறிகள்
Primary affinal — முதனிலை மண உறவு
Primary consanguine fine — முதனிலைக் குருதி உறவு
Primary group — முதனிலைக் குழு
Pritiloma — கீழ்ச்சாதி மணமுறை
Problem — பிரச்சினை
Process — செயற்பாங்கு
Profane — புனிதம் சாராத
Proscriptive — தடை நெறிகள், தடைப் படுத்தும் நெறிகள்
Prostitute — பரத்தை

## R

Rank — படிநிலை
Rational legal authority — பகுத்தறிவுக்கொத்த சட்டம் சார்ந்த அதிகாரம்
Region — வட்டாரம்
Regionalism — வட்டாரப் பற்று

Religion — சமயம், மதம்
Rite — சடங்கு
Role — செயல்பாடு, பங்கு
Role-feeling — பங்கு உணர்வு
Rural — ஊரகம்

## S

Sacred — புனிதம்
Sanctions — உறுதியீடுகள்
Secondary group — இடை நிலைக் குழு, வழி நிலைக் குழு
Sentiments — உணர்வுகள்
Sex ratio — பால் இன விகிதம்
Sib — கால்வழி, கோத்ரம்
Social consensus — சமூக இசைவு
Social contrast theory — சமூக ஒப்பந்தக் கோட்பாடு
Social disorganisation — சமூக ஒழுங்கு குலைதல்
Social distance — சமூகச் சேய்மை
Social dynamics — சமூக இயக்கவியல்
Social evolution — சமூகப் பரிணாமம்
Social expectation — சமூக எதிர்பார்ப்பு
Social facts — சமூக மெய்மைகள்
Social heritage — சமூக மரபுரிமை
Socialization — சமூகமயமாதல்
Social morphology — சமூக வடிவமைப்பியல்
Social physiology — சமூக உடலியல்
Social process — சமூகச் செயற்பாங்குகள்
Social psychiatry — சமூக உள மருத்துவவியல்
Social relation — சமூக உறவு
Social solidarity — சமூகக் கட்டொருமைப்பாடு
Social statics — சமூக நிலையமைப்பியல்
Social stratification — சமூக அடுக்கமைப்பு
Social structure — சமூக அமைப்பு
Social values — சமூக விழுமியங்கள்
Society — சமூகம்
Sons of the soil — மண்ணின் மைந்தர்கள்
Sororate — மைத்துனி மணம்
State of nature — இயற்கை நிலை
Status — தகுதிநிலை, அந்தஸ்து

**Strain** — மன உளைச்சல்
Stratification — அடுக்கமைப்பு, சமூகத்தரப் பிரிவு
Subordinate — கீழ்நிலை
Superiodinate — மேம்பட்ட நிலை
Supernatural powers — தெய்வீக சக்திகள்
Supreme court — தலைமை நீதிமன்றம்
Synthetic School — பல்பொருள் கருத்தினம்
System of positive politics — புறமெய்மைசார் அறிவியலின் அமைப்பு முறை

## T

Taboos — தடைகள்
Technological factors — தொழில்நுட்பக் காரணிகள்
Technology — தொழில்நுட்பம்
Territorial — நில எல்லை
Tetrononyme — சேய்வழிப் பெயர்
Theological stage — இறையியல் நிலை
Theory — கோட்பாடு
Thinking — சிந்தனை
Tissue or web — இழைமம்
Tolerance — சகிப்புத்தன்மை
Totalitarianism — சர்வாதிகாரம்
Traditional authority — மரபுசார்ந்த அதிகாரம்
Traits — தனிக் கூறுகள், கூறுகள்
Truce — உடன்பாடு
Twice bourn, Twija — இருபிறப்பாளர்

## U

Unilateral kinship — ஒருதலைச் சார்பான உறவு
Units — அலகு
Urban — நகரகம்
Urbanisation — நகர்மயமாதல்

## V

Values — மதிப்பீடுகள், விழுமியங்கள்
Venereal disease — பாலின நோய்

## W

| | | |
|---|---|---|
| We feeling | — | நாம் உணர்வு |
| Westernisation | — | மேற்கத்தியமயமாகுதல் |
| Wheel diagrame | — | சக்கரப் படம் |

# BIBLIOGRAPHY


Anderson, Walfred, A. and Parker, Frederic B. —*Society: Its Organization and Operation*. New Delhi: Affiliated East-West Press, 1966.

Bierstedt, Robert. —*The Social Order: An Introduction to Sociology*. 2nd ed. New York: Mc Graw-Hill Book Company, 1957.

Bottomore, T. B. —*Sociology: A Guide to Problems and Literature*. Ninth impression. London: Unwin University Books, 1970.

Coser, Lewis, A.—*Masters of Sociological Thought: Ideas in Historical and Social Context*. 2nd ed. New York: Harcourt Brace Jovanovich, 1977.

Cuber, John, F.—*Sociology: A Synopsis of Principles*. 5th ed. London: Vision Press, 1963.

Fichter, Joseph, H. —*Sociology*. 2nd ed. Chicago: University of Chicago Press, 1971.

Ginsberg, Morris. —*Sociology*. London: Oxford University Press, 1934.

கிஸ்பர்ட், பாஸ்கல்—சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள். தமிழாக்கம் : ஜெ. நாராயணன், சென்னை : தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1964.

Green, Arnold, W. —*Sociology: An Analysis of Life in Modern Society*. 4th ed. New York: Mc Graw-Hill Book Company, 1964.

Hedding, Daniel and Glick, Leonard—*Introduction to Sociology* Massachusetts: Addison - Wesley Publishing Company, 1976.

Horton, Paul B. and Hunt, Chester, L. —*Sociology*. New York: Mc Graw-Hill Book Company, 1964.

Inkles, Alex—*What is Sociology?: An Introduction to the Discipline and Profession.* Englewood Cliffs: Prentice-Hall, 1964.

Koeing, Samuel—*Sociology: An Introduction to the Science of Society*. New York: Barnes & Noble, 1957.

MacIver, R. M. and Page, Charles, H.—*Society: An Introductory Analysis*. Reprint ed. London: Macmillan, 1965.

Stewart, Elbert, W. and Glynn, James, A.—*Introduction to Sociology*, 2nd ed. New Delhi; Tata Mc Graw-Hill Publishing Company, 1975.

Sutherland, Robert, L., Woodward, Julian, L. and Maxwell, Milton, A. *Introductory Sociology*. 6th ed. New Delhi: Oxford & TBH Publishing Co., 1956.

Timasheff, Nicholas, S.—*Sociological Theory: Its Nature and Growth*. 3rd ed. New York: Random House, 1967.

Young, Kimball and Mack, Raymond, W.—*Systematic Sociology: Text and Readings*. New Delhi. Affiliated East-West Press, 1972.

Printed at : Bhagat Printers, Madras-600 016